



# கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேறிய மக்களது வாழ்வாதார மற்றும் சந்தை ஆய்வு

## மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களது தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளது நிலைமைகளை மதிப்பிடல்

மொஹம்மட் முனாஸ்
காயத்ரி லொகுகே

செப்டெம்பர் 2015
ஆய்வு தொடர் இல. 6

cepa
centre for poverty analysis

# கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேறிய மக்களது வாழ்வாதார மற்றும் சந்தை ஆய்வு

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களது தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளது நிலைமைகளை மதிப்பிடல்

**மொஹம்மட் முனாஸ்**
**காயத்ரி லொகுகே**

வறுமை ஆராய்ச்சி நிலையத்தினது (CEPA) ஒரு பிரசுரம்

பிரசுரம் 2015

ஆய்வு தொடர் இல. 6 – 2015

ஆசிய அமைப்பினால் ஆதரவு வழங்கப்பட்டது.

(c) வறுமை ஆராய்ச்சி நிலையம் 2015

முதற் பிரசுரம் - 2015

இலங்கை தேசிய நூலகம் - பிரசுரமாகும் தரவுகளை அட்டவணைப்படுத்தல்

முனாஸ், மொஹும்மட்

குிழக்கு மாகாணத்தில் மீள் குடியேறிய மக்களது வாழ்வாதார மற்றம் சந்தை ஆய்வு: மட்டக்களப்பு மற்றம் திருகோணமலை மாவட்டங்களது தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளது நிலைமைகளை மதிப்பிடல் / மொஹும்மட் முனாஸ் [சக] காயத்ரி லொகுகே - கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம், 2015.

ப. 108; செமீ. 21.

ISBN: 978-955-1040-90-1

i 3312 டிவி 23; ii. தலைப்பு

1. தோழிலாளர் சந்தை – பொருளாதார அபிவிருத்தி

இப்பிரசுரத்தின் பதிப்புரிமை இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமானது. இப்புத்தகத்தின் எந்தவொரு பகுதியும் எழுத்தாளர் அல்லது பிரசுரிப்பாளரின் உரிய அங்கீகாரத்துடன் மீள உருவாக்கப்படலாம்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பிரசுரத் தொடர்கள் தற்போது ஆய்வு கற்கைகள், திருத்தப்பட்ட புத்தக பதிப்புகள், செயற்பாட்டு கட்டுரைகள் மற்றும் சுருக்க கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. இவ்வாய்வு கற்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொருள் விளக்கங்களும் முடிவுகளும் தனிப்பட்ட எழுத்தாளர்களையே சாரும் என்பதுடன் கட்டாயமாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அல்லது இப்பிரசுரத்திற்கு ஆதரவளிப்போரது நோக்குகளையோ அல்லது கொள்கைகளையோ பிரதிபலிக்க வேண்டியதில்லை.

இப்பிரசுரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பணிபுரிவோர் குழாமினை சார்ந்ததாகும்.

ISBN: 978-955-1040-69-7

இப்பிரசுரம் தொடர்பான சகல விசாரணைகளுக்கும்:

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 கிறகரி வீதி, கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி: +94 (011) 4690200இ 2676 955-8
தொலைநகல்: +94 (011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
இணையதளம்: www.cepa.lk

அச்சகம்: முத்ரான அச்சகம் (தனி) லிமிடட்

69/2, வாரட் ப்ளேஸ்,

கொழும்பு 7, இலங்கை

**மொஹம்மட் முனாஸ்** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு ஆய்வாளராக பணியாற்றுவதுடன் இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பொருளாதார முதுமானிப் பட்டத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். புலம்பெயர்வு மையக்கரு பகுதியில் முனாஸ் தேர்ந்த நிபுணராக உள்ளார். இவர் வறுமை, முரண்பாடு, ஜீவனோபாயங்கள், மீன்பிடித்துறை, புலம்பெயர்வு மற்றும் பொருளாதாரம் தொடர்பான விடயங்களில் ஆய்வு பயிற்சிகளையும் அனுபவங்களையும் கொண்டுள்ளார். வறுமை தொடர்பான விடயங்களில் எட்டு வருடங்களுக்கும் மேலான ஆராய்ச்சி அனுபவத்தினை கொண்டவராவார். இலங்கையின் மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மதிப்பீடுகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

**காயத்ரி லொகுகே** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு ஆய்வாளராக உள்ளதுடன் நெதர்லாந்து வாகேனின்கென் பல்கலைக்கழகத்துடன் தனது கலாநிதி பட்டத்திற்காக இணைந்துள்ளவராவார். இவரின் ஆய்வு ஆர்வத்துக்குரிய பகுதிகள் பாலினம், குறிப்பாக மீன்பிடித்துறையுடன் தொடர்பான ஜீவனோபாயங்கள், முரண்பாடு மற்றும் மோதலின் பின்னான அபிவிருத்தி என்பன உள்ளடங்குகின்றன. இவரும் பண்பறி ஆய்வுகளில் ஒரு பயிற்றுவிப்பாளராக உள்ளதுடன் எட்டு வருடங்களுக்கும் மேலான ஆய்வு அனுபவத்தினை கொண்டவராவார்.

**வறுமை ஆராய்ச்சி நிலையமானது** (CEPA) வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை கூட்டுகின்ற ஒரு சுதந்திரமான, இலங்கைச் சிந்தனை தாங்கியாகும். வறுமை என்பது முறியடிக்கப்பட வேண்டிய ஒரு அநீதி என CEPA நம்புகின்றது அத்துடன். வறுமையை எதிர்கொள்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதே போல் வறுமையில் வாழும் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என நம்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையம் சுதந்திரமான பகுப்பாய்வினை வழங்குகின்ற, அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புக்களின் ஆற்றல்களை விருத்திசெய்வதிலும் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கான வாய்ப்புக்களை நாடுவதிலும் தனது கூடுதல் நாட்டத்தினை செலுத்துகின்றது. நாம் சந்தையின் தேவைகளுக்கு பதிலளிக்கின்ற அதே நேரம் தெளிவான ஆய்வுசெய்யப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் சேவை வழங்குவதனை நோக்கியும் செல்வாக்கு செலுத்துகின்றவர்களாயுள்ளோம். வறுமை ஆராய்ச்சி நிலையமானது யுத்தத்தின் பின்னான அபிவிருத்தி, பலவீனமான தன்மை, புலம்பெயர்வு, உட்கட்டமைப்பும் சூழலும் என ஐந்து பரந்த மையக்கரு பிரதேசங்களின் அடிப்படையில் ஒரு சமாந்தரமான, சுதந்திர ஆய்வு நிகழ்ச்சி நிரலை கொண்டுசெல்கின்ற அதே நேரம் இச்சந்தை ஒருமுகப்படுத்தலை வாடிக்கையாளர் வேண்டுகோள்களினூடாக பேணிவருகின்றது. இறுதியாக வறுமை ஆராய்ச்சி நிலையம் தேசிய, பிராந்திய, துறைசார், நிகழ்ச்சித்திட்ட மற்றும் செயற்பாட்டு மட்டங்களில் வறுமை தொடர்பான அபிவிருத்தி கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்பு செய்வதற்கு நாடுகின்றது.

## நன்றி நவிலல்

இவ்வாய்வினை ஆக்கியோர் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இவ்வாய்வுக்காக நிதியுதவி வழங்கி ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தொழிநுட்ப கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு (ACTED) தமது நன்றிகளை தெரிவிக்கின்றனர். இப்பிரசுரத்தில் தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் வழங்கி உதவிய அஸ்ரா அப்துல் காதர் மற்றும் பிரியன்தி பெர்னான்டோ அவர்களையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றனர்.

நிறுவன மற்றும் சமுதாய மட்டங்களில் சிங்களம் மற்றும் தமிழ் இரு மொழிகளிலும் தரவு சேகரிப்புக்களை மேற்கொண்டு துணைநிலை தரவுகளை சேகரிப்பதற்கு உதவிய பாஸித் இனாதீன் அவர்களுக்கும் மற்றும் ஆய்வு உதவியாளர் குழுவிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி முத்துகிருஷ்ணா சர்வானந்தன், பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் அபிவிருத்தி பொருளியலாளர் மற்றும் பிரதான ஆய்வாளர், பேராசிரியர் அமலா டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் திணைக்களம் மற்றும் திரு. அசோகா குணவர்த்தன, இலங்கை நிதி ஆணையகம் மற்றும் இலங்கை நிர்வாக சேவை முன்னை நாள் தலைவர் ஆகியோருக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாவணத்தின் பல பிரதிகளை மீளாய்வு செய்து தந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம்.

துலானி களுகலகெதர அவர்களது இறுதியான இப்புத்தக வடிவினை எழுதுவதில் காட்டிய பொறுமை மற்றும் அர்ப்பணிப்பு, இதனை வெற்றிகரமாக வெளிக்கொண்டு வருவதில் பெரும் துணை நின்ற சதுரங்க வீரசேகர மற்றும் இறுதி பதிப்புத் திருத்தங்களை செய்து அச்சிடலுக்கு தயார் செய்து தந்துதவிய ரோஷ்னி எல்லெஸ் அவர்களுக்கும் நன்றிகள்.

இவ்வாய்வினை அச்சிடலுக்கு நிதியுதவி வழங்கிய ஆசியா அமைப்பிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

# முன்னுரை

2009ஆம் ஆண்டு மோதல்கள் முடிவுற்றதனை தொடர்ந்து இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்கள் தமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பத் துவங்கினர். இடம்பெயர்ந்த பலரும் வடக்கு மற்றும் கிழக்கில் தமது சொந்த வீடுகளுக்கு மீண்டு வருகின்றனர். இம்மக்களது, விசேடமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மீண்டு வருகின்ற இம்மக்களது வாழ்வாதார தேவைகள் ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களிலும் வேறுபட்டதாகும். மீள்குடியேறும் இம்மக்களுக்கு உதவும் தொழிநுட்ப கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் (ACTED) ஒரு ஆரம்ப முயற்சியாக 2010 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இரு மோதலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாத்தியமான இலாபகரமான பொருளாதார செயற்பாடுகளை இனங்காண்பதற்காக ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கு வறுமை ஆராய்ச்சி நிலையத்துடன் (CEPA) ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இப்பிரதேசங்களின் வாழ்வாதார ஒழுங்குகள், சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தடைகள் குறித்த ஒரு விளக்கத்தினை வழங்குவதே அவ்வாய்வின் நோக்கமாகும். இச்செயன்முறையின் ஒரு பகுதியாக இச்சமுதாயங்களில் வாழும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் முதியோர் மற்றும் அங்கவீனமான அங்கத்தவர்களை கொண்ட மிகவும் பலவீமான மக்களை இலக்குக் கொள்வதற்கான சாத்தியப்பாட்டிளை ஆய்வு செய்வதுவும் உள்ளடக்கப்பட்டது. இவ்வாய்வறிக்கையில் கண்டறிந்து விவரிக்கப்பட்டுள்ளவை உதவி மற்றும் ஒத்துழைப்பு தேவையாகவுள்ள பல்வேறு வாழ்வாதார துறைகளை குறித்துக் காட்டுகின்றன. இச்சமுதாய மக்களுக்கும் ஏனைய மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்குமாக முன்னெடுக்கப்படுகின்ற வாழ்வாதார அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகளை இன்னும் மெருகூட்டவும் வினைத்திறனான முறையில் இலக்குப்படுத்தவும் இவ்வாய்வின் முடிவுகள் பயன்டுத்தப்படலாம்.

இவ்வாய்வின் பிரதான குறிக்கோள் ஜீவனோபாய செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு காரணிகளை இனங்காண்பதற்காக இலக்குக்குரிய மாவட்டங்களில் பொருளாதார சூழலை பாதிக்கின்ற பல்வேறு உந்துதல்களையும் ஆய்வு செய்வதாகும். பொருளாதார முன்னேற்றத்திற்காக தற்போதுள்ள சட்ட ரீதியான மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களை பகுத்தாய்வு செய்தல், பிரதான தடைகளை இனங்காணல் மற்றும் இப்பிரதேசங்களில் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய நடைமுறை தீர்வுகள் (கிராமிய உற்பத்தியாளர்களால் கையயாளப்படுகின்ற உத்திகள் உட்பட) என்பன ஆய்வின் ஏனைய குறிக்கோள்களாகும்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு ஒரு மோதலின் பின்னான சூழ்நிலையிலான பெறுமதி சங்கிலிகள் ஆய்வின் போது விருத்திசெய்யப்பட்டன. தற்போதுள்ள மற்றும் விரிவடைகின்ற வாழ்வாதார வழிகளின் இலாபகரமான தன்மையினை அதிகரிப்பதில் பங்களிப்பு செய்கின்ற பிரதான கூறுகளை இனங்காண்பதற்காக பெறுமதி சங்கிலி பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட ஒரு எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம் பயன்படுத்தப்பட்டது. இப்பகுப்பாய்வில் பிரதான கூறு இறுதிச் சந்தையாகும். உற்பத்தி சந்தைகள், சந்தை போக்குகள், உப-துறைகளின் முக்கிய கூறுகள் மற்றும் ஒவ்வொரு துறையிலும் தத்தமது பாத்திரங்கள் காரணமாக பல்வேறு பங்குதாரர்களிடையே காணப்பட்ட உறவுகளிலான பகுப்பாய்வு என்பன உப-துறை பகுப்பாய்வினது முக்கிய பகுதிகளாகும்.

முதற் படியாக ஆய்வுக்குரிய இலக்கு குழுக்களின் விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத வாழ்வாதார தெரிவுகள் இனங்காணப்பட்டு குறித்துக்கொள்ளப்பட்டன. பின்னர் மிகவும் முக்கியமான வாழ்வாதார வகைகள் பகுப்பாய்வுக்காக உப-துறைகளாக தெரிவு செய்யப்பட்டன. இச்சந்தை ஆய்வுக்காக இனங்காணப்பட்ட முக்கியமான உப-துறைகளாவன நெல், காய்கறிகள், விலங்கு வேளாண்மை, உள்நாட்டு மீன்பிடித்துறை, கடல் மீன்பிடித்துறை மற்றும் விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள் (செங்கல் தயாரிப்பு) என்பனவாகும்.

உற்பத்தியாளர்கள் பெறுமதி சங்கிலியின் தாழ் மட்டங்களிலேயே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் (பெரும்பாலானோர் உற்பத்தி மட்டத்தில்), இது அவர்கள் பெறும் இலாபம் மற்றும் பெறுமதி சங்கிலி வழியே அவர்களது வகி பாகம் மற்றும் கட்டுப்பாட்டினையும் மட்டுப்படுத்துகின்றது. இப்பிரதேச மக்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களது பொதுவான தடைகள் மூலதனம், தொழிநுட்பம் மற்றும் ஆதரவு வழங்கும் அமைப்புக்களின்மை (போக்குவரத்து – பாதைகள், மின்சாரம் மற்றும் அரச திணைக்களங்களிடமிருந்து விரிவாக்கற் சேவைகள்/ உதவி தொடர்பாக) மற்றும் மோதலின் பின்னான ஒரு சூழலில் இம்மக்களை

இன்னும் பலவீனமான நிலைக்கு உள்ளாக்குகின்ற வெள்ளப் பெருக்கு, வரட்சி மற்றும் காட்டு யானை தாக்குதல்கள் போன்ற சூழல் தாக்கங்களும் இனங்காணப்பட்டன.

இச்சமுதாய மக்கள் வெளி அதிர்ச்சிகளுக்கும் மிகவும் பலவீனமானவர்களாக உள்ளனர். மோதல் காலங்களிலும் கூட இம்மக்கள் பாரம்பரிய வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இருந்தாலும் இத்துறைகள் இவற்றின் அதி உச்ச அடைவினை பெற்றுக்கொள்ளவில்லை. மீளக்குடியமர்ந்துள்ள இம்மக்களிடம் காணப்படுகின்ற மிகப்பெரிய பலம் இவர்களிடம் தற்போதுமுள்ள தொழிற் திறனாகும். இத்திறனின் மீது மூலதனமிடப்பட்டு புதிய தொழிநுட்ப ஒத்துழைப்புடன் இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும். உயர் பெறுமதி பாரம்பரிய நெல் பயிர்ச்செய்கை, பணப் பயிர்ச்செய்கை (காய்கறிகள் மற்றும் பழங்கள்) மற்றும் பதனிடல் (உடன் பழப் பானங்கள், வெந்தயம், அச்சாறு), பால் அடிப்படையிலான பெறுமதி கூட்டல்கள் (தயிர், யோகட்), ஆழ்கடல் மீன்பிடி, நன்னீர் மீன்வளர்ப்பு (இறால், கொடுவா மீன், நண்டு), மீன்பிடி துறைக்கான ஆதரவு சேவைகள் (பனிக்கட்டி நிலையங்கள், படகு திருத்தல்/ உற்பத்தி, மீன் போக்குவரத்து) மற்றும் பெறுமதி கூட்டல் (கருவாடு, பேணியில் அடைக்கப்பட்ட மீன்), விவசாயம் சாராத செயற்பாடுகள் (பேணலும் திருத்தலும், தகவல் தொழிநுட்பம் சார்ந்த சேவைகள், சில்லறை வியாபாரம், சிறிய ஆடைத் தொழிற்சாலைகள்) மற்றும் சுற்றுலாத்துறை கைத்தொழிலுக்கான ஆதரவு சேவைகள் (தங்குமிடம், போசணசாலைகள், வீர சாகச் சுற்றுலா) என்பன இலக்குக்குரிய கிராமங்களில் வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளாக இனங்காணப்பட்டன.

ஆய்வின் கண்டுபிடிப்புக்களிற்கேற்ப ஒரு பெரும் போராட்டத்திலிருந்து மீட்சி பெற்று வருகின்ற ஒரு சூழலில் முற்றும் புதிதான வாழ்வாதார செயற்பாடுகளை ஆரம்பிப்பதென்பது ஆபத்தானதாகும். இந்த வகையில் இவ்வாறான முயற்சிகள் இப்புதிய ஜீவனோபாய வழிகள் வெற்றியளிக்காத பட்சத்தில் மக்களுக்கு வழங்கக்கூடிய மாற்று வழிகளை வைத்துக்கொண்டே முன்னெடுக்கப்பட வேண்டும். அதே திறன்களை பயன்படுத்தி நன்மை பெறக்கூடிய பாரம்பரிய துறைகள் உதாரணமாக உயர் பெறுமதியான பாரம்பரிய நெல் இனங்களை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்தல் போன்ற தனிச்சிறப்பான பகுதிகள் இனங்காணப்பட்ட அதே நேரம் தற்போதுள்ள உப-துறைகளினுள் ஆதரவு மற்றும் வளர்ச்சி தேவைப்படுகின்ற குறித்த தனிப் பகுதிகளும் (பணப் பயிர்ச்செய்கை அல்லது மீன் வளர்ப்பு போன்றன) இனங்காணப்பட்டன. இப்பிரதேசத்தில் சுற்றுலாத்தறை போன்ற விரிவடைந்துவரும் கைத்தொழில்களுடன் சமுதாய மக்கள் இணைத்துக்கொள்ளப்படக் கூடிய பகுதிகளையும் ஆய்வு எடுத்து நோக்கியது.

இன்னும் இலக்குக்குரிய சமுதாயங்களில் எப்போதும் தலையீடுகள் இடம்பெற வேண்டுமென்பதில்லை. பெறுமதி சங்கிலியின் ஏதேனுமொரு கட்டத்தில் செய்யப்படும் தலையீடுகள் இலக்குக்குரிய மக்களது வாழ்வாதாரங்களை முன்னேற்றக்கூடிய உடன்பாடான தாக்கங்களை ஏற்படுத்த முடியும்.

முயற்சிகளின் விளைவுகளை உச்சப்படுத்துவதற்காக கூடுதல் வர்த்தகம் மற்றும் உற்பத்தி தொழில் முயற்சிகள் பிரதேசத்தில் செறிவாக உள்ள இடங்கள் தேடப்பட்டு அவற்றுடன் இணைப்பதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட வேண்டும். ஆய்வுக்குரிய பிரதேசங்களில் பெரும்பாலான இத்தொழில் முயற்சிகள் காத்தான்குடி நகரசபை மற்றும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசம் அதே போன்று பாசிக்குடா, கல்குடா மற்றும் நிலாவெளி போன்ற மிகப் பிரபல்யமான சுற்றுலாத்துறை இடங்களிலுமே அமைந்துள்ளன. அபிவிருத்தி தொழில் முயற்சிகள் இலக்குக்குரிய நன்மை பெறுநர்களை பதனிடல் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய பழங்கள், காய்கறிகள் மற்றும் பால் என அடிப்படை பொருட்களை விநியோகிப்பவர்களாகவும் மற்றும் சிறிய ஆடை ஆபரணங்கள் மற்றும் ஏனைய சிறிய கைத்தொழில்களை வழங்குபவர்களாகவும் இவ்வியாபார தளங்களுடன் இணைக்கவேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது. மேலும் இது காத்தான்குடி போன்ற சில இடங்களில் விரிவாக்கப்படுவதற்கு போதிய பௌதீக இடமின்மை தொடர்பான பிரச்சினையிலும் உதவும்.

அண்மையில் மீள்குடியேறிய சமுதாய மக்களுக்கான வாழ்வாதார தலையீடுகளை வடிவமைத்தல்/ அமுலாக்கலில் கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான விடயம் செயற்பாட்டு வட்டம் முழுதும் ஒரு முரண்பாட்டு உறுத்துணர்ச்சியான அணுகுமுறை கட்டாயமாகும் என்பதாகும். வழங்கப்படும் ஒத்துழைப்பின் நிலைபேறான தன்மையினை உறுதிசெய்வதற்காக சமுதாயங்களுக்கு கிடைக்கும் உதவிகள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டு தொடர்ந்தும் அவதானிக்கப்பட வேண்டும். மேலும் சில சமுதாய மக்களது வெற்றியடைந்த கதைகள் ஏனைய இலக்குக்குரிய சமுதாயங்களுடன் இவற்றிலிருந்து பாடம் பெற்று வெற்றிகரமான முயற்சிகளாக மாற்றிக்கொள்வதற்காக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

மோதலானது போக்குவரத்துக்களை சீர்குலைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அழித்தல், இயக்கத்தினை கட்டுப்படுத்தல் மற்றும் பெறுமதி சங்கிலி வழியேயான பல்வேறு பங்குதாரர்களிடையான உறவுகளை பாதித்தல் என பல்வேறு வழிகளில் பொருளாதார அபிவிருத்தியையும் பெறுமதி சங்கிலிகளையும் பாதிக்கின்றது. ஆய்வானது, ஆய்வில் இனங்காணப்பட்ட பல்வேறு வாழ்வாதார உப-துறைகளில் ஈடுபட்டுள்ள மக்களால் முகம்கொடுக்கப்படுகின்ற பல தெளிவான பிரச்சினைகளை கண்டறிந்துள்ளது. இச்சமுதாயங்களில் வாழும் பிரதான உற்பத்தியாளர்களான விவசாய மற்றும் மீனவ குழுக்களது வகிபாகங்கள் பெறுமதி சங்கிலி வழியே மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சக்தியை கொண்டனவாகவே காணப்படுவதுடன் இவை விரிவாக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். மக்கள் பெறுமதி கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடுவதற்கு வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இப்பகுதிகளிலும் தரக் கட்டுப்பாட்டிலும் இவர்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டும். ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் மற்றும் சூழல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்காக புதிய மற்றும் விளைதிறனான உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் செயன்முறைகளில் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும். வெளிச் சந்தைகளுக்கு உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தவதற்கு உருவாக்கப்பட்டுள்ள கிராம மட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுள் ஒரு பகுதியாக சமுதாய மட்ட உற்பத்தி குழுக்களும் அமைய வேண்டும். முன்னேற்றப்பட்ட கிராமிய பாதைகள், பொது போக்குவரத்து வசதிகள், மின்சார விநியோகம், பௌதீக சந்தை நிலையங்கள் மற்றும் சிறிய குளங்களின் புனர்நிர்மாண தேவைப்பாடுகளுடன் உட்கட்டமைப்பு முன்னேற்றப்படலானது மிகவும் முக்கியமாகும். உப-துறைகளின் நிலைபேறான தன்மைக்காக நிதிச் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வழிகளும் முன்னேற்றப்பட வேண்டும். விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு நுண்நிதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் தேவையான, வினைத்திறனான வறிய விவசாயிகள் மற்றும் பலவீனமான குழுக்களுக்கு அவர்களது தேவைக்கேற்றபடி நுண்நிதி வழங்கப்பட வேண்டும். மேலும் கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள நிதி சேவைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் விண்ணப்பிக்கும் செயன்முறைகளில் சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறாக வடக்கு மற்றும் கிழக்கில் மோதலால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்றமடைந்த சமுதாயங்களிடையில் ஜீவனோபாய முன்னேற்றம் மற்றும் விஸ்தரிப்புக்கு கருதத்தக்களவு இடமும் சாத்தியமும் உள்ளது. இருந்தாலும் இவ்வாய்வின் மதிப்பீடுகளின் அடிப்படையில் அண்மையில் குடியேறிய குடும்பங்களுக்கு புதிய உற்பத்தி பிரதேசங்களுள் தமது ஆற்றல் மற்றும் தொழிலினை விருத்தி செய்துகொள்ள கருதத்தக்களவான காலம் எடுக்கும். சிறிய உற்பத்தியாளர்கள் தம்மிடம் ஏற்கனவே உள்ள திறன்களின் மீது தற்போதுள்ள வாழ்வாதார வழிகளின் பெறுமதி சங்கிலி வழியே மேலே செல்லும் வண்ணம் அமைத்துக்கொள்வதனை ஊக்கப்படுத்துமாறு ஆய்வின் கற்கைகள் பரிந்துரைக்கின்றது. தற்போதுள்ள சூழ்நிலையில் தமது செயற்பாடுகளுக்கு பெறுமதி சேர்க்கும் சாத்தியங்களுள்ளதுடன் இவ்விரு மாவட்டங்களிலும் சுற்றுலாத் துறை விருத்தியினூடாக சாத்தியமான மாற்றங்களை பயன்படுத்திக் கொள்ளவும் முடியுமாகவுள்ளது.

# உள்ளடக்கம்


அறிமுகம ........................................................ 1

எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம் மற்றும் செயன்முறை ........................ 3

பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு – ஆய்வுக்கற்கைக்கான அணுகுமுறை ........................ 3

மோதலால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் பெறுமதி சங்கிலிகள்........................ 3

எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம ........................ 4

செயன்முறை ........................ 6

சூழ்நிலை: மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்கள ........................ 7

ஆய்வுக்குரிய மாவட்டங்களின் குடித்தொகை பண்புகளது விளைவுகள ........................ 7

வறுமையும் வருமான சமமின்மையும் ........................ 11

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிரதேச செயலக பிரிவுகளில்
வறுமையும் நலன்புரியும் ........................ 12

பலவீனமான தன்மை ........................ 13

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு வாழ்வாதார செயற்பாடுகளில் மோதலின் தாக்கம்... 16

நிறுவனங்கள் ........................ 19

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் பிரதான வாழ்வாதார வழிகளிற்கான
பெறுமதி- சங்கிலி பகுப்பாய்வு ........................ 21

4.1. பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு ........................ 21

4.2. காய்கறிகளும் பழங்களும் ........................ 40

4.3 பாற்பண்ணைத்துறையும் விலங்கு வேளாண்மையும் ........................ 46

4.4 நன்னீர் மீன்பிடித்துறை ........................ 53

4.5 கடல் மீன்பிடித்துறை ........................ 61

4.6 விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள் ........................ 68

5. கொள்கை வாய்ப்புக்களும் பரிந்துரைகளும் ........................ 73

5.1 கொள்கை மற்றும் நிறுவனங்கள் ........................ 73

5.2 இயற்கை அனர்த்தங்களும் முகம் கொடுக்கும் முறைகளும் ........................ 77

5.3 பரிந்துரைகள் ........................ 79

5.4 இலக்குக்குரிய சமூகங்களது எதிர்காலப் போக்குகளும் முக்கியமான
ஜீவனோபாயங்களும் ........................ 103

5.5 முடிவுரை ........................ 104

உசாத்துணை ........................ 105

பின்னிணைப்புக்கள் ........................ 106

## சுருக்கக்குறியீடுகள்

| | |
|---|---|
| ACAP | மோதலால் பாதிக்கப்பட்ட நபர்களிற்கான உதவி |
| ACTED | தொழிநுட்ப கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் |
| AI | விவசாய போதகர் |
| CBO | சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் |
| CEPA | வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| CFS | நுகர்வோர் நிதி ஆய்வு |
| DAPH | குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்கள் திணைக்களம் |
| DCS | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் |
| DOA | விவசாய திணைக்களம் |
| DOAS | விவசாய சேவைகள் திணைக்களம் |
| DOF | மீன்பிடி திணைக்களம் |
| DS | பிரதேச செயலகம் |
| FAO | ஐக்கிய நாடுகளது உணவு மற்றும் விவசாய அமைப்பு |
| FGD | முக்கிய குழுக் கலந்துரையாடல் |
| FHHS | பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் |
| GN | கிராம சேவகர் பிரிவு |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| HIES | குடும்ப வருமான, செலவு கணக்காய்வு |
| IDMC | உள்வாரியான இடம்பெயர்வு கண்காணிப்பு மத்திய நிலையம் |
| KPI | முக்கிய நபர் நேர்காணல் |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| MFAR | மீன்பிடித்துறை மற்றும் நீர்வள அமைச்சு |
| MOP | மியூரேற்று ஒப் பொசுபேற்று |
| MPCS | பல் நோக்கு கூட்டுறவு சங்கங்கள் |
| OFC | ஏனைய களப் பயிர்கள் |
| PLR | நெற் காணிப் பதிவு |
| PwD | அங்கவீனங்களுடனான நபர்கள் |
| SME | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் |
| TSP | மும்மை சுபர் பொசுபேற்று |

# 1. அறிமுகம்

தொழிநுட்ப ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம் (ACTED) தனது செயற்பாடுகளை ஏற்கனவே மேற்கொண்டிருந்த புவியியல் பிரதேசங்களிற்கு விஷேட கவனம் கொடுத்து, மோதலால் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களான மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் பொருளாதார ரீதியில் இலாபகரமான சாத்தியப்பாடுகளை கொண்ட செயற்பாடுகளை இனங்கண்டு ஆராய்வதற்காக CEPA முகவர் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டது. இவ்வாய்வு 30 வருட யுத்தம் முடிவுற்று ஒரு வருடத்தின் பின்னர் 2010ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் ஜீவனோபாய ஒழுங்குகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தடைகளில் ஒரு புரிந்துணர்வினை வழங்கும் குறிக்கோளினை கொண்டுள்ளது. இப்பிரதேசங்களில் மிகவும் பலவீனமான மக்களை அதாவது, பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், முதியோர் மற்றும் அங்கவீனர்களுடன் வாழும் மக்கள் போன்றவர்களை இலக்காகக் கொள்ளும் சாத்தியத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

இவ்வாய்வின் குறிப்பான குறிக்கோள்களாவன:

1. பொருளாதார சூழலினை உடன்பாடான விதத்தில் அல்லது எதிர்மறையாக பாதிக்கக்கூடிய காரணிகளை ஆராய்தல்.
2. ஜீவனோபாய செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தக்கூடிய பொருளாதார, சமூக, கலாச்சார, தொழிநுட்ப, அரசியல், மத மற்றும் சூழல் காரணிகளை இனங்காணல்.
3. பொருளாதார முன்னேற்றத்திற்காக தற்போதுள்ள நிதிசார் மற்றும் நிர்வாக கட்டமைப்புக்களை ஆய்வு செய்தல்.
4. சேவைகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக (குறிப்பிடப்பட்ட இடங்களில்) பிரதான தடைகளையும் அவற்றுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட செயன்முறை தீர்வுகளை, உள்நாட்டு உற்பத்தியாளர்களால் கையாளப்படுகின்ற உத்திகள் உட்பட இனங்காணல்.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட புவியியல் பிரதேசங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவையாகவும் மீள்குடியேற்ற குடித்தொகைகளை கொண்டவையாகவும் இருந்தன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களின் பிரதான ஜீவனோபாயங்களாக நெற்பயிர்ச்செய்கை, மீன்பிடி, காய்கறி மற்றும் பழப்பயிர்ச்செய்கை மற்றும் பாற் பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை என்பனவாகும். மேற்கூறப்பட்ட ஜீவனோபாய துறைகளில் உள்ளடங்கியதான பல்வேறு செயன்முறைகளை ஆய்வு வரைபடுத்தியதுடன் ஒரு பெறுமதி சங்கிலி பகுப்பாய்வினையும் மேற்கொண்டது.

இவ்வாய்விலிருந்து பெறப்படும் கண்டுபிடிப்புக்கள் அபிவிருத்தி அமைப்புக்களிற்கு குறிப்பான ஜீவனோபாயம் - சார்ந்த சவால்கள் மற்றும் மீள்குடியேற்ற சமுதாயங்களின் தேவைகளில் உள்ளார்ந்த அறிவுகளை வழங்கும்.

இவ்வாய்வுக் கற்கை ஐந்து பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது ஆய்விற்கான ஒரு அறிமுகம், இரண்டாம் பிரிவு எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம், செயன்முறை மற்றும் ஆய்வுக்குரிய மட்டுப்படுத்தல்களை எடுத்து நோக்குகின்றது. மூன்றாம் பிரிவு மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களின் சூழ்நிலைகளை வர்ணிக்கின்றது. நான்காம் பிரிவு ஆய்வின் இலக்குக்குரிய பிரதேசங்களின் முக்கிய ஜீவனோபாய வழிகளிற்கான பெறுமதி சங்கிலிகளில் ஒரு விரிவான பகுப்பாய்வினை வழங்குவதுடன் ஐந்தாம் பிரிவு கொள்கை மற்றும் அபிவிருத்தி தலையீடுகளின் வாய்ப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குகின்றது.

# 2. எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம் மற்றும் செயன்முறை

## 2.1 பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு – ஆய்வுக்கற்கைக்கான அணுகுமுறை

யாதேனும் ஒரு பெறுமதியை உருவாக்குகின்ற ஒரு குறித்த செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற தொடரான செயற்பாடுகளையே பெறுமதி சங்கிலி குறிக்கின்றது. ஒரு தொழில் முயற்சி, நுகர்வோர் தேவைகள் மற்றும் உற்பத்தியாளரின் நன்மைகளை கருத்திற்கொண்டு அது தனது உள்ளீடுகளை பெறுமதி கூட்டப்பட்ட வெளியீடுகளாக மாற்றுவதற்கு எடுக்கும் முதல்நிலை மற்றும் துணையான செயற்பாடுகளின் தொடர்களை உள்ளடக்கலாம். பெறுமதி சங்கிலியின் பல கட்டங்களையும் ஒரு உற்பத்தி செயன்முறை தாண்டி செய்கையில் அதன் பெறுமதி அதிகரிக்கின்றது. (ரங்கசாமி 2009).

“ஒரு உற்பத்திப் பொருளினை அல்லது சேவையினை அதன் உள்வாங்கல் நிலையிலிருந்து விற்பனைக்காக இறுதி சந்தைகளிற்கு உள்ளூர் தேசிய, பிராந்திய அல்லது சர்வதேச சந்தைகளிற்கு கொண்டுவருதல் வரையிலும் தேவையான அனைத்து செயற்பாடுகளையும் சேவைகளையும் பெறுமதி சங்கிலி உள்ளடக்குகின்றது. இதில் பங்குபெறுகின்ற பாத்திரங்களும், பங்குதாரர்களும் தொழில்நுட்ப, வர்த்தக மற்றும் நிதி சேவை வழங்குநர்களால் ஆதரவளிக்கப்படுகின்றனர். (சபெஸ்டீன் மற்றும் கம்ப்பெல், 2007).

பெறுமதி சங்கிலியின் கிடையான, நிலைக்குத்தான இணைப்புக்களை நோக்குவது முக்கியமாகும். பெறுமதி கூட்டலின் ஒரே மட்டத்திலான பல்வேறு பாத்திரங்களிடையிலான உறவுகள் ஒரு கிடையான இணைப்புக்களை இனங்கண்டுகொள்ளலானது சிறியளவு உற்பத்தியாளர்களிற்கு (பொருளாதார அளவீடுகளை) உருவாக்குகின்ற கூட்டு செயற்பாடு மற்றும் கூட்டு உற்பத்தியை தேவைப்படுகின்ற ஒன்றுடன் ஒன்று இணைந்த தடைகளை இனங்கண்டு கொள்வதில் உதவி செய்யும். நிலைக்குத்தான இணைப்புக்கள் உற்பத்திகள் அல்லது சேவைகள் இறுதி சந்தை நிலையை அடையும்வரை பெறுமதி கூட்டலின் பல்வேறு மட்டங்களினூடாக பயணம் செய்வதற்குத் தேவையான இணைந்த முயற்சியென நோக்கப்படுகின்றன. இதன் நோக்கம் சங்கிலியின் வழியேயான எல்லா மட்டங்களிலுமான இணைப்புக்களும் நன்மை பெறுவதாகும். பெறுமதி சங்கிலிகள் பொதுவாக உற்பத்திகளிற்கு விநியோக சங்கிலி வழியே புதிய சந்தை இணைப்புக்களை உருவாக்குதல் அல்லது தற்போதுள்ள சந்தை இணைப்புக்களை பலப்படுத்தல் என்பவற்றை கவனத்தில் கொள்கின்றன (Research into use website )[13].

குறித்தவொரு ஜீவனோபாய பெறுமதி சங்கிலி சார்ந்த செயற்பாடுகள் ஒரு தனிக் குழுவிற்குள் உள்ளடக்கப்படலாம். அல்லது குறித்த ஒரு புவியியல் பிரதேசத்தில் வாழ்கின்ற அல்லது பரந்த பிரதேசங்களிலிருந்தான பல்வேறு உற்பத்தியாளர்களிடையே பிரிக்கப்படலாம் என்பதுடன் இது கூட்டல் விளைவுகளை தோற்றுவிப்பதுடன் தொடர்புபடுத்தப்படலாம் (Research into use website). குறித்த ஜீவனோபாய வழியொன்றுடன் இணைந்த பாத்திரங்களும்/ பங்குதாரர்களும் பல்வேறு துறைகளில் அல்லது உபதுறைகளில் வேறுபடுவதால் ஒவ்வொரு வகையான ஜீவனோபாய வழியும் வெவ்வேறு பெறுமதிச் சங்கிலிகளைக் கொண்டிருக்கலாம்.

## 2.2. மோதலால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் பெறுமதி சங்கிலிகள்

யுத்தம் பொருளாதார அபிவிருத்தியை மற்றும் பெறுமதி சங்கிலிகளை பல்வேறு வழிகளில் பாதிக்கின்றது. போக்குவரத்து சீர்குலைக்கப்படுகின்றது, உட்கட்டமைப்பு அழிக்கப்படுகின்றது அல்லது ஒன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையில்லாமை அல்லது பாதுகாப்பு காரணங்கள் இயக்கத்தினை கட்டுப்படுத்துகின்றது. ஒரு வர்த்தகம் அல்லது தொழில் முயற்சியின் உறுதியான நிலைப்பாடு மற்றும் தகுந்த சூழலினை கொள்கை சூழல் பாதிப்பது போன்று அதிகார தொடர்புகளும் விரைவாக மாறும் போக்குடையனவாகின்றன. பொதுவாக அரசாங்க மற்றும் நன்கொடை வழங்குநர்களின் தலையீடுகள் குறுகியகால நோக்குகளை இலக்காக கொள்கின்றன. மிக முக்கியமாக மோதலானது பெறுமதி சங்கிலியின் பல்வேறு பாத்திரங்களிடையேயான நம்பிக்கையை அழிக்கின்றது.

யுத்தத்தின் பின்னான அமைப்புக்களில் ஒரு பெறுமதி சங்கிலி அணுகுமுறையை பயன்படுத்தலானது பின்வருவனவற்றை வேண்டி நிற்கின்றது. தற்போதுள்ள வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளவும் விரைவான துலங்கலை உருவாக்கவும் சந்தையினை துண்டுபடுத்தல் / பிரித்தல், சங்கிலியின் கிடையான மற்றும் நிலைக்குத்தான இணைப்புக்களை மீளக்கட்டுதல், பங்கேற்பாளர்களிற்கு போக்குவரத்து, நிதி

[13] மூலம்: http://www.researchintouse.com/nrk/RIUinfo/valuechain/valuechain.htm

மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற ஆதரவளிக்கும் சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகளை வழங்குதல் மற்றும் பல்வேறு பாத்திரங்களிடையிலான நம்பிக்கையினை மீளப்பெற்றுக் கொள்வதற்காக செயற்படல். பொருளாதார அபிவிருத்தியை செழிப்படையச் செய்வதற்கன கொள்கைச் சூழலை கட்டியெழுப்புவதற்கு அரச முகவர்களுடன் இணைந்து செயற்படவும் பெறுமதி சங்கிலியின் பல்வேறு கட்டங்களினை தரமுயர்த்துவதில் முதலீடு செய்வதனை ஊக்கப்படுத்தக்கூடிய பல்வேறு தனியார் துறை பாத்திரங்களுடன் இணைந்து செயற்படவும் தேவையுள்ளது. பொருளாதார செயற்பாடு மிக கடுமையாக தடைப்பட்டுள்ள மற்றும் நிறுவனங்கள் கருத்தக்களவு பலவீனமடைந்துள்ள சூழ்நிலைகளில் பெறுமதி சங்கிலிகளை பலப்படுத்துவதானது பரந்த, பல் துறை சார்ந்த முயற்சிகளது கூட்டாக அமைய வேண்டும்.

இவ்வாய்வு மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை எனும் கவனத்தில் கொள்ளப்பட்ட மாவட்டங்களில் பெறுமதி சங்கிலிகளை விருத்தி செய்வதற்காக மோதலின் பின்னான அணுகுமுறையொன்றினை எடுக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்துடன் இம் மாவட்டங்களும் முழு வட மாகாணமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஏறத்தாழ மூன்று சகாப்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. 2009 மே மாதத்தில் யுத்த முடிவிற்கு முன்னரே 2007ஆம் ஆண்டில் கிழக்கில் எதிர்ப்பு நிலைமைகள் முடிவுக்கு வர இப்பிராந்தியத்தில் யுத்தத்தின் பின்னான நிலைமைகள் நிலவின. வடக்கு மற்றும் கிழக்கில் இடங்களை தெரிவு செய்து புனர்நிர்மாணத்திற்கு மிக முக்கிய முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியனவாக சமுதாயங்களை இயங்கச் செய்யவும் உட்கட்டமைப்பு வசதிகளை இனங்கண்டு சரிசெய்யவும் என செயற்பட்ட ACTED இனது செயற்திட்டம் மோதலால் பாதிக்கப்பட்ட நபர்களிற்கான உதவி (ACAP) என்பதாகும். இவ்வாய்வும் தெரிவு செய்யப்பட்ட அண்மையில் மீள்குடியேறிய சமுதாயங்களின் ஜீவனோபாய துறைகளை இனங்காணல் மற்றும் ஆதரவும் பெறுமதி கூட்டலிற்குமான தேவையுள்ள பிரதேசங்களை இனங்காண்பதற்குமான செயன்முறையின் ஒரு பகுதியாகவே இருந்தது.

## 2.3. எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம்.

தற்போதுள்ள மற்றும் விரிவடைந்து வருகின்ற ஜீவனோபாய வழிகளின் இலாபகரத் தன்மையை அதிகரிப்பதில் பங்களிப்புச்செய்கின்ற முக்கிய கூறுகளை இணங்காண்பதற்கு பெறுமதி சங்கிலி பகுப்பாய்விலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம் இங்கு பயன்படுத்தப்பட்டது. பெறுமதி சங்கிலி சந்தை தொகுதியொன்றை உருவாக்குவதற்கான தலையீடுகள் உற்பத்தியாளர்களை சந்தையுடன் தொடர்புபடுத்த வேண்டும். அவர்கள் இடைத்தரகர்களுடன் (வேறுவிதத்தில் சொல்வதானால், செயன்முறையாளர்கள், சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையாளர்கள் போன்றோருடன்) கேள்விக்குரிய பொருட்களை உற்பத்தி செய்யவும், உற்பத்தியாளர்களது இலாபகரத்தன்மையும் சந்தை வலுவையும் கூட்டி அதனூடாக சங்கிலி வழியேயான அனைத்து பங்குதாரர்களிற்கும் நன்மை பயப்பதற்காக இடைத்தரகர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாய்வில் மிக முக்கிய கூறு இறுதி சந்தையாகும். இது உள்ளூர், தேசிய, பிராந்திய அல்லது சர்வதேச சந்தையாக இருக்கலாம். பெறுமதி சங்கிலி அணுகுமுறையினை பயன்படுத்தி ஒவ்வொரு உப துறையும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி சந்தை, சந்தைப் போக்குகள், உப துறையின் முக்கிய கூறுகள் மற்றும் துறைகளில் தத்தமது பாத்திரங்கள் தொடர்பாக பல்வேறு பங்குதாரர்களிடையிலான உறவுகளிலான ஒரு பகுப்பாய்வும் உப துறை பகுப்பாய்வொன்றினது மிக தீர்மானமான கூறுகளாகும். இப் பங்குதாரர்கள் வித்தியாசமான பெறுமதி சங்கிலிகளிற்கு வேறுபடலாம். தொழிநுட்பம், சந்தையைப் பெற்றுக்கொள்ளல், நிறுவன கொள்கைகள், நிதி மற்றும் கடன் மற்றும் உள்ளீட்டு விநியோகம் என்பவற்றிலான தடைகளும் வாய்ப்புக்களும் கூட உபதுறை பகுப்பாய்வின் ஒரு பகுதியை ஆக்குகின்றன.

பெறுமதி சங்கிலி என்பதானது பலராலும் பல விதத்தில் கூறப்படுவதானாலும் இதன் கீழ் கொள்ளப்படுகின்ற எண்ணக்கரு ஒன்றாகும். Oxfam GB இனால் விவசாய சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து எடுக்கப்பட்ட நெல்-துறையிலான பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு, நெல் பெறுமதி சங்கிலியின் பொருத்தமான அனைத்து பங்குதாரர்களையும் கருத்தில் கொண்டு பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்கு ஒரு மரபு ரீதியான அணுகுமுறையை மேற்கொள்கின்றது. இவ்வாய்வு குறித்த ஜீவனோபாய ஆதரவு மற்றும் அதனை முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை வழங்கப்படக்கூடியதாக இருந்தமையால் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இலங்கையின் மீன்பிடி துறையில் USAIDஇனால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வு மீன்பிடி துறையில் போட்டியிடும் தன்மையில் மோதல் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தலாம் என்பதை புரிந்து கொள்வதற்காக பெறுமதி சங்கிலி அணுகுமுறையை


பயன்படுத்துகின்றது (அருணாதிலக குழுவினர், 2008). 2008 இல் சர்வதேச தொழிலாளர் சங்கத்தினால் (ILO) மேற்கொள்ளப்பட்ட ஜீவனோபாய இடைவளி பகுப்பாய்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட மீள்குடியேற்ற பிரதேச செயலக பிரிவுகளின் ஜீவனோபாய தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளிலான தேவைகள் தொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றது.

தற்போதுள்ள இலக்கிய ஆய்வுகள் (மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுகள் உட்பட) பெறுமதி சங்கிலி வழியே பங்குதாரர்கள் மற்றும் அவர்களது தொழிற்பாடுகளை அடையாளம் கண்டு கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் பிரிவு 5 இல் கலந்துரையாடப்பட்டுள்ள சில தடைகள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காணவும் மற்றும் ஆய்வு பகுப்பாய்வின் அடிப்படையில் பரிந்துரைகளை சட்டகமாக்கவும் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாய்வின் பெறுமதி சங்கிலி பகுப்பாய்வினது உபதுறைகள் தற்போதுள்ள துணைநிலை மற்றும் முதல்நிலை தரவுகளினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களை பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டன. பகுப்பாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட உப-துறைகளுள் முதல் மட்டத்திற்குரியதாகவும் மிக முக்கிய ஜீவனோபாய வழிகளாகவும் இலக்குக்குரிய ஆய்வு குழுக்களின் விவசாய மற்றும் விவசாயம் சாராத ஜீவனோபாய தெரிவுகள் குறிக்கப்பட்டன. இச்சந்தை ஆய்விற்காக இனங்காணப்பட்ட முக்கிய உப-துறைகள் நெல், மரக்கறி, விலங்கு வேளாண்மை, உள்நாட்டு மீன்பிடிகள், கடல் மீன்பிடித் தொழில் மற்றும் விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள் (செங்கல் தயாரிப்பு) என்பனவாகும். ஆய்வுக்குரிய காலப்பகுதியில் சுற்றுலாத்துறை வளர்ந்து வருவதாக இருந்ததுடன் மிக தெளிவான ஒரு ஜீவனோபாய துறையாக இருக்கவில்லை. மேலும் ஆய்வின் பெரும்பாலான பதிலளிப்பாளர்கள் இதனை ஒரு ஜீவனோபாய தெரிவாக அடையாளம் கண்டுகொள்ளவுமில்லை. இருந்தாலும், ஆய்வுக் கற்கையானது இனங்காணப்பட்ட உப-துறைகள் சந்தை விஸ்தரிப்பு மற்றும் பலவகைமைப்படுத்தலிற்கு சுற்றுலாத்துறையுடன் எவ்வாறு இணைக்கப்படலாம் என்பது குறித்துக் காட்டுகின்றது.

பெறுமதி சங்கிலிகள் குறித்த சூழ்நிலைகளுள் இருக்கின்றன என்பதுடன் படம் 2.1 இலுள்ள திட்டவமைப்பு சட்டகம் பெறுமதி சங்கிலியின் செயற்பாட்டினை எல்லா மட்டங்களிலும் செல்வாக்கு செலுத்தக்கூடிய சூழ்நிலை காரணிகளை விவரிக்கின்றது. மோதலால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் பலவீனமான குழுக்களின் ஜீவனோபாயங்களை முன்னேற்றும் போது கருத்தில் கொள்வதற்கு மிக முக்கியமானவையான சமூக, கலாச்சார, சூழல், அரசியல் மற்றும் நிறுவன காரணிகள் உள்ளன. பலவீனமான குழுக்களின் பங்களிப்பானது அவர்களது சொந்த மனித, சமூக, நிதி மற்றும் பௌதீக சொத்துக்கள் மற்றும் அவர்களது ஊக்கநிலை என்பவற்றாலும் பாதிக்கப்படலாம்.

**படம் 2.1 ஆய்வுக் கற்கையினது எண்ணக்கரு திட்டவமைப்பு சட்டகம்**



## 2.4. செயன்முறை

சந்தை பகுப்பாய்வானது பெருமளவில் ஒரு பண்புசார் செயன்முறையையும் அதனுடன் இணைத்து துணைநிலை பண்பறி தரவு மற்றும் வளங்களையும் பயன்படுத்தியது. அரச இணையதளங்களில் மற்றும் முகவர்களால் பிரசுரிக்கப்பட்ட தரவுகள், அதே போல் ACAP தரவுகள் பயன்படுத்தப்பட்டதுடன் பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு தொடர்பான பின்னனி தகவல்களை திரட்டும் நோக்கில் ஒரு குறுகிய இலக்கிய ஆய்வும் நடத்தப்பட்டது. மாதிரிகள் ACAP செயற்திட்டம் மற்றும் மாவட்ட செயலக புள்ளிவிபரவியல் தகவல் தாள்களிலிருந்து பெறப்பட்ட அளவறி தரவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. (பிரிவு 3 மாதிரி தெரிவுசெய்வதில் பயன்படுத்தப்பட்ட விதிகளை தருகின்றது).

ஆரம்ப தரவு சேகரித்தல் கட்டம் மாவட்ட மட்ட தரவுகளை சேகரிப்பதனை நோக்கமாக கொண்டிருந்தது. இங்கு பதிலளிப்பாளர்கள் விவசாய, விவசாய சேவைகள், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, அரச திணைக்களங்களின் பிரதிநிதிகளாகவும் மாவட்ட செயலாளர் போன்ற மாகாண மற்றும் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் ACTED மற்றும் சேவாலங்கா பணிக்குழுவினராகவும் இருந்தனர்.

இரண்டாவது மிக விரிவான தரவு சேகரித்தல் கட்டம் பல படிகளை உள்ளடக்கியது. முதற்படியாக ஒவ்வொரு ஜீவனோபாய துறையும் சார்ந்த தகவல்களை பெற்றுக்கொள்ளும் வண்ணம் மாவட்ட மட்ட செயலமர்வுகள் கட்டமைக்கப்பட்டு நடாத்தப்பட்டன. (ஜீவனோபாய வழிகள் துணைநிலை தரவுகள் மற்றும் ஆரம்ப கள செயற்பாடுகளினூடாக முன்னரே இனங்காணப்பட்டிருந்தன). கவனக்குழு கலந்துரையாடல்களின் (FGD) வழிகாட்டல் கேள்விகள் ஆய்வுக்குரிய பிரதேசங்களில் பல்வேறு விவசாய மற்றும் விவசாயம் சாராத ஜீவனோபாய வழிகள் தொடர்பான ஆழமான பிரச்சினைகளை வெளிக்கொணரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தன. முக்கிய நபர் நேர்காணல்கள் (KPI ) அரச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு ஜீவனோபாய துறைகளிலும் பெறுமதி சங்கிலிகளின் பல்வேறு கட்டங்களில் இனங்காணப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டன. மேலும் பலவீனமான தன்மையிலான பிரச்சினைகள் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக திறந்த-முடிவு சம்பவ கற்கையொன்று பயன்படுத்தப்பட்டது.

காலம் போதாமை சார்ந்த தடைகள் காரணமாக ஆய்வுக்குரிய பிரதேசத்திற்கு குறிப்பாக ஒரு முதலிலிருந்து பெறப்பட்ட தகவல்களை உறுதி செய்வதற்கு எப்போதும் முடியுமாக இருக்கவில்லை. மாவட்ட மட்ட செயலமர்வுகள், முக்கிய நபர் நேர்காணல்கள் மற்றும் சமுதாய மட்ட கலந்துரையாடல்கள் போன்ற பல படையில் அமைந்த தரவு சேகரிப்பு இவ்விடைவெளியினை பெரிதும் குறைக்க உதவின. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அண்மையில் மீள்குடியேறியிருந்த சமுதாயங்களின் விரைவில் மாறிக்கொண்டிருந்த சூழ்நிலையானது குறிப்பிடத்தக்க அளவில் முதல் நிலை தரவு சேகரிப்பின் அவசியத்தை குறித்து நின்றன.

## 3. சூழ்நிலை – மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்கள்

ஆய்வின் இப்பகுதி சந்தை பகுப்பாய்வினது முக்கிய கவனத்திற்குரிய மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களை பற்றிய தகவல்களை வழங்குகின்றது. இது ஆய்வுக்குரிய பின்வரும் பிரிவுகளிலான பின்னணி தகவல்களைத் தருவதுடன் இப்பிராந்தியத்தினது ஜீவனோபாயங்கள் மற்றும் வாழ்வாதார புனர்நிர்மாணம் என்பன கையாளப்படும் போது அவற்றுக்கு பொருத்தமான நல்வாழ்வு, பலவீனமான தன்மை, பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைக்கற்றகவு மற்றும் பல்வேறு ஜீவனோபாயங்களின் மீது மோதலின் தாக்கம் என்பன போன்ற சூழ்நிலை தனித்துவத் தன்மைகளையும் வெளிக்காட்டுகின்றது.

### 3.1 ஆய்வுக்குரிய மாவட்டங்களின் குடித்தொகை பண்புகளது விளைவுகள்

மோதல் காரணமாக சகாப்தங்களினூடாக குடித்தொகை புள்ளிவிபரங்கள் மற்றும் பண்புகள் கருதத்தக்களவு மாற்றமடைந்துள்ளன. இது இப்பிராந்தியத்தினுள் மக்களின் எண்ணிக்கை மற்றும் இனக்குழுக்களின் மீது விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இன்று முகம்கொடுப்பது போன்று மோதலின் பின்னான ஒரு சூழ்நிலையில் மீளும் மக்கள் இப்பிராந்தியங்களது குடித்தொகை முகக்குறிப்பினில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதுடன் இம்மாறும் குடித்தொகையானது ஜீவனோபாய குழுக்கள் தொழிற்படும் விதத்திலும் தாக்கம் செலுத்துகின்றது.

எதிர்ப்புக்கள் முடிவுற்றதன் பின்னர் 2007ஆம் ஆண்டில் தொகை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விஷேட கணக்கெடுப்பின் போது திருகோணமலையில் மொத்த குடித்தொகை 334, 363 ஆக காட்டுவதுடன் இது 1981 இல் நடைபெற்ற இறுதி குடித்தொகை கணிப்பீட்டையும் விட 30.6% அதிகரிப்பினை காட்டுகின்றது (DCS, 2007b). இது மட்டக்களப்பு மாவட்டத்தில் இதே காலப்பிரிவில் கணக்கெடுக்கப்பட்ட 56.2% அதிகரிப்பிலும் ஒப்பீட்டளவில் குறைவாகும் என்பதுடன் மட்டக்களப்பு மாவட்ட குடித்தொகை 2007ஆம் ஆண்டில் 515, 857 ஆகும் (Department of Census and Statistics, 2007a). 2012 ஆம் ஆண்டு குடித்தொகை கணக்கெடுப்பு மட்டக்களப்பு மாவட்ட மொத்த குடித்தொகை 525, 142 எனவும் திருகோணமலையில் 378,182 எனவும் காட்டுகின்றது. இது மோதல் முடிவுற்றதிலிருந்து மட்டக்களப்பில் ஏறத்தாழ 1.76% அதிகரிப்பையும் திருகோணமலையில் 0.11% அதிகரிப்பையும் காட்டுகின்றது.

இரு மாவட்டங்களும் மோதலால் பாதிக்கப்பட்டிருப்பினும் கடந்த ஐந்து சகாப்தங்களில் திருகோணமலை மாவட்டத்தின் இன அமைப்பு மாத்திரமே குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்துள்ளது. 1981ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தின் முஸ்லிம் குடித்தொகை 16% இனால் அதிகரித்துள்ளதுடன் இம் மாவட்டத்தின் பெருமளவு வாழும் இனமாகவும் முஸ்லிம்கள் மாறியுள்ளனர். எனினும் 2007ஆம் ஆண்டில் 45.4% ஆக இருந்த முஸ்லிம்கள் குடித்தொகை 2012 ஆம் ஆண்டில் 40.41% என சிறிதளவு வீழ்ச்சியை காட்டுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழ் இனமே பெரும்பான்மை குழுவாக இருக்கின்றனர். கடந்த 5 சகாப்தங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள குடித்தொகையின் சதவீதம் 1963ஆம் ஆண்டில் 3.4% இலிருந்து 2012ஆம் ஆண்டில் 1.19% ஆக வீழ்ச்சியடைந்துள்ளதெனினும் 2007இலிருந்து 2010ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 0.69% ஆலும் திருகோணமலையில் 1.56% இனாலும் சிறிது அதிகரிப்பினை இரு மாவட்டங்களிலும் காட்டுகின்றது. இலங்கை தமிழர் குடித்தொகை 2007இலிருந்து 2012 வரை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 1.56% மற்றும் 2.60% இனால் முறையே சிறிது அதிகரித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லா இன மக்களதும் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் குறைவாக காணப்பட்டதுடன் யுத்த காலங்களிலும் இந்நிலைமை மிகவும் வேறுபட்டதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த முடிவின் பின்னர் மக்கள் அதிகளவில் மீள்குடியேற்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர் என்பதை இது காட்டுகின்றது. யுத்தத்தின் பின்னர் எல்லா மக்களிலும் மீள்குடியேற வந்தவர்கள் இருப்பினும் கிழக்கின் பெரும்பாலான தமிழ் சமூகத்தைக் கொண்ட பிரதேசங்களில் சிங்களவர்கள் மீள்குடியேற்றங்களை கொண்டுள்ளமை இன ரீதியான அழுத்த நிலைகளை தோற்றுவித்துள்ளது. மக்களின் இம்மீள்குடியேற்றமானது தமது அதே இடம் மற்றும் சொத்துக்களை கோருகின்ற உள்நாட்டில் இடம்பெயர்ந்த சில மக்களின் (IDPs) முரண்பாடுகள் காரணமாக ஒரு சிக்கலான சூழ்சிலை உருவாக்கப்பட்டுள்ளது. அட்டவணைகள் 3.1 மற்றும் 3.2 என்பன யுத்தத்தின் முன்னரான மற்றும் யுத்தத்தின் பின்னரான (நிலைமைகளை) வழங்கியவாறு ஆய்வுக்குரிய மாவட்டங்களின் இனங்களில் தகவல்களை வழங்குகின்றது.

**அட்டவணை 3.1: திருகோணலை மாவட்டத்தின் இனரீதியான குடித்தொகை**

| வருடம் | மொத்த குடித்தொகை | சிங்களவர்கள் (%) | இலங்கை தமிழர் (%) | இந்தியத் தமிழர் (%) | இலங்கை முஸ்லிம்கள் (%) | வேறு (%) |
|---|---|---|---|---|---|---|
| 1963 | 138,553 | 28.8 | 36.9 | 2.4 | 29.4 | 2.5 |
| 1971 | 188,245 | 29.1 | 35.4 | 2.7 | 31.8 | 1 |
| 1981 | 255,948 | 33.4 | 34.3 | 2.1 | 29.3 | 0.9 |
| 2007 | 334,363 | 25.4 | 28.6 | 0.1 | 45.4 | 0.5 |
| 2012 | 378,182 | 27 | 30.6 | 1.7 | 40.4 | 0.3 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2007 டி, 2012

**அட்டவணை 3.2: மட்டக்களப்பு மாவட்டத்தின் இனரீதியான குடித்தொகை**

| வருடம் | மொத்த குடித்தொகை | சிங்களவர்கள் (%) | இலங்கை தமிழர் (%) | இந்தியத் தமிழர் (%) | இலங்கை முஸ்லிம்கள் (%) | வேறு (%) |
|---|---|---|---|---|---|---|
| 1963 | 196,189 | 3.4 | 71.1 | 0.8 | 23.5 | 1.2 |
| 1971 | 256,721 | 4.5 | 69.1 | 1.7 | 23.7 | 1.1 |
| 1981 | 330,333 | 3.4 | 70.8 | 1.2 | 23.9 | 0.7 |
| 2007 | 515,857 | 0.5 | 74 | 0 | 25 | 0.5 |
| 2012 | 525,142 | 1.2 | 72.6 | 0.2 | 25.5 | 0.5 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2007 a, 2012

மேற்படி கலந்துரையாடப்பட்ட இன அமைப்பிலான மாற்றங்கள் பல வழிகளில் விளக்கப்படலாம். யுத்தத்தின் தாக்கம் மற்றும் அதன் விளைவான இம்மாவட்டத்தினுள்ளான சிறுபான்மை சமுதாயங்களின் இடம்பெயர்வுகள் இம்மாற்றங்களை விளக்கலாம். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் (IDP) இப்பிராந்தியங்களில் உள்வந்தமையும் குடித்தொகையின் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம்[13]. சில இன மக்கள் (உதாரணமாக முஸ்லிம்கள்) பொதுவாக உயர் வருடாந்த குடித்தொகை வளர்ச்சி வீதத்தை காட்டுகின்றமை போன்ற ஏனைய காரணிகளும் பங்களிப்பு செய்யும் மற்றுமொரு காரணியாக இருக்கலாம்.

இம் மாற்றங்களை விடுத்து குறிப்பாக கிழக்கிலான குடியேற்றங்கள் இன குழுக்களாகவே அமைந்துள்ளன. பல பிரதேசங்களில் குடியேற்ற ஒழுங்குகளும் சமுதாயங்களும் குறித்த, தனி இனம் வாழ்வதாக அமைந்துள்ளதுடன் இனங்களிடையோன இடைத்தொடர்புகள் மாவட்டங்களுள் அதிக நகர்ப்புற சூழலை கொண்டுள்ள பிரதேசங்களிலேயே காணக்கூடியனவாக உள்ளன. பிரதேசங்களிடையிலான, இனங்களிடையேயான இடைத்தொடர்புகள் பல்வேறு வகையான ஜீவனோபாய வழிகளில் ஈடுபடுகின்றமையால் அதிகரிக்கின்றது. இவ்வாய்வு இதனை ஒத்துக்கொள்கின்றதுடன் பல அழுத்தங்களை கொண்டுள்ள குழுக்களுள் பெறுமதி சங்கிலியில் பல்வேறு கூறுகள் வழியே ஒன்றிணைந்து, சமாதானமாக வழ்வதாகவும் கண்டுள்ளது.

> *"எமது பால் சந்தையை அடையும் முன்னர் மூன்று பேரிடம் செல்கின்றது. தமிழ் மக்கள் பால் கறந்து முஸ்லிம்களுக்கு விற்பனை செய்கின்றனர். முஸ்லிம்கள் சிங்கள கடை உரிமையாளர்களிற்கு விற்கின்றனர்."*
>
> *(முக்கிய கவனக்குழு, ஏறாவூர் பட்டு)*

---

[13] புலம்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றத்தில் இனவாரியான தகவல்கள் கிடைக்கப்பெறாமையால் இவ்விரு மாவட்டங்களிலும் இதற்கு ஏதுவான காரணிகளில் ஒரு முடிவுக்கு வருவது கடினம்.

குடித்தொகையில் ஏற்பட்டுள்ள இம் மாற்றங்கள் மற்றும் யுத்த குழுவின் காரணமாக மேலும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமையும் மீள்குடித்தொகையும் கிழக்கில் புணரமைப்பு வேலைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியனவாகும். இருந்தாலும் அதே நேரம் இரண்டு மாவட்டங்களிலுமான சிங்கள மக்களின் மீள்குடியேற்றமானது சிறுபான்மை மக்களின் மனதில் நில உரிமைகள் தொடர்பாக பாதுகாப்பற்ற பய நிலைக்கு வழிவகுத்துள்ளது. குடித்தொகை மாற்றங்கள் மற்றும் உள்வரும் குடித்தொகை வரவானது ஜீவனோபாயங்கள் தெடர்பான உள்ளீடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் அதே போல் அர்த்தமுள்ள சந்தை தொடர்புகளில் ஈடுபடல் என்பன பாதிக்கப்படுவதுடன் இது நீக்கப்பட்ட மக்களையும், வளங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய குழுக்களையும் பாதிக்கும்.

பிரதானமாக அடையாளம் காணப்பட்ட குழுக்களின் (இனம் போன்ற) உட்படுதல் மற்றும் வெளியேற்றப்படல் தொடர்பான உள்ளூர் சூழ்நிலை மற்றும் இயக்கப்பாடுகளை புரிந்துகொள்ளல், இப்புரிந்துணர்வினை செயற்திட்ட வடிவமைத்தலில் இணைத்துக்கொள்ளலின் முக்கியத்துவமானது ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் (CEPA) மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இது அபிவிருத்திக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சிப்படுத்தலில் மிகவும் சர்ச்சைக்குரிய பரிமாணங்களாவன இலக்குப்படுத்தலில் அதாவது இச் செயற்திட்டங்களில் உட்படுத்தப்பட வேண்டிய, நீக்கப்பட வேண்டிய குழுக்கள் என்பவற்றை இலக்குப்படுத்தலில் மற்றும் இவை உள்ளூர் இயக்கப்பாடுகள் மற்றும் சமுதாயங்களின் இடைத்தொடர்புகளை எவ்வாறு பாதிக்கும் எனவும் சரியாக முகாமைத்துவம் செய்யப்படாதவிடத்து இவை குழுக்களிடையான மன அழுத்த நிலைகளை எவ்வாறு அதிகரிக்கலாம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது (டிப்ரோஸ் குழுவினர், 2010). இவ்வாறு இவ்வாய்வுக்குரிய செயன்முறையை உருவாக்கும் போதும் குறித்த செயற்பாட்டு பயிற்சிகளை அமைக்கும் போதும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் காணப்பட்ட உள்ளூர் சூழ்நிலை மற்றும் சமூக பொருளாதார மற்றும் குடியியல் இயக்கப்பாடுகளும் கருத்தில் கொள்ளப்பட்டன.

2007ஆம் ஆண்டு மேற்கொள்ள்பட்ட தொகை மதிப்பீட்டு திணைக்களத்தினது கணிப்பீட்டாய்வின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தினது 24 கிராம செயலக பிரிவுகளிலிருந்து (7 பிரதேச செயலக பிரிவுகளிற்குரிய) மக்கள் இடம்பெயர்ந்ததுடன் மட்டக்களப்பில் 23 கிராம செயலக பிரிவுகளிலிருந்து (3 பிரதேச செயலக பிரிவுகளிற்குரிய) மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இது பிரதானமாக மோதல் காரணமானது என்பதுடன் முறையே திருகோணமலை மற்றும் மட்டக்களப்பிலிருந்து 74மூ மற்றும் 85.8மூ ஆன மக்கள் மோதல் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். ஏனையோர் சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்தோராவர் (DCS, 2007a, 2007b).

**அட்டவணை 3.3: திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தொகை, 2007**

| பிரதேச செயலக பிரிவு | மொத்த குடித்தொகை | மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் | இடம்பெயர்ந்த குடித்தொகை மொத்த குடித்தொகையின் சதவீதமாக (%) |
|---|---|---|---|
| படவசிறிபுர | 10,666 | 16 | 0 |
| குச்சவெளி | 26,327 | 531 | 2 |
| கோமரன்கடவல | 5,879 | 6 | 0 |
| மோரவெவ | 5,563 | 886 | 16 |
| நகரம் | 89,046 | 5,391 | 6 |
| தம்பலகமுவ | 27,572 | 467 | 2 |
| கந்தளை | 42,861 | 287 | 1 |
| கிண்ணியா | 61,558 | 379 | 1 |
| சேருவில | 11,142 | 787 | 7 |
| முத்தூர் | 47,132 | 2,714 | 6 |
| வெருகல் | 6,617 | 0 | 0 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2007b

**அட்டவணை 3.4 திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தொகை, 2007**

| பிரதேச செயலக பிரிவு | மொத்த குடித்தொகை | மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் | இடம்பெயர்ந்த குடித்தொகை மொத்த குடித்தொகையின் சதவீதமாக (%) |
|---|---|---|---|
| கோரலை பட்டு வடக்கு | 21,263 | 1,093 | 5 |
| கோரலை பட்டு மேற்கு | 20,985 | 27 | 0 |
| கோரலை பட்டு | 24,589 | 2,702 | 11 |
| ஏறாவூர் பட்டு | 75,886 | 17,276 | 23 |
| ஏறாவூர் நகரம் | 25,024 | 84 | 0 |
| மன்முனை வடக்கு | 88,459 | 9,081 | 10 |
| காத்தான்குடி | 39,523 | 237 | 1 |
| மன்முனை பட்டு | 30,747 | 874 | 3 |
| மன்முனை S-W | 23,988 | 357 | 1 |
| பொரதீவு பட்டு | 38,282 | 442 | 1 |
| மன்முனை தெற்கு மற்றும் ஏறாவூர் பட்டு | 57,917 | 1,967 | 3 |
| கோரலை பட்டு மத்தி | 24,510 | 582 | 2 |
| கோரலை பட்டு தெற்கு | 19,659 | 6,107 | 31 |
| மன்முனை மேற்கு | 25,025 | 4 | 0 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2007 டி

கிழக்கில் மோதல் முடிவுற்று ஐந்து வருடங்களும் பிந்தியதன் பின்னர் மோதலின் போது பல்வேறு கட்டங்களிலும் இடம்பெயர்ந்த மக்கள் கிழக்கில் தமது வாழிடங்களிற்கு மீண்டுள்ளனர். இருந்தாலும் நிலைபேறான விதத்தில் மீள்குடியேற்றமானது மோதலினால் பாதிக்கப்பட்ட பலருக்கும் ஒரு மிக கடுமையான பிரச்சினையாகவே உள்ளது. யுத்தத்தின் பின்னர் எல்லா இன சமுதாயங்களும் மீள்குடியேற்றமானது காணிகளை கோரலிலான போட்டி, எல்லை பிரச்சினைகள், சட்டபூர்வ ஆவணங்களை வழங்க முடியாமை மற்றும் காணியில்லாமை போன்ற பல சிக்கல் நிலைமைகளை தோற்றுவித்துள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள்வோர் தொடர்பான பொதுமக்கள் தகவல்கள் இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடியனவாக இல்லாமையும் 2007 இலிருந்து விரிவான மக்கள் தகவல்கள் மேற்கொள்ளப்படாமையும் ஒரு 'மறைந்துள்ள பிரச்சினையினை' ஏற்படுத்தியுள்ளது. மீள்குடியேறிய பலரும் உணவு, நீர், வீடு மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் தமது பொதுமக்கள் உரிமைகளை செயற்படுத்தல் தொடர்பான பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இடம்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பனவும் புலம்பெயர்வுக்குரிய காரணங்களுள் ஒன்றாக இருப்பதுடன் இது மட்டக்களப்பிலும் திருகோணமலையில் கூடுதலாக காணப்படுகின்றது.

2012ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 22,975 பேர் புலம்பெயர்ந்தவர்களாகவும், அவர்களுள் 3,034 பேர் இடம்பெயர்ந்தோராயும் 1,153 பேர் இடம்பெயர்வின் பின் மீளக்குடியேறியோராகவும் இருந்தனர். திருகோணமலையில் 73,640 புலம்பெயர்ந்தோர் குடித்தொகையில் 3,476 பேர் இடம்பெயர்ந்தோராகவும் 28,225 பேர் இடம்பெயர்வின் பின் மீள்குடியேறியவர்களுமென இவ்வெண்ணிக்கை மற்றும் விகிதமானது உயர்வாகவே காணப்பட்டது.

பொதுவாக பெரியளவு பொருளாதார செயற்திட்டங்கள் (அமுல்படுத்தலிற்கு/ நேரடியாக நன்மை பெறுவதற்குரிய திறன்களை உள்ளூர் மக்கள் பெற்றிராத) உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்களையும் மீள்குடியேறுபவர்களையும் உள்ளடக்கியதாக குடும்பங்களிற்கு நன்மை பயக்கக்கூடிய அதிக உதவி தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளையே முன்னுரிமை படுத்துகின்றன. சில மீள குடியமர்த்தல்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்களால் பலவந்தங்களுக்கு உட்பட்டவையாக சந்தேகிக்கப்படுகின்றன. வட மாகாணத்திலும் குறைந்தளவிலெனினும் கிழக்கு மாகாணமும் அதிக

இராணுவ படையினரைக் கொண்டதாகவே உள்ளன. இராணுவத்தினரும் உள்வாரியாக இடம்பெயர்ந்த மக்கள், மீள்குடியமர வந்தவர்கள் மற்றும் மோதலால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுடன் பொருளாதார ரீதியாக போட்டியிடுபவர்களாக இருப்பதுடன் இது பொருளாதார சுதந்திரம் வெளி உதவிகளிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கும் நிலையில் தள்ளாட வைக்கின்றது. இருந்தாலும் இந்நிலைமை கிழக்கிலும் வடமாகாணத்திலும் அதிகமாக உள்ளது.

திருகோணமலையின் உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து (சம்பூர் பிரதேசம்) இடம்பெயர்ந்த மக்கள் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தமது வீடுகளிற்கு திரும்பியிருக்கவில்லை. மேலும் இவர்கள் பொதுவாக சொந்த இடங்களுக்கு அருகில் தற்போதைய வாழிடங்களிலேயே குடியேற்றப்பட்டனர். பெரும்பாலான நேரங்களில் இது கஷ்டமான நிலைமைகளாக இருந்ததுடன் மீளக்குடியேறுபவர்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்காக தொடர்ந்தும் குரலெழுப்பியவர்களாகவே இருந்தனர்.

மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனங்கள் மீது தொடர்ந்தும் இருந்து வந்த அரச கட்டுப்பாடுகள் வடக்கு மற்றும் கிழக்கின் மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விரிவான தேவைகள் மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் இவ்வாறு தேவைகள் மற்றும் கிடைக்கக்கூடியதாகவுள்ள வளங்களிடையிலான வித்தியாசம் தொடர்ந்தும் இம்மக்களை தொல்லைப்படுத்துகின்றதாக குறிப்பிடுகின்றது. இதற்கு மேலாக வடக்கு மற்றும் கிழக்கிலான மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகள் பெருமளவில் இராணுவத்தினராலேயே கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவி வழங்கல் மற்றும் போதிய மீள்குடியேற்றம் என்பன எவ்விதத்திலும் பொதுவானதாக இல்லை. 2011ஆம் ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகளும் அரசாங்கத்தின் செயல்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை (IDMC, 2012). இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒரு நிலையான தீர்வினை அடைந்து கொள்வதில் இப்பரிந்துரைகள் மிக மிக தேவையானவையாகும்.

## 3.2 வறுமையும் வருமான சமமின்மையும்

சில ஜீவனோபாய வழிகளை ஏனையவற்றிலும் தெரிவு செய்வதற்கு அல்லது இல்லாமை காரணமாக வேறொன்றில் ஈடுபடுவதன் காரணத்தை, குறிப்பாக வருமான கிடைக்கற்றகவு மற்றும் வருமான முதல்கள், நலன்புரி மாற்றல்கள், பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக புரிந்து கொள்ள முயலும் போது நல்வாழ்வினை தீர்மானித்தல் மிக முக்கியமாகும். இவை குடித்தொகையை இலக்குப்படுத்தல், குறித்த சில பெயர் குறிப்பிடும் படியான செயற்திட்ட தலையீடுகள் (வாழ்வாதார உதவி வகை அல்லது தேவையான உட்கட்டமைப்பு வசதி வகை போன்ற) தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கும் முக்கியமானவையாகும்[13].

தி. சர்வானந்தன் (2005) அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையொன்று வடக்கு மற்றும் கிழக்கின் வறுமை சூழ்நிலை தொடர்பாக ஒரு முழுமையான விளக்கத்தினை வழங்குகின்றது. தலைக்குரிய வருமானத்தை கருத்தில் கொள்ளும் போது முழு நாட்டிலுமே மோசமான நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளதாக அவர் முடிவுரை வழங்குகின்றார். இரவல் வாங்கல்கள், பொருள் கடன்கள் மற்றும் வருமான மாற்றல் போன்ற சார்பு வறுமைக்கான அண்மித்த காட்டிகளின் அடிப்படையில் தேசிய சராசரியிலும் இழப்பு நிலையானது குறிப்பிடத்தக்களவில் உயர்வாகும் என குறிப்பிடுகின்றார். 2003/2004 இல் சேகரிக்கப்பட்ட நுகர்வோர் நிதி கணிப்பீட்டாய்வு (CFS) எல்லா மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்திலேயே வருமான சமமின்மை உயர்ந்தளவில் காணப்பட்டதாகவும் இது 2009/2010 இலும் உயர்வாகவே இருந்ததாகவும் காட்டுகின்றது.

2009/10 குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வு (HIES) தரவிற்கேற்ப (DCS, 2011) ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது கிழக்கு மாகாணமே அதி உயர் வறுமை நிலைகளை காட்டுகின்றது. இங்கு தனிநபர் வருமானம் ரூபா 5,663 ஆக இருப்பதுடன் ஒரு குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவோர் சராசரி 1.5 ஆகவே உள்ளது. இதுவே எந்தவொரு மாகாணத்திலும் ஈட்டும் அதி தாழ்ந்த மாத வருமானமாகும் (DCS, 2011).

13 திருகோணமலை மாவட்டத்தில் குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வு (DCS, 2008) நடாத்தப்படவில்லையாதலால் மாவட்ட மட்ட வறுமை தகவல்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு கிடைக்கப்பெறக்கூடியதாக இல்லை. இருந்தாலும் இத்தகவல் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ளது.

இருந்தாலும் மேற்படி ஆய்வின் போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் மிக கஷ்டமான சில பிரதேசங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அக்காலப்பகுதியில் காணப்பட்ட பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக முழு திருகோணமலை மாவட்டமுமே தவிர்க்கப்பட்டிருந்தமை முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டியதாகும். மிகவும் வறுமையான சில பிரதேசங்களே விடப்பட்டுளமையால் இம்மாகாணத்தினது பதிவு செய்யப்பட்டதிலும் மேலாக வறுமை நிலைமையானது மிக மோசமானதாக இக்காலகட்டத்தில் காணப்பட்டிருக்கலாம் என கருதப்படலாம்.

**அட்டவணை 3.5: மாகாண ரீதியில் தலைக் கணிப்பு சார் சுட்டி**

| மாகாணம் | தலைக் கணிப்பு சார் சுட்டி | |
|---|---|---|
| | 2006/2007 | 2009/2010 |
| மேல் மாகாணம் | 8.20 | 4.20 |
| மத்திய மாகாணம் | 22.30 | 9.70 |
| தென் மாகாணம் | 13.80 | 9.80 |
| வட மாகாணம் | - | 12.80 |
| கிழக்கு மாகாணம் | 10.80 | 14.80 |
| வட – மேல் மாகாணம் | 14.60 | 11.30 |
| வட – மத்திய மாகாணம் | 14.20 | 5.70 |
| ஊவா மாகாணம் | 27.00 | 13.70 |
| சபரகமுவ மாகாணம் | 24.20 | 10.60 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், மே 2011

HIES 2009/10 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி மட்டக்களப்பு மாவட்டத்தினது வறுமை தலைக்கணிப்பு சார் சுட்டி 20.3% ஆனோர் (அட்டவணை 3.5) அதிகாரபூர்வ வறுமை கோட்டின் கீழ் உள்ளனர் (தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2011). வறுமை வெளிச் சுட்டிக்கேற்ப மட்டக்களப்பு மாவட்டத்தினது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் தேசிய சுட்டிக்கு எதிராக வறுமைக் கோட்டினை அண்டிய குழுக்களாகவே உள்ளன. வறிய குடும்பங்களின் கலோரி சக்தி நுகர்வானது தேசிய பெறுமதி, அதேபோல் கிழக்கு மாகாணத்துடன் ஒப்பிடும் போது உயர்வாகும் (ibid).

**அட்டவணை 3.6: வறுமை தலைக் கணிப்பு சார் சுட்டியும் வறுமை நிலைமையும்**

| வருடம் | இலங்கை | கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 2006/07 ** | 15.2 | 10.8 | 10.7 | - |
| 2009/10 | 8.9 | 14.8 | 20.3 | 11.7 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2008, 2011

** தரவுகளில் வட மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டமும் நீக்கப்பட்டள்ளன.

## 3.3 திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிரதேச செயலக பிரிவுகளில் வறுமையும் நலன்புரியும்

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வறுமை மட்டங்கள் நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் உயர்வாகவே உள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெரும்பாலான குடும்பங்கள் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களது சராசரி குடும்ப வருமானத்திலும் குறைந்த மாதாந்த சராசரி வருமானத்தை ஈட்டுவனவாகவே இருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தினது இலக்குக்குரிய குடும்பங்களுள் சராசரி 50% ஆனவை தமது மாதாந்த வருமானமாக ரூபா 1,500 இலும் குறைவாகவே ஈட்டுவனவாக இருந்ததுடன் இது இலக்குக்குரிய குடித்தொகையினரிடையே உயர் மட்ட வருமான வறுமை காணப்படுகின்றமையை காட்டுகின்றது. இந்நிலைமை திருகோணமலை மாவட்டத்தில் சிறிது வித்தியாசமாக காணப்பட்டது. அதாவது இலக்குக்குரிய குடித்தொகையின் 28% ஆன அளவினரே மாதாந்த வருமானத்தை ரூபா 1,500 இலும் குறைவாக கொண்டிருந்தனரெனினும் பெரும்பாலானோர் (40%) ரூபா 1,500 - ரூபா 3,000 இற்குமிடையிலான மாதாந்த வருமானத்தை பெறுபவர்களாகவே இருந்தனர். இவ்வாறு

இரு மாவட்டங்களிலும் குடித்தொகையின் பெருமளவினர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளன என தெளிவாக விளங்குவதுடன் சேகரிக்கப்பட்ட தரவுகளிற்கேற்ப ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடித்தொகையினரிடத்தில் இழப்பு மற்றும் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள போதுமானளவு வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாமை எனும் உணர்வுகள் காணப்பட்டன.

> *"எமது மரணச் சடங்குகளை செய்வதற்கு கூட எம்மிடம் பணமில்லை. நாம் எமக்கிடையே பணம் சேகரித்தே மரணச் சடங்குகளைச் செய்கின்றோம்."*
>
> (முக்கிய குழு கலந்துரையாடல், வாகரை)

> *"எனக்கு ஒரு நிரந்தர வீடில்லை. நான் ஒரு சிறிய குடிசையில் வாழ்கின்றேன். எனக்கென்று சொந்தமாக வீடொன்றினை கட்டிக்கொள்ள என்னிடம் பணமில்லை."*
>
> (சம்பவக் கற்கை, அங்கவீனமானவர், கிரான்)

ஆய்வின் தரவுகளின் அடிப்படையில் இப்பிரதேசங்களில் காணப்படுகின்ற தாழ் வருமான மட்டங்கள் இங்கு குறுகிய கால மற்றும் நீண்டகால பெறுபேறுகளை கண்டு கொள்வதற்கு வழ்வாதார வழிகளுக்கான ஆதரவு வழங்கப்பட வேண்டியதன் தேவையை காட்டுகின்றன. குறைந்த வருமான மட்டங்கள் அன்றாடம் உயிர்வாழ்வதற்கான வாழ்க்கை முறையை-பெரும்பாலும் பருவகாலங்களால் பாதிக்கப்படுகின்ற வாழ்வாதாரங்களில் தங்கியிருப்தனை குறித்துக் காட்டுகின்றன. இவர்களிடையே சேமிப்பதற்கோ மற்றும் முதலீடுகளிற்கோ உள்ள சாத்தியப்பாடுகள் குறைவாகும். இந்நிலைமை வறுமை சூழலை விட்டும் வெளிவருவதற்கான இயலுமையை தடுப்பதுடன் சொத்துக்களில்லாமையானது முறைசாரா நிதி சேவைகளை பெற்றுக்கொள்ளும் வழிகளிற்கு இவர்களை தள்ளி விடுகின்றது. தொடராக இவர்கள் கடன் எனும் விஷச் சூழலினுள் விழ வைக்கப்படுகின்றனர் (தொடர்ந்து வருகின்ற பிரிவுகளில் ஆராயப்பட்டுள்ளன). உயர் இழப்பு மட்டங்கள் எந்தவொரு செயற்திட்ட தலையீடும் பாரம்பரிய வாழ்வாதார செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக நிதிகள் வழங்க வேண்டும் எனவும் இலக்குக்குரிய குடும்பங்களிற்கு பலதரப்பட்ட வருமான முதலீடுகளை வழங்குவதற்கான பல்வகைமைப்படுத்திலிற்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் குறித்து காட்டி நிற்கின்றன.

அங்கு பல சமுதாயங்கள் மூன்று தசாப்தங்களிற்கும் மேலான அழிவை ஏற்படுத்திய யுத்தத்திற்கு முகம்கொடுத்தவையாக இருப்பதனால் அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகள் திட்டமிடப்படும் போது அடிப்படைத் தேவைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இருந்தாலும் பணம் சார்ந்த வறுமை நிலை தாண்டி கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஆராய்ந்த போது மக்கள் குறித்த இலக்குக்குரிய குடித்தொகையின் நலன்புரி நிலை தொடர்பாக மிகவும் விரிவான புரிந்துகொள்ளக்கூடிய விளக்கத்தினை வழங்கியதுடன் அப்பிரதேசத்திற்கு திட்டமிடப்பட்டுள்ள தலையீடுகளின் தன்மை மற்றும் அளவினை பற்றியும் சில உள்ளார்ந்த தகவல்களை வழங்குகின்றனர். பின்வரும் பிரிவு ஆய்வு மாதிரியில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இருந்தவாறான அடிப்படைத் தேவைகள் தொடர்பான சூழ்நிலையை முன்வைக்கின்றது.

## 3.4 பலவீனமான தன்மை

முன்னைய பிரிவுகளில் கலந்துரையாடப்பட்டது போன்று இலக்குக்குரிய குடித்தொகையினர் பொதுவாக வெளி அதிர்ச்சிகளிற்கு மிகவும் பலவீனமானவர்களாக கருதப்பட முடியும். ஆனால் செயற்திட்டம், திட்டமிடல் மற்றும் தலையீடுகளின் வகையினை தீர்மானித்தல் தொடர்பாக இப்பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குழுக்களுக்கு குறித்த கவனம் கொடுக்கப்பட வேண்டும். தங்கிவாழ்வோர் எண்ணிக்கை, பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், அங்கவீனம், வயது முதிர்ந்தோர் மற்றும் அநாதைகள் போன்ற பல நிபந்தனை விதிகள் ACAP இலக்குக்குரிய பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மற்றும் அண்மையில் மீள்குடியேறிய சமுதாயங்கள் தொடர்பாக கருதப்பட்டுள்ளன. ஆய்வுக் கட்டுரையின் இப்பகுதி பலவீனமான குழுக்கள் தெடர்பான ஒரு சுருக்கமான விளக்கத்தினை தருகின்றது.

பெருமளவு அங்கவீனமான மக்கள் கொமரன்கடவல பிரதேச செயலக பிரிவின் மய்லாவெவ பகுதியில் வாழ்வதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக பெண்களிலும் ஆண்களே அதிக அங்கவீனங்களுடன் வாழ்வதானது அவர்கள் எவ்வளவு தூரம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனையும் தமது வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடும் போது எவ்வளவு விபத்துக்களிற்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தனர் எனவும் விளக்க முடியும்.

பலவீனமான தன்மையானது இலக்குக்குரிய எல்லா கிராம சேவகர் பிரிவுகளிலும் கூடுதல் எண்ணிக்கையான விதவைகள், தபுதாரர்கள் உள்ளதாகக் குறிக்கப்படுகின்றது. பலவீனமான நிலையிலுள்ளவர்கள் குறைந்த எண்ணிக்கையில் பதிவாகியுள்ள மூதூர் பிரதேச செயலக பிரிவின் நல்லூர் கிராம சேவகர் பிரிவு இதற்கு விதிவிலக்காகும். அட்டவணைகள் 3.7a மற்றும் 3.7b என்பன ACAP செயற்திட்டங்களாலும், எமது இவ்வாய்வினதும் இலக்குக்குரிய கிராம செயலகப் பிரிவுகளின் பலவீனமாக குழுக்களை காட்டுகின்றது.

**அட்டவணை 3.7a: ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிரம சேவகர் பிரிவுகளில் பலவீனமான குழுக்கள் - பால் ரீதியாக, திருகோணமலை, 2010**

| கிரம சேவகர் பிரிவு | அங்கவீனங்களுடனான நபர்கள் | | தபுதரர்கள்/ விதவைகள் | | அனாதைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| சுமேதன்கரபுர S | 8 | 2 | 0 | 24 | 0 | 0 |
| நல்லூர் T | 10 | 12 | 0 | 62 | 0 | 0 |
| கடகரச்சேனை T | 40 | 17 | 62 | 6 | 5 | 8 |
| ஆலியடி M | 28 | 18 | 0 | 72 | 4 | 5 |
| நடுஊத்து M | 20 | 8 | 0 | 85 | 0 | 0 |
| வில்கம்விகர | 9 | 5 | 0 | 10 | 4 | 0 |
| திரியாய S, T | 22 | 12 | 4 | 27 | 0 | 0 |
| கிதுலுதுவ S | 11 | 6 | 5 | 26 | 5 | 1 |
| மிலவெவ S | 46 | 18 | 1 | 17 | 0 | 0 |

மூலம்: மோதலால் பாதிக்கப்பட்ட நபர்களிற்கான உதவி தரவு, 2010

**அட்டவணை 3.7b: ACAP இலக்குக்குரிய கிரம சேவகர் பிரிவுகளில் பலவீனமான குழுக்கள் - பால் ரீதியாக, மட்டக்களப்பு**

| கிரம சேவகர் பிரிவு | அங்கவீனங்களுடன் வாழும் நபர்கள் | | விதவைகள் | | அனாதைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | | ஆண்கள் | பெண்கள் |
| புனானை கிழக்கு | 23 | 21 | nil | 98 | Nil | Nil |
| மதுரன்கேணிகுளம் | 8 | 5 | 2 | 40 | Nil | 3 |
| பெரில்லாவெளி | 4 | 7 | 16 | 64 | Nil | Nil |
| பூலக்காடு | 6 | 5 | 3 | 52 | Nil | 2 |
| கிதுல்வெவ | 8 | 6 | nil | 84 | 14 | 31 |
| கொப்பாவெளி | 4 | 1 | 10 | 59 | Nil | 9 |
| ஐத்தியாமலை வடக்கு | 43 | 23 | nil | 53 | Nil | 1 |
| நெடியமடு | 9 | 3 | nil | 12 | Nil | Nil |
| பண்டாரியவெளி | 8 | 4 | 11 | 51 | 15 | 31 |
| அம்பலந்துறை மேற்கு | 5 | 10 | 3 | 53 | 20 | 18 |
| நவகிரிநகர் | 5 | 5 | 9 | 15 | nil | Nil |
| பலையடிவட்டை | 13 | 6 | 4 | 83 | 49 | 42 |
| விலன்தோட்டம் | 4 | 4 | 15 | 29 | 1 | 5 |

மூலம்: மோதலால் பாதிக்கப்பட்ட நபர்களிற்கான உதவி தரவு, 2010

இணைப்புக்களை பார்க்கும் போது மிகவும் கஷ்ட பிரதேசமாக உள்ளது கொமரன்கடவெல பிரிவிலுள்ள மய்லாவெவ ஆகும் என்பதுடன் இது பிரதான நகர மையத்திலிருந்து சுமார் 45km தூரத்திலுள்ளது. மாறாக திரியாய பிரிவிலுள்ள குச்சவெளி மற்றும் விலாதோட்டம் என்பன பிரதான பேருந்து பாதைகளிற்கு மிக அண்மையிலுள்ளனவாகும். பெரிகள் (Ferries) மற்றும் பேருந்துகள் போன்ற பல போக்குவரத்து முறைகளை பயன்படுத்த வேண்டியதன் தேவையும் இதனால் விளைவாகும் உற்பத்தியின் தரம் குறைதல் மற்றும் வினைத்திறனாக பயன்படுத்தக்கூடிய நேரம் வீணாகுதல் என்பன வாழ்வாதாரங்களை பாதிக்கக்கூடிய போக்குவரத்து பிரச்சினைகளாக முக்கிய குழு கலந்துரையாடல்களில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு 1 இல் அட்டவணைகள் 1 மற்றும் 2 என்பன உட்கட்டமைப்பு வசதிகளினை பெற்றுக்கொள்வதிலான கூடுதல் தரவுகளை வழங்குகின்றன).

*"நாம் அதிகாலையில் நகருக்குச் செல்வோமெனில் பின்னேரம் 6 மணியளவிலேயே வீடு திரும்புவோம்."*

(முக்கிய குழு கலந்துரையாடல், வாகரை)

*"நாம் உற்பத்தி செய்த காய்கறிகளையும் நெல்லையும் ஆற்றங்கரை வரை தலை மீது சுமந்து செல்கின்றோம். பின்னர் தோணியில் ஆற்றினை கடக்கின்றோம். இதற்கு ரூபா 10 செலவாகும். பின்னர் வாழைச்சேனை சந்தைக்கு தலையிலேயே சுமந்து செல்கின்றோம்."*

(சம்பவக் கற்கை, FHH, கிரான்)

இணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதிலான போக்குவரத்து பிரச்சினைகள், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் மக்களுக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. மிக முக்கியமாக இவ்வாய்வின் நோக்கிலிருந்து இணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதிலான கஷ்ட நிலைகள் மக்கள் தமது உற்பத்திகளை சந்தைகளிற்கு கொண்டு செல்லவும் தமது உள்ளீட்டுப் பொருள் விநியோகங்களிற்கு நகர மையங்களை நாடவும் போக்குவரத்துக்காக அதிக செலவு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். மாறாக இவர்கள் விநியோகஸ்தர்களிலும் கொள்வனவாளர்களிலும் தங்கியிருக்க வேண்டியிருப்பதுடன் இது இவர்களது பேரம் பேசும் சக்தியை குறைத்து இறுதியாக உற்பத்தியாளர் ஈட்டும் இலாபம் குறைக்கப்படுகின்றது.

*"எமக்கு பேருந்து சேவைகள் இல்லை. நாம் கஜுவத்தை சந்திக்கு 12km தூரம் நடந்து போக வேண்டும். நாம் முச்சக்கர வண்டியில் போவதாயின் ரூபா 300 கூலியாக கொடுக்க வேண்டும்."*

(சம்பவ கற்கை, அங்கவீனமானவர்கள், வாகரை)

இச் சமுதாயங்களுக்கு மின்சார வசதியின்மையும் முக்கியமாக நோக்கப்பட வேண்டியதாகும். குச்சவெளி கிராமம் மாத்திரம் பகுதியளவில் பிரதான மின் இணைப்பு தொகுதியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் சுனாமியின் பின்னர் ஒரு சர்வதேச அரச சாரா அமைப்பினால் வழங்கப்பட்ட சூரிய கலங்களால் பிரதானமாக மின்சக்தி வசதி கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத்தவிர ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வேறு எந்த சமுதாய மக்களிற்கும் மின்சார விநியோகம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. நெல் ஆலை சார்ந்த அல்லது பால் அடிப்படையிலான உற்பத்திகள் போன்ற பெறுமதி கூட்டல் செயன்முறைகளை தொடங்குவதற்கு இது தடைகளை ஏற்படுத்துகின்றது.

*"யோகட் தயாரிப்பதற்கு எம்மிடம் மின் வசதி இல்லை. நாம் தயிர் தயாரித்தால் வாகனமின்மையால் எம்மால் அதனை சந்தைப்படுத்த முடியாது".*

(முக்கிய குழு கலந்துரையாடல், ஏறாவூர் பட்டு)

சில சமுதாயங்கள் தாம் வாழும் கிராமங்களை அண்டிய ஏனைய இனத்தவர்கள் வாழும் கிராமங்களிற்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டு தமக்கு வழங்கப்படாது தாம் ஓரங்கட்டப்பட்டுளதாகவும் உணர்கின்றனர்.

*"எமது கிராமத்தை தாண்டி சிங்கள குடியேற்றமொன்றுள்ள கிராமத்திற்கு மின்சார இணைப்புகள் உள்ளது. நாம் 2007 இல் மீள்குடியேற்றப்பட்டோம். ஆனால் இன்னும் மின்வசதி இல்லை*

(முக்கிய குழு கலந்துரையாடல், ஏறாவூர், பட்டு)


கிண்ணியா பிரதேச செயலக பிரிவிலுள்ள ஜலியடி கிராம சேவகர் பிரிவு தவிர்ந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஏனைய அனைத்து சமுதாயங்களிற்கும் குடிநீர் விநியோகம் கிடைக்கப்பெற்று இருந்ததுடன் இது பிரதானமாக குழாய் கிணறுகள் மற்றும் தரைக் கிணறுகளினாலேயே பெறப்பட்டிருந்தது. இருந்தாலும் வாழ்வாதார செயற்பாடுகளிற்கான நீர் (விசேடமாக பயிர்ச்செய்கைகளுக்குரிய) சமுதாய மட்டத்தில் ஒரு மிக முக்கிய தடையாகவே இனங்காணப்பட்டிருந்தது. பெரும்பாலான சமுதாயங்கள் ஒரு சிறிய குளத்தையேனும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்ததெனினும் அவர்கள் தங்கியிருக்கக்கூடிய வேறும் ஒரேயொரு தெரிவு மழை நீராகவே இருந்ததால் இது புனரமைப்பினது மிக முக்கிய தேவைகளாகும். நிலம் மற்றும் தொழிலாளர் போன்ற கிடைக்கக்கூடியதாகவுள்ள விவசாய வளங்களிலிருந்து ஓர் உயர் உற்பத்தி மட்டத்தை அடைந்து கொள்வதில் மழைநீரில் மாத்திரம் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஒரு தடையாகவே உள்ளது.

மேலே கலந்துரையாடப்பட்ட தீவிர வருமான வறுமை மட்டங்களிற்கும் மேலாக, போக்குவரத்து இணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல், நீர் மற்றும் மின்சார வசதிகளை பெற்றுக்கொள்ளல் போன்ற நல்வாழ்வுடன் தொடர்பான வறுமையின் பரிமாணங்களையும் சேர்த்து கருத்தில்கொள்கையில், இலக்குக்குரிய சமுதாயங்களின் வாழ்வாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு நாடும் செயற்திட்ட தலையீடுகள் பன்முனையிலான அணுகுமுறைகளை கொண்டியங்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. உதாரணமாக குளங்களை புனரமைத்தல் என்பது ஒரு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய தேவையாகவுள்ள அதே நேரம் போக்குவரத்து வசதிகளின் கிடைக்கற்றகவு போன்ற ஏனைய ஆதரவு அமைப்புக்களின் வழங்கலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். செயற்திட்ட செயற்பாடுகள் வேறு வகையான எரிபொருட்களில் இயக்கப்படக் கூடிய நெல் ஆலைகளை வழங்கல் அல்லது தமது பண்ணை உற்பத்திகளை சேர்த்து ஒருமித்து போக்குவரத்துக்களை மேற்கொள்வதற்கான விவசாயிகள் குழுக்களை அமைத்தல் மற்றும் அவற்றை பலப்படுத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணமாக புதிய முறைகளை தேடி ஆராய வேண்டும்.

### 3.5 திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு வாழ்வாதார செயற்பாடுகளில் மோதலின் தாக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக சதவீதமான மக்கள் சேவைகள் துறையிலும் அதனை தொடர்ந்து கைத்தொழில் துறையிலும் உள்ளனர். திருகோணமலை மாவட்ட மக்களின் அதிகூடிய சதவீதத்தினர் சேவைகள் துறையிலும் அதனை தொடர்ந்து விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர் (படம் 3.1 ஐ பார்க்க).

**படம் 3.1: பெரிய கைத்தொழில்களுக்கேற்ப தொழில் புரியும் குடித்தொகையினர்**




மூலம்: தொழிற்படை கணிப்பீட்டாய்விலிருந்து பெறப்பட்டது, 2010

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் உட்பட இம்மாகாணத்தில் பயிர் செய்யப்படுகின்ற பிரதான விவசாய பயிர்கள் நெல், காய்கறிகள் மற்றும் ஏனைய களப் பயிர்களாகும். இவ்விரு மாவட்டங்களதும் மீன்பிடித்துறையின் ஒரு முக்கிய பகுதி கடற்றொழிலாகும் என்பதுடன் இது கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடிகளை உள்ளடக்குகின்றது. நாட்டின் மிகப்பெரிய கரையோர களப்பு சூழற்றொகுதி மட்டக்களப்பிலேயே காணப்படுவதுடன் இம் மாவட்டத்தினது மீன்பிடி தொழில் உள்நாட்டு கைத்தொழிலில் பாரிய பங்களிப்பு செய்கின்றது (டிப்ரோஸ் குழுவினர், 2010).

வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணம் மோதல் நிலைமைகளிலிருந்து விரைவாக மீளுகின்றதெனினும் மோதலின் தாக்கங்களும் அடையாளங்களும் இன்னமும் உள்ளன. விவசாயம் மற்றும் மீன்பிடி துறைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் இரண்டிலும் மோதல் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தியுள்ளது. விவசாய நிலங்களை அடைவதற்கு மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் போக்குவரத்திலான தடைகள் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் இழப்புக்களை இன்னும் மோசமாக்கின. மோதல் காரணமான பௌதீக ரீதியான பாதுகாப்பின்மையும் விவசாயத்திலான முதலீடுகளின்மைக்கு பெரும் காரணமாகின. விவசாயத்துடன் இணைந்த அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அழிவடைந்தமையும் இத் துறைக்கான ஒரு பெரும் தடையாகும் (டிப்ரோஸ் குழுவினர், 2010).

இலங்கையில் உயர் பாதுகாப்பு வலயங்களாக உத்தியான பிரதேசங்கள் பிரிக்கப்பட்டமையும் விவசாயத்தில் குறிப்பிடத்தக்களவு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது, இது உற்பத்தித் திறன் கொண்ட நிலங்களை விவசாயத்திற்காகவும் கால்நடைகளின் மேய்ச்சலிற்காகவும் பயன்படுத்துவதை தடுக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் 2,500 ஏக்கர் நெல் நிலம் உயர் பாதுகாப்பு வலயங்களாக (ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இது பொருளாதார வலயமாக[13] குறிக்கப்பட்டிருந்தது) அறிவிக்கப்பட்டிருந்தது (முக்கிய நபர் நேர்காணல்கள் மற்றும் மாவட்ட மட்ட செயலமர்வுகளிலிருந்து கிடைத்த தகவல்களிற்கேற்ப). யுத்த காலத்தில் பெருமளவான நிலம் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும், பயன்படுத்தப்பட முடியாதவையாகவும் இருந்தன.

நாளின் குறித்த சில நேரங்களில் மீன்பிடித்தலிற்கு மற்றும் சில இடங்களில் மீன்பிடித்தலை தடுப்பதுமாக இருந்த இராணுவ தடைகள் மீன்பிடி துறையினது உற்பத்தித் திறனை பாதித்தது. யுத்த முடிவினைத் தொடர்ந்து இத்தடைகள் தகர்க்கப்பட்டதனால் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டது (முக்கிய நபர் நேர்காணல், திருகோணமலை).

பெரும்பாலான கடற்கரையோர உட்கட்டமைப்பு வசதிகள் (விசேடமாக பாதைகள், பாலங்கள் மற்றும் மின் இணைப்புக் கம்பிகள்), மீன்பிடி குடியிருப்புக்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் (படகுகள் உட்பட) அழிக்கப்பட்டு மீன்பிடி சமுதாயங்கள் பாதிக்கப்பட்டு உதவி வேண்டப்படுவனவாக ஆக்கப்பட்டன. இரண்டு மாவட்டங்களிலும் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், இறங்கு தளங்கள் மற்றும் துறைமுகங்கள் அழிக்கப்பட்டமையானது மீன்பிடித்துறையினை தள்ளாட வைத்தது. இத்தடைகள் காணப்பட்ட போதிலும் மட்டக்களப்பு மாவட்டம் அதன் உற்பத்தி மட்டங்களை கூடுதலாகவே வைத்திருக்க முடிந்திருந்தது. பிரதான மத்திய மற்றும் சிறிய நீர்ப்பாசன குளங்கள் அழிக்கப்பட்டமையானது உள்நாட்டு மீன்பிடி உப துறையினது உற்பத்தியை பெரிதும் பாதித்தது (வடக்கு மற்றும் கிழக்கிலான விவசாய மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்களில் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் (CEPA); மேற்கொள்ளப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வு 2009). இருந்தாலும் அட்டவணை 3.8 இல் காட்டப்பட்டதன் படி திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களது உற்பத்தி மட்டங்கள் மோதலின் உச்ச கட்டங்களில் (2005-2007) பெரிதும் பாதிக்கப்பட்டன. மோதல் நிலைமைகள் முடிவுற்றதனை அடுத்து உற்பத்தி மட்டங்கள் மீட்கப்பட்டு முன்னேற்றமடைந்தன.

13 பிரதேசங்களை குறிக்கும் பதத்தில் காட்டும் மாற்றமானது (பாதுகாப்பு வலயத்திலிருந்து பொருளாதார வலயமாக) கொடுக்கப்பட்டுள்ள அக்கறை மற்றும் தொடர்ச்சியான சமாதானத்தை குறிப்பனவாக உள்ளன.

**அட்டவணை 3.8: மீன்பிடி மாவட்டங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கடல் மீன்பிடித்துறை, 2004 - 2009**

| மீன்பிடி மாவட்டம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 16,520 | 11,670 | 14,910 | 17,130 | 16,960 | 20,010 |
| சிலாபம் | 14,220 | 9,360 | 18,720 | 24,180 | 22,060 | 21,950 |
| நீர்கொழும்பு | 22,780 | 16,940 | 29,070 | 35,710 | 35,820 | 37,490 |
| கொழும்பு | 1,640 | 560 | 590 | 510 | 1,030 | 830 |
| களுத்துறை | 20,690 | 11,560 | 30,520 | 39,950 | 39,580 | 33,100 |
| காலி | 17,530 | 11,210 | 15,530 | 17,820 | 14,800 | 24,930 |
| மாத்தறை | 27,990 | 17,090 | 38,480 | 48,460 | 47,810 | 44,180 |
| தங்கால்லை | 21,960 | 6,220 | 15,590 | 20,990 | 20,850 | 20,990 |
| கல்முனை | 19,790 | 7,940 | 11,480 | 12,810 | 22,050 | 16,260 |
| மட்டக்களப்பு | 16,160 | 7,650 | 8,930 | 11,710 | 21,850 | 24,530 |
| திருகோணமலை | 16,540 | 6,790 | 6,270 | 8,150 | 17,980 | 27,690 |
| முல்லைத்தீவு | 2,200 | 780 | 850 | 360 | 260 | - |
| யாழ்ப்பணம் | 33,980 | 12,790 | 11,220 | 5,130 | 5,830 | 13,080 |
| கிளிநெச்சி | 3,130 | 1,460 | 830 | 590 | 360 | - |
| மன்னார் | 17,060 | 8,380 | 12,990 | 9,170 | 7,390 | 8,130 |

மூலம்: தொகை மதிப்பு திணைக்களம், 2009, அட்டவணை 5.34 இலிருந்து பெறப்பட்டது

யுத்தம் நடந்த காலப்பகுதியில் இரசாயன உரம் மற்றும் எரிபொருள் போன்ற விவசாயப் பண்ணைக்கு தேவையான உள்ளீடுகளினை கொண்டு வருதலிலும் இருந்த தடைகள் நிலத்தின் உற்பத்தி திறன் குறைவதற்கு வழிவகுத்ததுடன் உற்பத்தி செலவினையும் அதிகரித்தன. இரசாயனப் பசளைகள் பயன்படுத்தாமையின் உடன்பாடான பக்கம், சேதன உணவுகளிற்கான கேள்வி அதிகரித்து வருகின்ற இக்காலத்தில் இவ்விவசாயிகள் சேதன உணவு உற்பத்திகளிற்கு ஒரு வாய்ப்பு இருந்ததாகும். இருந்தாலும் துரதிஷ்டவசமாக மாவட்ட மட்ட செயலமர்வுகளில் கலந்துரையாடப்பட்ட படி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உரங்களை பெற்றுக்கொள்ளும் வழிகள் அதிகரித்ததன் காரணமாக இரசாயன பசளைகளின் பாவனை அதிகரித்துள்ளது, இருந்தாலும் இன்னமும் அங்கு பயிர்ச்செய்கை செய்யப்படாத கைவிடப்பட்ட நிலம் சேதன விவசாயச் செய்கைக்கு, இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படாமல் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

மக்களின் திரும்ப திரும்ப நிகழ்ந்த, நீண்ட கால இடம்பெயர்வானது வடக்கு மற்றும் கிழக்கில் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையில் திறன் வாய்ந்த தொழிலாளர் ஈடுபடுவதனை பெரிதும் பாதித்துள்ளது. இராணுவ செயற்பாடுகளைத் தொடர்ந்த புதுப்பிக்கப்பட்ட நிலைப்பாடானது இடம்பெயர்ந்த மக்களின் மீளுகைக்கு சாதகமான நிலைமைகளை தோற்றுவித்துள்ளன. திறன் வாய்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பானது இவ்விரு மாகாணங்களிலும் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை புத்துயிர் பெற உதவி செய்யும்.

யுத்தகாலங்களில் நிலையங்களது பௌதீக வளங்கள் மற்றும் சந்தை வலையமைப்புக்கள் அழிக்கப்பட்டமையும் விவசாய, மீன்பிடி, விலங்கு வேளாண்மை துறைகளின் வளர்ச்சிக்கு தடையாக அமைந்தது, கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் உத்தித் திட்டமான 'கிழக்கின் எழுச்சி'[13] ஆவணங்களில் கலந்துரையாடப்பட்ட படி சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சிய

[13] அரசாங்கத்தினால் கிழக்கின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினது இணையத்தளம் www.neweast.lk ஆகும். மேலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாரியாக புலம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றம், கன்னிவெடி அகற்றுதல், புனர் நிர்மானமும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் போன்ற பல சமூக நிகழ்ச்சித் திட்டங்களும் பாதை வலையமைப்புக்கள், பாலங்கள், துறைமுகங்கள், வலு நிலையங்கள், மின் பரம்பல் வலையமைப்புக்கள், வைத்தியசாலைகள், மற்றும் பாடசாலைகள் போன்ற பல பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களையும் உள்ளடக்குகின்றன. 2010 இல் முடிவுறுகின்ற இம்மூன்று வருட நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 197,219 மில்லியன் (US$ 1840 மில்லியன்) மொத்த வரவு செலவுத் திட்ட முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. மூலம்: நிவ்யோர்க் நகரில் ஐக்கிய நாடுகளிற்கான நிரந்தர செயற்பணி, 2008)

வசதிகளின் பற்றாக்குறையினால் விசேடமாக அறுவடை கூடிய காலங்களில் அதிகளவு விளைபொருட்கள் வீணாகுவதால் விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு எப்போதும் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. களஞ்சியப்படுத்தல் மற்றும் பதனிடல் உட்கட்டமைப்பு வசதிகளும் சேதப்படுத்தப்பட்டு பாரம்பரிய சந்தைப்படுத்தல் வலையமைப்புக்களும் இழக்கப்பட்டிருந்தன. பால் சேகரிப்பு வலையமைப்புக்கள் இழக்கப்பட்டமை காரணமாக விலங்கு வேளாண்மை உபதுறை, விசேடமாக பாற் பண்னை துறை எதிர்மறையாக தாக்கப்பட்டது (மாவட்டமட்ட செயலமர்வு, மட்டக்களப்பு).

மோதல் தொடர்பான தடைகளின் விளைவாக விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளின் நிலையற்ற தன்மையானது இளம் பரம்பரையினரை வேறு தொழில்களை நாட வைத்துள்ளதுடன் மோதலின் பின்னர் இப்பிரதேசங்களில் காணப்பட்ட பாரம்பரிய அறிவு படிப்படியாக குறைந்தும் செல்கின்றது. பாரம்பரிய தொழில் ஒழுங்குகள் மாறியுள்ளதுடன் உற்பத்தி துறைக்கு புதிய பரம்பரையினர் கவரப்படுவதென்பது ஒரு சவாலாகவே உள்ளது. புலம்பெயர்வு காரணமாக இப்பிரதேசத்திற்கான பண அனுப்பீடுகளும் அதிகரித்துள்ளதுடன் இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் இது உதவுவதாக கொள்ள முடியும் (வடக்கு மற்றும் கிழக்கிலான விவசாய மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்களில் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வு 2009).

## 3.6 நிறுவனங்கள்

விவசாயம் சார்ந்த கொள்கைகள் மற்றும் பிரச்சினைகளின் அமுல்படுத்தலுக்கு பொறுப்பான பிரதான அரச நிறுவனம் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாய சேவைகள் அமைச்சாகும் (MADAS). இவ்வமைச்சினது பொறுப்புக்கள் கொள்கை, திட்டமிடல் மற்றும் அமுலாக்கலை இதன் திணைக்களங்கள் மற்றும் அரச அமைப்புக்களினூடாக உள்ளடக்குகின்றது.

பல்வேறு மாகாணங்களிற்கும் சேவைகளை வழங்குவதற்கான உட்கட்டமைப்பு வசதியினை விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாய சேவைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற விவசாய திணைக்களம் கொண்டுள்ளது, விவசாயம் என்பது ஒரு அதிகாரம் பரவலாக்கப்பட்ட விடயமாக உள்ளதுடன் மாகாண விவசாய அதிகாரிகளையும் ஒவ்வொரு கொவிஜன கேந்திர/ மத்திய நிலையத்திலும் விவசாய ஆலோசகர்களையும் கொண்டுள்ளது (டி சில்வா, 2009). விவசாயம் புரியும் எல்லா மாவட்டங்களிலும் எல்லா பிரதேச செயலக பிரிவுகளிலும் இம்மத்திய நிலையங்கள் காணப்படுவதுடன் இவை பயிர்ச் செய்கையிலிருந்து சந்தைப்படுத்தல் வரை தேவையான சகல விவசாய உதவிகள் சேவைகள் மற்றும் விரிவாக்கல் சேவைகளை வழங்குகின்றன. விவசாய திணைக்களத்தின் தொழிற்பாடுகளுக்கு பல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்களும் ஆதரவு வழங்குகின்றன. மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் மாகாண விவசாயத் திணைக்களம் பயிர் அபிவிருத்தி தொடர்பான விவசாய விரிவாக்கல் மற்றும் தொடர்பாடல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளினை அமுல்படுத்துகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அதிகாரிகளின் அதிகரித்த புலம்பெயர்வு காரணமாக மனித வளங்களிலான பற்றாக்குறை மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் (கட்டடங்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் போன்ற) அழிவடைந்தமை காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இப்பிரதேதசங்களிலுள்ள இந்நிறுவனங்களின் ஆற்றல்கள் குறைவடைந்ததாக உள்ளன.

விலங்கு வேளாண்மை அபிவிருத்தி அமைச்சு விலங்கு வேளாண்மை துறைக்கு பிரதான பொறுப்பாகவுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திலும் விலங்கு வேளாண்மை அபிவிருத்தியுடன் தொடர்பான சேவைகளை வழங்குதற்கு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்கள் அமைந்துள்ளன. நாட்டின் பாற்பண்ணைத் துறையில் ஈடுபட்டுள்ள மிக முக்கிய தனியார் துறை முகவர்கள் மில்கோ மற்றும் நெஸ்லே நிறுவனங்களாகும்.

மீன்பிடித் துறைக்கு பொறுப்பான பிரிவுகளும் அவற்றை மேற்பார்வை செய்கின்ற/ அமுல்படுத்தும் நிறுவனங்கள் அடைப்புக் குறிகளுள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன. கொள்கை வடிவமைப்பு, அமுலாக்கல் (மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் கடற்கரையோர பாதுகாப்பு திணைக்களம்), ஆய்வு (NARA), கல்வி (NIFNE), அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் (NAQDA) என்பவற்றுடன் தலைமைப் பொறுப்பினை மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு (MFAR) செயற்படுகின்றது. பல அரச பிராந்திய ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஸ்தாபனங்கள் (NARA மற்றும் NAQDA) தற்போது மீளமைக்கப்பட முடியாத வண்ணம் சேதமடைந்துள்ளதுடன் சில இராணுவ நிலையிடங்களாக உள்ளன (FAO, 2007).

விவசாயம், விலங்கு வேளாண்மை மற்றும் மீன்பிடி துறைகளுடன் தொடர்பான ஏனைய சேவை வழங்கும் நிறுவனங்களுள் ஒன்றான நீர்ப்பாசன திணைக்களமானது அண்மையில் மீள்குடியேற்றம் அடைந்த இப்பிரதேசங்களில் விவசாயத் துறையினை அபிவிருத்தி செய்வதில் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இருந்தாலும் 2009 ஆம் ஆண்டு வரையும் நிலவிய மோதல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கில் இந்நிறுவனங்களின் இருக்கை குறிப்பிடத்தக்களவு குறைவாகவே உள்ளது. புனருத்தாபன செயன்முறையில் இந்நிறுவனங்கள் இப்பிரதேசங்களில் மீண்டும் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கான ஊக்கம் வழங்கப்பட வேண்டும். பல நன்கொடை நிதியங்களும் சர்வோதய, சனஸ போன்ற உள்ளூர் அரச சாரா அமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் சில வர்த்தக வங்கிகளும் நுண் நிதி வழங்குகின்ற போதிலும் வாழ்வாதரங்கள் தொடர்பான காப்புறுதி திட்டங்கள் பொதுவாக குறைவாகும். இம்முயற்சிகள் விவசாயிகளிற்கு முதலீடு செய்யவும் மீனவர்களிற்கு வருமானம் ஈட்டும் வழிகளில் முதலீடு செய்யவும் உதவி வழங்கும் வண்ணம் மேலும் விரிவாக்கப்பட்டு விஸ்தரிக்கப்படலாம்.

# 4. மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் பிரதான வாழ்வாதார வழிகளிற்கான பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு

தமது உற்பத்திகளை சந்தை வரை கொண்டு செல்லவும் சங்கிலி வழியே செல்வதில் மற்றும் பெறுமதி கூட்டலிற்கு உற்பத்தியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளிலுள்ள தடைகள் மற்றும் உறவுகளின் சங்கிலியினையே பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு எடுத்து நோக்குகின்றது. மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இலக்குக்குரிய மக்கள் குழுக்களின் வாழ்வாதார வழிகளை ஆக்குகின்ற விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத உற்பத்திகளின் பல பெறுமதி சங்கிலிகளை இவ்வாய்வு எடுத்து நோக்கியது. பல்வேறு பெறுமதி சங்கிலிகளின் வழியே மேலே நகர்வதற்கு இலக்குக்குரிய சமுதாயங்களிற்கு தடைகளாக உள்ள காரணிகளையும் அவ்வாறே அங்குள்ள வாய்ப்புக்களையும் இப்பகுதி இனங்காண்கின்றது. தடைகளை மீறி செல்வதற்கான வழிகள் அதே போல் வாய்ப்புக்களில் மூலதனமிடுவதற்கான வழிகளை இனங்காண்பதுடன் இப்பகுதி முடிவுறுகின்றது. ஒவ்வொரு உற்பத்திக்கும் உள்ளூர் நுகர்வோர் அல்லது உள்ளூர் வர்த்தகர் என அடையாளம் காணப்பட்ட உள்ளூர் சந்தைக்காகவே பிரதானமாக இலக்குக்குரிய மக்கள் உற்பத்தி செய்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இடைத்தரகர் ஆட்சி செய்வதாக காணப்பட்டார். சிறிதளவே பெறுமதி கூட்டல் செயன்முறைகள் நடைபெறுவதாக காணப்பட்டது. யுத்த காலங்களில் முதலீட்டு வளங்கள் அனைத்தும் அழிவடைந்தமை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (உதாரணமாக பாதைகள் மற்றும் மின் விநியோகம்) அழிக்கப்பட்டமை காரணமாக பெறுமதி கூட்டல்கள் தடைப்பட்டன. தமது சொத்துக்களின் அடிப்படையே பெரிதும் இழந்துவிட்ட மக்களுக்கு நிதி மூலதனப் பற்றாக்குறை மற்றும் நிதி சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய/உபயோகப்படுத்தக்கூடிய வழிகள் இல்லாமை ஒரு தீவிரமான பிரச்சினையாக உள்ளது. வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளாலும் வாழ்வாதாரங்கள் பெரிதும் அச்சுறுத்தப்பட்டதாக உள்ளன.

கிழக்கிலுள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு மற்றும் செங்கல் தயாரிப்பு போன்ற விவசாயம் சாராத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான பாரம்பரிய திறன்கள், விருப்பம் மற்றும் ஆவலை கொண்டுள்ளனர். நிறுவன ஆதரவு குறிப்பாக பாரிய அளவில் ஜீவனோபாய செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கும் நிறுவனங்கள் குறைவாகவே உள்ளன. வாழ்வாதாரங்களிற்கான உற்பத்தியை முன்னேற்றி, பெறுமதி கூட்டலிற்கான உதவிகளை வழங்குவதுடன் இடைத்தரகர்களுடன் சுமூகமான, சுரண்டல்களின்றிய தொடர்புகளை விருத்தி செய்வதுமாக, வாழ்வாதாரங்களை கொண்டு செல்வதற்கு சாதகமான சூழலை உருவாக்கவும் இன்னும் இடமுள்ளது.

## 4.1. பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு

முதல் மற்றும் துணை நிலை தரவுகளின் அடிப்படையிலான பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் பெரும்பாலானோர் பெறுமதி சங்கிலியின் உற்பத்தி மட்டத்திலேயே உள்ளனர். தமது உற்பத்திகளுக்கு கூடுதல் பெறுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமெனின் அவர்கள் பெறுமதி சங்கிலி வழியே மேல் நோக்கி செல்ல வேண்டும் அல்லது இதே மட்டத்திலே உற்பத்தியின் இலாபகரத்தன்மையை அதிகரிப்பதற்காக புதிய செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.


அடையாளம் காணப்பட்ட பிரதான தடைகள் குறை உற்பத்தித் திறன், குறைந்த பெறுமதி கூட்டல் மற்றும் குறைந்த சந்தைப்படுத்தும் ஆற்றல் என்பன தொடர்பானதாகும். உற்பத்தித் திறன் சார்ந்த தடைகள், நிலங்களைப் பெற்றுக் கொள்ளல், பயிர் பல்வகைமைப்படுத்தல் என்பவற்றை சீராக்கல் நீர் விநியோகத்தை உறுதி செய்தல் மற்றும் உரம், விதை நெல் மற்றும் இயந்திரங்களாகிய உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளலை இன்னும் இவ்வழிகளை முன்னேற்றல் போன்றவற்றின் மூலம் பிரதானமாக தீர்க்கப்படலாம்.

உற்பத்தியாளரின் இலாபம் பகிர்ந்து வெளிச் செல்லப்படாது உற்பத்தியாளரிடம் மற்றும் இலக்குக்குரிய சமுதாயங்களிடமே தக்க வைத்துக் கொள்ளும் வண்ணம் உள்ளூர் மட்டத்தில் பெறுமதி கூட்டலிற்கு தேவையான வசதிகள் அதிகரிக்கப்படுவதன் மூலம் குறை பெறுமதி கூட்டல் பிரச்சினை தீர்க்கப்படலாம் என யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிய பெரிய தொழில் முயற்சிகளை நிறுவுதல் மற்றும் தற்போதுள்ளவற்றை பலப்படுத்தலிற்கு வேண்டிய ஆதரவினை வழங்குவதனூடாக உள்ளூர் அரிசி ஆலைகளை முன்னேற்றுதல் நெல்லின் விற்பனை விலையை அதிகரிக்கும்.

நெல் உமி மற்றும் தவிடு போன்ற நெல்லின் கழிவுகளை கொண்டு மேலும் உற்பத்திகளை ஆக்குவதும் சிறிய தொழில் முயற்சிகளின் விருத்தியுடன் இணைக்கப்படலாம். நெல் அடிப்படையிலான உற்பத்திகளின் விற்பனை உள்ளூர் மட்டத்திலும் வருகின்ற காலங்களில் மாவட்டங்களிற்கு வெளியேயும் ஏற்றுமதி செய்வது பெறுமதி கூட்டலை விருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதே போல் மின்சாரம் மற்றும் பண்ணைகளுக்கான பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் விருத்தி செய்தல், சந்தை மட்டத்தில் போட்டி ஏற்படுத்தக் கூடியவாறு பெறுமதி கூட்டல் செயன்முறையை நிலைபேறடையச் செய்வதற்கு தேவையாயுள்ளது.

சந்தைப்படுத்துவதிலான ஆற்றல் குறைவினை முன்னேற்றுவதற்கான ஒரு சாத்தியமான முறையாக உற்பத்திகளை ஒன்று சேர்த்து சந்தைப்படுத்தலை கூட்டல் மற்றும் தனியார் துறை பங்குபற்றதலை ஊக்கப்படுத்தல் என்பவற்றின் மூலம் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களிலுள்ள வெளிச் சந்தைகளை அடைய முயற்சித்தலை குறிப்பிடலாம். களஞ்சியப்படுத்தல் வசதிகளை அதிகரித்தல் மற்றும் குறித்த தனிச் சிறப்பான சந்தைகளிற்கு பொருத்தமானவாறு உற்பத்திகளை பல்வகைப்படுத்தல் என்பன உயர் இலாப ஈட்டல்களை பெற்றுத் தரும் (அதாவது பாரம்பரிய நெல்லினங்களை நகர்ப்புற சந்தை நிலையங்களுக்கும் சுற்றுலாத்துறைக்கும் விற்பனை செய்வது போன்று). முறை சாரா நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள உதவி செய்தல் மற்றும் கடன்களைக் குறைத்துக் கொள்வதற்காக பருவமற்ற காலங்களில் ஈடுபடுவதற்காக வருமானம் ஈட்டக்கூடிய செயற்பாடுகளை வழங்குதல் என்பன உற்பத்தியாளருக்கு அதிக பேரம் பேசும் சக்தியைக் கொடுக்கும் என்பதுடன் சந்தைப்படுத்தலிற்கான தெரிவுகளையும் அதிகரிக்கும்.

**படம் 4.1: பெறுமதி தொடர் சங்கிலி வழியே ஈடுபடும் நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும்**




முதல்கள்: DCS, DOA, மத்திய வங்கி, HARTI, முதல்நிலை தரவு

மேலே காட்டப்பட்ட படம் நெல் பெறுமதி சங்கிலி வழியேயான நபர்களையும்/ நிறுவனங்களையும் மற்றும் ஓர் உற்பத்தியின் பெறுமதி சங்கிலி அதன் இறுதி நுகர்வோரினை சென்றடையும் வரை எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதையும் குறித்துக் காட்டுகின்றது. தற்போதைய ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகளின் படி உள்ளீட்டு மட்டத்தினுள் எல்லா சேவை வழங்குநர்களும் பெரிய மற்றும் சிறியளவு ஆலையாளர்களும் மற்றும் வர்த்தகர்களும் பெரும்பாலும் ஆண்களாகவே உள்ளனர். பெண்கள் பிரதானமாக (கூலிக்கு) விவசாயிகளாக, குத்தகைக்கு எடுத்து பயிர் செய்பவர்களாக, மிகப் பொதுவாக கூலித் தொழிலாளிகளாகவே இருந்தனர். பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் (FHHs), அங்கவீனமான நபர்கள் (ரீறுனுள) மற்றும் முதியவர்கள் பிரதானமாக நாள் கூலிக்காக நெல் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களாக அல்லது (கூலி) விவசாயம் போன்ற விதத்தில் வருமானம் பெறுபவர்களாகவே தொழில் புரிவோர் பிரிவினரிடையில் காணப்பட்டனர். நெல்லினை அரிசியாக பதனிடல் செய்து தமது சமுதாயத்தினுள் அல்லது அயல் கிராமங்களிற்கு விற்பனை செய்யக் கூடியவாறு பதனிடல் செயன்முறைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் தலைமையிலான குடும்பங்களும் காணப்பட்டன.

படம் 4.1 இல் பிரதிநிதித்துவப்படுத்துவதன் படி ஓர் உற்பத்தியாளரே அதிக உழைப்பை காட்டுபவராக இருப்பினும் பெறுமதி சங்கிலி வழியே அவர் தனது உற்பத்தியிலிருந்து ஈட்டும் இலாபமோ மிகக் குறைவாகும். நெல் ஆலையிடலாளர்கள் தாம் அரிசி விற்பனையிலிருந்து பெறும் இலாபத்தினை விடுத்து மேலதிக வருமானங்களை நெல் ஆலையிடலில் பக்க விளைபொருட்களாக உமி மற்றும் தவிடு விற்பனை செய்வதன் மூலமும் பெற்றுக் கொள்கின்றனர். மேலே காட்டப்பட்டுள்ள படத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதற்கேற்ப பெறுமதி சங்கிலியின் உயர்மட்டத்திலுள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் பெறுமதி சங்கிலியில் தமக்கு கீழ் மட்டங்களில் உள்ளவர்களிலும் கூடுதல் இலாபத்தினை ஒரு கிலோ அரிசியிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர்[13]. இப்பெறுமதி சங்கிலி ஆலையிடல் எனும் உடனடியான பெறுமதி கூட்டல் செயன்முறையை மாத்திரமே காட்டுகின்றது என்பது குறிப்பிற் கொள்ளப்பட வேண்டும். அரிசிக்கான வேறும் பெறுமதி கூட்டல் வடிவங்களில் ஈடுபடுவோர் ஒரு கிலோகிராம் அரிசியிலிருந்து இன்னும் கூடுதல் இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் சிறியளவு நெல் ஆலையிடலில் உள்ளூர் மட்டத்தில் செய்வதை தவிர பெறுமதி கூட்டல் செயன்முறைகளில் ஈடுபடவில்லை என்பதுடன் இது அவர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ள உயர் வருமான ஈட்டல்களை வழங்குவதில்லை.

பெறுமதி சங்கிலியின் மிகவும் சக்தி வாய்ந்த இடங்களை சமுதாயங்களுக்கு வெளியிலிருப்பவர்களான வர்த்தகர்கள், இடைத்தரகர்கள், மற்றும் பெரிய ஆலை உரிமையாளர்களே தக்கவைத்துக்கொண்டுள்ளனர். அவர்களே விலையை தீர்மானிப்பவர்களாக உள்ளதுடன் பெறுமதி சங்கிலி வழியேயான ஏனையோர் மிகக் குறைந்தளவு பேரம் பேசும் சக்தியை கொண்டுள்ளனர். (கூலி) விவசாயிகள், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் அங்கவீனமான நபர்களுடனான குடும்பங்கள் போன்ற பலவீனமான குழுவினர் சங்கிலியிலுள்ள ஏனைய நபர்களில் தாம் தங்கியிருத்தல், மானிய திட்டங்கள் பற்றிய போதிய அறிவின்மை மற்றும் அவர்களது உரிமை பாத்தியதைகள் மற்றும் கூலித் தொழிலாளிகள் போன்ற தமது தொழிலின் தன்மை என்பன காரணமாக பேரம் பேசும் சக்தியை இன்னும் இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். சில தொழிலாளர்கள் பணமாகவன்றி வேறு விதங்களில் கூலி செலுத்தப்படுவது அவர்களுக்கு உள்ள இடத்தினை தெளிவாகக் காட்டுகின்றது. பெறுமதி சங்கிலி வழியே இன்னும் சமத்துவமான விதத்தில் பேச்சுவார்த்தை செயன்முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான தேவையொன்றுள்ளது. சம்பந்தப்பட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடல்கள் வியாபாரிகள் மற்றும் பதனிடலாளர்களின் செல்வாக்கு மற்றும் ஆட்சியானது ஓரேயடியாக ஒழிக்கப்பட்டுவிட முடியாது எனவும் ஆனால் பலவீனமான குழுக்கள் தமது தொழில் வருவாய் முயற்சிகளிலிருந்து இன்னும் கூடுதலாக நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக ஏதோ ஒரு விதத்தில் தலையீடுகள் வடிவமைக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட வேண்டிய தேவை தெளிவாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது.

## உற்பத்தித் திறனை அதிகரித்தல்

மேலே குறிப்பிட்ட படி இரு மாவட்டங்களதும் மீள்குடியேறிய சமுதாய மக்கள் நெல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். இரு மாவட்டங்களிலும் (2006 மற்றும் 2007 காலப்பகுதிகளில்) உச்சமுற்ற இராணுவ செயற்பாடுகள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்கள் அழிக்கப்பட்டதன் விளைவாக உற்பத்தி மற்றும்

[13] மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் இரு தரப்பாலும் ஈட்டப்படும் சரியான இலாபத்தினை கணிப்பதற்காக போக்குவரத்து, தொழிலாளர் கூலி மற்றும் களஞ்சியப்படுத்தல் சார்ந்த செலவுகள் கழிக்கப்பட வேண்டும். இத்தரவுகள் கிடைக்கப்பெறாமையானது இலாபம் தொடர்பான மேலதிக பகுப்பாய்வுகளை மட்டுப்படுத்துகின்றது.

விதைக்கப்பட்ட அளவுகளிலான மாற்றங்களை அட்டவணைகள் 4.1 மற்றும் 4.2 என்பன காட்டுகின்றன. 2008ஆம் ஆண்டளவில் யுத்த முடிவு அண்மித்த போது பயிர் செய்யப்படாத நிலங்கள் மற்றும் கைவிடப்பட்ட நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து உற்பத்திகளும் விதைக்கப்பட்ட அளவும் அதிகரிப்பினை காட்டுகின்றது. இரண்டு மாவட்டங்களிலும் அதிகரித்த உற்பத்தி மற்றும் நெல் விதைப்பினை அடுத்து அட்டவணை 4.3 இல் காட்டப்பட்டதற்கேற்ப மாவட்டத்தினுள் நுகரப்படுவதிலும் கூடுதலாக நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது, பயிர்ச்செய்கை நிலத்தினளவை விஸ்தரிப்பதன் மூலம் மற்றும்.'. அல்லது (சந்தை விலைகள் போன்ற) வெளிக் காரணிகளை மனதில் வைத்து உற்பத்தி திறனினை அதிகரிப்பதனூடாக நெல் உற்பத்தியாளருக்கு தன் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாய் ஈட்டல் அதிகரிக்கப்படலாம். பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலம் அதிகம் உள்ளதாக சமுதாய மட்ட நேர்காணல்கள் மற்றும் முக்கிய நபர் நேர்காணல்கள் வெளிக்காட்டியுள்ள அதே நேரம் உற்பத்தித் திறனினை அதிகரிப்பதுடன் தொடர்பான பல தடைகளும் முன்வைத்து விளக்கப்பட வேண்டிய தேவையுள்ளன. விவசாய குடும்பங்கள் தம் வசம் தற்போதுள்ள நெல் வயல்களின் உற்பத்தித் திறனினை அதிகரிப்பதற்கான உற்பத்தியொன்றை பயன்படுத்துவதனூடாக கூடுதல் பயனடைய முடியும் என்பதுடன் தொடர்ந்து பயிர்ச்செய்கை செய்யப்படாத நிலங்களில் பயிர்களை வளர்க்கலாம். (மண்ணின் வளம் மற்றும் தன்மைகள் இன்னும் ஏனைய நிலைமைகளிற்கு ஏற்ப) இதன் மூலம் தமது விவசாய ஜீவனோபாயங்களை பல்வகைமைப்படுத்தலாம்.

### அட்டவணை 4.1 மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நெல் உற்பத்தி

| வருடம் | உற்பத்தி (மெட்ரிக் தொன்) | | | |
|---|---|---|---|---|
| | மட்டக்களப்பு | | திருகோணமலை | |
| | சிறு போகம் | பெரும்போகம் | சிறு போகம் | பெரும்போகம் |
| 2004 | 50,594 | 112,951 | 29,109 | 90,300 |
| 2005 | 50,882 | 94,394 | 62,603 | 89,880 |
| 2006 | 49,031 | 131,830 | 43,370 | 85,439 |
| 2007 | 49,039 | 37,476 | 42,147 | 63,039 |
| 2008 | 61,609 | 55,020 | NA | 73,505 |

மூலம்: மாவட்ட செயலகம் - மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை, 2008

### அட்டவணை 4.2: மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் விதைக்கப்பட்ட நெல்லின் அளவு

| வருடம் | விதைக்கப்பட்ட அளவு (ஹெ) | | | |
|---|---|---|---|---|
| | மட்டக்களப்பு | | திருகோணமலை | |
| | சிறு போகம் | பெரும்போகம் | சிறு போகம் | பெரும்போகம் |
| 2004 | 46,050 | 46,182 | 25,022 | 7,795 |
| 2005 | 46,182 | 16,719 | 23,743 | 16,321 |
| 2006 | 46,772 | 15,498 | 16,287 | 11,027 |
| 2007 | 18,469 | 2,705 | 18,987 | 10,368 |
| 2008 | 19,134 | 17,728 | 25,022 | 7,795 |

மூலம்: மாவட்ட செயலகம் - திருகோணமலை, 2008 மற்றும் தொகை மதிப்பீட்டு திணைக்களம்

அட்டவணை 4.3 இரண்டு மாவட்டங்களதும் சராசரி விளைச்சலினை தேசிய சராசரிக்கு எதிராக காட்டுகின்றதுடன் மட்டக்களப்பானது தேசிய சராசரியிலும் குறிப்பிடத்தக்களவு தாழ்வாக உள்ளதுடன் திருகோணமலை அதனை அண்மித்ததாக உள்ளது. இருந்தாலும் இது மாவட்ட மட்ட தரவாக இருப்பதுடன் தாம் முகம்கொடுக்கும் தடைகள் பல உள்ள நிலைமையில் இலக்குக்குரிய சமுதாய மக்களது சராசரி விளைச்சலானது மிகவும் குறைவாக உள்ளதாகவே கருதக்கூடியதாகவுள்ளது.

**அட்டவணை 4.3 நெல் சராசரி விளைச்சல் (கிலோ கிராம்/ ஹெ)**

| வருடம் | திருகோணமலை | மட்டக்களப்பு | தேசிய |
|---|---|---|---|
| 2004 | 4,050 | 2,997 | 4,086 |
| 2005 | 4,131 | 2,654 | 3,963 |
| 2006 | 4,104 | 3,316 | 4,137 |
| 2007 | 4,306 | 2,991 | 4,386 |
| 2008 | 4,440 | 3,805 | 4,184 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம் (பல வருடங்கள்)[13]

## நீர்ப்பாசனம்

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையாகிய இரு மாவட்டங்களிலும் பெரிய மற்றும் நடுத்தர அளவான நீர்ப்பாசன குளங்கள் காணப்படுவதுடன் நெற்பயிர்ச்செய்கைக்கான நீர் வளங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது (அட்டவணை 4.4). எனினும் இது வருடம் முழுதுமே எல்லா பிரதேசங்களிலும் போதுமானளவு நீர் வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகளை உறுதி செய்வதில்லை. பல பிரதேசங்கள் நீரினை பெற்றுக்கொள்வதற்கு முயல்கையில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதாகவும் காலத்திற்கு காலம் வரட்சி மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4 மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பெரிய மற்றும் நடுத்தர அளவான குளங்கள்**

| பெரிய மற்றும் நடுத்தர அளவான நீர்ப்பாசன திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டம் | |
|---|---|
| பிரதேச செயலக பிரிவு | இலக்கம் |
| கோரலை பட்டு வடக்கு | 3 |
| கோரலை பட்டு தெற்கு | 2 |
| மன்முனை தென் மேற்கு | 3 |
| மன்முனை மேற்கு | 2 |
| மன்முனை தெற்கு மற்றும் எருவில் பட்டு | 1 |
| பொரதீவு பட்டு | 2 |

| பெரிய மற்றும் நடுத்தர அளவான நீர்ப்பாசன திட்டங்கள் திருகோணமலை மாவட்டம் | |
|---|---|
| பிரதேச செயலக பிரிவு | இலக்கம் |
| கந்தளாய் | 3 |
| சேருவில | 2 |
| மோரவெவ | 4 |
| படவிஸிரிபுர | 1 |
| Town & Gravets | 1 |
| குச்சவெளி | 5 |
| தம்பலகாமம் | 2 |
| மூதூர் | 2 |
| கோமரன்கடவல | 5 |
| கிண்ணியா | 1 |

மூலம்: மாவட்ட செயலகம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை, 2008

சில குளங்கள் மோதல் காலங்களிலும் பயன்படுத்தப்பட்ட போதிலும் மோதல் உச்சமுற்ற காலப்பகுதிகளில் இவை முறையாக பேணப்படவில்லை. இம்மாவட்டங்களின் எல்லா நெற்பயிர்ச் செய்கை நிலங்களுக்கும் நீர்ப்பாசனம் வழங்கக்கூடியவாறு அதன் முழுமையான கொள்ளளவினை அடையவேண்டுமெனில் யுத்த காலங்களில் அழிக்கப்பட்ட நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் மீள புதுப்பிக்கப்படுவதுடன் நீர்ப்பாசன பேணல் மற்றும் முகாமைத்துவம் என்பன மீள அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதிகளை

[13] தொகை மதிப்பீட்டு திணைக்கள இணையத்தளம்
www.statistics.gov.lk/agriculture/Paddy%20Statistics/PaddyStatsPages/Production.html

முன்னேற்றுவதில் அரச மற்றும் அரச சாரா அமைப்புக்களென இரு சாராருமே ஈடுபட்டுள்ளனரெனினும், சிறிய குளங்கள் பெரிய குளங்களை போன்று புனருத்தாபனம் செய்யப்படுவதில்லை. ஒரு சிறிய குளத்திலிருந்து நீர்ப்பாசனம் வழங்கக்கூடிய பரப்பு சுமார் 50-150 ஏக்கர்களாக இருப்பதுடன் இதிலிருந்து ஒரு சில கிராமங்கள் அல்லது கிராம சேவகர் பிரிவுகளே நன்மை பெறுகின்றன. இக்குளங்கள் உள்ளூர் அரச அதிகாரிகளின் பொறுப்பில் இருக்கின்றன. இவற்றின் புனர்நிர்மாணத்திற்கு சிறியளவே முதலீடு தேவைப்படுகின்றதெனினும் உள்ளூர் அரச அதிகாரிகள் எப்போதும் இவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடியவர்களாக இருப்பதில்லை.

ஒன்றிணைப்பிலான பற்றாக்குறை மற்றுமொரு பிரச்சினையாகும். குளங்கள் பயன்படுத்தப்படுகின்ற போதும் விவசாய அமைப்புக்கள் மற்றும் நீர் வெளிவிடலுக்கு பொறுப்பான அதிகாரிகளிடையிலான ஒருங்கிணைப்பு போதாமை காரணமாக நிலம் பயன்படுத்தலுக்கு தேவையான காலப்பகுதிகளில் நீர் விடப்படலில் தாமதங்கள் ஏற்பட, விதை தூவல் மற்றும் அறுவடை என்பன பாதிக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் நெற்பயிர்ச் செய்கை பெரும் போகம் (மகா) மற்றும் சிறு போகங்களிரண்டிலும் (யால) நடைபெறுவதுடன், பெரும் போகத்திலேயே மழை நீர் - நீர்ப்பாசன பயிர்ச்செய்கையாக கூடுதல் நிலப்பரப்பில் பயிர்செய்யப்படுகின்றது. எனினும் வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களில் மழைவீழ்ச்சி குறைவான யால/ சிறு போகத்திலேயே நெல் மற்றும் ஏனைய பயிர்கள் பயிர்ச் செய்யப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்ட கிரண் பிரதேச செயலகப் பிரிவில் இந்நிலைமையே காணப்படுகின்றது. அங்கு மழைக் காலங்களில் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத விவசாயிகள் ஏனைய விவசாயம் சாராத தொழில் முயற்சிகளில் சம்பளத்திற்கு கூலி வேலை செய்பவர்களாக அல்லது இப்பிரதேச செயலகத்திற்கு வெளியேயான விவசாய நிலங்களில் கூலி வேலை செய்பவர்களாக மாற்று ஜீவனோபாய வழிகளில் ஈடுபடுகின்றனர். நீர்ப்பாசன வசதிகளை பெற்றுக்கொள்ளும் வழிகள் இருப்பதானது சிறு போகத்திலும் நெற்பயிர்ச்செய்கை செய்வதற்கு வழி வகுக்கும். நீர்ப்பாசன நீர் போதாமலிருக்கும் போது விவசாயிகள் நீரின் பயன்பாடு குறைவாக வேண்டப்படுகின்ற ஏனைய காய்கறிகள் மற்றும் களப்பயிர்களை பயிரிடுவர். இது விவசாய நிலங்களின் பல்வகைமைப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு உதவுவதுடன் நெல் வயல்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கின்து. இச் செயன்முறை நன்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

நீர்ப்பாசன வசதிகள் இல்லாத சில பிரதேசங்களில் மக்கள் விவசாய- கிணறுகளை (agro-well) பயன்படுத்தி குறைந்தளவு நீர் தேவைப்பாடு காய்கறிகள் மற்றும் களப்பயிர்களை பயிரிடுகின்றனர். விவசாய-கிணறுகள் எல்லா பிரதேசங்களிற்கும் பொருந்துவனவல்ல. விசேடமாக நிலக் கீழ் நீர் மட்டம் மிகவும் தாழ்வாகவே உள்ள ஏறாவூர் பட்டு பிரிவினது கிதுல்வெவ போன்ற பிரதேசங்களிற்கு பொருத்தமாக இல்லை.

## நெல்-விவசாயத்தின் திறன்கள் மற்றும் அனுபவ கிடைக்கற்றகவு

திறனான மற்றும் அனுபவம் மிக்க விவசாயிகளின் கிடைக்கற்றகவும் அவர்கள் தொடர்ந்தும் நெற்பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டுவதும் நெல்-உற்பத்தி துறையினை பலப்படுத்துகின்ற பிரதான காரணிகளுள் ஒன்றாகும். மோதல் இடம்பெற்ற காலங்கள் தோறுமே நெற்செய்கையினது திறன்கள் அம்மக்களிடம் அப்படியே இருந்து வந்ததுடன் சில விவசாயிகள் மோதல் காலங்களிலும் கூட பயிர்ச் செய்கையில் ஈடுபடக்கூடியவர்களாக இருந்தனர். இளம் சமுதாய மக்களும் கூட விவசாயத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்றனர்.

இவ்விரு மாவட்டங்களினதும் உற்பத்தி திறன் மட்டங்களை உச்ச அளவில் அதிகரிப்பதற்கு இத்திறன் மற்றும் அனுபவம் மிக்க தொழிலாளர் வளம் பயன்படுத்தப்படலாம்.

> *"ஒரே நெல் வயலில் பல காலங்களாக தொடர்ந்தும் வேலை செய்கின்ற கூலி தொழிலாளர்கள் உள்ளனர். அத்தோடு அவர்களது உழைப்பு கிடைக்கக்கூடிய நிலையில் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது."*

(முக்கிய குழு கலந்துரையாடல், கிண்ணியா)

## உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளும் வழிகளை முன்னேற்றுதல்

உரிய நேரத்தில் தரமான விதை நெல் மற்றும் உரவகைகளை பெற்றுக்கொள்ளும் வழிகள் மற்றும் இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதனை முன்னேற்றுவதானது நெல்லின் உற்பத்தித் திறன் மட்டங்களை அதிகரிக்கும். அரச மானிய திட்டங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை மற்றும் போதிய நிதி மூலதனம் இன்மை என்பன தரங்குன்றிய விதை நெல் மற்றும் உரவகைகளது பாவனைக்கு வழி வகுக்கின்றன.

## விதை நெல்

நெற் பயிர்ச் செய்கைக்கான பிரதான உள்ளீடுகளுள் விதை நெல் ஒன்றாகும். வெவ்வேறு மக்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து தமது விதை நெல்லினை பெற்றுக்கொள்கின்றனர். சிலர் அரசாங்க விவசாய நிலங்களிலிருந்தும், சிலர் தமது சொந்த நிலங்களிலிருந்தும் விதை நெல்லினை பெற்றுக் கொள்கின்றனர். மற்றும் சிலர் அரசாங்க விதை நெல்லினை பயன்படுத்தி ஒரே சீரான நெல் வயல்களை பேணி பயிர்ச்செய்கை செய்து வருகின்றவர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர் (ஒரே சீராக பேணுவதென்பது அதே தர விதைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்வதென்பதாகும்). அரசாங்கத்திடமிருந்து காசு கொடுத்து அல்லது உரிய தர நிர்ணயத்திற்குட்பட்ட நெல்லினை வழங்கி விதை நெல் கொள்வனவு செய்யப்படலாம். இவ்வாறு ஒரு பருவ நெல் உற்பத்தியினது ஒரு பகுதியினை விவசாயி சேமித்து வைக்க முடியுமாயின் அவருக்கு அரசாங்க விதை நெல்லுடன் இதனை பரிமாற்றம் செய்து கொள்ளலாம். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாவட்டங்களில் விதை நெல்லினது கிடைக்கற்றகவு, பெற்றுக்கொள்ளும் வழிகள், தரம் மற்றும் செலவில் பல குறைபாடுகள் உள்ளதுடன் (கீழே விவரிக்கப்பட்டுள்ளன) இந்நிலைமை சாத்தியமான உச்ச உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனினை அடைந்து கொள்வதில் பல தடைகளை விளைவாக்கியுள்ளன.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் விதை நெல்லானது விவசாயியினால் உற்பத்தி செய்யப்படுவதிலும் உயர் தரமானதாகும். விவசாயிகள் சொந்தமாக உற்பத்தி செய்யும் நெல்லானது பொதுவாக களை விதைகளுடன் கலக்கப்படுவதுடன் கூட்டு அறுவடை இயந்திரங்களின் பாவனை விதைகளிற்கு சேதங்களையும் ஏற்படுத்துகின்றன. இதனால் முளைத்தல் வீதம் குறைந்து உற்பத்தி திறன் குறைக்கப்படுகின்றது. சிறந்த தரத்தினது விதை நெல் எனினும் அரசாங்கத்திடமிருந்து இதனைப் பெற்றுக்கொள்வதில் சில தடைகள் உள்ளன. இது தமது சொந்த நிலங்களில் பயிரிடும் விவசாயிகளிற்கு கிடைக்கக் கூடியதாகவே உள்ளதுடன் கூலி நிலங்களில் பயிர் செய்யும் விவசாயிகள் அவர்கள் அரச விதை நெல்லினை பெற்றுக்கொள்ளும் முன்பு நில உரிமையாளர்களிடமிருந்து ஒரு கடிதத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் இது இச்செயன்முறையினை தாமதப்படுத்துகின்றது. பல சிறியளவு விவசாயிகள் அரச விவசாய நிலங்களிலிருந்து விதை நெல்லினை கொள்வனவு செய்வதற்கான செயன்முறையினை அறியாதவர்களாக உள்ளனர். அரசாங்கத்தினால் விதை நெல்லுக்கு வழங்கப்பட்டுள்ள விலையும் சில வறிய விவசாயிகளால் செலுத்தப்பட முடியாததாக உள்ளது. எனவே அவர்கள் தமது சொந்த நெல்லினை பயன்படுத்த இது உற்பத்தி திறன் குன்றலுக்கு இட்டுச் செல்கின்றது. விவசாய திணைக்களத்தினது விரிவாக்கற் சேவைகள் (வளப் பிரச்சினைகள் காரணமாக) குறைக்கப்பட்டுள்ளதால் இது விவசாயிகளுக்கு தாம் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் பற்றி அறிவுறுத்துவதில் பல தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

## உரம்

நெல் பயிர்ச் செய்கைக்கான உர மானியமானது நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகளுக்கு ஒரு பெரும் ஊக்குவிப்பாகும். குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்டு, மீள்குடியேற்றமடைந்து நெற்பயிர்ச்செய்கையினை மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டியுள்ள விவசாயிகளுக்கு மிகவும் தேவையானதொன்றாகும். ஒரு 50 kg யூரியா உர மூடையினது மானிய விற்பனை விலை ரூபா 350 ஆகும். ஆனால் விவசாயிகளின் போக்குவரத்துக்கான செலவுகளிற்கு ஏற்ப விசாயிகள் மீதான செலவு வேறுபடுகின்றது,

> *"அரச மானியம் ரூபா. 350ல் போக்குவரத்து செலவு உட்பட ஒரு மூடை உரத்திற்கு ரூபா. 450- ரூபா 500 வரை செலவாகின்றது."*
>
> முக்கிய குழு கலந்துரையாடல் - கொரன்கடவல)

விதை நெல் தொடர்பாக குறிப்பிடப்பட்டது போன்று கூலி நிலங்களில் பயிர் செய்யும் விவசாயிகள் பயிர் நில பதிவு இல்லாமல் உர மானியத்தினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். பலர் நில உரிமையாளர்களிடமிருந்து விருப்பக் கடிதத்தினை பெற்றுக்கொள்ளும் செயன்முறையினை அறியாது உயர் விலை கொடுத்து உரக் கொள்வனவு செய்கின்றனர். நெல் வயல் நிலப் பதிவு (PLR) இல்லாத விவசாயிகள் மானிய விலை திட்டத்தினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களில் வாழும் பெரும்பாலான விவசாயிகள் கூலி நிலங்களில் பயிர் செய்பவர்களாக உள்ளதுடன் சிலரிடம் நெற்காணி பதிவுகள் இல்லாமலும் இருப்பதனால் சிறந்த தர உரத்தினை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் மற்றும் ஆதரவினை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

ஏனைய தடைகளுள், உரத்தின் தரம் குன்றுவதாக காணப்படுகின்றமையும் உரங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடம் விவசாய நிலங்களிலிருந்து தூரமாக உள்ளமையும் உள்ளடங்குகின்றன.

> *"அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உரம் மிகச் சிறந்த தரத்தினை கொண்டதாக இருந்தது. ஆனால் இப்போது அதன் தரம் குறைவடைந்துள்ளது. உள்ளூரில் உரக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற யூரியா பசளை சிறந்த தரமுள்ளது. ஆனால் நாம் இப்போது பெறுகின்ற பசளை மலேசியாவிலிருந்து பெறப்படுவதாகும். இது சிறந்த தரத்தினை கொண்டதல்ல."*
>
> (முக்கிய குழு கலந்துரையாடல் - கொமரன்கடவல)

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் உரத்தினை சேமிப்பதற்கான வசதிகளில்லை. பெரும்பாலான களஞ்சியசாலை வசதிகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதுடன் இது இவ்விரண்டு மாவட்டங்களிலும் வாழும் விவசாயிகளைப் பாதிக்கின்றது. விவசாயிகள் சேதனப் பசளைப் பயன்பாட்டினது நன்மைகளை பற்றியதும் அசேதன பசளை பயன்பாட்டினதும் தீய விளைவுகளைப் பற்றியதுமான அறிவினை கொண்டிருந்தாலும் இவர்களிடையே சேதன பசளையை பயன்படுத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதானது மிகவும் குறைவாகும். விவசாய திணைக்களத்தினால் நெல் மற்றும் காய்கறி பயிர்ச் செய்கைக்கான சேதன உரப் பயன்பாடு தொடர்பான விரிவாக்கற் சேவைகளும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. எனினும் சேதன பசளையை பயன்படுத்தும் உற்பத்தியானது கூடுதல் அளவு நீர் தேவைப்படுவதாலும் இதிலிருந்து பெறப்படும் விளைவுகள் காலம் தாழ்த்தியே பெறப்படுவதாலும் விவசாயிகளை பயிர்ச்செய்கைக்காக சேதன பசளை பயன்படுத்துவதை விட்டும் தடுக்கின்ற பிரதான காரணங்களாகும்.

தாமதமாக உரம் வழங்கப்படல், உயர் போக்குவரத்து செலவு மற்றும் குன்றி வரும் தரம் என்பன உர மானியத்தினால் நாடப்படுகின்ற விளைவுகளை அடைந்து கொள்வதில் தடையாகவுள்ள சில காரணங்களாகும். இத்தேசிய கொள்கையினை வினைத்திறனான விதத்தில் அமுல்படுத்துவதற்கு தடையாகவுள்ள மிகப் பயங்கர காரணங்கள் முறையற்ற நிதி முகாமைத்துவம், மோசடி மற்றும் நேரடியான அல்லது மறைமுகமான ஊழல் என்பனவாகும். இக்கொள்கை நேரடியாகவே பணக்கையாடலுடன் தொடர்புபடுவதால் சிறந்த கண்காணிப்பு மிக இன்றியமையாதாகின்றது.

## விவசாய இயந்திரங்கள்

யுத்தத்தின் பின்னர் போக்குவரத்து மீது இருந்த தடைகள் தளர்த்தப்பட்டமையானது படிப்படியாக இவ்விரு மாவட்டங்களிலும் விவசாயம் இயந்திரமயமாக்கப்படுவதற்கு உதவியது. இம்மாவட்டத்தில் கூட்டு அறுவடை இயந்திரம் போன்ற பெரியளவு இயந்திரங்கள் காணக்கூடியதாக உள்ளதுடன் இயந்திரப் பாவனையானது தொழிலாளர் பற்றாக்குறையிலான பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்க உதவியதுடன் வினைத்திறனினையும் அதிகரித்தது, நெற் செய்கை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் (உதாரணம் கொமரன்கடவல) விவசாயிகளிடம் உழுதல் மற்றும் அறுவடைக்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு போதிய மூலதனமில்லாதுள்ளனர்.

இயந்திரங்களின் பாவனை நெற்காணியினது உற்பத்தித் திறனினை அதிகரிக்க முடியுமெனினும் இதன் எதிர்மறையான தாக்கங்களை பற்றியும் விவசாயிகள் அறிந்துள்ளனர். கூட்டு அறுவடை இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல்லானது கையினால் செய்யப்பட்ட அறுவடையிலும் தரம் குறைந்ததாக இருப்பதுடன் விதைகளை சேதப்படுத்துவதால் விதை நெல்லாக பயன்படுத்தவும் முடியாதனவாகின்றன.

*"இக்கிராமத்தில் உழவு இயந்திர வாகனங்கள்* (tractor) *எதுவுமில்லை. சில வேலைகளில் நாம் கூட்டு அறுவடை இயந்திரங்களை பயன்படுத்துகின்றோம். உதாரணமாக மழை வரும் போது அறுவடையினை மழைக்கு முன்னர் முடித்துக்கொள்ள வேண்டுமெனில் நாம் ஒரு கூட்டு அறுவடை இயந்திரத்தினை வாடகைக்கு எடுக்கின்றோம். ஆனால் கூட்டு அறுவடை இயந்திரத்தினால் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லின் தரம் குறைவாகும். நாம் மதவாச்சியிலிருந்து வாடகைக்கு பெற வேண்டும்."*

(முக்கிய குழு கலந்துரையாடல், கொமரன்கடவல)

விவசாய நிலங்களை அடைவதற்கான போக்குவரத்து வசதிகள் போதாமையானது இயந்திர பாவனையையும் அதே போல் விவசாய நிலத்திற்கு உள்ளீடுகளை கொண்டு செல்லல் மற்றும் விவசாய நிலத்திலிருந்து உற்பத்திகளை வெளியே கொண்டு செல்லல் என்பவற்றுக்கு தடையாக அமைகின்றன. பல பாதைகளும் மோதல் காலங்களில் சேதமாக்கப்பட்டதுடன் மீள அமைக்கப்பட வேண்டும். மோசமான பாதை நிலைமைகளும் போக்குவரத்துக்கான செலவினை கூட்டுவதனால் உற்பத்தி செலவு கூடுவதற்கும் காரணமாகின்றன.

## சூழல் காரணிகள்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட எல்லா மக்கள் சமுதாயங்களுக்கும் மிகவும் பொதுவான அச்சுறுத்தல் காட்டு யானைகளிடமிருந்து வந்ததாகும். காட்டு யானைகள் நெல் வயல்களையும் ஏனைய விவசாய பயிர்களையும் அழிக்கின்றன. இவ்விவசாயிகள் மின்சார வேலிகள் காணப்படாததால் மிகவும் வினைத்திறன் குறைந்த பாரம்பரிய முறைகளையே யானைகளை விரட்டுவதற்கு பயன்படுத்துகின்றனர். இதே பிரச்சினைக்கு முகம் கொடுத்த நாட்டின் ஏனைய பகுதிகளில் மின்சார வேலிகளின் பயன்பாடு கூடுதல் சாதக விளைவுகளை கொடுத்துள்ளது. பயிர் காப்புறுதி போன்ற அரச ந'்ட ஈட்டுத் திட்டங்கள் அவற்றில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் செயன்முறை செலவுகள் காரணமாக விவசாயிகளால் எட்டமுடியாதவையாகவே உள்ளன.

> *"அறுவடையிலான சேதத்திற்கு நஷ்டஈடாக கொவி ஜன சேவாவினூடாக ஒரு காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந் நஷ்டஈட்டினை கோருவதற்கான செயன்முறை மிக நீண்டதும், கடினமானதும், செலவு கூடியதுமாகும். இந்நிகழ்வினை நிரூபிப்பதற்கான சான்றுகளை நஷ்டஈடு வழங்குவதற்காக சமர்பிக்க கோருகின்றனர். எனவே நாம் புகைப்படங்களை சமர்பிக்க வேண்டும். புகைப்படம் பிடிப்பதற்காக ஹொரவப்பொத்தானை புகைப்பட நிலையத்தில் ரூபா. 7000 கேட்கின்றனர். இவற்றுக்கு ஆகும் செலவுடன் ஒப்பிடும் போது நஷ்டஈடு போதியதாக இல்லை."*
>
> (முக்கிய குழு கலந்துரையாடல், கொமன்கடவல)

வெள்ளம் மற்றும் வரட்சி என்பனவும் பிரச்சினைகளாகும். வெள்ளப்பெருக்கிற்கு அதிகம் உள்ளாகின்ற மிகவும் பலவீனமான பிரதேச செயலகப் பிரிவு கிரன் பிரிவாகும். மழைக்காலங்களின் போது முழு நெல் வயலுமே நீரில் மூழ்கிப்போவதுடன் இது பெரும்போக செய்கையை முழுதும் செய்யமுடியாத நிலைமையாகவே உள்ளது. வெள்ளம் வாய்க்கால்களையும் அணைகளையும் சேதப்படுத்துகின்றது. எனவே நில பயன்படுத்தல் மிகவும் மாகின்றதுடன் இது ஒவ்வொரு பருவத்திலும் நில பண்படுத்தலுக்கு அதிக நேரத்தை செலவழிக்க வேண்டியுள்ளதுடன் கூடுதலாக வளங்களில் முதலீடு செய்யவும் வேண்டுகின்றது.

## காணிக்கான அடைவு

மாவட்ட மட்ட செயலமர்வுகள் மற்றும் முக்கிய நபர் நேர்காணல்களில் கலந்துரையாடப்பட்டதன்படி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பயிர்ச் செய்கைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள காணியானது நெற்பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கான ஒரு வாய்ப்பாக மாத்திரமன்றி வேறு களப் பயிர்களது பயிர்ச்செய்கைக்கான ஒரு வாய்ப்பாகவும் அடையாளம் காணப்படலாம்.

இக்காணிகளுக்கான அடைவானது முறையான சட்ட உரிமைகளின்மை, உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரிக்கப்பட்டு குறிக்கப்பட்டுள்ளமை மற்றும் சமமின்றிய புவியியல் இட அமைப்பு போன்ற காரணங்களால் மட்டுப்படுத்தப்படுகின்றன. அதிகரித்தளவு காணிகளில் விதைக்கப்படுவது நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள வறிய விவசாயிகளின் காணி உரிமைகள் அதிகரித்ததன் விளைவல்லவென்றே ஆய்வுக்குரிய இடங்களில் வாழும் விவசாயிகள் உணர்கின்றனர். இச் சமுதாயங்களில் காணப்படுகின்ற நெல் நிலங்களின் உரிமையாளர்கள் வெளி இடங்களில் உள்ளவர்களாக உள்ளதுடன் மிகவும் சிறிய ஒரு பகுதி கிராமத்தவர்களே சொந்த வயல் நிலங்களைக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை இரு மாவட்டங்களிலுமே நிலமானது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாகவே உள்ளது. சில நில உரிமையாளர்கள் மோதல் காலங்களில் தமது வயல் நிலங்களை கைவிட்டு வெளி மாவட்டங்களிற்கு இடம்பெயர்ந்து சென்றனர். ஏனைய மக்கள் உரிமையாளர்களுக்கு அறிவிக்காது இந்நிலங்களில் பயிர் செய்யத் துவங்கினர். மற்றும் ஒரு சாரரான விவசாயிகள் தாம் உள்ளூர் அல்லது வெளிநாடுகளிற்கு புலம்பெயர்ந்து தம் நிலங்களை குத்தகைக்கு விவசாயத்திற்கு வழங்கியுள்ளனர். யுத்த முடிவின் பின்னர் தம் நிலங்களுக்கு மீண்ட இவ்வுரிமையாளர்கள் தம் நிலங்களை கோரி, அங்கு நீண்டகாலம் தமக்கு அந்நிலங்களில் பயிர்ச்செய்கை செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்குமென நம்பியிருந்த மக்களை இடம்பெயரக் கோருவதையும் காணக்கூடியதாக இருந்தது. மேலும் நிலங்களுக்கான உரிமையின்மையானது இவ்விசாயிகள் தாம் பயிர் செய்யும் நிலத்தினது உற்பத்தித் திறனினை கூட்டுவதில் முதலீடு செய்வதை விட்டும் அவர்களை தடுக்கின்றதுடன் மேலே கலந்துரையாடப்பட்டவாறு அரச அனுசரணையிலான உள்ளீட்டு மானிய திட்டங்களினை (உரம் போன்ற) பெற்றுக்கொள்வதிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பெரும் நிலப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2500 ஏக்கர் நெல் நிலமானது ஒரு நிலக்கரி மின்வலு நிலைய நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளதுடன், இது சம்பூர் உட்பட ஐந்து கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு ஒரு "பொருளாதார வலயத்தினை" உருவாக்குகின்றது. இது இப்பிரதேசத்தில் காணியற்றோர் பிரச்சினையினை தோற்றுவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் சமமின்றிய புவியியல் இடவமைப்பு தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றது. இங்கு மட்டுப்படுத்துவதற்குத் தேவையான மூலதன முதலீடுகள் கருதத்தக்களவு அவசியமாகும். நிலத்தினது சமமின்றிய தன்மையானது நீர்ப்பாசன வினைத்திறனினை குறைத்து உற்பத்தித் திறன் வீழ்ச்சிக்கு வழிவகுக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தினது சில பிரதேசங்களிலும் திருகோணமலை மாவட்டத்தினது சில பிரதேசங்களிலும் திருகோணமலை மாவட்டத்தினது கிண்ணியா பிரிவிலும் உற்பத்தி திறனானது மண்ணின் உவர்ப்புத் தன்மையினாலும் பாதிக்கப்படுகின்றது. மீள் சுழற்சி பயிரிடலின்மை மற்றும் தொடர்ந்த நெற் பயிர்ச் செய்கை இப்பிரச்சினையினை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளன.

## பெறுமதி கூட்டலை அதிகரித்தல்

நெல்லானது பெரும்பாலும் சிறிது பெறுமதி கூட்டலுடன் அல்லது பெறுமதி கூட்டல் எதுவுமின்றி சந்தைப்படுத்தப்படுகின்றது. நெல் ஆலையிடப்படுகின்ற, உதாரணமாக ஜலியடி மற்றும் கிண்ணியாவில் இது சிறியளவு, கிராமிய மட்ட அரிசி ஆலைகளில் கட்டணம் செலுத்தப்பட்டு செய்யப்படுவதுடன் பொதுவாக நுகர்விற்காக கொள்ளப்படுவதன்றி சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுவதில்லை. ஆய்வுக்குரிய இடங்களில் 98மூ ஆன விவசாயிகள் எவ்வித பதனிடலுமின்றி நெல்லாகவே விற்பனை செய்கின்றதுடன் (முக்கிய நபர் நேர்காணல்களின் அடிப்படையில்) 2மூ ஆனோர் மாத்திரமே நெல்லினை களஞ்சியப்படுத்தி பின்னர் பதனிட முடியுமானவர்களாக உள்ளனர்.

உள்ளூர் மட்டத்தில் அரிசி, அரிசி-அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் உமி மற்றும் தவிடு போன்ற நெற் கழிவுகளின் பெறுமதி கூட்டலானது உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாய் ஈட்டல்களை பெற்றுக் கொடுக்கும். இது அவர்களுக்கு மேலதிக வருமான முதல்களை வழங்குவதுடன் தமது கடன் சூழல்களிலிருந்தும் வெளி வருவதற்கு உதவி செய்யும். பெறுமதி கூட்டலிற்கான பிரதான தடைகளாக ஆரம்ப மூலதனமின்மை, தற்போதுள்ள பெறுமதி கூட்டல் மத்திய நிலையங்களுக்கான தூரம் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு உறுதியளிக்கப்பட்ட சந்தை இன்மை என்பவற்றை கூறலாம்.

இந்நிலையில் பெறுமதி கூட்டல் செயற்பாடுகளின்மைக்கான பிரதான காரணங்களுள் ஒன்று இப்பிரதேசத்தில் புதிய தொழிநுட்பத்துடன் பெரிய ஆலைகள் இப்பிரதேசங்களிலிருந்தும் மிகவும் தூ ரத்தே உள்ளமையாகும் (கொமரன்கடவலவுக்கு மிக அண்மையிலுள்ள வர்த்தக அளவு ஆலையானது 2 மணித்தியாலம் பயணம் செய்ய வேண்டிய ஹொரவப்பொத்தானை எனுமிடத்தில் உள்ளது). விவசாயிகள் இதில் ஆர்வமில்லாமலிருக்கின்றனர் என்பதுடன் இப்போக்குவரத்து செலவுகளை செலுத்த முடியாதவர்களாக உள்ளனர்.

*"அருகில் ஆலைகள் இருப்பின் ஆலையிடலிற்காக பயணத்தில் செலவழியும் நேரத்தினை சேமித்து வேறு வினைத்திறனான செயற்பாடுகளில் ஈடுபடலாம்."*

(முக்கிய குழு கலந்துரையாடல், கொமரன்கடவல)

இந்நிலைமையானது மோசமான பாதைகள் காரணமாக மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக ஜலியடி கிராமத்தின் எல்லையில் ஒரு பெரிய ஆலை அமைந்துள்ளதெனினும் மோசமான பாதை நிலைமைகள் காரணமாக இதனை அடைய முடியாதுள்ளது.

"இக்கிராமத்தில் ஒரு சிறிய ஆலை உள்ளது, அவர்கள் பெரிய அளவில் ஆலையிடலை செய்வதில்லை. இங்கு ஆலையிடல் நுகர்வுக்காக மாத்திரமே செய்யப்படுகின்றது. இதற்கு கட்டணம் செலுத்தப்படுகின்றது. நாம் 1 மப நெல்லுக்கு ரூபா 5. 00 செலுத்துகின்றோம்."

(முக்கிய குழு கலந்துரையாடல், ஜலியடி, கிண்ணியா)

மேலும் வர்த்தக அளவில் அரிசி மா தயாரிப்பதற்கான வசதிகளுமில்லை. ஏதும் பெறுமதி கூட்டல் செயற்பாடுகள் செய்யப்பட்டாலும் அப்பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு தனியார் துறைசார் உத்தரவாதமுமில்லை. இதற்கு மேலதிகமாக அரிசி-அடிப்படையிலான உற்பத்திகளை தயாரிப்பதில் பயிற்சியும் தொழிநுட்ப மாற்றீடும் தேவையாகும். தனியார் துறை அல்லது அரச சாரா அமைப்புக்களிடமிருந்து ஒப்பந்த விவசாயத்தினை மேற்கொள்வதற்கான ஒரு முயற்சி எடுக்கப்படுமிடத்து விரிவாக்கற் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம் விருப்பத்துடனேயே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (பிரதேச செயலாளர் பிரிவு செயலமர்வில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்). அரிசி அடிப்படையிலான பெறுமதி கூட்டல் உற்பத்திகளை தயாரிப்பதற்கான தொழிநுட்பம் உள்ளூரில் இல்லை. இலக்குக்குரிய சமுதாயங்களின் பெரும்பாலானவற்றில் மின்வசதி காணப்படாமையும் ஒரு தடையாகும்.

பொதுவான உற்பத்தியாளர் குழுக்களுடன் ஒப்பிடும் போது சிறிய அளவில் எனினும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற குறித்த சில பலவீனமான குழுக்கள் நெல் சார்ந்த பெறுமதி கூட்டல் செயன்முறைகளில் கூடுதலாக ஈடுபடுகின்றனர். பின்னிணைப்பு 1 இனது அட்டவணை 3 இல் காட்டப்பட்டது போன்று (பலவீனமான குழுக்களின் முகக்குறிப்பிலான அட்டவணை) கிரணிலுள்ள பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் அறுவடை காலங்களில் நெல்லினை கொள்வனவு செய்கின்றனர் அல்லது தமது கூலி செயற்பாடுகளிற்கான சம்பளமாக பெற்றுக்கொள்ளும் நெல்லினை சேகரித்து வீட்டில் களஞ்சியப்படுத்துகின்றனர். அவர்கள் அதனை அவித்து வீட்டில் அரிசியாக்கி பருவமற்ற காலங்களில் தமது அயலவர் கிராமங்களுக்கு அரிசியாக விற்பனை செய்கின்றனர்.

இச் சமுதாயங்களில் அரிசி ஆலையிடல், அரிசி-அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் நெற் கழிவு அடிப்படையிலான உற்பத்திகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் அல்லது விவசாய குடும்பங்களிலிருந்து தொழிலாளர் மற்றும் நெல்லினை பெறுவதனூடாக பெறுமதி சங்கிலியில் தமக்கு கீழே உள்ளவர்களுடன் ஒன்றிணையவும் பெறுமதி சங்கிலி வழியே தமது செயற்பாடுகளை விருத்தி செய்யவும் (உதாரணம், நடுத்தர அளவான உரிமையாளர்கள்) பெறுமதி சங்கிலி வழியே மேலே செல்வதற்கு தனிநபர்களுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் பெறுமதி கூட்டல் செயற்பாடுகளை பயன்படுத்தி மேலும் முன்னேற்ற முடியும். சமுதாய மட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சிகள் ஒரு இலாபம் பகிரிடப்படல் அடிப்படையில் உற்பத்தியாளர் குழுக்களூடாக முகாமைத்துவம் செய்யப்பட்டு தொழிற்படுத்தப்படலாம் என்பதுடன் ஏற்கனவே அரிசி ஆலையிடல் மற்றும் இடியப்பம் போன்ற அரிசி மா அடிப்படையிலான உற்பத்திகளை தயாரிப்பதில அனுபவம் கொண்ட பலவீனமான சமுதாயங்களிலிருந்து உற்பத்தியாளர்களையும் உள்ளடக்க முடியும். பலவீனமான தன்மை அங்கவீன வகைக்கு ஏற்ப வித்தியாசமான குழுக்கள் செயன்முறை வழியே வெவ்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் வண்ணம் ஒன்றிணைந்த உற்பத்தியை அறிமுகப்படுத்தலாம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் குறுகிய காலத்தில் இலக்குக்குரிய சமுதாயங்களுள் நிலைபேறான விதத்தில் அமையவும் நீண்டகாலத்தில் நகர மத்திய நிலையங்களுக்கு விரிவடையச் செய்யும் நோக்கிலும் சிறந்த விநியோகம் மற்றும் சந்தை வழிகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் மொத்த உற்பத்தி மற்றும் பெறுமதி-சங்கிலி செயன்முறையுடன் ஒன்றிணைக்கப்படவும் வேண்டும். அரிசி அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் நெற்கழிவு அடிப்படையிலான உற்பத்திகளிற்கான சாத்தியமான சந்தை, கோழிப் பண்ணை கொள்வனவாளர்கள் மற்றும் பிஸ்கட் உற்பத்தியாளர்களிடம் உள்ளதுடன்

இவர்கள் இனங்காணப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

## நெல் சந்தைப்படுத்தல் ஆற்றலை அதிகரித்தல்

ஆய்வினது இலக்குக்குரிய சமதாய மக்கள் சிறியளவு உற்பத்தியாளர்களாகவே இருந்தனர். இவர்கள் பெரிதும் நுகர்வுத் தேவைகளிற்காகவே நெல் உற்பத்தி செய்தனராயினும் மேலதிக உற்பத்தியை விற்பனை செய்யும் நோக்குடனிருந்தனர். இருந்தாலும் சந்தை கொள்வனவாளர்களுடைய சந்தையாகவே இருந்தது. இவ்விவசாயிகள் விலைகளை தீர்மானிப்பதில் மிகவும் குறைவான கட்டுப்பாட்டினையே கொண்டிருந்ததுடன் மற்றும்.·. அல்லது மாற்றுச் சந்தைகளிற்கான வாய்ப்புக்களையும் குறைவாகவே கொண்டிருந்தனர். இதற்கான பல காரணங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் ஜீவனோபாயம் மற்றும் பெறுமதி கூட்டல் தலையீடுகளுக்கு சாத்தியமான பரிந்துரைகளையும் முன்வைக்கின்றது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் எமது இலக்குக்குரிய பெரும்பாலான விவசாயிகள் நெல்லினை தமது மாவட்டத்தினுள்ளேயே விற்பனை செய்கின்றனர். இரண்டு பிரதான கொள்வனவாளர்கள் உள்ளனர். பல்நோக்கு கூட்டுறவு சமூகங்கள் (ஆீஊளு) அரசிற்காக உத்தரவாதமளிக்கப்பட்ட விலை திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்கின்றனர். (மாவட்டத்தினது மொத்த உற்பத்தியின் சுமார் 5-10மூ இனையே கொள்வனவு செய்வதுடன் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து மாத்திரமே கொள்வனவு செய்கின்றனர்.) மற்றைய கொள்வனவாளர்கள், உள்ளூர் வர்த்தகர்களாவர். பெரிய அளவு தனியார் துறையினர் பலர் விவசாய-இரசாயன பொருள் உள்ளீடுகள் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர் எனினும் நெல் சந்தைப்படுத்தலில் சிறிதளவு ஈடுபாட்டினையே காட்டுகின்றனர்.

மாவட்டத்தினுள் நெல் உற்பத்தியாளர்கள் தமது நெல்லினை மாவட்டத்தினுள்ளேயே விற்பனை செய்வதற்கு விரும்பினாலும் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் இரு மாவட்டங்களிலும் (திருகோணமலை 74,293 Mt மற்றும் மட்டக்களப்பு 157,335 Mt) மற்றும் அட்டவணை 4.5 இல் காட்டப்பட்ட படி தேசிய மட்டத்திலும் நெல் உற்பத்தி கூடுதலாகவே இருந்தது. இருந்தாலும் சில மாவட்டங்களில் உற்பத்தி பற்றாக்குறையாக இருந்ததுடன் அரச துரித பாதை உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான போக்குவரத்து இணைப்புக்கள் விருத்தியடைந்துள்ளமையால் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நெல்லானது மேல் மற்றும் மத்திய மாகாணம் போன்ற ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படலாம்.

தனியார் துறையினர் சந்தைப்படுத்தல் செயன்முறையில் பெருமளவில் ஈடுபடுவதனை ஊக்கப்படுத்துவதன் மூலம் நெல் சந்தைப்படுத்தல் வெளி மாவட்டங்களிலும் முன்னேற்றப்படலாம். தனியார் வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்கள் நெல் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனரெனினும் அவர்கள் இத்துறைக்கு நீண்டகால நிலவுகைக்கான ஆதரவினை வழங்குவதில்லை. அவர்கள் நெல் துறைக்கு ஆதரவு வழங்காது சுரண்டுபவர்களாகவே நோக்கப்படுகின்றனர். அவர்களுக்கு சிறந்ததொரு விவசாயிகள் வலையமைப்பினை பெற்றுக்கொள்ளும் வழிகள் காணப்படுவதுடன் இப்பங்காளர் உறவானது இன்னும் சமமான விதத்தில் உற்பத்தியாளர் மற்றும் கொள்வனவாளர் என இரு சாராருக்குமே இலாபம் தரக்கூடிய வித்தில் ஊக்கப்படுத்தப்படலாம். விவசாயிகள் இத் தனியார் துறை விற்பனையாளர்களுக்கு ஒன்று சேர்ந்து சந்தைப்படுத்தலில் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும். இது தனியார் துறையினருக்கு ஒரு தொடர்ச்சியான விநியோகத்தினை உறுதி செய்வதுடன் உற்பத்தியாளர்களது பேரம் பேசும் சக்தியையும் அதிகரிக்கும்.

### அட்டவணை 4.5: மாவட்ட ரீதியாக 2010ஆம் ஆண்டிற்கான நெல் மிகை உற்பத்தி / பற்றாக்குறை (மெட்ரிக் தொன்)

| மாவட்டம் | பெரும்போகம் 2009/2010 | சிறுபோகம் 2010 | 2010 ஆம் ஆண்டிற்கான மொத்தம் | மனித நுகர்விற்கான வருடாந்த நெல் தேவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை | 106,727 | 39,752 | 146,479 | 61,965 | 74,293 |
| மட்டக்களப்பு | 193,274 | 74,563 | 267,837 | 90,421 | 157,335 |
| தேசிய மொத்தம் | 2,629,566 | 1,559,493 | 4,189,059 | 3,443,419 | 473,718 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2010

களஞ்சியப்படுத்தல் வசதிகள் போதாமை மற்றும் தமது கடன்களை அடைக்க வேண்டிய தேவை காரணமாக உற்பத்தியாளர்கள் தமது அறுவடைக்கு பின் உடனடியாக விற்பனை செய்ய வேண்டியவர்களாக கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அக்காலத்தில் உயர் விநியோகம் காரணமாக அவர்களுக்கு ஒரு தாழ் விலையே கிடைக்கின்றது. அரச பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கின்ற விலையானது தனியார் வர்த்தகர்களின் விலையிலும் உயர்வாகும். (சம்பா அரிசிக்கு MPCS தாழ்ந்த விலையொன்றினையே கொடுக்கின்றது இதனைத் தவிர) எனினும் அவர்கள் மிக உயர் தர நெல்லினையே கொள்வனவு செய்வதற்கு வேண்டுகின்றனர். MPCS இனது கொடுப்பனவுகளும் ஏறத்தாழ ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை எடுக்கின்றது. இக்காரணங்களால் பல உற்பத்தியாளர்கள் தமது நெல்லினை குறைந்த விலையெனினும் உள்ளூர் வர்த்தகர்களுக்கே விற்பனை செய்வதற்கு விரும்புகின்றனர். சமுதாயங்களுக்கு அண்மையில் களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குதல் மற்றும் முறைசார்ந்த மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதிச் சேவை திட்டங்களை பெற்றுக்கொள்ள உதவுதல் போன்றன உற்பத்தியாளர்களுக்கு தமது நெல்லினை களஞ்சியப்படுத்தி பருவமற்ற காலங்களில், விலைகூடிய நேரம் விற்பனை செய்வதற்கு வாய்ப்பளிக்கும்.

மோதலுக்கு முன்னர் பல சமுதாயங்களில் காணக்கூடியதாக இருந்த பௌதீக சந்தை உட்கட்டமைப்பு வசதிகளும் யுத்தத்தினால் அழிக்கப்பட்டன. உள்ளூர் சந்தை நிலையங்களில் தமது உற்பத்திகள் விற்கப்படும் போது வெளிச் சந்தைகளிலிருந்து விலைகள் பற்றிய தகவல்களை பெறக்கூடியதாக இருந்ததால் அவர்களது பேரம் பேசும் சக்தி கூடுதலாக இருந்ததாக விவசாயிகள் உணர்கின்றனர். “பொல” போன்ற பௌதீக சந்தைகள் இன்னும் இருக்கின்றனவெனினும் அவை வெளிப் பிரதேசங்களிலிருந்தான உற்பத்திகளை உள்ளூர் சமுதாயத்தினரிடையில் விற்பனை செய்யும் நோக்குடனேயே உள்ளனவன்றி தமது உள்ளூர் உற்பத்திகளை வெளிச் சந்தைகளுடன் இணைப்பனவாக இல்லை. இவ்வுள்ளூர் சந்தைகளை முன்னேற்றுவதானது உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை தமது பிரதேசங்களிலேயே நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கும்.

> “எமது உள்ளூர் சந்தையை பரந்த சந்தை வலைத்தொகுதியுடன் இணைக்கக்கூடிய எந்தவொரு உள்ளூர் சந்தை நிலையங்களும் எமது பிரதேசத்தில் இல்லை. காய்கறிகள் சந்தைப்படுத்தக்கூடிய “பொல” வகையான சந்தைகளே உள்ளன.”
>
> (முக்கிய குழு கலந்துரையாடல், கிண்ணியா)

சிறந்த போக்குவரத்து வசதிகளின்மை காரணமாக உற்பத்தியாளர்கள் சந்தையை அடைவதற்கு கஷ்டப்படுகின்றனர். பெரும்பாலான பிரதேசங்களில் விவசாய நிலங்கள் மோட்டார் வண்டிகள் போகக்கூடிய பாதைகளுடன் இணைக்கப்படவில்லை என்பதுடன் போக்குவரத்துக்கான வாகனங்களுக்கு பெரும் பற்றாக்குறையே உள்ளது.

“இங்கிருந்து கொமரன்கடவலவுக்கு ஒரு மூடை நெல்லினை கொண்டு செல்வதற்கு ரூபா. 50 செலவாகும். இக்கிராமத்தில் சிறிய டிரக்டர்களை தவிர வேறு டிரக்டர் வண்டிகள் எதுவுமில்லை.”

(முக்கிய கலந்துரையாடல் , கொமரன்கடவல)

பலவீனமான குழுவினரால் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஒரு தடையாக முறையான உட்கட்டமைப்பு வசதிகளின்மை நோக்கப்படுகின்றது. கிராமத்திலிருந்தும் வெளியே உற்பத்திகளை கொண்டு செல்வது தொடர்பான பிரச்சினையானது உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு ஒரு தடையாகவே உள்ளதாக மாவட்ட மட்ட மற்றும் சமுதாய மட்ட செயலமர்வுகளில் கலந்துரையாடப்பட்டன. பெண்கள் தலைமையிலான குடும்பங்களில் தமது உற்பத்திகளை தூக்கிக்கொண்டு (தலைகளில்) ஊருக்கு வெளியே உள்ள இடங்களுக்கு செல்வதற்காக உடலை மேலதிகமாக வருத்த வேண்டி இருப்பதானது பிரச்சினையான நிலைமையாகும். பாதைகள் மற்றும் பொதுப் போக்குவரத்தின்மையானது தமது உற்பத்திகளை கொண்டு செல்வதனை பெண்களுக்கு நடைமுறைச் சிக்கல்களுக்கு கொண்டு செல்வதுடன் ஒரு வாகனத்தை வாடகைக்கு எடுக்கவும் நிதி வசதி இல்லாத நிலைமையிலுள்ளனர். கிரண் பிரதேச பெண்ணொருவர் தமது வீட்டு தோட்ட உற்பத்திகளை தலையில் சுமந்து கொண்டு வாழைச்சேனை வரை சென்று நடந்தும் பெரி வாகனத்திலுமாக வீடு திரும்புகின்றார். அங்கவீனத்துடனான நபர்கள் தமது அங்கவீனம் காரணமாகவும் இதே பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஒன்றுசேர்ந்து சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பதும் விவசாய அமைப்புக்களை மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்புக்களை பலப்படுத்துவதும் போக்குவரத்து தொடர்பான தடைகளை ஓரளவிற்கு குறைக்கும்.

## நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

தமது பயிர்ச் செய்கைகளிற்காக விவசாயிகளுக்கு பணம் கொடுக்கப்படுவது பொதுவாக உள்ளூர் வர்த்தகர்களாகவே இருக்கின்றனர். இக்கடன் நிலமையானது எந்த விலைக்கெனினும் இவ்வர்த்தகர்களுக்கே தமது உற்பத்திகளை விற்பதற்கு உற்பத்தியாளர்கள் உந்தப்படுகின்றனர். ஏனைய வர்த்தகர்கள் பண்ணை வாயிலுக்கே வந்து நெல்லுக்கு அதே இடத்தில் விலை கொடுத்து பெறுவதானது விவசாயிகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து தேவைகளை இல்லாமல் செய்கின்றது. ஆதரவு வழங்காது சுரண்டுவதாகவே உள்ள இவ்விற்பனையாளர் - கொள்வனவாளர் உறவிலிருந்து விடுபடுவதற்கு விவசாயிகள் கடினமாக உணர்கின்றனர். இத்தடையினைக் குறைப்பதில் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைசார்ந்த நிதிச் சேவைகைளை அறிமுகப்படுத்தல் மற்றும் மாற்று ஜீவனோபாய தெரிவுகளை அறிமுகப்படுத்தல் என்பன உதவி செய்யும்.

வர்த்தக வங்கிகள், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் அரச சாரா அமைப்புக்கள் போன்ற விவசாயிகள் நிதி பெற்றுக்கொள்ளக்கூடிய முறைசார்ந்த முதல்கள் இருப்பினும் கடன் செலவு ஆவணப்படுத்தல் காரணமான தாமதங்கள், செயன்முறை மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான அறிவின்மை, பிணை வழங்குவதற்கான தேவை என்பன விவசாயிகளை முறைசாரா முதல்களின் பக்கம் நாட வைக்கின்றன. இம்முறை சாரா முதல்கள் சிறு கடை உரிமையாளர்களிலிருந்து உர சில்லறை விற்பனையாளர்கள், கொள்வனவாளர்கள், இடைத்தரகர்கள் என உள்ளூர் வர்த்தகர்கள் வரை செல்கின்றது. இம் முறைசாரா முதல்களிலிருந்து நிதிச் சேவைகளை பெறுவதானது விவசாயிகளை உள்ளூர் வர்த்தகர்களுடன் ஒரு சுரண்டலுக்கு உட்படக்கூடிய சந்தை உறவுக்குள் கட்டிப்போடுகின்றது. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் கடன் பெறுபவர் ஈடுபட்டுள்ள செயற்பாட்டிற்கு ஏற்ப ரூபா 10,000 இலிருந்து ரூபா 20,000 வரையான கடன் ஒன்றை ஜீவனோபாய கடன்களாக வழங்குகின்றது. ஆய்வுக்கு கொள்ளப்பட்ட பிரதேசங்களில் வாழும் விவசாயிகள் அரச மற்றும் வர்த்தக வங்கிகள் போன்ற மரபு வழியான முறை சார்ந்த நிதி முதல்களிலிருந்து கிடைக்கும் கடன்களை விடவும் இக்கடனினை பெற்றுக்கொள்வதில் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். இச்செயன்முறைக்கு அதிக ஆவணப்படுத்தல் தொடர்பான தேவைகள் இல்லை. (சமுர்தி நன்மை பெறுபவர்களின் குழு ஒன்றினால் ஆறு மாத சேமிப்பு அறிக்கையொன்று இருப்பின் போதுமானது.) வட்டி வீதம் 10மூ ஆக இருப்பதுடன் ஆறு மாதங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டும். இருந்தாலும் உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பது ஒரு பிரச்சினையாகும்.

> "உரிய நேரத்தில் அரச கடன்களைப் பெற முடியாது. ஒரு பருவ காலத்தில் விண்ணப்பித்தால் மறு பருவத்தில் தான் கடன் தருவார்கள். அனுமதிக்க முன்னர் உள்ள பல சட்டதிட்டங்கள் காரணமாக அரச கடன்களை பெறுவதும் மிகவும் கடினமாகும்."
>
> (முக்கிய குழு கலந்தரையாடல், கிண்ணியா)

உற்பத்தியாளர்களை கட்டிப்போட்டுள்ள கடன் எனும் விஷச் சுழலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான வழிகளாக அதிக முறைசார் நிதிச் சேவைகளைக் கிடைக்கச் செய்வதும் குழு ரீதியாக கடன்களை வழங்குவதும் சிறந்ததாகும். இதே போன்று முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, பயிர்ப் பல்வகைமைப்படுத்தலினூடாக மாற்று வருமான வழிகளை அறிமுகப்படுத்துவதும் நெற்பயிர்ச் செய்கையின் இடையிலான பருவங்களில் மற்றும் குறைந்த விளைச்சல் பெறப்படுகின்ற யால பருவத்தின் போதும் இவ்வுற்பத்தியாளர்களுக்கு ஒரு வருமானத்தை கொடுக்கும்.

## உயர் பெறுமதியான நெல் இனங்கள்

பிரதானமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள நெல் உற்பத்தியாளர்களிடையே பாரம்பரிய நெல் இனங்களையே பயன்படுத்தும் போக்கொன்றுள்ளது. பொதுவாக தற்போது பயிர்செய்யப்படுகின்ற கலப்பு இனங்களிலும் இப்பாரம்பரிய இனங்களினது விளைச்சல் குறைவாகும். இதன் காரணமாக இதற்குரிய விலை கூடுதலாக உள்ளது. இலங்கையில் காணப்படுகின்ற சில பாரம்பரிய நெல் இனங்கள் தஹநல, தவரத்திரி, ஹீனடி, ஹொன்டரவலு, மூாவீஇ மருனககாயம், பச்சைபெருமாள், சுதுவீ மற்றும் சுவன்டல் என்பனவாகும். இப்பாரம்பரிய நெல் இனங்களுக்கான சந்தை வாய்ப்புக்கள் தொடர்பாக ஒரு சுருக்கமான ஆய்வொன்று அதிக நகர்ப்புற பிரதேசங்களிலும் நாட்டின் சுற்றுலாத்துறை கைத்தொழிலும் இவற்றுக்கு ஒரு தனித்துவ சந்தை உள்ளது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் சுவன்டல், மடதவலு மற்றும் கலுஹீனடி போன்ற பாரம்பரிய இனங்களது பொதுவான சந்தை விலைகள் ரூபா 170-185 வரை இருந்தது. இப்பாரம்பரிய நெல் இனங்கள் அதிக போசாக்கானதாக, சுவையானதாக இருந்ததுடன் பீடைகளுக்கு எதிர்ப்பானதாகவும், செயற்கையான, பெற்றோலிய அடிப்படையிலான உரப் பாவனைகள் தேவைப்படாதனவுமாகும். உயர்

பெறுமதி எனும் போது உற்பத்தியாளருக்கு இது உயர் இலாபத்தை பெற்றுக் கொடுக்கும். இருந்தாலும் தனியார் துறையுடன் ஒன்றிணைந்து பங்குடனான சந்தை இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டியதுடன், ஒரு புதிய பயிராக அறிமுகப்படுத்தும் போது ஆபத்து காரணிகள் உள்ளதால் சிறிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படலாம்.

## களஞ்சியப்படுத்தல்

விவசாயிகளின் சந்தைகளை பெற்றுக்கொள்ளல் மட்டுப்படுத்தப்படல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பெறுமதி கூட்டலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களின் பிரச்சினைகளை போதிய பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின்மை கூட்டுகின்றதுடன் இது சந்தையில் நெல்லுக்கான விலையை வீழ்ச்சியுறச் செய்கின்றது. உள்ளூர் மட்டத்தில் களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குவதானது இத்தடையினை ஒழிக்கச் செய்யும். ACAP இனால் சேகரிக்கப்பட்ட தரவுகளும் கூட திருகோணமலை மாவட்ட நடுஊத்து இலுள்ள நெல் களஞ்சியசாலையினை விடுத்து வேறு எந்த இலக்குக்குரிய கிராம சேவகர் பிரிவுகளிலும் களஞ்சியப்படுத்தல் வசதிகளில்லை என குறிப்பிடுகின்றது. ஏறாவூர் பட்டு இலுள்ள பூலக்காடு போன்ற பிரதேசங்களில் அவை யுத்தத்தினால் அழிவடையும் முன்னர் பெரிய நெற் களஞ்சியசாலை வசதிகளை கொண்டிருந்தன என தெரிவிக்கப்படுகிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகளில் அரசிடமிருந்தோ அல்லது அரச சாரா அமைப்புக்களிடமிருந்தோ இக்களஞ்சிய வசதிகளை மீளப்புனரமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.


> *"நாம் ஒரு வார நுகர்வுக்கு தேவையான ஒரு புசல் அரிசியை மாத்திரமே சேமிக்கின்றோம். எமது வீட்டில் வேறான நெல் களஞ்சிய வசதிகளில்லை, இடம் போதவில்லை. எமது வீட்டின் அறைகளிலேயே களஞ்சியப்படுத்துகின்றோம்".*
>
> (முக்கிய குழு கலந்துரையாடல், கொமரன்கடவல)

விவசாயிகள் யானைகளினால் தாக்கப்படக்கூடும் என்ற பயத்தினால் வீட்டில் நெல்லை களஞ்சியப்படுத்த பின்னிற்கின்றனர். தற்போது கிழக்கில் மேலதிகமாக நெல் உற்பத்தி காணப்படுவதால் களஞ்சியசாலை வசதிகளின்மை ஒரு தீர்க்கமான பிரச்சினையாகும் (அட்டவணை 4.5 இல் காட்டப்பட்டுள்ளது). களஞ்சியப்படுத்தல் வசதிகளின்மை என்பது தமக்கு அடுத்த பருவத்துக்கு தேவையான விதை நெல்லினையும் விவசாயிகள் களஞ்சியப்படுத்துவதற்கு முடியாதுள்ளனர். உற்பத்தியாளர் குழுக்களுடனான கலந்துரையாடல்ககள் உள்ளூர் மட்டத்தில் களஞ்சியசாலை வசதிகளை நிறுவுவதானது உற்பத்தியாளர்களை விலை தொடர்பான அதிர்ச்சிகளிலிருந்தும் பாதுகாக்கும் என்பதனை குறிப்பிட்டு காட்டின.


முடிவாக இப்பலவீனமான சமுதாய மக்களிற்கான தலையீடுகள் திட்டமிடப்படும் போது ஒரு பல்-முனை அணுகுமுறை அவசியம் என மேலே விவரிக்கப்பட்ட ஆய்வு முன்மொழிகின்றது. கீழே காட்டப்பட்டுள்ள படத்தில் கலந்துரையாடப்பட்டது போன்று பெறுமதி சங்கிலியின் எல்லா மட்டங்களிலுமான தடைகள் நன்மை பெறுவோரினால் உடன்பாடான தாக்கங்களை உணரக்கூடியவாறு முன்வைக்கப்பட வேண்டும். உதாரணமாக உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தலையீடுகள் அமுல்படுத்தப்படும் போது நிதிச்சேவைகள் மற்றும் தொழிநுட்பமும், தொழிற்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளும் சந்தை இணைப்புக்களும் கூட இம்மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக செய்யப்பட வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள் தடைகள், காரணங்கள் மற்றும் இவற்றை தீர்ப்பதற்கு சாத்தியமான தீர்வுகளுடன் அத்தீர்வுகளை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களையும் குறித்து காட்டுகின்றன.

படம் 4.2: நெற்பயிர்ச்செய்கையில் குறைந்த உற்பத்தித் திறனுக்கு காரணமான தடைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரைபடமாக்கல்



படம் 4.3: நெற்பயிர்ச்செய்கையில் குறைந்த பெறுமதி கூட்டலிற்கு காரணமான தடைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரைபடமாக்கல்



**படம் 4.4: நெற்பயிர்ச்செய்கையில் குறைந்த சந்தைப்படுத்தலுக்கு காரணமான தடைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரைபடமாக்கல்**



## 4.2காய்கறிகளும் பழங்களும்

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மிளகாய், கௌபி, பயறு, குரக்கன் சோளம் மற்றும் திணை போன்ற ஏனைய களப் பயிர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கத்தரி, போஞ்சி, வெண்டிக்காய், பாகற்காய், புடலங்காய் மற்றும் சின்ன வெங்காயம் போன்ற தாழ் நில மரக்கறி வகைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வளர்க்கப்படுகின்றன. ஏனைய களப்பயிர்கள் மற்றும் மரக்கறிகள் பெரும்பாலும் நெற்செய்கைக்குத் தேவையான நீரில்லாத கால பருவத்தின் போது வீட்டுத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. வளர்க்கப்படுகின்ற ஏனைய களப்பயிர்களுடன் ஒப்பிடும் போது சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் என்பவற்றுக்குள்ள சந்தைப்படுத்தல் சாத்தியப்பாடுகள் மற்றும் வருமான ஈட்டல்களைக் கருத்திற் கொள்ளும் போது இவை முன்னுரிமைப் படுத்தப்படுவனவாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனைய களப் பயிர்கள் சிறு போகத்தின் போது சேனைப் பயிர்ச்செய்கையாகவும் உற்பத்தி செய்யப்படுகினறன. மா, வாழை மற்றும் பப்பாசி போன்ற பழங்களும் பெரிய அளவில் பயிர் செய்யப்படுவதுடன் இப்பிரதேசத்தில் இன்னும் விருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளையும் கொண்டுள்ளன. திருகோணமலையில் அன்னாசி பயிர்ச் செய்கையானது ஒரு முன்னோடி செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவாக்கும் நோக்கத்துடன் தொடரப்படுகின்றது. ஆய்வின் இலக்கில் கொள்ளப்பட்ட சமுதாயங்களில் விசேடமாக பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் வீட்டுத்தோட்ட அளவில் மரக்கறி உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததாக ஆய்வின் கண்டாய்வுகள் கூறுகின்றன. நீர்ப்பாசன வசதிகளின்மை மற்றும் காணி பண்படுத்தல் மற்றும் தரமான விதைகளைக் கொள்வனவுக்கு முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனமின்மை என்பனவே விவசாயிகள் முகம் கொடுக்கின்ற பிரதான தடைகளாக இனங்காணப்பட்டுள்ளன. இத்டைகளில் சிலதைத் தாண்டி அவர்களது வருமானத்தை உயர்த்துவதில் நுண் கடன் சேவைகளை வழங்குவது உதவும்.

இவ்விரு மாவட்டங்களிலும் மரக்கறி மற்றும் பழப்பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனைக் கூட்டுவது போன்றவற்றுக்கு கணிசமான அளவு முதலீடு தேவையாகும். மரக்கறி பயிர்ச் செய்கையானது ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அதன் உற்பத்தி மட்டம் போட்டியிடக் கூடிய அளவிற்கு பேதியதாக இல்லையென்றே கிடைக்கப் பெற்ற தரவுகள் (அட்டவணை 4.6 ஐப் பார்க்க) குறிப்பிடுகின்றன. பெறுமதி கூட்டலிற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதும் ஒரு தடையாகும். தாழ்நாட்டுக் காய்கறிகளின் அறுவடை கூடுதலாக உள்ள காலங்களில் உற்பத்தியைச் சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் உற்பத்தி விரிவாக்கப்படும் போது முன்வைக்கப்பட வேண்டும்.

**அட்டவணை 4.6: தேசிய உற்பத்தியின் ஒரு சதவீதமாக சில தெரிவுசெய்யப்பட்ட காய்கறிகள்**

| பயிர் | தேசிய உற்பத்தியின் %Mf | | பயிர் | தேசிய உற்பத்தியின் %Mf | |
|---|---|---|---|---|---|
| | திருகோணமலை | மட்டக்களப்பு | | திருகோணமலை | மட்டக்களப்பு |
| மரவள்ளி | 2% | 6% | மிளகாய் | 1% | 1% |
| நிலக்கடலை | 3% | 4% | வாழைக்காய் | 1% | 1% |
| வெண்டி | 3% | 4% | குரக்கன் | 1% | 0% |
| சின்ன வெங்காயம் | 4% | 2% | எள்ளு | 1% | 0% |
| புடலங்காய் | 3% | 2% | பாசிப்பயறு | 1% | 0% |
| கத்தரி | 2% | 3% | சிவப்பு பூசணி | 1% | 0% |
| பாகற்காய் | 2% | 2% | வெள்ளரி | 1% | 0% |
| சோளம் | 1% | 1% | சாம்பல் பூசணி | 1% | 0% |
| வற்றாளை கிழங்கு | 1% | 1% | உழுந்து | 0% | 1% |

மூலம்: சமரதுங்க, சோமர்ஸ் மற்றும் வார்லி, 2009

**அட்டவணை 4.7 தேசிய உற்பத்தியின் ஒரு சதவீதமாக சில தெரிவுசெய்யப்பட்ட பழப் பயிர்கள்**

| பயிர் | திருகோணமலை | மட்டக்களப்பு |
|---|---|---|
| தோடம் பழங்கள் | 1% | 2% |
| மா | 1% | 2% |
| வாழை | 1% | 1% |
| பப்பாசி | 1% | 1% |
| எலுமிச்சம் பழம் | 1% | 0% |

மூலம்: சமரதுங்க, சோமர்ஸ் மற்றும் வார்லி, 2009

விதைகள் மற்றும் தாவர நடுகைப் பகுதிகள், உரம் போன்ற தரமான உள்ளீடுகள், நிதிச் சேவைகள் மற்றும் தொழிநுட்பத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிகளை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படலாம். மேலும் பயிர்ச்செய்கைச் செறிவினை கூட்டுவதன் மூலம் நில மற்றும் நீர்ப் பயன்பாட்டினை உச்ச அளவில் பெற்றுக் கொள்ளுதல் முக்கியமாகும். பயிர்ச்செய்கைச் செறிவானது இடைநிலைப்பயிர் முறைகள் மற்றும் பயிர் பல்வகைமைப்படுத்தல் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிகரிக்கப்படலாம். தரம் மற்றும் அனைத்து விவசாயிகளையும் அடைதலிற்காக விரிவாக்கற் சேவைகளும் முன்னேற்றப்பட வேண்டும்.

## உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

### விதைகள் மற்றும் தாவர நடுகைப்பகுதிகள்

கலப்பின மரக்கறி விதைகளை பெற்றுக் கொள்வதிலான பற்றாக்குறையும் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வமின்மைக்கு ஒரு காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. விவசாய சேவைகள் மத்திய நிலையத்தினால் விநியோகிக்கப்படுகின்ற விதைளின் உற்பத்தித் திறன் கலப்பின விதைகளுடன் ஒப்பிடும் போது குறைவாகும் என்பதுடன் போதுமான அளவு விதைகளை விநியோகிக்கவும் இந்நிலையத்திற்கு முடியாதுள்ளது. விவசாயிகள் இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின விதைகளைத் தனியார் துறைகளிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர். அறுவடை செய்யப்பட்ட தாவர நடுகைப் பகுதிகள் அடுத்த பருவத்தில் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட முடியாது என்பது கலப்பின விதைகளைப் பயன்படுத்துவதன் ஒரு எதிர் மறையான பக்கமாகும். இருந்தாலும் உயர் விலை கொடுத்தும் இவற்றையே கொள்வனவு செய்ய விருப்பம் காட்டுகின்றனர்.

பழப்பயிர்களினால் பெறப்படும் மந்தமான பாண ஈட்டல் காரணமாக விவசாயிகள் பழப்பயிர்ச் செய்கைக்கு அதிக விருப்பம் காட்டுவதில்லை. மாம்பழ பயிர்ச்செய்கையின் முதல் அறுவடைக்கு அது நடப்பட்டதிலிருந்து சுமார் 3 வருடங்கள் எடுக்கின்றது. வருவாய் ஈட்டல்களை விரைவாகப் பெறக்கூடியதாக உயர் உற்பத்தித் திறனுள்ள புதிய கலப்பினங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஏனைய பயிர்களுடன் பழப்பயிர்களை இடைப்பயிர்களாக வளர்ப்பதும் இத்தடையினை வெற்றி கொள்வதில் உதவும். விரைவாக வருவாயினைப் பெற்றுத்தருகின்ற வாழைப்பழம் போன்ற பழப்பயிர்கள் ஏனைய பல்லாண்டுப் பயிர்களுடன் அறிமுகப்படுத்தப்படலாம்.

### உரம்

நெற்பயிர்ச் செய்கை போலன்றி காய்கறி மற்றும் பழப்பயிர்ச் செய்கைக்கு எவ்வித உர மானியங்களும் வழங்கப்படுவததில்லை முப்பொசுபேற்று (TSP) மற்றும் மியூரேற்று ஓப் பொசுபேற்று (MOP) உரங்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவு உயர்வானதாகும். இவ்வுயர் செலவு விவசாயிகளின் இரசாயனப் பசளை பயன்பாட்டினை குறைக்கின்றது. இது சேதனப் பயிர்ச் செய்கைக்கான ஒரு வாய்யப்பாக நோக்கப்பட முடியும் எனினும் இதற்காக சேதனப்பசளைகளின் கிடைக்கற்றகவு கூட்டப்படவேண்டும். காய்கறிகளுக்கும் குறுகிய காலப் பயிர்களான அன்னாசி, வாழைப்பழம் மற்றும் பப்பாசி போன்றவற்றுக்கும் வீட்டு தோட்ட அளவில் சேதனப் பயிர்ச்செய்கை ஊக்கப்படுத்தலாம். சிறியளவிலான பயிர்ச் செய்கையானது அதிக வாழ்தகவுடையதாக இருக்கும் என்பதுடன் உற்பத்தியாளர்கள் சுற்றுலாத்துறை அதே போன்று நகர்ப்புற நுகர்வோர் குழுக்களிடையில் சேதனப் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கு வளர்ந்து வரும் சந்தைக் கேள்விகளை பயன்படுத்திக் கொள்ளலாம். சேதனப் பயிர்ச்செய்கைக்கான பயிர்களுக்கும் சந்தை இணைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் உதவி செய்யப்படவேண்டும். போதிய போக்குவரத்து

வசதிகளின்மையானது உள்ளீட்டு விநியோகம் பண்ணைக்குச் செல்வதற்கான வழி மற்றும் உற்பத்தியை சந்தைக்குக் கொண்டு செல்லலையும் பாதிக்கின்றது. மோசமான பாதை நிலைமைகள், எளிதில் அழுகக்கூடிய காய்கறிகளை கொண்டு செல்வதற்கு பொருத்தமான வாகனங்கள் பற்றாக்குறை என்பனவே காய்கறி உற்பத்தியைப் பாதிக்கின்ற போக்குவரத்து தொடர்பான பிரதான தடைகளாகும். பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துவதானது எளிதில் அழுகக்கூடிய காய்கறிகளுக்கு கூடுதல் அறுவடைக்குப் பின்னான இழப்புக்களை ஏற்படுத்துகின்றது.

## நிலம் போதியதாக பயன்படுத்தப்படாமையும் போதிய நீர்ப்பாசன வசதிகளின்மையும்

இரண்டு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற நிலத்தில் (பயிர்செய்யப்படாத மற்றும் கைவிடப்பட்ட நிலங்கள்) பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான சாத்தியமுள்ளது. நெற்பயிர்ச்செய்கையிலும் காய்கறிப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான ஆரம்ப மூலதனம் குறைவாகும், இதன் இலாபம் அதிகம் என்பதுடன் இழப்பிலான ஆபத்தும் குறைவாகும். சிறு போக காலங்களில் நீர்ப்பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகவும் மட்டுப்படுத்தும் காரணியாகவும் இருக்கின்ற போதும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களில் பெரும்பாலானவற்றுக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப்பெறாத காலங்களிலிருந்தே நீர் அதிகம் தேவைப்படாத காய்கறிகள் பயிர்செய்யப்பட்டு வந்திருந்தமையை ஆய்வு கண்டு கொண்டது. விவசாய கிணறுகளிலிருந்து ஒரு முறை நீர் எடுக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் நீண்ட காலத்திற்கு ஊற்றெடுப்பதில்லை அல்லது நிலக்கீழ் நீர் மிகவும் தாழ்வாக உள்ள பிரதேசங்களில் அமைக்கப்பட்டதன் காரணமாக அவை கைவிடப்பட்டுள்ளன.

துளி மற்றும் தூவல் நீர்ப்பாசனம் போன்ற நவீன நுண் நீர்ப்பாசன தொழிநுட்பங்கள் எந்தவொரு சமுதாய மக்களினாலும் பயன்படுத்தப்படவில்லை. வெள்ள நீர்ப்பாசன முறையுடன் ஒப்பிடுகையில் இந்நவீன தொழிநுட்பங்களின் நீர்ப் பயன்பாட்டு வினைத்திறன் உள்ளமையால் இவையே நீர்ப்பற்றாக்குறைக்கான தீர்வுகளாகும். மிளகாய் மற்றும் வெங்காயப் பயிர்ச் செய்கைகளில் நிலத்தினது அதி உச்ச பயன் தகவினை அடைந்து கொள்வதற்காக நுண் நீர்ப்பாசன தொழிநுட்பம் தேவைப்படுகின்றது. போதிய மூலதனமின்மை மற்றும் இந்நவீன தொழிநுட்பங்கள் பற்றிய போதிய அறிவின்மை என்பன இவற்றில் முதலீடு செய்வதில் தடைகளாக உள்ளன.

## பயிர் பல்வகைப்படுத்தல்

ஒரு வகை காய்கறிகளது விலை அதிர்ச்சிகளைத் தாங்குவதற்கான மற்றுமொரு தீர்வு பயிர்ப் பல்வகைமைப்படுத்தலாகும். இது ஒரு தனிப்பயிர் வளர்க்கப்படுவதிலும் ஆபத்துக் குறைவு என்பதுடன் மண்ணின் சிறந்த போசணை வள முகாமைத்துவத்தினை பேணுவதற்கும் உதவும். அறுவடையின் பின்னர் நெற்பயிர்ச் செய்கை நிலங்கள் அதிக நீர்ப்பாசன தேவைகளின்றி காய்கறிப் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படலாம். மண்ணில் எஞ்சியுள்ள ஈரப்பதன் கௌபி, பாசிப்பயறு மற்றும் திணை போன்ற வரட்சி தாங்கக் கூடிய பயிர்களின் செய்கைக்குப் போதுமானதாகும். இச் செய்முறை நிலத்திலிருந்து உயிர்ப்பான ஈட்டலை பெற்றுத்தருவதுடன், நைதரசன் பதித்தல் செயன்முறையினால் இப்பயிர்கள் மண்ணின் வளத்தினையும் கூட்டுகின்றன.

## விரிவாக்கற் சேவைகள்

விரிவாக்கற் சேவைகளின்மையும் காய்கறிப் பயர்ச்செய்கை துறையிலான ஒரு தடையாகும். ஒரு பிரதேச செயலக பிரிவிற்கு ஒரேயொரு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரியே இருக்கின்றார். புதிய தொழிநுட்பங்களை வழங்குவது தொடர்பாகவும் இப்பயிர்களுக்கு தொற்றும் நோய்களினை பராமரிப்பதிலும் இவ்வதிகாரிகளும் அவர்களது சேவைகளும் முக்கியமாகும். விரிவாக்கற் சேவைகள் புதிய உற்பத்தியாளர்களுக்கு மரக்கறிப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தும் போதும் ஊக்கப்படுத்தும் போதும் முக்கியமாக உள்ளன. பொருத்தமான துறைகளில் நவீன முன்னேற்றங்களுக்கு விரிவாக்கற் சேவை அதிகாரிகளை (வெளிப்படுத்தி) புதிய தொழிநுட்பங்களில் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களைப் பலப்படுத்துவதானது நீண்டகால வாழ்வாதார தலையீடுகளின் நிலைப்பேறான தன்மையை வழங்கும்.

## பதனிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் பெறுமதி கூட்டல்

ஆய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் அம்மக்களிடம் பெரியளவு உற்பத்தி காணப்படாமையினால் அதுவரையில் உள்ளூர் உற்பத்திக் களஞ்சியசாலை வசதிகளின் தேவை காணப்படவில்லை

இருந்தாலும் கிழக்கு மாகாணத்தில் விவசாயம் செய்யும் அளவு கூடும் போது களஞ்சியசாலை வசதிகள் தேவைப்படும்.

சோளம் போன்ற பயிர்களுக்கு விதை பிரித்தெடுப்பு இயந்திரம் தேவையாகும். தற்போது இயந்திரம் காணப்படாமையால் சோளம் பசும் பதிர்களாகவே விற்பனை செய்யப்படுகின்றது. கோழிக் பண்ணைத் தொழிலிருந்து சோளத்தானிய மணிகளுக்கான கேள்வி இருப்பினும் சோளகக் கூட்டிலிருந்து விதை மணிகளைப் பிரித்து எடுப்பதற்குப் பொருத்தமான இயந்திரமின்மை காரணமாக இப்பதனிடல் செயன்முறை தடைப்படுகின்றது. (முதல் நிலை ஆய்வு சேகரிப்பின் அடிப்படையில்) ஆய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் சோளகப் பசும் கதிர்கள் ஒன்று ரூபா 5 – 6 வரை விற்கப்பட்டது. விதைமணிகள் பிரித்து எடுக்கப்படும் போது இதன் பெறுமதி கூட்டப்படலாம். தற்போது விதை பிரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தொழிநுட்பம் விதைகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துவதால் உயர் விரயத்திற்கு வழிவகுக்கின்றது. தற்போது கிழக்கில் தனியார்த் துறை சோளப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு தமது உற்பத்தியை விலங்குணவாக பயன்படுத்துகின்றது.

சிவப்பு மிளகாய், மிளகாய்த் தூள் மற்றும் பாரம்பரிய அச்சாறு போன்ற அடிப்படை மட்டத்திலான காய்கறி பதனிடலும் காய்கறி பயிர்ச் செய்கையாளர்களுக்கு பெறுமதி கூட்டலை வழங்கலாம். உள்ளூர் மட்டத்தில் சிறியளவு அரைத்தல் ஆலைகள் அறிமுகப்படுத்தலாம். இது அறுவடைக் காலங்களில் உற்பத்தி விரயமாதலினால் ஏற்படும் பிரச்சினைகளைளை தவிர்க்க உதவுவதுடன் பயிர்ச் செய்கை இல்லாத காலங்களிலும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும். சமுதாய மட்டத்தில் தொழிநுட்பம் மற்றும் ஆரம்ப முதலீடு வழங்கப்படுவதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் முன்னேற்றப்படலாம்.

எதிர்கால சாத்தியக் கூறுகளைக் கொண்ட கவனமும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்ற மற்றுமொரு துறை பழப்பதனிடலாகும். மேலே கலந்துரையாடப்பட்டது போன்று உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை கூட்டி பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். திருகோணமலையில் கைத்தொழில் திணைக்களத்தினது பழப்பதனிடலிற்கான முயற்சிகள் உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து போதியளவு விநியோகம் காணப்படாமையால் தடைப்பட்டது. தற்போது பழங்கள் தம்புள்ளை அல்லது கொழும்புச் சந்தையிலிருந்தே விநியோகிக்கப்படுகின்றன. கைத்தொழில் திணைக்களத்திலிருந்தான தொழிநுட்பம் சமுதாய அல்லது பிரதேச செயலக மட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுடன் பகிரப்படலாம் என்பதுடன் ஆரம்ப மூலதனமொன்றினை வழங்குவதுடன் உற்பத்தியாளர்கள் தமது பழங்களிலிருந்து உயர் வருவாயை பெற முடியும். விநியோகிப்பாளர்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதால் இயற்கைப் பழப்பானங்களுக்கான சந்தைப்படுத்தல் மாவட்டத்தினுள் உயர்வாக உள்ளது.

> *"பழப்பானங்களுக்கு அதிக கேள்வி உள்ளது அரச திணைக்களங்களும் பாடசாலைகளும் அதிகளவில் கேட்கின்றனர். ஆனால் எம்மிடம் தற்போது போதியளவில் விநியோகிக்கக்கூடியதாக இல்லை. இப்பிரதேசத்தில் நிகழ்கின்ற செயலமர்வுகள் மற்றும் சந்திப்புக்களுக்கும் கூட விநியோகிக்க முடியும்"*
>
> *(முக்கிய நபர் நேர்காணல் திருகோணமலை)*

## சந்தை

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் காய்கறிகளுக்கும் பழங்களுக்கும் விநியோகம் வழங்கப் பெறாத கேள்வியொன்று உள்ளது. இக்கேள்வி மாவட்டங்களுக்கு வெளியிலிருந்து காய்கறிகளையும் பழங்களையும் இறக்குமதிசெய்து நிரப்பப்படுகின்றதுடன் இவை உள்ளூரில் உற்பத்தி செய்யும் காய்கறிகளிலும் மிகவும் விலை உயர்வானதாகும். மலைநாட்டுக் காய்கறிகள் தம்புள்ளை சந்தையிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. உள்ளூர் சந்தைக்கு தாழ் நாட்டுக் காய்கறிகளின் விநியோகத்திலான அதிகரிப்பானது இவை விலை குறைவாகவும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டமையால் புதியனவாக இருப்பதாலும் மாவட்டத்தினுள் நுகர்வு ஒழுங்கு முறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்திகளது பருவ காலத்தன்மையானது காய்கறிகளின் விலையினை பாதிக்கின்றது. பல விவசாயிகள் சிறு போகத்தின் போது ஒரே வகையான காய்கறிகளை உற்பத்தி செய்வதனால் மிகையான விநியோகமானது உற்பத்தியின் விலையினை பெரிதும் வீழ்ச்சியுறச் செய்கின்றது. மட்டக்களப்பு

மாவட்ட களவாஞ்சிக்குடி விவசாயிகள் சுழற்சி முறை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். எனவே இச்சமுதாய மக்களை அறுவடைக்காலங்களில் ஏற்பட்ட விலைத்தளம்பல்கள் அதிகம் பாதிக்கவில்லை. சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையின் போது குறித்த காலத்தில் நிலவுகின்ற கேள்விக்கு ஏற்பவே பயிர்ச் செய்கைக்கான பயிர் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. அரசாங்கத்தினால் விலைத் தளம்பல்கள் மற்றும் இடைத்தரகர்களின் ஈடுபாட்டினை ஒழிக்கும் நோக்கில் 'ஒரு கிராமம் ஒரு பயிர்' எனும் அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பழங்களும் காய்கறிகளும் பயிர்செய்யப்படுகின்றன. இது ஏனைய காய்கறி மற்றும் பழம் உற்பத்தி செய்யும் பிரதேசங்களிலும் மேற் கொள்ளப்படலாம். 'ஒரு கிராமம் ஒரு பயிர்' அணுகுமுறையில் பருவகாலத்திற்கு ஏற்ப பயிர்கள் வளர்க்கப்படுகின்றன என்பதுடன் விவசாயிகள் ஒரு வருட காலத்தில் பல வித்தியாசமான பயிர்களைப் பயிரிடலாம் (ஆனால் குறித்த ஒரு காலத்தில் ஒன்று மாத்திரமே).


மாவட்டத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகளும் பழங்களும் கிராம மட்ட சந்தைகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. பிராந்திய பொருளாதார நிலையங்கள் உருவாக்கப்படலானது மாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலுமான உற்பத்திகள் கொண்டு வரப்பட்டு இன்னும் முறையான இணைப்புக்களுடன் சந்தைப்படுத்துவதற்கு உதவும். மேலும் இம்மத்திய நிலையங்களது உருவாக்கமானது இடைத்தரகர்களின் சுரண்டல்களைக் குறைக்கவும் உற்பத்தியாளர்களது பேரம் பேசும் சக்தியை கூட்டவும் உதவும். இது சிறந்த சந்தைத் தகவற் செயன்முறைக்கு உதவுவதுடன் உற்பத்தியாளருக்கு அதிக வருவாயையும் பெற்றுக் கொடுக்கும்.

காய்கறி, பழம் மற்றும் ஏனைய பயிர் உப துறைகளில் தனியார்த்துறையின் ஈடுபாட்டினை ஊக்கப்படுத்துவதும் பலமாக வேண்டப்படுகின்றது. ஆய்வுக்குறிய காலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்டிருந்த பெரும்பாலான USAID–CORE தொடர் யெற்திட்டங்கள்[13] தனியார்த் துறை பிற் கொள்வனவு தொகுதிகளை அண்மிய எண்ணக்கருக்களை கொண்டனவாகவே இருந்ததுடன் தனியர்த்துறைக் கூட்டிணைப்புக்களிலிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் பாடங்களை எடுத்து நோக்குவது பயனுள்ளதாக அமையும். கார்கில்ஸ் போன்ற உயர் சந்தைத் தொடர்களும் திருகோணமலையில் பழ உற்பத்தியை தூண்டுவதுடன் இவ்வாறான வியாபார அமைப்புக்களுடன் இணைந்துக் கொள்வதானது உற்பத்தியாளர்களுக்கான சந்தைகளை விரிவாக்கும். இதற்கு மேலதிகமாக சேதன உற்பத்திகளுக்கு சாத்தியமானதொரு சந்தையாக சுற்றுலாத்துறை கைத்தொழில் விரிவாக்கமும் கருதப்பட வேண்டும்.

முடிவாக இரு மாவட்டங்களிலும் வளர்க்கப்படுகின்ற காய்கறிகளும் பழங்களும் கேள்விக்குப் போதுமானளவு இல்லை. எனவே குறுகிய காலத்தில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக கூடுதல் முதலீடு தேவையாகவுள்ளதுடன் பெறுமதி கூட்டல் தெரிவுகள் மற்றும் சந்தை இணைப்புக்களையும் ஆராய வேண்டியது முக்கியமாகும்.

[13] செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் USAID-CORE இணையத்தளத்திலிருந்து காணலாம் www.core.zunepile.com/.


டம் 4.5: தடைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரைபடமாக்கல்



## 4.3 பாற்பண்ணைத்துறையும் விலங்கு வேளாண்மையும்

விலங்கு வேளாண்மையும் கோழி வளர்ப்பும் நெற்பயிர்ச் செய்கைக்கு பிரதியீடான ஒரு உப ஜீவனோபாய செயற்பாடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. மிகப் பொதுவான வாழ்வாதார முதல் மந்தை வளர்ப்பாக இருப்பினும் குறிப்பிடத்தக்களவு உற்பத்தியாளர்கள் ஆடு வளர்ப்பினையும் கோழி வளர்ப்பினையும் மேற்கொள்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இலக்குக்குரிய அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலுமே ஒரு முக்கிய வருமான முதலாக விலங்கு வேளாண்மை காணப்பட்டதெனினும் இது திருகோணமலை மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் குறைவாகும். மாடுகள் பிரதானமாகப் பாலிற்காக வளர்க்கப்படுவதுடன் பெரும்பாலான வறிய குடும்பங்களில் ஒரு துணைநிலைச் செயற்பாடாக இரண்டு அல்லது மூன்று பசுக்கள் வளர்க்கப்படுகின்றன. ஏறாவூர் பட்டில் பணம் படைத்த குடும்பங்களுக்குச் சொந்தமான பெரிய மந்தைகளை நெற்பயிர்ச் செய்கைப் பருவங்களில் கிராமத்தவர்கள் கூலிக்கு மேய்ப்பார்கள்.

படம் 4.6: பாற்பண்ணை பெறுமதி அதிகரிக்கும் சங்கிலி வழியே நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி



படம் 4.6 இல் பாற்பண்ணைப் பெறுமதி சங்கிலியில் ஈடுபட்டுள்ள பிரதான நபர்கள்/ நிறுவனங்கள் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. உள்ளீடு மற்றும் சேவை வழங்குநர்களாக பிரதானமாக ஆண்கள் இருந்த போதும் பெண்கள் உற்பத்தி மற்றும் உள்ளூர் மட்டப் பதனிடலில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றனர். பாற்பண்ணைப் பெறுமதி சங்கிலியில் நேரடியான பகுதியாக மாதிரிச் சமுதாயங்களது எந்தவொரு பலவீனமான குழுக்களும் இல்லாத போதும் இவ் உபதுறையில் பெண்கள் தற்போது காட்டும் ஈடுபாடானது இத்துறையின் முன்னேற்றத்தில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களும் இலக்குக் கொள்ளப்பட முடியுமென காட்டுகின்றது. பெண்கள் தலைமையிலான குடும்பங்களது ஈடுபாடின்மைக்கு தற்போதுள்ள சுயாதீன மந்தை மேய்ப்பு முகாமைத்துவத் திட்டமும் காரணமாக இருக்கக் கூடும் என்பதுடன் உயர் இனங்களை அறிமுகப்படுத்துவதானது பெண்கள் தலைமையிலான குடும்பங்களையும் இலக்காகக் கொள்ளலாம். தற்போது பாற்பண்ணை துறையானது விநியோகம் மற்றும் கேள்வி இரண்டு தொடர்பாகவுமே தடையாகவுள்ளது. உள்ளூர் இனங்களின் குறைந்த உற்பத்தித் திறன், முகாமைத்துவம் தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் விரிவாக்கற் சேவைகள் போன்ற நிறுவன ஒத்துழைப்பின்மை காரணமாக பால் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பால் மா உற்பத்திகளுடனான போட்டி மற்றும் பெறுமதி கூட்டலிற்கான வசதிகளின்மை என்பன பசும்பாலிற்கான கேள்விக்கு தடையாக அமைகின்றன.

பாலுக்கான பண்ணை வாயில் விலையானது பிரதானமாக மில்கோவினூடாக அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. இருந்தாலும் இடைத்தரகர்கள் அல்லது உள்ளூர் வியாபாரிகள் ஒரு லீற்றர் பாலுக்கு குறைவான விலையையே கொடுப்பதுடன் சேகரிப்பு நிலையங்களை இலகுவாக அடைந்து கொள்ள முடியாமையால் உற்பத்தியாளர்களும் ஒரு குறைந்த விலைக்கு பாலினை விற்கின்றனர். உள்ளூர் வியாபாரிகள் உற்பத்தியாளர்களிலும் குறைந்த ஒரு இலாபத்தினைப் பெறுவதாக காணப்படுகின்றனர். உள்ளூர் பதனிடலாளர்கள் உற்பத்தியாளர்களுக்கு அதிஉயர் பண்ணைவாயில் விலையைக் கொடுக்கின்றனர். ஆனால் இவர்கள் கொள்வனவு செய்யும் அளவு பொதுவாகக் குறைவாகும்.

## விநியோகத்தை முன்னேற்றுதல்

### உற்பத்தி

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் விலங்கு வேளாண்மைத் துறையில் ஈடுபடுவதற்கு ஆர்வமாகவுள்ள மற்றும் ஈடுபடக்கூடிய மனித வளம் உள்ளமையானது இத்துறையின் அபிவிருத்திக்கு காணக்கூடியதாகவுள்ள ஒரு வாய்ப்பாகும்.

ஒரு சராசரி மந்தையின் அளவு 9.5ஆக உள்ளதுடன் உள்நாட்டுப் பசு இனங்களின் சராசரிப் பால் விளைச்சலானது ஒரு நாளைக்கு ஒரு லீற்றராகும். கிழக்கு உலர்வலயத்தில் சிறந்த இனங்களிலிருந்து கிடைக்கும் சராசரி விளைச்சல் இதிலும் 5 மடங்குகள் கூடுதலாகும் (இப்ராஹிம் 2000, பக்கம்188). இருந்தாலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களில் பெரும்பாலான விலங்கு வேளாண்மையாளர்கள் சிறிய அளவில் பண்ணை செய்பவர்களாக 2-5 விலங்குகளை கொண்டிருந்ததுடன் இவர்களது ஒரு பசுவிடமிருந்தான சராசரி பால் ஒரு நாளைக்கு 2–3 லீற்றர்களாகும். அங்கு 25–50 விலங்குகளுடன் பெரிய மந்தைகளின் உரிமையாளர்களாகவும் சிலர் இருந்தனர். ஆனால் அவர்களில் எவரும் ஆய்வுக்குட்படுத்தப்பட் சமுதாயத்தினரிடையில் இருக்கவில்லை. N.F.C. ரணவீரவினால் 2009ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வுக்கேற்ப, ஒரு விவசாயி சிறிய அளவில் தனது பாற் பண்ணையிலிருந்து போதுமானளவு வருமானத்தை ஈட்டுவதற்கு 15 லீற்றர் பால் உற்பத்தி தேவையாகும். இந்தளவு பாலினை உற்பத்தி செய்வதற்கு 3 உயர் இனப் பசுக்களும் 20 பேர்ச்சஸ் புல் நிலமும் தேவைப்படுகின்றதாயுள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களில் காணப்படுகின்ற நிலைமைகள் இவ்வுற்பத்தி மட்டத்தினை அடைவதற்கான அவர்களது ஆற்றுகையைத் தடைசெய்கின்றன. ஓரளவு நல்ல நிலையிலுள்ள விவசாயிகள் பொலன்னறுவையிலிருந்து தமது பிரதேசத்திற்கு உயர் விளைச்சல் தரும் பசுவினங்களைக் கொண்டு வருவதற்கு பொதுவாக முடியுமானவர்களாக உள்ளனர். ஆனால் உயர் இனங்கள் இச்சிறிய பண்ணையாள்களால் பெற முடியாதவையாகும். ஒரு மந்தையில் குறைந்த எண்ணிக்கையான பசுக்கள் இருத்தல் மற்றும் உயர் இனங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல் என்பவற்றால் விவசாயிகள் குறைந்த வருவாயினையே பெறுகின்றனர். இரு மாவட்டங்களிலும் இன விருத்தி நிலையங்கள் காணப்படாமையும் அதிகளவு இயற்கை இன விருத்தி நடைபெறுவதாலும் கையிருப்பிலுள்ள மந்தைகளின் தரம் உயர்த்தப்படுதல் தடுக்கப்படுகின்றது.

*'நாம் சிறந்த தர பசுக்களை பொலனறுவையிலிருந்து ரூபா 80,000 இற்குப் பெறுகின்றோம். இவை எம்மிடம் தற்போதுள்ளவற்றிலும் கூடுதல் பாலினைத் தருகின்றன. கிராமத்திலுள்ள யாவரும் இச்சிறந்த தர விலங்குகளை வாங்குவதற்கு இயலுமானவர்களாக இல்லை.'*

*(முக்கிய குழுக் கலந்துரையாடல் ஏறாவூர் பட்டில்)*

இருந்தாலும் உயர்தர இன மாடுகளை வழங்குவதானது முகாமைத்துவத் தொகுதிகளிலும் ஒரு லீற்றர் பாலின் உற்பத்தி செலவிலும் மாற்றத்தினை வேண்டி நிற்கின்றது. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் போன்று விரிவான முகாமைத்துவத் தொகுதிகளுடன் ஒப்பிடும் போது இதற்கு செறிவான அல்லது பகுதியளவு செறிவான தொகுதிகளும் ஒரு லீற்றர் உயர் உற்பத்திச் செலவும் தேவையாகும். செறிவான தொகுதிகளிலுள்ள உயர்ந்த தொழிலாளர் தேவையும் உணவுக்கான செலவுமே பிரதான காரணமாகும். விளைச்சல் 2 – 5 மடங்கு கூடுதலாக இருக்குமென்பதுடன் உயர் தர இனங்களின் அறிமுகமானது உற்பத்தியாளர்களுக்கு அதிக இலாபகரமானதாக அமையும்.

**அட்டவணை 4.8 முகாமைத்துவ தொகுதிற்கேற்ப உலர் வலயத்தில் பால் உற்பத்தி செலவு (ஒரு லீற்றர்)**

| வலயம்/மாவட்டம் | முகாமைத்துவ தொகுதி | | |
|---|---|---|---|
| | செறிவான | பகுதி-செறிவான | விரிவான |
| உலர் வலயம் | 23.3 | 14.51 | 9.23 |

மூலம்: விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், 2009

பால் விளைச்சலானது முகாமைத்துவ நடைமுறையில் பாரம்பரிய செயன்முறைகளை முன்னேற்றுவதன் மூலமும் மற்றும் புன்னிலங்களின் உணவின் தரத்தை முன்னேற்றுவதன் மூலமும் அதிகரிக்கப்படலாம். இப்புதிய முகாமைத்துவச் செயன்முறைகளில் பரிந்துரைக்கப்பட்டவை அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிப்பதானது விளைச்சல் அதிகரிப்பதற்கு மிக இன்றியமையாததாகும். தற்போதுள்ள விலங்குகள் உயர்தர கலப்பு இனங்களுடன் இணைத்து அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதானது பாற்பண்ணைத் துறையில் ஈடுபட்டுள்ள சிறியளவு விவசாயிகளை இன்னும் ஊக்கப்படுத்தும்.

## புன்னிலம்

புன்னிலங்களை முன்னேற்றுவதானது உணவு கிடைக்கற்றகவினை அதிகரிக்கும். இரு மாவட்டங்களிலும் உள்ள புன்னிலங்கள் யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ளதுடன் சில பிரதேசங்களில் உரியமுறையில் பேணப்படாது கைவிடப்பட்டுள்ளன. விலங்கு வேளாண்மைத்துறையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக இப்பிரதேசங்களுக்கு சிறந்த தரப் புல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். உயர் தரப் புல் வளர்ப்பிற்கு துளி அல்லது தூவல் நீர்பாசனமும் சிறந்த முகாமைத்துவமும் தேவையாகும்.

விவசாயிகள் தமக்குத் தேவையான உணவு மற்றும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக வெளியே சுதந்திரமாக விலங்குகளை மேயவிடுவதால் விலங்குகளது சக்தி வீணாவதுடன் இது உற்பத்தி செய்யப்படும் பாலினையும் குறைக்க முடியும். விலங்குகளுக்குப் போதுமானளவு குடிநீர் காணப்படாமையானது பால் சேகரிப்பாளர்கள் பௌஸர் வண்டிகளில் குடிநீர் கொண்டு போய் கொடுப்பதன் காரணத்தால் விலங்கு வளர்ப்பவர்கள் தமது பாலினை வேறு எவருக்குமன்றி இவர்களுக்கே கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். இதனால் இவர்களது சந்தைப்படுத்தல் தெரிவு குறைவதுடன் பேரம் பேசும் சக்தியையும் குறைக்கின்றது.

## விரிவாக்கற் சேவைகள்

விலங்கு வேளாண்மைத் துறையிலுள்ள உற்பத்தியாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்ற ஒரேயொரு அரச திணைக்களமான விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் (DAPH) நிலவும் மனித வளங்களுக்கான பற்றாக்குறை காரணமாக இத்துறையில் நிறுவன ஆதரவு போதாமையாகவே உள்ளது. திணைக்களத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவான மிருக வைத்தியர்களும் களநிலை அதிகாரிகளும் உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு விலங்கு வேளாண்மை அதிகாரி 2 – 3 பிரதேச செயலக பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ளார்.

சேவை வழங்குனர்களின் இப்பற்றாக்குறையானது விலங்குகளைப் பராமரித்தலிலும் அதே போல் உயர் இன விலங்குகளுக்குமான கேள்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக செயற்கை கருவூட்டல் சேவையை உரிய நேரத்தில் வழங்காது போகும் போது இச்சேவையை திணைக்களம் வழங்குவதற்கு முன்னர் இயற்கையான கருத்தரிப்பு நடைபெற்று முடிந்துவிடும். விலங்கு வேளாண்மைத் துறை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்திக்குரிய செயற்பாடுகள் அரச மற்றும் அரச சாரா அமைப்புக்களுடன் இடம்பெறுகின்றது. ஆனால் இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு முதலீடு செய்வதற்கான தேவையான மூலதன உள்ளீடு வழங்கப்படுவதில்லை. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான இலக்குப்படுத்தலும் தெளிவாக இல்லாமையால் பங்குபற்றுவதற்கு கூடிய பல வறுமை நிலையிலுள்ள விவசாயிகள் இவற்றினைப் பற்றி அறியாதுள்ளனர்.

## நிதிச் சேவைகள்

தற்போது சிறியளவு விவசாயிகளது மிக இலகுவாக கடன் பெறுவதற்கான முதல் பால் சேகரிப்பாளர்களாவார். இந்த வகையில் உற்பத்தியாளர்கள் சேகரிப்பாளர்களுடன் கடன் காரணமாக ஒரு பிணைப்பில் கட்டப்படுகின்றனரெனினும் தமது பாலினைக் குறைந்த விலையில் சேகரிப்பாளர்களுக்கே விற்க வேண்டியிருப்பினும் அவர்கள் முறையான நிறுவனங்களிலிருந்து நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் இதன் மூலம் தாம் நீண்ட கால நோக்கில் நன்மையடையலாம் என உணர்கின்றனர்.

அரச அல்லது முறைசார் வங்கித் துறையிலிருந்து நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல தடைகள் உள்ளன. கிழக்கில் விலங்கு உற்பத்தித் துறைக்கு ஆதரவு வழங்குவதற்கான கடன்களை அரசாங்கம் வழங்குகின்றது. இருந்தாலும் எல்லா விண்ணப்பங்களும் மிருக வைத்தியர்களால் சான்றுப்படுத்தப்பட வேண்டியுள்ளதாலும், மிருக வைத்தியர்களை உற்பத்தியாளர்களால் எப்போதும் அடைய முடியாமலிருப்பதாலும் அரச நிதிச்சேவைகளை பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது. அரச மற்றும் வர்த்தக வங்கிகள் விலங்கு உற்பத்திக்காக கடன்களை வழங்குகின்றன. எனினும் சிறியளவு உற்பத்தியாளர்கள் இக்கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு கடன் பெறும் செயன்முறை சிக்கலானதாக உள்ளது.

## சந்தை

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுகர்வதிலும் பார்க்க கூடுதல் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. எனினும் திருகோணமலையில் இது மறுதலையாக உள்ளது. இவ்வேறுபாடுகள் மாவட்டத்தினுள்ளும் சில பிரதேச செயலகங்கள் கூடுதலாக உற்பத்தி செய்கின்றதுடன் சிலவலற்றில் பற்றாக்குறை நிலவுவதாக காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவை கூட்டல் உள்ளூர் சந்தையொன்றினைப் பிடித்தல் என்பன வறிய குடும்பங்களது ஜீவனோபாயத் தெரிவுகளை (பால் அடிப்படையிலான பெறுமதி கூட்டல் பொருட்களுக்கான உற்பத்தி மற்றும் பால்) முன்னேற்றுவதற்கான ஒரு முக்கிய வழியாகும்.

தற்போது அரச நிறுவனங்கள், அரசுக்கு சொந்தமான கம்பனிகள், மில்கோ மற்றும் நெஸ்லே போன்ற தனியார் கம்பனிகளால் பால் கொள்வனவு செய்யப்படுகின்றது. இக்கம்பனிகள் விவசாய அமைப்புக்களினூடாக பாலை கொள்வனவு செய்கின்றது. பால் உள்ளூர் சேகரிப்பு நிலையங்களில் சேகரிக்கப்பட இக்கம்பனிகள் அங்கிருந்து சேகரிக்கப்பட்ட பாலைப் பெற்றுக் கொள்கின்றன. இருந்தாலும் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் முழுதும் சேகரிக்கப்படுவதற்கு பால்சேகரிப்பு நிலையங்களின் வலையமைப்பு போதாதுள்ளது. பொதுவாக ஒரு பிரதேச செயலக பிரிவுக்கு ஒரு சேகரிப்பு நிலையமே உள்ளது. இப்பிரச்சினையானது மோசமான பாதைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் காரணமாக இன்னும் அதிகமாகின்றது. இக்காரணிகள் விவசாயிகளை ஊக்கமிழக்கச் செய்வதுடன் பால் கறக்கும் இடைவெளியினையும் கூட்டுகின்றது.

> *"பால் காலையில் மாத்திரமே கறக்கப்படுகின்றது. விவசாயிகளுக்கு பாலை சந்தைப்படுத்த முடியுமெனின் மாலை நேரத்திலும் பால் கறத்தல் நடைபெறலாம்"*
>
> *(மாவட்ட மட்ட செயலமர்வு – மட்டக்களப்பு)*

மோதல் காலங்களில் பாதுகாப்பின்மை காரணமாக பால் சேகரிப்பு வலையமைப்பு விரிவாக்கப்படவில்லை என்பதுடன் ஆய்வு மேற் கொள்ளப்பட்ட போது சில பால் சேகரிப்பு நிலையங்கள் உரிய முறையில் பேணப்படாது செயலிழக்கப்பட்டிருந்தன.

குறைந்த பால் சேகரிப்புக்கு மேலாக இடைத்தரகர்களும் உள்ளூர் வர்த்தகர்களும் கூட பாலைக் கொள்வனவு செய்கின்றனர். அரசாங்கம், மில்கோ அல்லது நெஸ்லேயிடமிருந்து கொடுக்கப்படும் விலையிலும் இப்பால் சேகரிப்பாளர்களின் விலை குறைவு எனினும் உடனடியாக அவ்விடத்திலேயே கொடுப்பனவு செய்யப்படல் மற்றும் கஷ்டமான நிலைமைகளில் கடன் கொடுத்து உதவுதல் என்பவற்றால் இவ்வுள்ளூர் சேகரிப்பாளருக்கே பாலினை விற்பனை செய்வதற்கு உற்பத்தியாளர்கள் கவரப்படுகின்றனர். மட்டக்களப்பிலுள்ள தமிழின விவசாயிகள் தாம் உற்பத்தியாளர் கட்டத்திலிருக்க பெறுமதி சங்கிலியின் உயர் மட்டங்களில் ஏனைய இனத்தவர்களுள்ளதால் தமக்கு தீங்கு விளைவதாக உணர்ந்தனர்.

பெறுமதி கூட்டல் இல்லாத போது உயர் ஈட்டல்களை பெற்றுக் கொள்வதற்கான பெறுமதி சங்கிலியின் படி வியாபாரமாகும். வியாபாரத்தில் முதலீடு செய்வதற்கான மூலதனமின்மை உற்பத்தியாளர்களை வியாபாரத்தில் ஈடுபடுதலை விட்டும் தடுக்கின்றது.

*'நாம் உற்பத்தி செய்யும் பால் சந்தையை அடைய முன்னர் மூன்று நபர்களூடாக கடந்து செல்கின்றது. ஊற்பத்தியாளர்கள் பிரதானமாக தமிழ் மக்களாவார். இவர்கள் பாலினை முஸ்லிம்களுக்கு விற்கின்றனர். முஸ்லிம்கள் பாலினை சிங்களக் கடை உரிமையாளர்களுக்கு விற்கின்றனர்.'*

*(முக்கிய குழு கலந்துரையாடல் ஏறாவூர் பட்டு)*

திருகோணமலையில் அரசாங்கம் பால் சேகரிப்பு நிலையங்களை விஸ்தரிப்பு செய்து வருவதுடன் பாலினது போசணை மட்டங்களை பாதுகாக்கும் நோக்குடன் ஒரு குறைந்த மட்ட பதனிடலையும் செய்து வருகின்றது. கூடியளவு பதனிடல் செய்வதற்கு தேவையான ஆற்றல் இந்நிலையங்களில் காணப்படாமையால் சேகரிக்கப்பட்ட மிகையான பால் நெஸ்லே அல்லது மில்கோ போன்ற தனியார் நிலையங்களுக்கு விற்கப்படுகின்றது.

ஆனால் இந்நிலையங்களது செயற்படும் ஆற்றல் கூட்டப்படும் போது தொடர்ச்சியாக பால் விநியோகம் தேவைப்படுவதுடன் பலமான சந்தை இணைப்பும் தேவையாகும். ஏனெனில் பதனிடப்பட்டுப் பொதியிடப்படுகின்ற பால் உற்பத்தி செய்யப்பட்டு 48 மணித்தியாலத்திற்குள் நுகரப்படல் வேண்டும்.

## பசும்பாலுக்கான கேள்வி

பசும் பாலினது போசணைப் பெறுமதி பால்மாவிலும் உயர்வாக உள்ளதெனினும் தற்போது பால்மாவினது நுகர்வானது அதிகரித்து வரும் போக்குக் காரணமாக பசும்பாலுக்கான கேள்வி குறைவாகவுள்ளது. கிராம மற்றும் நகர்ப்புற மக்கள் சமுதாயங்களது மனப்பாங்கு மற்றும் நுகர்வு ஒழுங்குகளில் மாற்றமேற்படுவதற்கு திரவ பசும் பால் நுகர்வின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவது முக்கியமாகும்.

*'நாம் விவசாயக் குடும்பங்களை விஜயம் செய்த போது அவர்கள் தம்மிடம் பசும்பால் இருப்பினும் பால்மாவினையே குடிப்பதற்குத் தருகின்றனர். விருந்தினருக்கு பசும் பாலினைக் கொடுப்பதை மரியாதையற்றதாக நினைக்கின்றனர்.'*

*(முக்கிய நேர் காணல் மட்டக்களப்பு)*

இருந்தாலும் எதிர் காலத்தில் குடும்பங்களது வருமானம் உயரும் போது பசும்பால்/திரவபால் நுகர்வுக்கான கேள்வி அதிகரிக்கும் என்பது குறிப்பிடப்பட வேண்டும். இது வீட்டு மட்டத்திலான பால் கைத்தொழிலுள்ள சிறிய உற்பத்தியாளர்கள் நன்மை பெறக்கூடிய ஒரு வாய்ப்பாகும்.

## பெறுமதி கூட்டல்

பாரம்பரிய முறையிலான தயிர் தயாரிக்கப்பட்டு உள்ளூரில் சந்தைப்படுத்தப்படுகின்றது. பிரதானமாக நல்ல போக்குவரத்து இணைப்புக்கள் காணப்படாமையால் பிரதேசத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படுவதில்லை. பெறுமதி கூட்டலிலான பிரதான பிரச்சினைகளாக தொழிநுட்பத்தில் முதலீடு செய்யப்படுவதற்கான மூலதனமின்மையும் மின்சார வசதியின்மையும் காணப்படுகின்றன.

*“பாலிற்கான பெறுமதி கூட்டல் செயன்முறை இருப்பின் 40 ரூபா பெறுமதியான பாலினை 100ரூபாவிற்கு விற்கலாம்’*

*(மாவட்டமட்ட செயலமர்வு மட்டக்களப்பு)*

யோகட் மிகவும் குறைந்த மூலதனம் தேவைப்படுகின்ற பெறுமதி கூட்டல் தொழிநுட்பமொன்றாகும். ஆனால் ஆய்வுக்குரிய சமுதாயம் எதிலுமே யோகட் உற்பத்தி செய்யப்படுவதில்லை. இது சமுதாய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்.'.விவசாய அமைப்புக்களினூடாக அறிமுகப்படுத்தப்படலாம். சமுதாயத்திற்கு வெளியே உள்ள முதலீடு செய்வதற்கு ஆற்றல் படைத்த தனியார்த் துறை சார்ந்த நபர்கள் சுவையூட்டப்பட்ட பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இது சமுதாய மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.

தனியார்த் துறை ஈடுபாடானது பால் சேகரித்தல் மற்றும் பசும் பால் சந்தைப்படுத்தல் என்பவற்றில் மாத்திரமே காணக்கூடியதாகவுள்ளது. யோகட் பாற்கட்டி மற்றும் சுவையூட்டப்பட்ட பால் தயாரிப்பு போன்ற பெரியளவு பெறுமதி கூட்டலானது இலக்குக்குரிய சமுதாயங்களில் அடையமுடியாத மட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சமுதாய மட்டத்தில் பெறுமதி கூட்டலின் தற்போதைய நிலையை பின்வரும் கூற்று பிரதிபலிக்கின்றது.

*“சில வேளைகளில் இடைத்தரகர்கள் காலை வேளையில் 5000 முதல் 7000 லீற்றர் வரையிலான பாலை எம்மிடமிருந்து சேகரித்து மாலையில் எமக்கே தயிராக விற்பனை செய்கின்றனர்’*

*(முக்கிய குழு கலந்துறையாடல், ஏறாவூர் பட்டில்)*

## ஏனைய விலங்குகள்

இரு மாவட்டங்களிலும் நாட்டுக் கோழி வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் ஆடுகள் காணப்படுகின்றன. உயர் மூலதனங்களுடன் உள்ள விவசாயிகள் தற்போது உற்பத்தியில் பூரணப்படுத்திக் கொள்ள முடியாத உயர் கேள்வியுடன் உள்ள புறொய்லர் கோழி உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.


இரு மாவட்டங்களுக்கும் பெரிய அளவில் உற்பத்தி செய்கின்ற விலை மலிவான பிரதேசங்களிலிருந்து கோழி இறக்குமதி செய்யப்படுகின்றது. ஆய்விற்கு கொள்ளப்பட்ட மாவட்டங்களில் வர்த்தக அளவில் கோழிப் பண்ணை வளர்ப்பில் இது விலைகளை வீழ்ச்சியுறச் செய்து ஊக்கமிழக்கச் செய்கிறது.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமும் அரச சாரா அமைப்புக்களும் இரு மாவட்டங்களிலும் கோழி உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்கான தலையீடுகளைச் செய்கின்றன. இவை கோழிக் குஞ்சுகளின் கிடைக்கற்றகவினை அதிகரித்து மற்றும் விசேடமாக அண்மையில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு ஒரு துணையான/தற்காலிக வருமான முதலாக கோழி வளர்ப்புக்காக நுண்நிதி வழங்குவதன் மூலம் ஊக்கப்படுத்துகின்றன. உப்புவெளியில் கோழிக்குஞ்சு பொரிக்குமிடமொன்று உள்ளதுடன் திருகோணமலையில் கோழிக்குஞ்சுகள் கிடைக்கப் பெறக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் வர்த்தக அளவில் கேள்விகளைச் சந்திப்பதற்கு இது போதாது. மட்டக்களப்பில் இனங்காணப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு சிறிய கோழிக் குஞ்சு பொரிப்பதற்கான இடங்களை வழங்குவதனை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் நோக்காகக் கொண்டுள்ளது.

உள்ளூர் சந்தையில் ஆட்டிறைச்சிக்கு அதிக கேள்வி காணப்படுகின்றது. பெரும்பாலான வீடுகளில் ஒரு நிரப்புகின்ற செயற்பாடாக ஆடு வளர்ப்பு நடைபெறுவதுடன் இது குடும்பங்களுக்கு தொடர்ச்சியான வருமானத்தை வழங்குவதால் பயிர்ச் செய்கையானது பருவ காலத் தாக்கங்களையும் குறைக்கின்றது. ஆடு வளர்ப்பிற்கான பிரதான தடை உயர் தர இனங்கள் காணப்படாமையாகும்.

முடிவாக உற்பத்தித் திறன், பெறுமதி கூட்டல் மற்றும் நிறுவன ஆதரவு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான தடைகளை அகற்றுவதானது விவசாயிகள் பெற்றுக் கொள்ளும் வருமான ஈட்டலை அதிகரிக்கும். இவ் உப துறையிலான தடைகளை குறித்துக் காட்டுகின்ற வரைபடமானது மேலே கலந்துரையாடப்பட்ட தடைகளை சுருக்கமாக முன்வைத்து சாத்தியமான தீர்வுகளாக அமையக் கூடிய தலையீடுகளை குறித்துக் காட்டுகின்றது.

படம் 4.7: தடைகளையும் சாத்தியமான தீர்வுகளையும் வரைபடமாக்கல் - பாற்பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மைத் துறை



## மீன்பிடித்துறை

உள்நாட்டு மீன் பிடித்துறை மற்றும் கடல் மீன் பிடித்துறை என்பவை இரண்டு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற மிக முக்கிய ஜீவனோபாய செயற்பாடுகளாகும். மீன் பிடித் துறையில் அதிகமான மக்கள் கடற்றொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டம் அதன் குளங்கள் மற்றும் களப்புக்கள் கொண்ட புவித் தோற்ற அமைப்புக் காரணமாக திருகோணமலையுடன் ஒப்பிடும் போது நன்னீர் மீன்பிடிக்கு கூடுதல் சாதகமாகவுள்ளது.

## 4.4 நன்னீர் மீன்பிடித்துறை

மீன் இருப்பில் தங்கியுள்ளபடி நன்னீர் மீன் பிடியானது வருடந்தோறும் நடைபெறுகின்ற ஒரு செயற்பாடாகவும் கடல் மீன்பிடியானது பருவ காலத்திற்குரியதாகும். நன்னீர் மற்றும் கடல் நீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் விலங்கு வேளாண்மை, நெற்பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய பயிர் வளர்ப்பு போன்ற துணைநிலை ஜீவனோபாய செயற்பாடுகளை தமது வருமானத் தேவைகளை நிரப்புவதற்காக கொண்டுள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு மாவட்ட மதுரன்கேணிக்குல கிராம சேவகர் பிரிவிலுள்ள குஞ்சான்கட்குளம் நன்னீர் மீன்படி பெறுமதி சங்கிலியை அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டது. இப்பிரிவில் 60 குடும்பங்கள் நன்னீர் மீன் பிடியில் ஈடுபட்டிருந்ததுடன் இவர்கள் தோட்டம் செய்தல் போன்ற துணையான ஜீவனோபாய தெரிவுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுள் நன்னீர் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான மீனவர்கள் கிண்ணியா பிரதேச செயலக பிரிவின் ஐலியடி மற்றும் நடுஊத்து பிரதேசங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிதுல்வெல மற்றும் மதுரன்கேணிகுளம் பிரதேசத்திலுள்ளவர்களுமாவார். மட்டக்களப்பில் புனானை கிழக்கு மற்றும் பூலக்காடு பிரதேசங்களில் நன்னீர் மீன்பிடி மீனவர்கள் வருடம் முழுவதும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். நெற்பயிர்ச் செய்கையில் பருவமற்ற ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையானோர் சுமார் 101 பேர் வரை நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

நன்னீர் மீன்பிடியானது விரைவாகப் பணத்தினை ஈட்டிக் கொடுப்பதாலும், மீன் உயர் புரதத்தை கொண்ட போசணைப் பெறுமதியுடையதாக உள்ளதாலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் கிராமத்து மக்களது ஜீவனோபாயங்களை முன்னேற்றுவதற்கு ஆதரவு வழங்கக்கூடிய சாத்தியமான ஒரு துறையாக அரச மற்றும் அரச சாரா அமைப்புக்களால் நன்னீர் மீன் பிடித்துறை இனங்காணப்பட்டுள்ளது. மீன்பிடியானது மக்களுக்கு ஒரு துணையான வருமான முதலைத் தருகின்றது. இதன் மூலம் ஒரு கலப்பு வாழ்வாதார அமைப்பு பேணப்பட உதவுவதுடன் வருமானத்தில் வெளிக்காரணிகளால் ஏற்படும் அதிர்ச்சிகளின் தாக்கங்களைக் குறைக்கக் கூடிய ஆற்றலையும் ஏற்படுத்தும். நன்னீர் மீன்பிடியும் விவசாய அமைப்புடன் ஒன்றிணைக்கப்பட முடியும் என்பதுடன் தற்போதுள்ள விவசாய மற்றும் நீர்ப்பாசன அரச கூட்டமைப்புக்களினூடாக செயலாற்றி இது ஒரு கிராமிய வாழ்வாதார தெரிவாக முன்னேற்றப்படலாம். இக்காரணிகளும் இம்மாகாணங்களில் காணப்படுகின்ற அதிக சதவீத நன்னீர் நிலைகளும் கிழக்கில் நன்னீர் மீன்பிடித்துறை இன்னும் வளர்வதற்கான சாத்தியமுள்ளமையை காட்டுகின்றன.

**அட்டவணை 4.9 கிழக்கில் பல்வகையான குளங்களின் எண்ணிக்கை**

| மாவட்டம் | வருடந்தோறும் உள்ள குளங்கள் | பருவகால குளங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தொழிற்படுகின்றவை | கைவிடப்பட்டவை | மொத்தம் |
| மட்டக்களப்பு | 18 | 206 | 96 | 296 |
| அம்பாறை | 53 | 181 | 87 | 268 |
| திருகோணமலை | 10 | 428 | 196 | 624 |

மூலம்: புள்ளிவிபரவியல் தகவல், வட கிழக்கு மாகாண சபை 2005 மற்றும் MFAR, 2007 மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், 2011

நாட்டில் அண்மையில் மீள் குடியேறிய இப்பிரதேசங்களில் நன்னீர் மீன் பிடியானது வீட்டு நுகர்வுக்காகவும் அதேபோன்று அதிகரித்து வரும் வீதத்தில் விஸ்தரித்து வரும் உள்ளூர் சந்தைக்காவும் பருவ கால குளங்களில் அடிப்படையான தொழிநுட்பத்தைப் பயன்படுத்தியே செயல்படுகின்றது. வேறு சொற்களில் கூறுவதனால் மேலதிக மீன் விற்பனை செய்யப்படுவதெனினும் தன்னிறைவான நுகர்வு என்பதே பிரதான

குறிக்கோளாகவுள்ளது. இவ்வாறாக பிரதானமாக மீன்பிடியில் சிறியளவு பாரம்பரிய சுதேச தொழிநுட்பங்களே பயன்படுத்தப்படுகின்றன. கிழக்கின் மூன்று மாவட்டங்களுள் மட்டக்களப்பு உயர் சதவீத மீன் வளர்ப்பைக் கொண்டுள்ளதுடன் அம்பாறையில் அதி உயர் சதவீதம் உற்பத்தி காணப்படுவதால் அம்பாறையில் பணியாள் உற்பத்தித் திறன் கூடுதலாகக் காணப்படுகின்றது. கல் ஓயாத் திட்டத்தின் கீழ் நன்னீர் மீன் பிடி மீனவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவொன்றான சிறந்த மீன் பிடி தொழிநுட்பங்களின் பயன்பாடு மற்றும் கூடுதல் எண்ணிக்கையான பல்லாண்டு குளங்கள் காணப்படுவதன் காரணமாக உலர் பருவத்தின் போதும் மீன் பிடிக்கக் கூடியதாக இருப்பதுவும் அம்பாறையின் உயர் உற்பத்தித்திறன் வீதத்திற்குக் காரணமாக இருக்கலாம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் தொழிநுட்ப மாற்றீடு, உட்கட்டமைப்பு வசதி அபிவருத்தி மற்றும் நிறுவன பலப்படுத்தல் என்பவற்றினூடாக உற்பத்தித் திறனைக் கூட்டுவதற்கும் மேலதிகமாக அம்பாறை மாவட்டத்தை மேற்கோளாக நன்னீர் மீன் பிடித் துறையில் பிரயோகிக்கப்படலாம். சூழல் காப்பினூடாக வளங்களை சமப்படுத்தல் மற்றும் இத்துறையில் பால் ரீதியான சமமின்மைகளை குறைத்தல் போன்ற உத்திகளும் இவ்வுற்பத்தித் துறையினை விருத்தி செய்வதற்காக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட சந்தைப் பகுப்பாய்வானது தரமான உயர் கேள்வியுள்ள மீன் குஞ்சுகளின் சிறந்த விநியோகம், நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல், குளம் மற்றும் மீன் இருப்புத் தொடர்பாக ஒன்று சேர்ந்து எடுக்கப்படுகின்ற தீர்மானங்களினூடாக வள முகாமைத்துவம் மற்றும் பெரும்பாலும் இனங்காணப்பட்ட பலவீனமான குழுக்களுக்கு மீன் பிடி உபகரணங்களை வழங்குதல் என்பவற்றினூடாக நன்னீர் மீன்பிடித்துறையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை அடையாளம் காண்கின்றது. இவ் உபதுறையில் சில குறிப்பிட்ட பாரம்பரியமாக பதனிடப்பட்ட கருவாட்டு மீன் வகைகளுக்கு கேள்வி காணப்படுவதுடன் இவை உறுதியான சந்தையொன்றினை கொண்டுள்ளதாக காணப்படுகின்றது. பதனிடப்படும் மீனின் அளவை அதிகரித்து வரும் காலங்களில் மாவட்டத்திற்கு வெளியேயும் இவ்வுற்பத்தியை அறிமுகப்படுத்தி இச்சந்தை வாய்ப்பு விருத்தி செய்யப்படலாம்.

## மீன் உற்பத்தி

நன்னீர் மீனின் விலை ஏறத்தாள ரூபா100–200 ஆகும். உற்பத்தியாளர்கள் பாரம்பரியமான இயந்திரங்களற்ற மீன் பிடி முறையையே பயன்படுத்துவதால் உள்ளீட்டுக்கான செலவு மிகக் குறைவாகும். கொள்வனவாளர்கள் கிராமங்களுக்கு வந்து இவர்களுக்கு சில்லறை விலைகளைக் கொடுக்கும் சூழ்நிலைகளில் மிகவும் குறைவான செலவுகள் (தொழிலாளர்கள் மற்றும் போக்குவரத்து காரணமாக) இருப்பதுடன் பெரும்பாலும் முழு வருமானமுமே இலாபமாகக் கொள்ளப்படும். உயர் சந்தைக் கேள்வி இருக்கும் நிலையில் இவ் உபதுறையிலிருந்து உற்பத்தியாளர் உயர் ஈட்டல்களை பெற்றுக் கொள்வதால் இவ் உபதுறையானது உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியவொன்றாகக் கருதப்படுகிறது. இருந்தாலும் வள முகாமைத்துவ நுட்பங்களும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் உற்பத்தியை கூட்டுவதற்கான வேகத்தில் போட்டி மற்றம் இயற்கை சூழற்றொகுதிகளுக்கு சேதம் விளைவிக்கப்படக் கூடும்.

உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை கூட்டுவதற்கான பிரதான தடைகளாக தொழிற்படாத குளங்களும் தரமான உள்ளீடுகளின்மையும் இனங்காணப்பட்டன. நன்னீர் மீன் பிடியின் பிரதான உள்ளீடுகள் மீன் குஞ்சுகள், மீன் படகு, மீன் பிடி உபகரணம் மற்றும் தொழிலாளர்கள் என்பனவாகும்.

மோசகரமான நிலைகளிலுள்ள குளங்கள் தொடர்ச்சியான மீன் பிடித்தலுக்கு ஒரு தடையாகும். தற்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயத்திலுள்ள குளமானது 100 ஏக்கர் நீரினையே கொண்டுள்ளது. ஆனால் இது புனர்நிர்மாணம் செய்யப்படுமெனில் 600 ஏக்கர்களாக விஸ்தரிக்கப்படலாம். உலர் காலங்களில் இது வரண்டுவிடுவதுடன் கிராமத்தவர்கள் அணைக்கட்டின் (sluice) கடவை இல்லாமையால் இதன் நீரோட்டத்தினை மண் பொதிகளை வைத்து கட்டுப்படுத்துகின்றனர். குளங்களைப் பேணுவதற்கான பொறுப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்திடமன்றி மாகாண சபையிடமே உள்ளது. மாவட்ட செயலக மட்ட செயலமர்வுகளில் மற்றும் அரச பிரதிநிதிகளுடனான நேர் காணல்களில் கலந்துரையாடப்பட்டதன் படி தற்போது அரச மற்றும் அரச சாரா அமைப்புக்கள் இச்சமுதாயங்களுக்கான மீள் குடியேற்றத் திட்டங்களின் ஒரு பகுதியாக குளம் புனரமைப்பிற்கான ஆதரவினையும் வழங்குகின்றன. குளம் புனரமைப்பில் உற்பத்தியாளர் குழுக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். இதன் போது இவர்கள் மீன்பிடி சங்கங்களினூடாக குளம் பேணல் மற்றும் முகாமைத்துவம் செய்வதில் பங்கெடுக்க முடியும்.

இவர்களுக்கு நீர்வள முகாமைத்துவ தொகுதிகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இத்தலையீடுகள் திட்டமிடலிலும் உள்ளாக்கிக் கொள்ளப்பட வேண்டும். இதனால் நீண்ட காலத்திற்கு இவற்றின் உரிமைத்தன்மையை இவர்கள் உணர்வர்.

பருவகால கிராமிய குள வளர்ப்பினில் மிகப் பொதுவாகப் பின்பற்றப்படுகின்ற முகாமைத்துவ முறையானது மீன் குஞ்சுகளைக் கையிருப்பில் வைத்தலும் பின்னர் தொடர்ச்சியான அறுவடையையுமாகவே உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது சமுதாய மக்கள் உரிய அதிகாரிகளால் தம் கையிருப்பு வீதமான ஒரு பருவத்திற்கு (6மாதங்கள்) 100 000 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவுகளுக்கேற்ப சராசரியாகக் கருதக்கூடிய பருவத்திற்கு 1000மப விளைச்சலைப் பெறுவதாகவும் கோருகின்றனர். மீன்களுக்கு மிகை நிரப்பு உணவூட்டல் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FOA) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கேற்ப உள்ளீடுகளைக் கூட்டுவதால் (உரம் மற்றும் உணவு போன்ற) மற்றும் உயர் கையிருப்பு வீதங்களைக் கொள்ளுவதால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படலாம் என காட்டப்பட்டுள்ளது (FOA - 2004). இருந்தாலும் இச்சமுதாயங்களில் மூலதனம் மற்றும் உயர் தொழிநுட்பம் காணப்படாமையால் மிகை நிரப்பு உணவானது நீண்ட காலத்தில் கருத்தில் கொள்ளப்படலாம்.

மீன் குஞ்சுகள் மற்றும் இருப்பு விநியோகத்தில் பல பிரச்சினைகளுள்ளன. மீன்பிடித் திணைக்களம் மீன் குஞ்சுகளை விநியோகிப்பதுடன் மாகாணசபையால் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதி வழங்கப்படுகின்றது. விவசாயிகளிடம் போதிய தொழிநுட்பம் மற்றும் மூலதனம் காணப்படாமையால் இன்னும் அவர்களது சொந்த மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கோ அல்லது மீன் குஞ்சு பராமரிப்பு இடங்களையோ துவங்குவதற்கோ முடியாதுள்ளனர். இவையெல்லாம் தம்புள்ளை, புத்தளம் அல்லது அம்பாறை போன்ற வெளி மாவட்டங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. தூரமும் போக்குவரத்து வழியும் உயர் மீன் குஞ்சு இறப்பு வீதத்தினை விளைவிக்கின்றன.

> *"எம்மிடம் விரால் மற்றும் சுங்கன் போன்ற உயர் தர உயர் கேள்விக்குரிய மீன்கள் இல்லை. இவற்றின் கருவாடு விலை கூடியனவாகும்"*
>
> *(சம்பவக் கற்கை, PWD,F, வாகரை)*

மீன் இருப்பு போதாதெனவும் மீன் இடப்படும் இடைவெளி கூடுதலாக உள்ளதெனவும் உற்பத்தியாளர்கள் உணர்வதுடன் உயர் கேள்வியுடன் உயர் பெறுமதியான மீன் இனங்கள் குளத்தில் இடப்படாமையினால் இம் மீன்வகைகள் தொடர்பாகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். தற்போது குளத்தில் இடப்பட்டுள்ள மீனினங்கள் தற்போது நிலவுகின்ற நிலைமைகளுக்கு மிகப் பொருத்தமானவையல்ல. இவை இயற்கையாக இனம் பெருக்க முடியாதனவாக உள்ளதுடன் இயற்கையான இனம் பெருகும் பாரம்பரிய மீனினங்களது குஞ்சுகளையும் முட்டைகளையும் உண்ணுகின்றனவாகவுள்ளன. மீன் குஞ்சுகளின் வளர்ச்சி காரணமாக முகாமைத்துவம் செய்யப்படாது உள்நாட்டு மீன் பிடித்தல் நிலைப்பேறடைய முடியாது. இலகுவான குறைந்த செலவுடனான துவக்கத்துடன் பருவகால குளமீன் வளர்ப்பினை தூண்டுதல், நீர்த் தேக்கத்தினை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக உயர் வளங்களைக் கொண்டிருத்தல் மற்றும் அம்பாறையில் ரஜவெல கிரிவானவில் உள்ளது போன்று நிலத்திலமைந்த சிறிய மீன் குஞ்சு பராமரிக்குமிடங்கள் போன்றன இம்மக்களுக்கு சாத்தியமான தீர்வுகளாகும்.

மீன்பிடியினால் கிடைக்கின்ற நன்மைகள் சமமாக பெற்றுக்கொள்ளப்படுவதனை உறுதி செய்வதற்கு, பொருத்தமற்ற மீன்பிடி உபகரணங்களின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு, அளவுக்கதிகமாக மீன்பிடித்தலை தடுப்பதற்கு மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற மீனவ சமூகங்களை அண்மியதாகவே பொதுவாக உள்நாட்டு மீன்பிடித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இக்குளங்களைப் பேணுவதில் இச்சமூகங்களும் ஈடுபடுகின்றன. குஞ்சன்காட்டுக் குளம் கிராத்தில 60 குடும்பங்கள் இச்சங்கத்துடன் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளன. இச்சங்கத்தில் 20 படகுகள் இருந்தன. மீன்பிடித்தலானது ஒரு இணைந்த செயற்பாடாக இருந்ததுடன் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் மீன் பிடித்தலில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இது அளவுக்கு மீறின மீன் பிடித்தலையும், வளம் அழிவுற்று வருவதையும் கட்டுப்படுத்தின. ஒரு பலம் வாய்ந்த, சிறந்த முறையில் தொழிற்படுகின்ற மீனவ சங்கம் இருப்பதானது புதிய உத்திகளை அமுல்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகக் கொள்ளப்படலாம்.

அளவுக்குமீறிய மீன் பிடித்தல் காரணமாக வளம் குன்றி வருவதானது நன்னீர் மீன் பிடித்தலிலான பிரதான தடையொன்றாகும். பயன்படுத்துகின்ற மீன்பிடி உபகரண வகையினை கட்டுப்படுத்துவதற்கான

ஒழுங்குகள் மற்றும் சட்டங்களை கூறுகின்ற அமைப்புக்கள் காணப்படாமையால் இம்மக்கள் தமது சொந்த சட்டவிதி நுட்பங்களை எடுத்தாள்கின்றன. குஞ்சன் கட்டுக் குளம் கிராமத்தில் மீன்பிடி சங்கம் உபகரண பாவனையை சீராக்குவதுடன் அப்பிரதேசத்திலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவமும் சட்டவிரோத மீன்பிடி உபகரண பாவனை பற்றிக் கவனத்தில் கொண்டுள்ளது. இச்சமுதாய மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த காலங்களில் மீன்பிடி செயன்முறைகளை சீராக்கும் நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

பலவீனமான குழுக்களும் அவர்களுக்கு ஆதரவளிக்கின்ற நெருங்கிய உறவினர்களும் நன்னீர் மீன் பிடித்தலின் உற்பத்திக் கட்டத்தில் ஒரு அடிப்படையான அளவில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் பயன்படுத்துகின்ற உபகரணத்தின் தரம் மற்றும் அவர்களால் பிடிக்கக் கூடிய மீனினளவு தொடர்பாக பெறுமதி சங்கிலியின் அதி தாழ் மட்டத்திலுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். மீன் குஞ்சுகளின் தரம் மற்றும் அளவு தொடர்பாக மற்றும் சிறிய குளங்களின் கைவிடப்பட்ட நிலைமை தொடர்பாக மேலே கலந்துரையாடப்பட்ட தடைகள் பலவீனமான குழுக்களாலும் மீளவும் எடுத்து உரைக்கப்பட்டன.

இங்கு வாழ்கின்ற பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் அங்கவீனர்களுடனான குடும்பங்கள் மற்றும் இப்பலவீனமான குழுக்களுக்கு ஆதரவு வழங்குகின்றவர்கள் தூண்டல்களால் மற்றும் சிறிய வலைகளால் மீன் பிடித்தல் போன்ற அடிப்படையான மீன்பிடித்தல் முறைகளையே பயன்படுத்துவதுடன் பிரதானமாக அவர்களது வருமானத்தினை மிகை நிரப்புவதற்காகவே இதனை செய்கின்றனர். சமுதாய மட்டத்தில் குறிப்பிடப்பட்ட தடைகளுக்கு மேலாக மீன்பிடி கருவிகளை கொள்வனவு செய்வதற்கு போதிய மூலதனமின்மையும் பதிலளிப்பாளர்களால் ஒரு தடையாக குறிப்பிடப்பட்டதுடன் அவர்களுக்கு படகுகளைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்களுமில்லை.

> *"எனது வலி காரணமாக என்னால் வேலை எதுவும் செய்ய முடியவில்லை. கணவர் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளார். எனினும் அவரிடம் படகு ஒன்று இருப்பின், பிடிக்கும் மீன்களில் அளவைக் கூட்ட முடியும். எமது ஏரி போதிய ஆழமானதாக இல்லை. எனவே அங்கு தரமான மீன்களில்லை. குளம் புனரமைக்கப்படின், எமது இலாபத்தினை அதிகரிக்க முடியும்.'*
>
> *(சம்பவக் கற்கை , அங்கவீனர்களுடனான குடும்பங்கள், PWD, F, வாகரை)*

மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள பெண்கள் தலைமையிலான குடும்பங்களும் மீன்பிடி சங்கத்தின் அங்கத்தவர்களாவர். ஆனால் இவர்கள் அங்கத்துவப் பணம் கட்டுவது கட்டாயமன்று. இவர்கள் ஏனைய மீன்பிடி சமூகத்தினைப் போன்று அதே மாதிரியான சந்தைப்படுத்தல் செயன்முறைகளையே மீன்பிடி சங்கத்தினூடாக, கேட்கும் உயர் விலைக்கு பிடிக்கப்பட்ட மீன்களை விற்றல் என அதே மாதியான சந்தைப்படுத்தல் செயன்முறைகளையே பயன்படுத்துகின்றனர்.

மீன்பிடித்துறையின் 10 வருடத்திட்டமிடலுடன் இணைந்ததாக மீன்பிடி மற்றம் நீர்வள அமைச்சினால் கிழக்குக்காக வரையப்பட்ட வலயத்திட்டங்களை பயன்படுத்தி மீன் வளர்ப்பானது ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள பண்ணைகளிற்கும் மேலாக விருத்தி செய்யப்படலாம். இப்பிரதேசங்களில் காணக்கூடிய நீர் நிலைகளும் மீன் வளர்ப்பிற்கான சாத்தியப்பாடுகளை அதிகரிக்கின்றன. ஏற்றுமதிக்கான கேள்வியுள்ள உயர் இன மீன்கள் வளர்க்கப்படுதலானது மீனவர்களுக்கு உயர் விலையைப் பெற்றுக் கொடுக்கும். சிங்க இறால், கடல் அட்டை, சீ பாஸ், சிப்பி மற்றும் இறால் போன்ற மீன் மற்றும் மீன் உற்பத்திகளுக்கான கேள்வி சர்வதேச சந்தையில் காணப்படுவதுடன் இவ்வுற்பத்திகளை விநியோகிப்பதனை நோக்கி உள்ளூர் உற்பத்தி முடுக்கப்படலாம். இருந்தாலும் இந்நாட்டில் இறால் ஏற்றுமதி செய்யும் அளவு குறைந்துள்ளதுடன் இது இப்பிரதேசங்களின் மீன் வளர்ப்பு, மீன் பிடித்துறை விருத்தி செய்யப்படுவதற்கான வாய்ப்பையும் காட்டுகின்றது.

வளர்ப்பு அடிப்படையிலான மீன் பிடித்தலானது நுண்நிதித் திட்டங்கள் அல்லது வாழ்வாதார உதவி செயற்றிட்டங்களினூடாக ஆரம்ப மூலதன நிதி உதவிகளுடன் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற பலவீனமான குழுக்களுக்கு ஏற்றதாகுகின்றது. மீன் வளர்ப்புக் கைத்தொழிலிருந்தான இலாபம் தொடர்பான விழிப்புணர்வானது தனியார்துறைக்கும் ஏற்படுத்தப்பட்டு இக்ரையோரப் பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இருந்தாலும் மீன்வளர்ப்பானது அதனால் சூழலுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் வண்ணம் தெளிவான வள முகாமைத்துவ நுட்பங்களை பயன்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டு கவனமாக முகமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

## பெறுமதி கூட்டல்

உள்நாட்டு மீன்பிடிப்பாளர்கள் சில குறிப்பிட்ட வகையான மீன்களைப் பதனிடல் மூலம் கூடுதல் பணம் சம்பாதிக்க முடியும். ஆய்வில் பங்கெடுத்துக் கொண்ட மீன் உற்பத்தியாளர்கள் தமக்குக் கூடுதல் வருவாயைப் பெற்றுத் தருகின்ற மீன் வகையினை இனங்கண்டு கொண்டிருந்ததுடன் அதிக கேள்வியுள்ள மீன் பதனிடல் முறையையும் தெரிந்து வைத்திருந்தனர். அவர்கள் உப்பில் உலர்த்தப்பட்ட மீனுக்குக் கேள்வி இல்லை என கண்டு கொண்டுள்ளதுடன் குறைந்த செலவுடன் 3 நாட்களுக்கு வைத்துக் கொள்ளக் கூடியதாக மீனினை விறகு பயன்படுத்தி புகையில் உலர வைக்கின்ற பாரம்பரிய முறையினை பயன்படுத்துகின்றனர். உயர் கேள்வியுள்ள மீன் வகையானது சுங்கன் மற்றம் விரால் கருவாடுகளாகும். இவை (ஆய்வுக்குரிய காலத்தில்) உற்பத்தியாளர்களுக்கு ஒரு கிலோவிற்கு ரூபா 800 மற்றும் ரூபா 600 இனை முறையே பெற்றுக் கொடுத்தன.

> *'நாம் 3 கிலோ மீனை உலர்த்தினால் அது 1 கிலோ மீனினைத் தரும். எனவே நாம் நல்ல கேள்வியுள்ள உயர் விலையொன்றை தரக் கூடிய மீனினையே பதனிடல் செய்கின்றோம். 1 கிலோ கருவாடானது பொதுவாக ரூபா 300 இற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனை மீனாக விற்பது இதிலும் இலாபமாகும்.'*
>
> *(முக்கிய குழுக் கலந்துரையாடல், வாகரை)*

கேள்வி உயர்வாக உள்ளமையால் களஞ்சியப்படுத்துவதற்கு அதிக தேவையில்லை. இருந்தாலும் விளைச்சல் கூடுதலாகவுள்ள காலங்களில் பனிக்கட்டி நிலையங்கள் காணப்படாமையினால் உற்பத்தியாளர்கள் மீனினை பிரதேசத்திற்கு வெளியே சந்தைகளிற்கு கொண்டு செல்வதனை இது மட்டுப்படுத்துகின்றது. அதனால் குறித்த சில மீனவ சமுதாயங்கள் தமது முயற்சிக்கு கிடைக்கும் பெறுமதியினையும் பார்க்காது புதிய மீன்களை பதனிடலுக்குட்படுத்துகின்றனர். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலங்களில் உற்பத்தியாளர்கள் சாதாரணமாக உப்பிட்ட மீனினை சந்தை விலையிலும் அரைவாசி விலைக்குக் கிடைத்தவர்களுக்கு விற்கின்றனர். கஷ்டமான பிரதேசங்களில் கருவாடு உற்பத்தி செய்யப்படுகின்றது. எனினும் இப்பிரதேசங்களில் போக்குவரத்து ஒரு பிரச்சினையாகும். சந்தைப்படுத்தல் மற்றும் சந்தையில் சிறந்த கேள்வியுள்ள மீன் வகையினைத் தெரிவுசெய்தல் தொடர்பாக மீனவர்களின் அறிவின்மை மற்றும் மோசமான போக்குவரத்து வசதிகள் காரணமாக உற்பத்தியாளர்கள் கருவாட்டினை இடைத்தரகர்களுக்கு விற்பனை செய்வதற்கு உந்தப்படுவதுடன் தமது உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விலையொன்றினைக் கோரவும் முடியாது.

பலவீனமான குழுக்களும் புகை மூலம் மீன் உலர்த்தும் அதேமுறையினைப் பயன்படுத்தி மீனினைப் பதனிடுகின்ற பெறுமதி கூட்டலை செய்கின்றனர். தமது உடல் அங்கவீனம் காரணமாக மீன் பிடித்தலில் ஈடுபட முடியாதோர் மீன் பதனிடலில் ஈடுபடுகின்றனர்.

> *'நான் சிறு வயதிலிருந்தே கருவாடு தயாரிப்பதில் அனுபவம் கொண்டுள்ளேன். எனவே என்னால் அந்த வேலையை செய்ய முடியும். சில நேரங்களில் எனது கணவர் கருவாடு செய்வதற்காக மீன் கொண்டு வருவார். ஆனால் எமது கிராமத்துக் குளத்தில் போதியளவான மீன்கள் இல்லை.'*
>
> *(சம்பவக் கற்கை அங்கவீனர்களுடனான குடும்பங்கள், PWD, F , வாகரை)*

புகை மூலம் உலர்த்தப்பட்ட மீனுக்கான சிறந்த சந்தையும் தமது அனுபவத்தினூடாக இதனை எவ்வாறு செய்வது என்பது தொடர்பான தொழிநுட்ப அறிவு மற்றும் பாரம்பரிய அறிவு என்பன மூலதனமாக, விசேடமாக பலவீனமான குழுக்களிடையே பயன்படுத்தப்படலாம். ஏனெனில் பெறுமதி கூட்டலிற்கு சிறிது எளிதில் இயங்குபவர்களாக இருக்கவேண்டும்.

> *'நான் மீன் பிடித்தால் அவற்றை விற்க மாட்டேன். அதனை விற்றால் கிடைக்கும் இலாபம் குறைவாகும். நான் அவற்றை உலர்த்திக் கருவாடாக்குவேன். அது எனக்கு கூடுதல் இலாபத்தினைத் தரும். வர்த்தகர்கள் கருவாடு வாங்குவதற்கு எனது வீட்டுக்கு வருவார்கள். சுங்கன் மற்றும் விரால் என்பன கருவாடு செய்வதற்கு சிறந்தனவாகும். ஆனால் இவை எமது குளங்களில் குறைவாகும்.'*
>
> *(சம்பவக் கற்கைஇ PWD, M வாகரை)*

உயர் பெறுமதியான நன்னீர் மற்றம் உவர் நீர் உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதும் தொழினுட்ப மற்றும் ஆரம்ப நிதி உதவிகளை வழங்குவதும் மீனவர்களை இலாபம் குறைந்த பாரம்பரிய நன்னீர் மீன்பிடித்துறையிலிருந்தும் முன்னேற்றும். நண்டுகள், சவர்நீர் இறால்களைப் பற்றிய அறிவு மற்றும் இவற்றைப் பிடிப்பதிலான அனுபவம் என்பன இவ்வுற்பத்தித் துறையின் விரிவாக்கத்திற்கான வாய்ப்பாக நோக்கப்படலாம். USAID நிதியுதவியுடனான CORE செயற்திட்டமான ஜீவனோபாய துறை ஆய்வில் (மே, 2009) எடுத்துக் காட்டப்பட்டதன் படி திலாப்பியா, பால் மீன் மற்றும் கார்ப் இனங்கள் இறால்களை விடவும் சந்தையில் கேட்கப்படுவனவாக இருப்பினும் இவற்றின் வளர்ச்சிக்கட்டத்தில் இறால்களை விடவும் இலகுவானவையாக, செலவு குறைந்தனவாக இருப்பதுடன் இலகுவில் நோய்த் தொற்றுகளுக்கும் ஆளாகாதவையாகும்.

பனிக்கட்டியில் பாதுகாத்து வைக்கப்படாத புது மீன்களை விரும்புகின்ற உள்ளூர் சந்தை இவ்வகையான நீர் வளர்ப்புகளின் இலக்காக எடுத்துக்காட்டப்படலாம். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கிழக்கு மாகாணம் முழுவதும் பிரதானமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வுயர் பெறுமதி மீன் வளர்ப்பு செயன்முறைகள் அவற்றின் கள முன்னோடி மட்டத்தில் காணப்படுவதுடன் இவற்றைப் பெரிய அளவில் மேற்கொள்ளவும் முன்னோடிக் கட்டங்களில் பெற்றுக் கொண்ட பாடங்களை இணைத்துக் கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## சந்தைகள்

நன்னீர் மற்றம் சவர்நீர் மீன்பிடி அதேபோல் மீன் வளர்ப்பும் உள்ளூர் சந்தையில் கடல் மீனுடன் போட்டியிடுவனவாக காணப்படுவதுடன் ஏற்றுமதிக்கான சாத்தியப்பாடுகளையும் கொண்டுள்ளன. பனிக்கட்டியிலிடப்படாத திலாப்பியா மற்றும் பால் மீன் என்பன கிழக்கு மாவட்டங்களிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு குறைந்த நேரத்தில் கொண்டு செல்லக் கூடியதாக உள்ளூர் சந்தையை இலக்காகக் கொள்ள வேண்டும். இறால்கள் மற்றும் நண்டுகள் போன்ற மீன்வளர்ப்பானது சுற்றுலாத்துறைக் கைத்தொழிலையும் ஏற்றுமதிச் சந்தையையும் இலக்குப்படுத்தலாம். பின்னர் கொள்வனவுத் திட்டத்தில் தனியார்த் துறையின் ஈடுபாடு ஊக்குவிக்கப்பட வேண்டும். கம்பனிகள் மீன்குஞ்சுகள் மற்றும் உணவினை வழங்கி பின்னர் போட்டியான ஒரு சந்தை விலையில் அவர்களே உற்பத்திகளை கொள்வனவு மூலம் விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளல் போன்ற சாத்தியமான திட்டங்களுக்காக இணைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

சந்தை நிலையங்களின்மை, போக்குவரத்து வசதிகள் மற்றும் பாதைகளின்மை காரணமாக உற்பத்தியாளர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்சவிலையிலும் குறைந்த விலைக்கு தமது உற்பத்திகளை இடைத்தரகர்களுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் விற்கவேண்டிய நிலையில் உள்ளனர். குஞ்சான்காட்குளத்தில் ஒரு மீனவர் சங்கம் இருப்பதனால் இங்கு நிலைமை வேறாக மீனவர்கள் தமக்குக் கிடைக்கும் அதிஉயர் விலைக்கு மீனினை விற்கக் கூடியவர்களாக உள்ளனர். இங்கு கொள்வனவாளர்கள் சந்தை விலையைக் கொடுப்பதுடன் மீனவ சங்கத்திற்கும் மேலதிகமாக 1 கிலோவிற்கு 10 ரூபாய் செலுத்துகின்றனர். பலப்படுத்தப்பட்ட மீனவ சங்கங்கள் பருவகால குளமீன் வளர்ப்பினை துவங்கவும் வேண்டப்படலாம்.

இடைத்தரகர்கள் மீனவர்களிடமிருந்து 90 ரூபாவிற்கு மீனை வாங்கி சில்லறை வியாபாரிகளுக்கு 190 ரூபாவிற்கு விற்பதாகவும் சில்லறை வியாபாரிகள் இதனை நுகர்வோருக்கு 290 ரூபாவிற்கு விற்பதாகவும் மாவட்ட மட்டக் கலந்துரையாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன. கடற்றுறைப் பெறுமதி கூட்டல் செயன்முறையைப் போன்று இடைத்தரகர்கள் உள்ளீட்டு விநியோகத்தில் ஈடுபடுவதில் இருந்து இறுதியில் அறுவடையையும் கொள்வனவு செய்கின்றனர். இடைத்தரகர்கள் பனிக்கட்டிப் பெட்டிகளைக் கொண்டு வந்து இம்மீன்களை அவற்றில் களஞ்சியப்படுத்தி சந்தைக்குக் கொண்டு செல்கின்றனர். உற்பத்தியாளர்களின் சந்தை பற்றிய புரிந்துணர்வின்மை, அண்மிய பகுதிகளில் சந்தை நிலையங்களின்மை மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் போதாமை காரணமாக உற்பத்தியாளர்கள் குறைந்த விலைக்குத் தமது உற்பத்திகளை இடைத்தரகர்களுக்கு அல்லது சேகரிப்பாளர்களுக்கு விற்பனை செய்கின்றனர்.


நன்னீர் மீன் இறால்கள் மற்றும் உப்பிடப்படாத கருவாட்டுக்கு உள்ளூர் சந்தையில் அதிக (மற்றும் அதிகரித்து வரும்) கேள்வியொன்றுள்ளது. ஏனைய பயிர் உற்பத்திகளுக்கான முறையான சந்தையொன்றுள் இணைக்கப்பட்டதாக ஒரு உள்ளூர் மட்ட சந்தை நிலையமானது, பாதை ஓரங்களில்

நடைபெறுகின்ற ஒழுங்கற்ற புதிய மீன் விற்பனைகளுக்கு பிரதியீடாக வழங்கக் கூடிய ஒரு மாற்றுத் தீர்வாக அமைய முடியும். விரைவாக அபிவிருத்தியடைந்து வரும் சுற்றுலாத்துறை கைத்தொழிலானது இவ்வுற்பத்திகளுக்கான சிறந்த சந்தையொன்றாகும். தனியார் துறையுடன் இணைந்த தர உறுதிப்பாட்டு தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் வரும் காலங்களில் தனிச் சிறப்பான சந்தைகளை இலக்காகக் கொள்வதற்கு ஒரு வர்த்தகப் பெயர் வழங்கல், குறியீட்டு அடையாளம் இடல் போன்ற வர்த்தக உத்திகளும் அவசியமாகும்.

மீனவ சங்கங்களை புதிய சந்தைகளை இனங்காணல், சந்தை இணைப்புக்களை முன்னேற்றுதல் மற்றும் புதிய மீன் மற்றும் கருவாடுகளை அனைவரும் சேர்ந்து சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களில் பலப்படுத்துவதும் உற்பத்தியாளர்களுக்கு அதிக பண வருவாயை பெற்றுக் கொடுக்கும்.

சுருக்கமாக, தரப்பட்டுள்ள வரைபடமானது உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்துறையிலான தடைகள், காரணங்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளைக் குறித்துக் காட்டுகின்றது.

**படம் 4.8: நன்னீர் மீன்பிடித் துறையிலான தடைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரைபடமாக்கல்**




## 4.5 கடல் மீன்பிடித்துறை

இலங்கையின் கடல் மீன்பிடித்துறையானது கரையோர மீன்பிடித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என இரண்டு உப துறைகளைக் கொண்டுள்ளது. நாட்டின் கரையோர மீன்பிடி உபதுறையானது வளங்கள் அருகிப் போதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது. யுத்த காலங்களில் மீன்பிடித்தல் மீதிருந்த தடைகள்/கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குக் கரையோரங்களில் ஏனைய பகுதிகளைப் போல் அளவுக்கு மீறிய மீன் பிடித்தல் செயற்பாடுகள் இடம்பெறவில்லையாதலால் தென்கரையோர மீனவர்களிலும் கிழக்குக் கரையோர மீனவர்கள் வளம் அருகிப் போதல் தொடர்பான இப்பிரச்சினையைக் குறைந்தளவிலேயே முகம் கொடுக்கின்றனர். இருந்தாலும் இப்பிரதேசங்களில் மீன்பிடித்தல் மீதிருந்த தடைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் இக்கைத்தொழிலில் இன்னுமின்னும் அதிக மக்கள் ஈடுபடுகின்றனர்.

கீழே காட்டப்பட்டுள்ள படத்திற்கேற்ப மீன்பிடித்துறையில் மிக அதிக சதவீத மீனவர்கள் முறையே 15% மற்றும் 18% திருகோணமலையில் மற்றும் மட்டக்களப்பிலேயே உள்ளனர். இவர்களது உற்பத்தி மொத்த தேசிய மீன் உற்பத்தியினது 8.34% மட்டக்களப்பிலும் 9.44% திருகோணமலையிலுமாகும். இவ்விரு மாவட்டங்களினதும் உற்பத்தியானது நாட்டின் ஏனைய மாவட்டங்களைப் போன்று உயர்வாக இல்லை. இந்நிலையானது வளம் அருகிப்போதல் அச்சுறுத்தல்களுடன் இணைந்து இன்னுமின்னும் மக்கள் இவ் உபதுறையில் ஈடுபடுவதனைக் குறைத்து, அதிகமானோர் பதனிடல் போன்ற மீன்பிடி பெறுமதி சங்கிலியின் வேறு பகுதிகளில், உயர் பெறுமதி பணப்பயிர்ச் செய்கை போன்ற வேறு ஜீவனோபாய தெரிவுகளை நோக்கி செல்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

**படம் 4.9: மாவட்ட ரீதியாக மீனவர்களின் சதவீதம், 2009**




மீன்பிடித்துறையின் 10 வருட உற்பத்தித் திட்டமிடலானது (MFAR 2007) ஆழ்கடல் மீன்பிடித் துறையினது அபிவிருத்தியை ஊக்கப்படுத்துகின்றது. இது நீண்ட கால நோக்கில் ஆழ்கடல் மீன்பிடித்துறையில், சில குறிப்பிட்ட வகையான மீன்களுக்கு (டூனா போன்ற) உள்ள ஏற்றுமதிச் சந்தைகளில் உள்ள கேள்வி அடிப்படையில் உயர் வருமான ஈட்டல்களை பெற முடிதல் மற்றும் கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்கள் போன்ற பல்வேறு காரணங்களினாலாகும்.

கரையோர மீன்பிடிகளில் அதிகளவு மக்கள் மீன்பிடித் துறையில் ஈடுபடுத்தப்பட முடியுமென்பதால் இவ் உபதுறையானது தற்போதைய அரச கொள்கை கலந்துரையாடலில் முக்கியமாக கருதப்படுகின்றது.

கிழக்குக் கரையோரத்தில் உச்ச மீன்பிடிப் பருவம் பெப்ரவரி முதல் ஜூலையாகும். பருவமற்ற காலங்களில் தமக்குத் துணையான ஒரு ஜீவனோபாய வழி இல்லாமையால் வேறு மாற்று வழியின்றி இவர்கள் உயர் வட்டி வீதங்களில் கடன் எடுத்து கடன் சுழலினுள் விழும் நிலைக்கு பலவீனமானவர்களாகின்றனர். கடல்

மீன் பிடித்தல் பருவமில்லாத காலங்களில் இவர்கள் களப்புக்கள் மற்றும் கடல்நீரேரிகளில் இறால்கள், நண்டுகள் மற்றும் மீன் பிடிக்கின்றனர். சவர் நீரிலிருந்து பிடிக்கக்கூடிய மீன்களின் அளவு குறைவாக உள்ளதாலும் (வளங்கள் அருகிப் போதல் காரணமாக தற்போது) கடல்நீரேரிகள் நிரப்பப்பட்டு வருவதாலும் தமக்கு ஒரு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக இம்மீனவர்கள் கோருகின்றனர். பெறுமதி கூட்டல் பிரிவில் விரிவாக கலந்துரையாடப்பட்ட படி மீன் வளர்ப்பினை அறிமுகப்படுத்துவதானது இச்சமுதாயங்களுக்கான ஒரு மாற்று/துணையான ஜீவனோபாயமாக அமையக் கூடும். மேலும் காய்கறிகள், தானியங்கள் மற்றும் பழங்கள் போன்ற பணப்பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்துவதும் பருவமற்ற காலங்களில் இவர்களுக்கு ஒரு வருமான முதலினை வழங்கும்.

துணைநிலை மற்றும் முதல் நிலைத் தரவுகள் பற்றாக்குறை காரணமாக இவ்வாய்வில் கடல்மீன் உற்பத்தியாளர்கள் பெற்றுக் கொள்ளும் பணஈட்டல் அல்லது உற்பத்தி செலவு என்பவற்றை தீர்மானிக்க முடியவில்லை. பிடிக்கப்படும் மீனின் அளவு மற்றும் வருமானம் பிடிக்கப்படும் மீனின் வகையில் தங்கியுள்ளதுடன், மீன் பிடிக்கும் காலம் பயன்படுத்தப்படும் மீன்பிடி உபகரணம் மற்றும் படகுகள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கையில் பிடிக்கப்படும் மீனின் வகை தங்கியிருப்பதாலும் இங்கு காரணம் என்னவென்று எதிர்வு கூறக்கூடிய தன்மையில்லாமை காரணமாக இருக்கக் கூடும்.

இப்பகுப்பாய்வின் ஆய்வுக் கற்கையானது கரையோர மீன்பிடியில் கவனம் செலுத்துவதுடன் திருகோணமலை மாவட்ட குச்சவெள்ளி பிரதேச செயலக பிரிவின் கல்லாரவ மீன் பிடி சமுதாயத்திலிருந்தான உதாரணங்களுடன் பெறுமதி சங்கிலியினை விவரிக்கின்றது. தற்போதைய ஆய்வும் முதல்நிலைத் தரவுகளும் ஆழ்கடல் மீன்பிடித்துறையிலிருந்தே இச்சமுதாயங்களுக்கான அதி உயர் வருமானம் பெறப்படுவதாக காட்டுகின்றது.

## உள்ளீடுகள்

மீனவக் குடும்பங்களிடம் இயந்திரமற்ற படகுகள் சொந்தமாக உள்ளனவெனினும் ஏனைய உள்ளீடுகள் (மீன்பிடி உபரணங்கள் மற்றும் எரிபொருட்கள்) மொத்த கொள்வனவாளர்களின் நிதியுடனேயே பெறப்படுகின்றன. மீன் பிடித்தலை அதன் உச்ச அளவில் செய்வதற்கு பல்வேறு வகையான மீன்களையும் பிடிப்பதற்கு பல் பயன்பாட்டுடனான மீன்பிடி உபகரணங்கள் தேவையாகும். எரிபொருள் அன்மையிலுள்ள எரிபொருள் நிரப்புகின்ற நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது அல்லது சமுதாயத்திற்கு அண்மையிலுள்ள சில்லறை விநியோகத்தர்களிடமிருந்து சட்டவிரோதமாக பெறப்படுகின்றது. நாடு முழுவதில் அதிகூடிய எண்ணிக்கையான பாரம்பரிய மீன்பிடி படகுகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் காணப்படுவதுடன் பலநாள் படகுகள் தொடர்பாக திருகோணமலை 3ம் நிலையிலுள்ளது. ஆனால் திருகோணமலைக் கடற்கரைகளுக்கு வெளியே செயற்படுகின்ற படகுகள் உள்ளூர் மக்களுக்கு சொந்தமானவையானது அல்லது வடமேல் மற்றும் தெற்குக் கரையோரங்களிலிருந்து புலம் பெயர்ந்துள்ள மீனவர்களுக்கு சொந்தமானதா என்பதில் கேள்விகளுள்ளன. இலக்குக்குரிய சமுதாயங்கள் ஆழ்கடல் மீன்பிடித்துறையுடன் அல்லது நேரடியாக படகு உரிமையாளர்களாக குறைந்தது ஆதரவு சேவை வழங்குநர்களாக இணைக்கப்பட வேண்டும்.

உள்ளீடுகளுக்கான நிதியுதவி செய்வதன் காரணமாக மாத்திரமல்லாது பருவமற்ற காலங்களில் தமது குடும்பத் தேவைக்கு போதியளவு துணைநிலை வருமானம் மீனவக் குடுமபங்களுக்கு கிடைக்காத போது இவர்கள் முற்பணங்களை வழங்குவதாலும் இம்மீனவ சமதாயங்கள் தொகை விற்பனையாளர்களுடனான ஒரு உறவினுள் கட்டுண்டுள்ளனர். மீன்பிடியில் உச்ச பருவ காலங்களில் குறிப்பிடத்தக்களவு உயர் வருமானமொன்று பெறப்படுகின்றது. எனினும் இதன் பருவகால மாற்றங்கள் மற்றும் பலவீனமான நிதி முகாமைத்துவம் மற்றும் மீனவச் சமுதாயங்களின் சேமிப்பு பழக்க வழக்கங்கள் பருவமற்ற காலங்களில் இவர்களிடம் நிதிக் கஷ்டங்களைத தோற்றவிக்கின்றது. பிணை பொருட்கள் மற்றும் உத்தரவாதமளிப்பவர்கள் இல்லாமை காரணமாக இவர்கள் முறைசார் நிதிச்சேவைகளை அணுகுவதில்லை. இவர்களால் பெற்றுக் கொள்கின்ற ஒரேயொரு முறைசார் நிதிச் சேவைகள் நகைகளை ஈடுவைப்பதினூ டானதாகும்.

மீனவச் சமுதாயங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து சிறிதளவு உதவியே வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. மீன் பிடித்துறையமைச்சு அதிகாரிகள் சமுதாய மட்டத்தில் ஈடுபடுவதில்லை. பல மீனவ சமுதாயங்களில் மீனவ சங்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் பல வெளி முகவர்கள் சமுதாய மக்களுக்கான ஆதரவை வழங்குவதற்கு இச்சங்கங்களினூடாக தொடர்பு கொள்கின்றன. ஆனால் இச்சங்கங்கள் சமுதாய

மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக அமையாத போது (கல்லாரவ போல்) மற்றும் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையே நம்பிக்கை காணப்படாத போது இவர்களது பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகின்றது.

கிடைக்கப் பெறக்கூடியதாகவுள்ள துணைநிலைத் தரவுகளுக்கேற்ப இரு மாவட்டங்களிலும் வளங்கள் காணப்படுகின்ற நிலையில் எதிர்பார்த்தவாறு இரு மாவட்டங்களும் கடற்துறையில் மிகையளவு உற்பத்தியொன்றை காட்டின. இம்மிகை உற்பத்தியானது, கொழும்புக்கு மாத்திரமன்றி குறைந்தது இம்மாவட்டங்ளை அண்டிய அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற உள்நாட்டுப் பிரதேசங்களுக்கு நேரடியாக மீனை அனுப்பக்கூடிய ஒரு சந்தைப்படுத்தல் வலையமைப்பின் தேவையொன்றை வேண்டி நிற்கின்றது. புதிய மீன்களை குளிர் டிரக் வண்டிகளின் மூலம் மாவட்டங்களுக்கு வெளியே கொண்டு செல்வதற்கான ஒரு தெளிவான வாய்ப்பு காணப்படுகின்றது. ஆனால் இலக்குக்குரிய சமுதாயங்களிடமான மூலதன தடைகள் மற்றும் தொகை வியாபாரிகளின் ஏகவுரிமைத் தன்மை காரணமாக அவர்களின் சந்தை மற்றும் சேவைகளை விரிவாக்குவதற்கு முடியாதுள்ளனர்.

கடல் மீன் பிடியானது உச்சமீன்பிடி காலம் பெப்ரவரியிலிருந்து ஜுலை வரை காணப்படுகின்ற பருவ காலத் தொழிற்றுறையொன்றாகும். அதி உயர் வருமானம் ஆழ் கடல் மீன் பிடியிலிருந்து வருகின்றதெனினும் இலக்குக்குரிய சமுதாயங்களிலுள்ள பல குடும்பங்கள் இயந்திரமற்ற படகுகளைக் கொண்டுள்ளதுடன் கரையோர உபதுறையிலிருந்து ஒரு நாள் மீன்பிடித்தலிலேயே ஈடுபடுகின்றனர். கரையோர மீன்பிடித்தலிலான தேறிய வருவாய் பரம்பலானது ஆழ்கடல் உப துறையுடன் ஒப்பிடுகையில் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் எனினும் கிடைக்கும் விளைச்சல் குறைவாகும். இம்மீனவர்கள் பலநாள் படகுகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் பேணுவதற்கான பெரிய மூலதனத் தேவைகளால் தடைப்பட்டுள்ளனர். இவ்வாய்வின் இலக்குக்குரிய மீள் குடியேற்றப்பட்டுள்ள இம்மக்களால் கணிசமானளவு ஆரம்ப மூலதன ஆதரவின்றி ஆழ்கடல் மீன்பிடித் துறையில் ஈடுபட முடியாது. ஆழ்கடல் மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்தியினை ஊக்கப்படுத்துவதாக அரச கொள்கை காணப்படுகின்றதெனினும் பெறுமதி சங்கிலியின் அதிதாழ் மட்டங்களிலுள்ள உற்பத்தியாளர்களை இது இலக்கில் கொள்ளாது பலத்த ஆரம்ப மூலதனங்களுடனுள்ள மீனவர்களையே இலக்கில் கொள்கின்றது. ஆழ் கடல் மீன்பிடி மற்றும் மீன்பிடி உபகரணங்களின் அதிக விலை காரணமாக இத்துறையில் ஈடுபட்டுள்ள அரச சாரா அமைப்புக்களாலும் தனியார் அடிப்படையில் இவற்றை வழங்குவது என்பது நியாயப்படுத்த முடியாது.

இருந்தாலும் மட்டக்களப்பில் பல ஒரு நாள் படகுகள் பல நாள் படகுகளாக மாற்றப்பட்டுள்ளன. இப்போக்கானது தொழிநுட்பம் மற்றும் மூலதன மாற்றீட்டினூடாக ஊக்கப்படுத்தப்பட வேண்டும். ஆழ்கடல் மீன் பிடித்துறையானது பல மறைமுகமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. இவற்றுள் படகுகள் நிர்மாணம், படகு சுத்தப்படுத்தலும் பேணுதலும், மீன் வலை உற்பத்தி, பனிக் கட்டி உற்பத்தி மற்றும் போக்குவரத்து, உணவு வழங்கல் மற்றும் படகு என்ஜின்களின் பொறிமுறைப் பகுதிகளைப் போன்ற கைத்தொழிலுக்குத் தேவையான ஏனைய சேவைகள் விநியோகம் என்பவற்றை உள்ளடக்குகின்றன. விருப்பமின்மை மற்றும் மீன்பிடிக்கைத்தொழிலின் தன்மை அல்லது திறன்களின் காரணமாக இளைஞர்கள் மீன் பிடித்துறையில் ஈடுபடுவதற்குக் காட்டும் ஆர்வம் குறைந்து செல்லும் போக்கினை பார்க்கையில் இவர்கள் இவ்வாறான மறைமுகமான தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்பட முடியும். இவர்களுக்குத் தேவையான திறன் விருத்தியானது ஏற்கனவே பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள மீன்பிடித்துறை மற்றும் கடற் பொறியியலுக்கான தேசிய நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டு வளர்ந்து வரும் துறையினுள் நேரடியாக இளைஞர்கள் உள்வாங்கப்படலாம்.

கடற்கரை வலை மீன்பிடிப்பும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் நடைபெறுகின்றது. ஆனால் கடற்கரை வலைகள் வடமேல் கரையோர மக்களின் உரிமையானதாக உள்ளது. உள்ளூர் மக்கள் கடற்கரை வலைமீன்பிடிப்பில் தற்கால பணியாளர்களாக (அவர்களுக்கு மீன் கொடுப்பனவாக வழங்கப்படும்) அல்லது பண சம்பளங்களுடன் நிரந்தர பணியாளர்களாக தொழில் பெறலாம். இருந்தாலும் இக்கடற்கரை வலை மீன் பிடிப்பில் பணியாற்றும் பல நிரந்தர பணியாட்கள் வெளியாட்களாகவே உள்ளனர். இக்கரை வலை மீன்பிடிச் செயற்பாட்டின் இறுதிக்கட்டங்களாகிய 'இழுப்பு' இல் பெண்களும் ஈடுபடுவதுடன் அவர்களுக்கு சன்மானமாக 2-3 பெட்டி மீன்கள் கொடுக்கப்படுகின்றது. கரையோரவலை மீன் பிடிப்பு குறைவான பண வருவாயினையே கொடுப்பதுடன் பெரும்பாலும் அவர்கள் பொருள் வடிவிலேயே கூலி பெற்றுக்கொள்கின்றனர். எனவே இச்சமுதாய மீனவர்கள் தமது பாரம்பரிய படகுகளில் கடலுக்கு சென்று மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர்.

## பெறுமதி கூட்டல்

கடல் மீன்பிடித்துறையில் சேகரிப்பாளர்களுக்கு பிரதானமாக புதிய மீனினை விநியோகிக்க வேண்டியிருப்பதனால் மிகச்சிறிதளவு பெறுமதி கூட்டல் செயற்பாடே நிகழ்கின்றது. உற்பத்தியாளர்கள் கருவாட்டு உற்பத்தியானது உற்பத்தித் திறன் குறைவாக உள்ளதாகவே உணர்கின்றனர். இருந்தாலும் நெத்தலி மீன்கள் புதியன விற்பது இலாபகரமில்லை என்பதனால் உலர்த்தப்பட்டு மற்றும் உப்பிலிடப்பட்டே விற்கப்படுகின்றன.

> *'கருவாடு தயாரிக்கும் போது மூன்றிலொரு பகுதி நிறை இழக்கப்படுவதனால் அது இலாபமற்றதாகும். நாம் இப்போது கருவாடு தயாரிப்பதில்லை. நெத்தலி மீன் பிடிக்கப்படின் மாத்திரம் அவற்றை புதிய மீன்களாக விற்பது இலாபமில்லை என்பதனால் கருவாடாக்கின்றோம்.'*
>
> *(முக்கிய குழு கலந்துரையாடல், கல்லாரவ)*

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மீனில் கிட்டத்தட்ட 45% ஆனவை பேணியில் அடைக்கப்பட்ட மீனாகும். எனவே இங்கு விசேடமாக மலைநாட்டிலும், புதிய மீன்களுக்கு குளிரூட்டல் வசதிகள் குறைவாகவுள்ள பிரதேசங்களிலும் பேணியிலடைக்கப்பட்ட மீன்களுக்கு தெளிவான கேள்வியுள்ளது. இருந்தாலும் சிறியளவு உற்பத்தியாளர்கள் பலதேசியக் கம்பனிகளுடன் போட்டியிட முடியுமா என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். தனியார் துறையினூடாக சந்தை இணைப்புக்கள் நிறுவப்பட முடியுமெனின் தர உறுதிப்பாட்டு தொகுதிகளுடன் ஒரு வர்த்தகப் பெயர் உருவாக்கப்பட முடியுமெனின் கடல் மீன்பிடித்துறையில் பேணியிலடைக்கப்பட்ட மீன் ஒரு பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தியாக தயாரிக்கப்படுவதற்கான சாத்தியமுள்ளது. இருந்தாலும் இது சிறிய அளவில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மன்னாரின் புதிய மீனின் உறுதியான விநியோகம் இல்லாமை காரணமாக இக்கைத் தொழிலினை அறிமுகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முன்னைய முயற்சிகள் தோல்வியடைந்தன. அடிப்டைப் பொருளின் தொடர்ச்சியான விநியோகம் உறுதிப்படுத்தப்பட முடியாதவாறுள்ள பெரிய அளவு பொறிமுறை நிலையங்களுக்கு நிலையான ஒரு மாற்றுத் தீர்வாக கையில் இயங்குகின்ற குறைந்த மூலதன பேணியிலடைத்தல் நிலையங்கள்/மீன் பதனிடல் தொழிற்சாலைகள் ஆகியவற்றை குறிப்பிடப்படலாம்.

கரையோரத்தில் அதிகரித்து வருகின்ற வளங்கள் அருகிப் போதல் பிரச்சினைகளுடன் உள்ள அதே நேரம் மீனவர்கள் உடனடியாக ஆழ்கடல் மீன்பிடிக்கு மாறவும் முடியாத நிலையில், உயர் பெறுமதியான மீன் வளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டு வசதி செய்து கொடுக்கப்படலாம். மீன் வளர்ப்பில் ஏற்றுமதிக்குள்ள உயர் கேள்வியானது மீன்களுக்கு உயர்விலையை பெற்றுக் கொடுக்கும். குளிரூட்டப்பட்ட மற்றும் உறையவைக்கப்பட்ட டூனா மற்றும் சிங்க இறால், கடல் அட்டை, சீ பாஸ், சிப்பி மற்றும் இறால் என்பன போன்ற உயர் பெறுமதி மீன்கள் மற்றும் மீன் உற்பத்திகளுக்குள்ள உயர் கேள்வி சர்வதேச சந்தையில் காணப்படுகின்றதால் உள்ளூர் உற்பத்தித் துறை இவ்வுற்பத்திகளை வழங்குவதினை நோக்கி முடுக்கப்பட வேண்டும். இருந்தாலும் வடமேல் கரையோரங்களில் இறால் பண்ணைகள் தோல்வியுற்றமையுடன் நாட்டில் இறால்களின் ஏற்றுமதி செய்யப்படும் அளவு வீழ்ச்சியடைந்ததுடன் இது கிழக்கில் மீன் வளர்ப்பு மீன்பிடித்துறைக்குள்ள வாய்ப்பொன்றினை முன்வைக்கின்றது. மீன் வளர்ப்பு வர்த்தகத்துறையினை ஸ்தாபிப்பதானது வடமேல் மாகாண இறால் பண்ணைகளிலிருந்தும் அவற்றின் தோல்வி நிலையிலிருந்தும் கற்றுக் கொண்ட அனுபவப் பாடங்களின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதுடன் ஆரம்ப காலங்களிலேயே நோய்களை இனங்கண்டு பரிகாரம் செய்தல் போன்ற ஆபத்து குறைக்கும் தொழிநுட்பங்களுடனேயே அமுல் படுத்தப்பட வேண்டும்.

உயர் பெறுமதி மீன்களை அறிமுகம் செய்வதென்பதானது ஆதரவளிக்கும் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பும் முறையாக அமைதல் வேண்டும். சேகரிப்பு மற்றம் கூட்டத்தொடர்கள் ஒழுங்காகத் தொழிற்பட வேண்டும் என்பதுடன் உற்பத்தியாளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் பெற்று பனிக்கட்டி நிலையங்களுக்கு விரைவாக கொண்டு செல்லவும் வேண்டும். இதற்கு மேலதிகமாக இத்தொழிற் துறையானது நிலைபேறான தன்மையைப் பேணுவதற்காக ஆரம்ப சந்தை இணைப்புக்களுடன் சுத்தமான முறையில் மீன் கையாளல் செயன்முறைகள் மற்றும் தரம் பேணலில் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும். குறைந்த உற்பத்திகளை தருகின்ற கரையோர மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற பலவீனமான குழுக்களும் மற்றும் இளைஞர்களும் இதற்கான இலக்குகளாகக் கொள்ளப்படலாம். உதாரணமாக கூட்டுவளர்ப்பானது ஒப்பீட்டளவில் குறைவாகவே பாரமாக மனித வலு தேவைப்படுவதாக உள்ளதால் பெண்கள் தலைமையிலான குடும்பங்களை நாடியதாக இருக்க முடியும்.

## களஞ்சியப்படுத்தலும் போக்குவரத்தும்

கடல் மீன் உற்பத்திகள் கரைக்கு கொண்டுவரப்பட்டு ஓரிரு மணித்தியாலங்களுக்குள்ளேயே விற்பனை செய்யப்பட்டு விடுவதால் இச்சமுதாய மக்களுக்கு சிறிதளவு களஞ்சியப்படுத்தல் தேவையே உள்ளது. அறுவடை உச்ச காலங்களில் போக்குவரத்துக்காக குளிர் ட்ரக் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக மீன் ரெஜிபோம் பெட்டிகளில் தொகை விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. போக்குவரத்து சேவை வழங்குபவர்கள் இம்மீனவ சமுதாயத்தவர்களல்லர். அவர்கள் தொகை விற்பனையாளர்களுடன் ஒரு ஒப்பந்தத்துடனுள்ள கொழும்பு மற்றும் நீர்கொழும்பு பிரதேச மக்களுக்கு மீன்களை எடுத்துச் செல்கின்ற வெளியாட்களாவர். கல்லாரவ பிரதேசத்திற்கு மிக அண்மையிலுள்ள பனிக்கட்டி நிலையம் திருகோணமலையிலுள்ளது என்பதுடன் மீன் கொள்வனவு செய்யுமிடத்தில் பனிக்கட்டியின் விலை திருகோணமலையிலும் 25% உயர்வாகும். எவ்வாறாயினும் இது ஒரு மறைவான செலவாக மீனை கொள்வனவு செய்யும் போது கொள்வனவாளர்களால் செலுத்தப்படும் ஒரு செலவாக கணிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் மேலே பிரிவில் விளக்கிய படி மீன் வளர்ப்பினை நோக்கிப் போவதென்பதில் சிறந்த போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகள் தேவையாகும் என்பதுடன் உற்பத்தியாளர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட உயர் வருவாயை பெற்றுக் கொள்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக ஆதரவு சேவைகள் அமைய வேண்டும் அல்லது இது அவர்களுக்கு சொந்தமாக அல்லது அவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுவதாக இருக்க வேண்டும். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலங்களில் மட்டக்களப்பில் 3 பனிக்கட்டி நிலையங்கள் காணப்பட்டன. இலக்குக்குரிய கிராம சேவகர் பிரிவுகளின் தனிப்படுத்துகை மற்றும் இணைப்புக்களிலான தடைகளுக்கு மத்தியில் இப்பனிக்கட்டி நிலையங்கள் நோக்கத்திற்குப் போதியதல்ல என்பதுடன் சமுதாய மக்களுக்கு அண்மையில் சிறிதளவு பனிக்கட்டி நிலையங்கள் அமைக்கப்படலுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

அறுவடையின் பின்னான கையாளல், வகைப்பிரித்தல், சுத்தப்படுத்தல், பொதி செய்தல் மற்றும் ஆதரவு சேவைகள் போன்ற பெறுமதி சங்கிலி வழியேயான முதலீடுகள் மக்களுக்கு உற்பத்தி மட்டத்தில் கூடுதலான, முறையான தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் என்பதுடன் உயர் பண வருவாயினையும் பெற்றுக் கொடுக்கும்.

## சந்தை

மீனுக்கான சந்தையானது பிரதானமாக கொழும்பிலுள்ள தொகை விற்பனையாளர்களாலும் அவர்களது உள்ளூர் சேகரிப்பாளர்களாலும் ஆட்சி செய்யப்படுகின்றது. இவர்கள் நாட்டிலுள்ள பிரபல்யமான சிறந்த விற்பனை நிலையங்களுக்கு (பிரதானமான புனித ஜோன்ஸ் சந்தை) மற்றும் ஏற்றுமதிகளுக்குமென மாவட்டத்திற்கு வெளியில் கொண்டு செல்வதற்காக மீனினை கொள்வனவு செய்கின்றனர். விநியோக சங்கிலியின் அதி உயர் மட்டத்திலுள்ள தொகை விற்பனையளர்கள் மீனுக்கான சந்தை விலையினை தீர்மானிப்பதில் பிரதான பங்கினை வகிக்கின்றனர். கடற்கரை மீன்பிடித்தல், விசேடமாக கரை வலை மீன்பிடித்தல் தொகை விற்பனையாளர்களின் ஆட்சி நிலையானது இவர்கள் உற்பத்தியாளர்களக்கு பருவமற்ற காலங்களில் வழங்கும் முற்பணத் தொகை மற்றும் எரிபொருள், மீன்பிடி உபகரணங்கள் போன்ற உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கும் முற்பணத் தொகையிலிருந்து பெற்றுக் கொள்வதாகும். இத்தங்கியிருக்கும் வட்டமானது உற்பத்தியளர்களுக்கு பருவமற்ற காலங்களில் மாற்று ஜீவனோபாய தெரிவுகளை வழங்குவதன் மற்றும் மாற்று நிதிச்சேவைகள் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிப்பதன் மூலம் உடைக்கப்பட வேண்டும்.

மாவட்டத்தினுள் மீன்களுக்கான உயர் கேள்வியுள்ளது. எனவே தொகை விற்பனையாளர்கள் மற்றும் அவர்களது உள்ளூர் சேகரிப்பாளர்களில் உள்ள தங்கியிருத்தல் உடைக்கப்பட முடியுமெனின் உற்பத்தியாளர்களால் தமது ஊரிலேயே மீனினை வர்த்தகம் செய்வதற்கு முடியுமாக இருக்க வேண்டும். தற்போது தமது துவிச்சக்கர வண்டிகளில் சிறியளவில் சில்லறை விற்பனையாளர்கள் மீன் கொள்வனவு செய்கின்றனர். எனினும் இவர்களும் மீனவர்களிடமிருந்தன்றி தொகை விற்பனையாளர்களின் பிரதிநிதிகளிடமிருந்தே வாங்குகின்றனர்.

சிங்க இறால் மற்றும் நண்டுகள் பேன்ற தனிச்சிறப்பான உயர்பெறுமதி உற்பத்திகளுக்காக விடுதிகள் மற்றும் நகரமயமான குடித்தொகைகள் போன்ற கூடிய கொள்வனவு வலுவுள்ள சந்தைளை இனங்காணலும் அவர்களுடன் நேரடியான சந்தை இணைப்புக்களை சமுதாய மட்டத்தில் சேகரிக்கப்பட்ட

சந்தைப்படுத்தலினூடாக அல்லது தனியார்துறையினூடாக பலமாக உதவி செய்யப்பட வேண்டும். 100% ஏற்றுமதியானது பிரதானமாக கொழும்பு அல்லது வடமேல் கரையோர அடிப்படையிலான தனியார் துறையினரால் ஆட்சி செய்யப்படுவதுடன் இக்கவர்ச்சிகரமான சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் தமது வருவாயை காட்டிக்கொள்ளக் கூடியதாக கிழக்கு உற்பத்தியாளர்களுடன் இவ்வேற்றுமதியாளர்கள் இணைக்கப்பட வேண்டும். இவ்வேற்றுமதியாளர்கள் தமது பிரதிநிதியொருவரை மீன்களின் தரத்தினை உறுதி செய்வதற்காக மீன் விற்பனை நிலையங்களுக்கு பொதுவாக அனுப்புகின்றனர். இதனால் தானாகவே சிறந்த கையாளல் தொகுதிகளை ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்றது.

## படம் 4.10: உவர் நீர் மீன் பிடித் துறையிலான தடைகளை வரைபடமாக்கல்



## 4.6 விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள்

விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள் என்பதற்கான செயல் வரைவிலக்கணமானது முதல் நிலை விவசாயம், வனத்துறை அல்லது மீன்பிடித்துறையல்லாத செயற்பாடுகள் என குறிப்பிடுகின்றது. சில குறித்த நிலைமைகளில் விவசாய அடிப்படையிலான பதனிடலும் கூட விவசாயம் சாராத செயற்பாடாக வகுக்கப்படுகின்றது. இச்சந்தை ஆய்வினது தெளிவிற்காக விவசாய அடிப்படையிலான கைத்தொழில் விவசாயம் சாராத துறையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவை ஒவ்வொரு உப துறையினதும் பெறுமதி சங்கிலியின் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளன.

தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் (2004) நடாத்தப்பட்ட கைத்தொழில் கணிப்பீட்டாய்வானது இரு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற கைத்தொழில் வீச்சினது ஒரு சுட்டியினை வழங்குகின்றது. இரு மாவட்டங்களிலும் தாபனங்களின் சதவீதம் அதேபோல் தொழில் வழங்குனர் என இரு விதத்திலுமே உள்ளூரில் பயிர்செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளின் உணவு பதனிடல் மற்றும் ஆடைக் கைத்தொழில் என்பன விவசாயம் சாராத துறையினை ஆட்சி செய்கின்றன. தளபாட உற்பத்தி மற்றும் களிமண் அடிப்படையிலான கைத்தொழில்கள் போன்ற உலோகமல்லாத கனிய உற்பத்திகளும் இரு மாவட்டங்களிலும் ஒப்பீட்டளவில் உயர்வாக உள்ளன.

**அட்டவணை 4.10: திருகோணமலை மாவட்டத்தில் கைத்தொழில் தாபனங்கள்-2003-04**

| கைத்தொழில் பிரிவு | திருகோணமலை | | மட்டக்களப்பு | |
|---|---|---|---|---|
| | அலகுகள் % | ஈடுபட்டுள்ள நபர்கள் % | அலகுகள் % | ஈடுபட்டுள்ள நபர்கள் % |
| அகழ்தல் மற்றும் பாறையுடைத்தல் | 2.6 | 9.9 | 4.3 | 4.4 |
| உணவு உற்பத்திகள் மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் | 50.8 | 33.3 | 40.8 | 32.5 |
| புகையிலை உற்பத்திகளை தயாரித்தல் | 0.4 | 0.7 | 0.3 | 0.3 |
| ஆடைகள் மற்றும் நூல் தயாரிப்பு | 0.7 | 0.9 | 1.3 | 2.8 |
| ஆடை உற்பத்தி | 12.8 | 31.2 | 10.3 | 18.3 |
| தோல் உற்பத்திகள் தயாரிப்பு | 0.2 | 0.1 | 1.3 | 1.2 |
| பலகை மற்றும் தக்கை உற்பத்திகள் தயாரிப்பு | 1.4 | 0.8 | 2.9 | 3.7 |
| பதிவுசெய்யப்பட்ட ஊடக பிரசுரம், அச்சிடல் மற்றும் மீள உற்பத்தி | 0.5 | 0.5 | 0.7 | 1.2 |
| அடிப்படை இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு | 0.2 | 0.2 | 0.9 | 0.6 |
| அல்லுலோக கனிய உற்பத்திகளின் தயாரிப்பு | 8.6 | 9.7 | 0.5 | 0.5 |
| இழையப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு | 8.4 | 4.4 | 12.9 | 12.7 |
| தளபாட உற்பத்தி | 12.7 | 7.3 | 6.5 | 5.4 |
| நீர் சேகரித்தல், தூய்மைப்படுத்தல் மற்றும் விநியோகம் | 0.4 | 0.7 | 16.9 | 10.3 |
| வேறு | 0.5 | 0.4 | 0.3 | 6.0 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 |

மூலம்: தொகை மதிப்பீட்டு திணைக்களம், 2004

இப்புள்ளி விபரங்கள் மாவட்ட மட்டத்தில் காணப்படுகின்றன. பெரிய, நடுத்தர மற்றும் சிறியளவு கைத்தொழில்களை உள்ளடக்குகின்றன. ஆய்வுக்குரிய சமுதாயங்களில் இக்கைத்தொழில்கள் குறைவாகவே காணப்பட்டதுடன் இலக்குக்குரிய கிராம சேவகர் பிரிவுகளில் பெரிய அல்லது நடுத்தர கைத்தொழில்களில்லை (ACAP, 2009). இலக்குக்குரிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள பிரதான சிறிய கைத்தொழில்கள் ஆடைத்தறி, தென்னந் தும்புநார், தளபாட மரவேலை மற்றும் மட்பாண்ட உற்பத்தி என்பனவாகும். ஆய்வுக்குரிய சமுதாய மக்கள் ஊறுகாய் தயாரித்தல் போன்ற அடிப்படை மட்ட உணவு பதனிடலிலும் ஈடுபடுகின்றனர். உணவு பதனிடல் தற்போதைய நிலைமை மற்றும் விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களை விரிவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் என்பன ஒவ்வொரு உப துறையினதும் பெறுமதி சங்கிலி பகுப்பாய்வின் கீழ் கலந்துரையாடப்படுகின்றன.

விசேடமாக கரையோரப் பிரதேசங்களில் சிறியளவு சில்லறைத் தாபனங்களினூடாக மற்றும் சுற்றுலாத் துறைப் பயணிகளுக்கு தங்குமிடம் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதன் மூலமாக நேரடியான பணவருவாயை பெற்றுக் கொள்ளக் கூடியதாக சுற்றுலாத் துறைக் கைத்தொழிலும் ஒரு சாத்தியமான விவசாயம் சாராத கைத் தொழிலாக இனங்காணப்பட்டுள்ளது.

> *"துறை விரிவடையும் போது இக்கிராமங்களும் எதிர் காலத்தில் சுற்றுலாத்துறையில் ஈடுபடலாம். அவர்கள் தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற சுற்றுலாத்துறைக்கு ஆதரவு வழங்குகின்ற சேவைகளை வழங்குவதில் ஈடுபடமுடியும்."*
>
> *(மாவட்டமட்ட செயலமர்வு)*

கடற்கரையோர பிரதேசங்களில் பிரபல்யமான சுற்றுலாத்துறை இடங்களை விட்டும் தூரமாக வாழ்கின்ற சமுதாய மக்கள் விரைவாக விரிவடைந்துவரும் சுற்றுலாத்துறை கைத்தொழிலிருந்து எவ்வாறு நேரடியற்ற விதத்தில் நன்மை பெறலாம் என்பதானது மாவட்ட மட்ட செயலமர்வுகள் மற்றும் முக்கிய நபர் நேர்காணல்களில் கலந்துரையாடப்பட்டன. உற்பத்தியாளர்களை காய்கறி விநியோகம் செய்தல், பாற்பண்ணை உற்பத்தி விநியோகம் மற்றும் ஆபரண பெறுமதியுடைய கைவேலை உற்பத்திகள் விநியோக வடிவில் சுற்றுலாத்துறைக் கைத்தொழிலுக்கு சேவை வழங்குநர்களுடன் இணைப்பதற்கான சாத்தியப் பாடுகள் இக்கலந்துரையாடலில் குறித்து நோக்கப்பட்டன.

இப்பிராந்தியத்தில் மின் விநியோகம் வழங்கல் மற்றும் போக்குவரத்து தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு அரசினது பலமான ஊக்கத்தினைத் தொடர்ந்து இவ்விரு மாவட்டங்களுக்கும் அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் சாத்தியக் கூறுகளைக் காட்டி நிற்கின்றன. ஆசிய அமைப்பினால் (2009) மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தனியார் தொழில் முயற்சிகளாக உள்ளூரில் சாத்தியமான சூழலின் பண்பறி மதிப்பீடானது தனியார் தொழில் முயற்சிகள் (பெரியளவு மற்றும் சிறியளவு) முகம் கொடுக்கின்ற சில தடைகள் குறித்து காட்டப்பட்டன. அனுமதிகள், அனுமதி அட்டைகள், பதிவுகளைப் பெற்றுக் கொள்ளும் போது அரச அதிகாரிகளால் வேண்டப்படுகின்ற அதிகாரமற்ற உயர் 'கட்டணங்கள்', ஊக்கமின்மை மற்றும் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்ற மனப்பாங்கு, அடிப்படை செயற்பாடுகளில் போதிய தகவல் மற்றும் அறிவின்மை (வியாபார பதிவு, சட்டங்கள் மற்றும் ஒழுங்குகள்), வியாபார பதிவு மற்றும் அனுமதிப் பத்திரங்கள்/ பெறுவதிலான வெளிப்படையற்ற மற்றும் செயன்முறைகள் என்பனவே ஆய்வில் குறித்துக் காட்டப்பட்ட பிரதான விடயங்களாகும். உள்ளூர் அதிகாரிகள் மீளாய்வு செய்தவற்றுள் பெரும்பாலான சாதகமாக காட்டிகளுடன் மட்டக்களப்பு மாநகர சபையானது உயர் இடத்தினைப் பெற்றுள்ளதுடன் இவ்வெற்றி பெற்ற கதையானது ஏனைய உள்ளூர் அதிகாரிகளுடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

மேலே குறித்துக் காட்டப்பட்ட விடயங்கள் அண்மையில் மீள் குடியேறிய சமுதாய மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக இரண்டு நேரடியான விளைவுகளை கொண்டுள்ளன. இப்பிரதேசத்தில் பெரியளவு வர்த்தக முயற்சிகள் தொடங்கப்படுவதற்கு தயங்குவதுடன் இவர்களை அதிகம் கவர்வதற்காக உள்ளூர் அதிகாரிகள் மட்டத்தில் சேவைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 'வியாபாரத்திற்கு ஊக்கமளிக்காத சூழலொன்று' காணப்படுகின்ற நிலையில் உள்ளூர் மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னேற்றுவதானது விசேடமாக பதிவு மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் போதுள்ள சிக்கல் தன்மையை நிரூபிப்பதுடன் இச்சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு செயற்திட்டத்தினூடாக மேலதிக ஆதரவும் ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும்.

அரச அதிகாரிகளுடனான மாவட்ட மட்ட செயலமர்வுகள் பிரம்பு அடிப்படையிலான உற்பத்தி, கைத்தறி கைத்தொழில், சிறியளவு ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் பாதணி தயாரிப்பு என்பனவே இம்மாவட்டங்களில் பிரதான விவசாயம் சாராத ஜீவனோபாய முதல்களாக இனங்காணப்பட்டன. காத்தான்குடியிலுள்ள சிறியளவு ஆடைக் கைத்தொழில் மற்றும் பாதணி தயாரிப்பு என்பன ஒரு முன்னோடி அளவில் இரட்டிப்பாவதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்படலாம். இக்கைத்தொழிலுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள திறன்கள் மற்றும் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்களாகும். ஆடைக் கைத்தொழில் பிரிவின் கீழ் வருகின்ற கைத்தறித் துறையானது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய அளவில் காணப்படுவதுடன் மிக உறுதியான விநியோகம் மற்றும் சந்தை வலையமைப்பினையும் கொண்டுள்ளது. தொழிநுட்ப மாற்றீட்டின் மீதான முதலீடும் மாவட்டத்திற்கு வெளியிலுள்ள சந்தைகளுடன் இச்சமுதாய மக்கள் இணைக்கப்பட்டமையுமே இக்கைத் தொழிலானது உறுதிப்பாட்டுக்கும் இருக்கைக்கும் காரணங்களாகும்.

ஆய்வுக்குறிய சமுதாய மக்கள் தென்னந்தும்புக் கைத்தொழிலில் ஈடுபடுவதில்லை. இக்கைத் தொழிலுக்குத் தேவையான உள்ளீடு தேங்காய் மட்டை இன்மை காரணமாக இக்கைத் தொழில் மேற்கொள்ளப்படாதுள்ளது. இச்சமுதாயங்களில் சிறியளவில் மரவேலைக் கட்டுமானம் மற்றும் மட்பாண்டத் தொழில்களும் ஓரளவு காணப்படுகின்றது. பிரதானமான மண் அடிப்படையிலான கைத்தொழிலாக இம்மக்களிடம் காணப்படுவது செங்கல் தயாரிப்பாகும். இக்கைத் தொழிலுக்குரிய தடைகளும் சாத்தியமான வாய்ப்புக்களும் தொடரும் பிரிவுகளில் விரிவாகக் கலந்துரையாடப்படுகின்றன.

**அட்டவணை 4.11: இரண்டு மாவட்டங்களிலும் சிறிய கைத்தொழில்கள் பிரிவு**

| | கைத்தறி | தென்னந்தும்பு | தளபாடம் | மட்பாண்டம் |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 27 | 9 | 4 | 2 |
| திருகோணமலை | 8 | 0 | 1 | 0 |

மூலம்: மாவட்ட செயலகம், 2009

## செங்கல் தயாரிப்பு

சமுதாய மக்களுடன் உரையாடுகையில் சமுதாய மட்டத்தில் விவசாயம் சாராத செயற்பாடுகளாக களி செங்கல் தயாரிப்பு , சீமெந்து செங்கல் தயாரிப்பு, மற்றும் பிரம்பு அடிப்படையிலான உற்பத்தி என்பன இனங்காணப்பட்டு கலந்துரையாடப்பட்டன. பிரம்படித் தீவு, ஐமலாவெவ, பன்னிச்சையடியாறு சமுதாய மக்கள் தமது பிரதான வாழ்வாதாரம் பருவகால மாற்றங்களால் பாதிக்கப்படும் போது இவ்வதிர்ச்சிகளிலிருந்தும் தம்மை பாதுகாப்பதற்கான மாற்று ஜீவனோபாய செயற்பாடாக மாத்திரம் இச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

**அட்டவணை 4.12: மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குடித்தொகையினர்**

| கிராம சேவகர் பிரிவு | இல. |
|---|---|
| புனானை கிழக்கு | 29 |
| அம்பலந்திரை மேற்கு | 07 |
| விலன் தோட்டம் | 01 |

மூலம்: DCS மட்டக்களப்பு, 2011

செங்கல் உற்பத்திக்குத் தேவையான களியானது கிராமத்தை அண்டிய நெல் வயல்களிலிருந்து பெறப்படுகின்றது. பல உற்பத்தியாளர்கள் களியினைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து செலவிலிருந்தும் தவிர்த்துக் கொள்வதற்காக இந்நிலங்களை அண்மித்ததாக தமது உற்பத்தி தளங்களை அமைத்துக் கொள்ள விரும்புகின்றனர். முக்கிய குழு கலந்துரையாடல்களுக்கேற்ப சூழல் தாக்கங்களை விட்டும் தவிர்த்துக் கொள்வதற்காக களியானது சில குறிப்பிட்ட, இனங்காணப்பட்ட நிலங்களிலிருந்து மாத்திரமே பெறப்படுகின்றது. ஆய்வு மேற் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் களி அகழ்வின் மீது அதிகாரிகளால் எவ்வித தடைகளும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

பூலக்காடு பிரதேச செயலகப் பிரிவின் பிரம்படிதீவிலும், கிரன் பிரதேச செயலகப் பிரிவிலும் செங்கல் தயாரிப்பு பிரதான ஜீவனோபாயங்களில் ஒன்றாகும். ஏறத்தாழ 25 -30 குடும்பங்கள் நேரடியாக செங்கல்

தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. செங்கல் தயாரிப்பும் பண முதலீடோ அல்லது காணியே இல்லாத மக்களுக்கு நாட்கூலி வேலைகளுக்கான வாய்ப்புக்களை வழங்குவதாக சமுதாய மட்ட நேர்காணல்கள் எடுத்துக் காட்டின. நிலம் சொந்தமாக உள்ளவர்கள் சொந்தமாகவே செங்கல் உற்பத்தி செய்கின்றனர்.

## உற்பத்தி

இப்பிரதேசத்தில் செங்கல் தயாரித்தல் தொடர்பாக கணிசமானளவில் பாரம்பரிய அறிவு காணப்படுகின்றது. மோதலானது களி விநியோக வழிகளையும் சந்தை வலையமைப்புக்களையும் மட்டுப்படுத்தியது. ஆனால் புதிய சந்தை வலையமைப்புக்கள் நிறுவப்பட்டுள்ளதனால் களி விநியோகத்தைப் பெற்றுக் கொள்வது என்பது இனி ஒரு பிரச்சினையாக அமையாது. இக்கைத் தொழிலின் தன்மையினால் ஆண், பெண் இரு பாலாரும் ஒரு குடும்பத் தொழிலாக அல்லது ஒரு கூலித் தொழிலாக இதில் ஈடுபடலாம்.

பயிர் விவசாயத்துடன் ஒப்பிடும் போது செங்கல் தயாரிப்பிலுள்ள ஆபத்து குறைவாதலால் இது ஒரு உறுதியான வருமானத்தை இம்மக்களுக்கு வழங்குகின்றது. செங்கல்கள் பொதுவாக பயிர்ச் செய்கைக்கு சமாந்தரமாகவே உற்பத்தி செய்யப்படுவதுடன் உற்பத்தியாளர்கள் களி பதனிடலுக்கும் செங்கல் சுடுவதற்கும் பாரம்பரிய தொழிநுட்பத்தையே பயன்படுத்துகின்றனர். இத்தொழிநுட்பமானது சக்தி, காலம், மற்றும் வளங்களை வீணாக்குவதுடன் உற்பத்தியின் அளவும் குறைவாகும். எவ்வாறாயினும் செங்கல் சிறந்த தரத்தினதாகும்.

சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கேற்ப ஒரு பாரம்பரிய செங்கல் தயாரிப்பு தளத்தினை நிறுவுவதற்கு, செங்கல் சூளை நிர்மாணம் உட்பட, ஆகும் ஆரம்ப செலவு ரூபா 25000 ஆகும். செங்கல் தயரிப்பு செலவினது பிரதான கூறு தொழிலாளருக்குரியது என்பதுடன் இது ஒரு செங்கலுக்கு 2 ரூபாவாகும். ஏனைய உள்ளீடுகள் நீரும் சக்தியும் (நெல் உமி) ஆகும். நெல் உமியானது நெல்லிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. விறகு அண்டியுள்ள காடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. ஒரு சிறிய செங்கல்லின் சந்தை விலை போக்குவரத்துச் செலவு இல்லாது ரூபா 5.50 ஆகும். உள்ளீட்டுக்கு ஆகும் செலவுக்கேற்ப பெறப்படும் இலாபமானது 2 ரூபா முதல் 3 ரூபா வரையிலிருக்கும் இக்கைத்தொழிலினது இலாபகரத் தன்மையானது பல உற்பத்தியாளர்களை செங்கல் தயாரிப்பில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கின்றது.

தொழில்நுட்ப முன்னேற்றத்தினூடாக செங்கல் கைத்தொழில் இன்னும் முன்னேற்றப்பட வேண்டும். செங்கல் தயாரிப்பாளர்களுக்கு முறையான உதவி சிறிதளவே கிடைக்கப் பெறுகின்றது. செய்யப்படும் முதலீடானது வருவாயாகக் கிடைப்பது உறுதியாக உள்ளதால், கடனானது சேகரிப்பாளர்களிடமிருந்து அல்லது குடும்ப பெறுமதியான பொருட்களை அடகு வைப்பதன் மூலம் பெறப்படுகின்றது. செங்கல் தயாரிப்புக்கு உள்ள பிரதான அச்சுறுத்தல் அதிக மழை வீழ்ச்சி அல்லது வெள்ளப்பெருக்கு போன்ற அதி தீவிர காலநிலை மாற்றங்களாகும்.

## சந்தை

புனர்நிர்மாணம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் கிழக்கில் தற்போது செங்கற்களுக்கு சிறந்த சந்தையொன்றுள்ளது. இம்மாவட்டங்களுள் விநியோகம் போதாமையால் வெளி மாவட்டங்களிலிருந்து செங்கற்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இக்கேள்விக்குரிய ஒரு உயிர்ப்பான செங்கல் தயாரிப்பு கைத்தொழில் காணப்படுகின்றது. இச்சந்தையினது இயக்கப்பாடு காரணமாக ஏனைய உற்பத்திகளை போலல்லாது உற்பத்தியாளர் சரியான விலையை பெறுவதுடன் செங்கற்கள் தொடர்பான சந்தை தகவல்களையும் பெற்றுக்கொள்கின்றனர். மோசமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மீறி சேகரிப்பாளர்கள் வெவ்வேறு செங்கல் தயாரிக்கும் கிராமங்களுக்கு சென்று உரிய சந்தை விலையினை கொடுத்து உற்பத்திகளை சேகரிக்கின்றனர். அவர்கள் முற்பணமாகவும் கொடுக்க விளைகின்றனர்.

செங்கல் தயாரிப்பு கைத்தொழிலினை வெற்றிகரமானதாக்குவதற்கு தற்போதுள்ள பலமான சந்தை இணைப்புக்களும் உற்பத்தி வாய்ப்புக்களிலும் முதலீடு செய்யப்பட வேண்டும். நீண்ட காலத்தில் இத்துறையினது நிலைபேறான தன்மையும் இக்கைத்தொழில் விரிவாக்கத்தின்போது ஏற்படக்கூடிய எதிர்மறையான சூழல் விளைவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# 5 கொள்கை வாய்ப்புக்களும் பரிந்துரைகளும்

இவ்வாய்வின் இறுதிப் பகுதியானது குறிப்பாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இரு மாவட்டங்கள் தொடர்பாக கிழக்கில் மீள் குடியேறியுள்ள சமுதாயங்களை உட்படுத்திய வாழ்வாதார செயற்றிட்டங்கள் செயற்பட வேண்டிய கொள்கைத் திட்டவமைப்பு சட்டகங்களை பிரதானமாக முன்வைக்கின்றது. இது மேலும் இலக்குக்குரிய பிரதேசங்களில் ஏற்படக்கூடிய சூழல் பிரச்சினைகளையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இறுதியாக செயற்றிட்ட அடிப்படையிலான தீர்மானம் எடுத்தலில் பொதுவாகவும், குறிப்பான வாழ்வாதார துறைகளில் பரிந்துரைகளையும் வழங்குகின்றது (அட்டவணை 5.3 சுருக்கமாகக் காட்டுகின்றது)

## 5.1 கொள்கை மற்றும் நிறுவனங்கள்

கிழக்கிற்கான அபிவிருத்திக்கு உந்துதலை எடுத்துக் காட்டுகின்ற அடிப்படையான அரச கொள்கை ஆவணங்கள் மகிந்த சிந்தனையும் அதனுடன் இணைந்த 10 வருட கீழ்வான் அபிவிருத்தித் திட்டமுமாகும் (GOSL, 2010). கிழக்கு மாகாணத்திற்கான விரிவான 3 வருட அபிவிருத்தித் திட்டமானது முழுமையான மகிந்த சிந்தனை - இலங்கைக்கான ஒரு 10 வருட அபிவிருத்தித் திட்டவமைப்பு 2006 – 2016 உடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டமானது ஜனாதிபதி செயலகம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் தோட்டத்துறை உட்கட்டமைப்பு கிழக்கு மாகாணத்தின் மாகாண அதிகாரிகள், உரிய மாவட்ட செயலாளர்கள் மற்றும் பரந்தளவில் அடிமட்டத்திலுள்ள சமுதாய மக்களும் உத்திகளை உருவாக்குவதில் முக்கிய வகிபாகங்களைப் பெறுகின்றனர். 'கிழக்கின் எழுச்சி' என பெயர் கொடுக்கப்பட்டுள்ள இணையத்தளத்தில் கிடைக்கப் பெறக் கூடியதாகவுள்ள தகவல்களிலிருந்து இப்பிரிவு வரையப்படுகின்றது[13].

கிழக்கின் எழுச்சி இணையத்தளத்தில் கோடிடப்பட்டுள்ள மூன்று வருடத் திட்டத்தின் உடனடி கவனத்திற்குரிய பகுதிகளாக விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம், பாதைகள், வலு மற்றும் சக்தி, வாழ்வாதார ஆதரவு, மீன்பிடிகள் மற்றும் விலங்கு வேளாண்மைத் துறை அபிவிருத்தி, கல்வி, பொது நிர்வாகம், சுகாதாரம் மற்றும் கழிவகற்றல் போன்ற பல உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டமானது ஏனைய பிரதேசங்களுடனான போக்குவரத்து மற்றும் இணைப்புக்களை ஏற்படுத்துவதனை பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ள பாரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை உள்ளடக்கிய தேசிய அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்த ஒரு பகுதியாகும். இவ்வுத்தியானது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் (IDPs) மீள்குடியேற்றம் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகள் மீளவுயிர்ப்பிக்கப்படல் மற்றும் பயிர் விவசாயம், நீர்ப்பாசனம், விலங்கு வேளாண்மை, கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை மற்றும் மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சிகள் (MSME) உள்ளடங்கலாக பிரதேசத்தின் பொருளாதாரம், மின்சாரம், பாதைகள், போக்குவரத்து (பாதைகள், புகையிரதம், இறங்கு துறைகள், நீர் விநியோகம் மற்றும் கழிவகற்றல் போன்ற பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றல் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி என பிரதான துறைகளின் அபிவிருத்தியை குறிக்கின்றது. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளானவை கமநெகும பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம், கம் புபுதுவ (Gam Pubuduwa), கம் அருன மற்றும் கிராமிய சந்தை அபிவருத்தி செயற்திட்டம் எனும் நிகழ்ச்சிகளை உள்ளடக்குகின்றது.

பின்வரும் கொள்கை சூழலானது அபிவிருத்திச் செயற்திட்டங்கள் ஊடுருவக்கூடிய பல்வேறு துறைகளுக்கும் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு உரிய கொள்கைகளது பிராதன பிரச்சினைகள் கீழே கலந்துரையாடப்படுவதுடன் அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகளுக்காக இவை இன்னும் சீர்படுத்தப்படலாம்.

---

13 கிழக்கின் எழுச்சி உத்தியோகபூர்வ இணையத்தளம் www.neweast.lk 2010 செப்டெம்பரில் பெறப்பட்டது.

**அட்டவணை 5.1 செயற்திட்டத்திற்கு பொருத்தமான கொள்கைகளின் பகுப்பாய்வு**

| கொள்கை உத்திகள் | சந்தை ஆய்வினது கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் அபிவிருத்தி முயற்சிகளுக்கான பொருத்தப்பாடு (பரிந்துறைகளை அமுல்படுத்துவதற்கு அரச கொள்கை உருவாக்குவோரிடமிருந்தான ஆதரவு) |
|---|---|
| **விவசாயம்** | |
| பயிர் விவசாயம் உற்பத்தித் திறன் என்பன பயிர் செய்யப்படும் பரப்பு மற்றும் பயிர்ச் செய்கை செறிவாக்கம் என்பன அதிகரிப்பதன் மூலம் அதிகரிக்கப்படலாம் | பெறுமதி கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தலுக்கு உயர் சாத்தியப்பாட்டினை கொண்டுள்ள, குறைந்தளவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பயிர்களுக்கு உற்பத்தியைக் கூட்டல் என்பது தேவையாகும். பலவகையான பயிர்களுக்கும் பலவகையான உத்திகள் தேவைப்படுகின்றன. உதாரணமாக இரண்டு மாவட்டங்களிலும் மரக்கறிகள் ஏனைய களப்பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை என்பன அவற்றின் குறைந்த உற்பத்தி காரணமாக மாவட்டங்களினுள் நுகர்வுக்குத் தேவையான கேள்வியை சந்திக்கும் வண்ணம் உற்பத்தி விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அதே நேரம், நெல் போன்றவை சந்தை நிறைவடைந்துள்ள நிலையில் சந்தைப்படுத்தலை நோக்கில் கொண்டுள்ளது. |
| விவசாயிகள் பிரதானமாக வீட்டுத் தோட்டம், பழப்பயிர்கள் மற்றும் பல்லாண்டுப் பயிர் விஸ்தீரணப்படுத்தலினூடாக தமது பயிர்களை பலவகைப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர் | பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களின் முக்கியமான வருமானமீட்டும் செயற்பாடுகளுள் ஒன்று வீட்டுத் தோட்டம் செய்தலாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவை அரசிடமிருந்து வரக்கூடிய உதவிகளுடன் இணைக்கப்பட வேண்டும். பழப்பயிர்ச் செய்கையினை விஸ்தீரணப்படுத்துவதானது அதன் பருவகாலத்தன்மை மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய தன்மைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். உயர் வருமான ஈட்டல்களை பயிர்ச் செய்கையிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக பழங்களுக்கு பெறுமதி கூட்டல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். பல்லாண்டுத் தாவரங்கள் பொருளாதார ரீதியில் பயன்தரக் கூடியனவாக மாறும் வரையில் இவற்றுடன் குறுகிய கால பயிர்களை வளர்க்கும் போது இவை உற்பத்தியாளர்களுக்கு வருமானமொன்றைத் தரும். |
| விலங்குணவு மற்றும் கலப்பதற்கான அடிப்படைப் பொருட்களது உள்ளூர் உற்பத்தியை கூட்டுவதற்காக மாகாணத்தில் குறைந்த விளைச்சல் பெறப்படுகின்ற பிரதேசங்களில் புற்கள், சோளம், சோயா, அவரை, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி மற்றும் தினை போன்ற கைத்தொழில் பயிர்கள் அறிமுகப்படுத்தப்படும். | கிழக்கில் விரிவடைந்து வருகின்ற தனியார் துறை அபிவிருத்தி நிறுவனங்களின் செயற்திட்டங்கள் இப்பணப்பயிர்களில் முதலீடு செய்வதற்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. இப்பயிர்ச் செய்கை என்றும் நிலைபேறாக இருப்பதற்கு உற்பத்தியாளர்கள் பிரதேசத்தில் சாத்தியமாக உள்ள சந்தைகளுடன் இணைக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முன்னேற்றகரமான சந்தை வசதிகளை வழங்கல் மற்றும் உயர் பெறுமதியான பொருட்களை இனங்கண்டு கொள்ளல், உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்துவதில் ஈடுபடுவதற்கு விவசாயிகளுக்கு உதவி செய்தல் என்பவற்றினூடாக சந்தைகளை அடைவதற்கான வழிகளை வழங்குவதன் மூலம் விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் அதிகரிக்கப்படும் | ஆய்வினது துணைசார் பகுப்பாய்வானது அண்மையில் சந்தைகளின்மை, சந்தைகளை அடைவதற்கான வழிகளின் மோசமான நிலைமை மற்றும் சந்தைகளுடனான இணைப்புக்கள் / தொடர்புகள் விவசாயத்துறையில் பொதுவான ஒரு தடையாக கண்டறிகின்றது. அரசிடமிருந்தான ஆதரவு செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்குகின்றது. கிழக்கிலிருந்து வரும் உற்பத்திகளனைத்தும் ஒரு இடத்திற்கு கொண்டுவரப்பட்டு பின்னர் பரந்த சந்தைக்கு பரவலடையச் செய்யப்படும் வண்ணம் ஒரு பிரதேசத்திற்குரிய சந்தை மத்திய நிலையம் உருவாக்குவதற்கும் அரசாங்கத்தின் ஆதரவினை பெற்றுக் கொள்ள வழிவகுப்பது மிகவும் முக்கியம். விவசாய உற்பத்திகளை ஒன்றாக சேகரித்து சந்தைப்படுத்தலும் உற்பத்தியாளர்களின் பேரம் பேசும் சக்தியை கூட்டுகின்ற மற்றுமொரு வழியாகும்.<br><br>உயர் பெறுமதியான பயிர்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தின் ஒரு கொள்கை தூண்டல் உள்ளமையும் குறிப்பிற் கொள்ளப்பட வேண்டும். ஒரு முன்னோடி முயற்சியாக உயர் பெறுமதி நெல் இனங்களை அறிமுகப்படுத்தல் எனும் ஆய்வினது பரிந்துரைக்கு துணை நிற்கின்றது. |
| கிழக்கில் ஒரு இயங்கக் கூடிய விவசாய பயிர் துறையினை இனங்கண்டு உரிய தேவைகளை வழங்குவதற்காக விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கற் சேவைகளில்அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.<br><br>கிழக்கின் உற்பத்தித் திறன் குறைவான பிரதேசங்களுக்குரிய ஒரு காரணமாக முறையாகத் தொழிற்படுகின்ற நீபாசனத் திட்டங்கள் காணப்படாமை இனங்காணப்பட்டமையை தொடர்ந்து நீர்பாசன துறையிலான கொள்கைகள், நீரின் தரம் மற்றும் நீர்பாசன வினைத்திறன் அபிவிருத்தி, செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தில் முன்னேற்றம், தற்போதுள்ள வாய்க்கால்கள் மற்றும் வடிகாலமைப்பு புனர்நிர்மாணம், வெள்ள பாதுகாப்பும், உப்பு நீர் நீக்கம் மற்றும் புதிய நீர்ப்பாசன திட்டங்களின் விருத்தி என எதிர்நோக்கப்படுகின்றது. தற்போது இவ்விரு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாரிய நீர்பாசன அபிவிருத்தி செயற் திட்டங்களாவன திருகோணமலையில் எல்லையுடன் மட்டக்களப்பில் ருகம் திட்டமும் குரங்குப் பாய்ச்சான் குளத் திட்டம், புலுகனாவ குளம் மற்றும் போரொப்பொல மற்றும் உனிச்சாய் குள நிர்மாணமுமாகும் | இது விலங்கு வேளாண்மை காய்கறி பயிர்ச்செய்கைக்கு விரிவாக்கற் சேவை போதாமை தொடர்பான பிரச்சினையை முன்வைப்பதற்கு ஒரு வாய்ப்பாகும். ஜீவனோபாய அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகள் போதிய விரிவாக்கற் சேவைகளை வழங்குவதற்கு வள மாற்றீடுகள் செய்வதனை கருத்தில் கொள்ள முடியும். வள மாற்றீடானது ஆற்றல் கட்டியெழுப்புதல் எனும் வடிவிலோ அல்லது அலுவலக இடம் மாற்றும் வாகனங்கள் போன்ற நிர்வாக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ஆதரவு எனும் வடிவிலோ காணப்படலாம். நீர்ப்பாசன வசதிகளுக்கு மத்திய இடத்திலுள்ள அமுல்படுத்தும் முகவர் நீர்ப்பாசன திணைக்களமாகும். நீர்ப்பாசன முன்னேற்றத்திற்காக தற்போதைய கவனமானது பெரிய மற்றும் நடுத்தர அளவான குளங்களிலே உள்ளது. ஆய்வுக்குரிய பெரும்பாலான இடங்கள் சிறிய குளங்களிலிருந்தே நன்மை பெறுகின்றன. அபிவிருத்திச் செயற்திட்டங்களால் அனைத்து சிறிய குளங்களையும் புனர்நிர்மாணம் செய்வதற்கு முடியாதென்பதால் சிறிய குளங்களின் முன்னேற்றத்திற்கு அரசியல் ஆதரவினை நாடுவதும் அவசியமாகும். குளங்களைத் தொடர்ந்தும் பேணி வருவதற்கு சமுதாய மக்களின் பங்கேற்பும் இதேயளவு முக்கியமாகும். |

| | |
|---|---|
| துளி மற்றும் தூவல் நீர்ப்பாசன தொகுதிகளை அறிமுகப்படுத்தல், நிலக்கீழ் நீர் சீராக்கி பொறிநுட்பங்களை சீர்படுத்தல் மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தினது ஆற்றலை பலப்படுத்தல் என்பன நீர்ப்பாசன துறையினது அபிவிருத்திக்காக எதிர்நோக்கப்பட்ட சில படிகளாகும் | காய்கறி மற்றும் பழப்பயிர்ச் செய்கையின் நீர்ப்பாசன வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நுண் நீர்ப்பாசனம் தேவையாகும். இது உற்பத்திச் செலவைக் குறைக்க உதவுவதுடன் விவசாயிகளின் போட்டித் தன்மையையும் அதிகரிக்க உதவும். |
| **விலங்கு வேளாண்மைத் துறை** | |
| விலங்கு வேளாண்மைத் துறையின் உற்பத்தித் திறனை முன்னேற்றுவதன் மூலம் விலங்கு வேளாண்மை செய்பவர்களுக்கான விவசாய வருவாய்களை அதிகரித்தல் | அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய உற்பத்தித்திறன் முன்னேற்றப்பட வேண்டிய பகுதிகளாவன இனப் பெருக்கும் மந்தைகளின் தரத்தினை உயர்த்தல் மற்றும் காணக்கூடியதாகவுள்ள எண்ணிக்கையை கூட்டலும் உணவின் தரத்தை முன்னேற்றுதலாகும். |
| விலங்கு வேளாண்மை உற்பத்திப் பொருட்களது உற்பத்தி மற்றம் சந்தைப் படுத்தலுக்கு முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கலும் விலங்கு வேளாண்மைத் துறையினது பல்வகைப் படுத்தலுக்கு பெறுமதி கூட்டலை அறிமுகப்படுத்தலும் | கிராமிய மற்றும் பண்ணைப் பாதைகள் புனர்நிர்மாணம் செய்யப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.<br><br>உள்ளூர் மட்டத்தில் தயிர் மற்றும் யோகட் உற்பத்தி போன்ற பாற்பண்ணை பெறுமதி கூட்டல்கள் தேவையான பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்குவதன் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். பெறுமதி கூட்டல், பொதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சிகளை பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து தொழில்நுட்ப ஆதரவை பெற்றுக் கொள்ளலாம். |
| இறைச்சிக்காக மந்தையின் விரிவான முகாமைத்துவமும் பால் உற்பத்திக்காக செறிவான முகாமைத்துவமும் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.<br><br>உற்பத்திகளினை சேகரித்து சந்தைப்படுத்தல் மற்றும் விவசாயிகளுக்கான வருவாய்களை கூட்டுவதற்காக விலங்கு வேளாண்மையாளர்களை உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் அதே போன்ற விவசாய அமைப்புக்களில் ஒழுங்குபடுத்துதல் | கிழக்கில் செறிவான முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தப்படாமையால் இம்முறை அறிமுகப்படுத்தப்படும் முன்னர் விவசாயிகளுக்கு தேவையான அறிவும் பயற்சியும் வழங்கப்பட வேண்டியது குறிப்பிற் கொள்ளப்பட வேண்டும். இம்முயற்சியுள்ள, ஆற்றலுள்ள விவசாயிகளிடையில் இணைப்புக்களை ஏற்படுத்தி நவீன விவசாய தொழிநுட்பங்களின் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தவும் விசேட முயற்சியொன்று எடுக்கப்பட வேண்டும். வெவ்வேறு முகாமைத்துவத் தொகுதிகளுக்குப் பொருத்தமான விலங்கினங்களும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| **மீன் பிடித்தல்** | |
| நங்கூரமிடும் தளங்களை நிர்மாணித்தல், இறங்கு தளங்களை முன்னேற்றுதலும் நிர்மாணித்தலும், பனிக்கட்டி நிலையங்களை வழங்குதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல் | மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளில் அதிகளவில் அரசின் முதலீடு இடம் பெறுவதானது அரச சாரா அபிவிருத்தி அமைப்புக்கள் மீன்பிடி உப துறையில் சந்தை இணைப்புக்களுக்கான வசதிகளைச் செய்தல் போன்ற ஏனைய பகுதிகளை முன்னேற்றுவதில் கவனம் செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும். இலக்குக்குரிய சமுதாயங்கள் இப்பெரிய உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுடன் இணைக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மீனவ சமுதாயங்களுக்கு மின்சாரம், குடிநீர், மலசல கூடம் போன்ற ஏனைய சேவைகளை வழங்கல் மற்றும் பாதைகளை அடைவதற்கான இணைப்புக்களை முன்னேற்றல் | பெரும்பாலான இலக்குக்குரிய கிராமங்களது தெளிவான ஒரு தடை மின்சாரமாகும். அரசாங்கத்தினால் இச்சமுதாய மக்களுக்கு மின்சாரம் வழங்குவதென்பது அபிவிருத்திச் செயற்திட்டங்கள் அதிக பெறமதி கூட்டல் (மீன் பதனிடல்) தொடங்கவும் கையடக்கத் தொலைபேசி மற்றும் கணணி திருத்துதல் போன்ற ICT அடிப்படையிலான சிறிய விளம்பரங்கள் மற்றும் முச்சக்கர வண்டி / மோட்டார் சைக்கிள் வண்டி திருத்துதல் போன்ற விவசாயம் சாராத ஜீவனோபாய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தவும் உதவும். |
| இலவச மீன் குஞ்சு கையிருப்பு, சீபாஸ் வளர்ப்புக்கு கூடுகள் விநியோகித்தல் மற்றும் சமுதாய மட்ட சிறிய குஞ்சு பொரிக்கும் இடங்களை ஸ்தாபித்தல் போன்ற நன்னீர் மீன் பிடித்துறைக்கான ஆதரவு போன்றன மீன்பிடிக் கைத்தொழிலில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள சில பகுதிகளாகும் | இக்கொள்கை விடயமானது உள்நாட்டு மீன்பிடித்துறையினது பகுப்பாய்வில் கலந்துரையாடப்பட்ட படி உற்பத்தித் திறன் தொடர்பான தடைகளை முன்வைக்க உதவும். சிறிய குஞ்சு பொரிக்கும் இடங்களினூடாக உள்ளூர் மட்ட மீன் குஞ்சு உற்பத்தியானது ஆய்வின் இலக்குக்குரிய கிராமங்களையும் அடைய வேண்டும். மேலும் அபிவிருத்தி செயற்திட்டங்கள், மக்கள் இச்செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்கான வழிகளைச் செய்து கொடுக்க வேண்டும். |
| மீன் சந்தையொன்றை மற்றும் மீன் சில்லறை விற்பனை தளங்களை நிறுவுதல் போன்ற முயற்சிகளினூடாக சந்தைப்படுத்தலை முன்னேற்றுதல் | வறிய மீனவர்கள் கடன் எனும் விஷச் சூழலிலிருந்து வெளியே வந்து தமது உற்பத்திகளை சுதந்திரமாக விற்பனை செய்வதற்கு பண உதவிகள் வழங்கப்படுவது தேவையாகும். |
| கைத்தொழில்கள் | |
| ஆடைக் கைத்தொழிலை மீளவுயிர்ப்பித்தல் | சிறிய உள்ளூரில் அமைந்த ஆடைக் கைத்தொழில்கள் போன்ற அரச திணைக்களங்களின் அதே போன்று அரச சாரா அமைப்புக்களின் உதவியுடன் இரட்டிக்கப்படலாம். கைத்தறி கைத்தொழிலும் புதிய தொழிநுட்ப உள்ளீடுகளுடன் ஆதரவளிக்கப்படலாம். |
| கைத்தொழில் வலயங்களை நிறுவுதல் | நீண்ட கால நோக்கில் பெரியளவிலான கைத்தொழில்கள் முன்னேற்றப்படலானது பிரதேசத்தில் முறையான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதால் இலக்குக்குரிய சமுதாய மக்களுக்கு நன்மையளிக்கும். |
| உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் | மின்சாரம், பாதைகள் மற்றும் நீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதுடன் உற்பத்தி செலவைக் குறைக்கும். |

## 5.2 இயற்கை அனர்த்தங்களும் முகம் கொடுக்கும் முறைகளும்

வடக்கு மற்றும் கிழக்கு பல வகையான இயற்கை சீற்றங்களுக்கு ஆளாகக் கூடிய தன்மையுடையனவாகும். அட்டவணை 5.2 குறித்த ஜீவனோபாய துறைகளை தாக்குகின்ற இயற்கை அனர்த்தங்களையும் இத்தாக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்காக சமுதாய மக்கள் பயன்படுத்தக் கூடிய சாத்தியமான எதிர்கொள்ளல் பொறிநுட்பங்களையும் காட்டுகின்றது.

**அட்டவணை 5.2: இயற்கை அனர்த்த தாக்கங்களும் எதிர்கொள்வதற்கு சாத்தியமான நுட்பங்களும்**

| துறை | இயற்கை அனர்த்தம் | ஜீவனோபாயங்களிலான தாக்கம் | சாத்தியமான எதிர்கொள்ளல் நுட்பங்கள் |
|---|---|---|---|
| பயிர் துறை | உவர்ப்புத் தன்மையை அதிகரித்தல் | மண்ணின் உற்பத்தித்திறன் இழக்கப்படல், வளம் குறைதல், கைவிடப்பட்ட கரையோர நிலம் | உவர்ப்புத் தன்மையை தாங்கக்கூடிய இனங்களை விருத்தி செய்தல் |
| பயிர் துறை | மழை வீழ்ச்சி பிரதேசங்களும் விளைவாகும் வரட்சி மற்றும் வெள்ளம் | விவசாய நிலங்களின் உற்பத்தித்திறன் குறைதல் | பாரம்பரிய நெல் இனங்களது (பொக்காலி போன்ற) விரும்பத்தகுந்த இயல்புகளை உயர் விளைச்சல்களை தரும் இனங்களுடன் அறிமுகப்படுத்தி குறைந்த நீர்ப்பாசன தேவைகளுடைய விதைகளை/ இனங்களை விருத்தி செய்தல், இவற்றுள் சில காலநிலை மாற்றங்கள் மற்றும் முற்பாடான அச்சுறுத்தல் தொகுதிகளுக்கு உதவும். |
| நன்னீர் மீன்பிடி | மழை வீழ்ச்சி பிரதேசங்களும் விளைவாகும் வரட்சி மற்றும் வெள்ளம் | வரட்சி பருவ கால குளங்களில் விளைச்சலை வீழ்ச்சியடையச் செய்வதுடன் நன்னீர் மற்றும் சவர் நீர் வளங்களையும் பாதிக்கும். | துணை நிலை வாழ்வாதாரங்கள், கூடுகளில் வளர்த்தல் போன்ற முறையான நீர் வளர்ப்பு செயற்பாடுகளின் அறிமுகம் |
| பயிர் துறை | கடல் மட்டம் உயர்தல் | பயர்ச்செய்கைக்கான நிலத்தினளவு குறைதல் | பயிர்ச்செய்கைக்கு இயலுமான நிலப்பிரதேசத்தை வகை கண்டறிதல் |
| மீன்பிடி | கடல் மட்டம் உயர்தல் | கரையோர மீன்பிடிக்கு உள்ள கடற்கரையோர அளவு குறைதல்.<br><br>மீன் இனம்பெருகும் இடங்களில் பாதகமான தாக்கங்களால் வளங்கள் அருகிப்போதல் | சிறந்த வள முகாமைத்துவ செயன்முறைகளும் மீனவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தலும் |

மூலம்: சுற்றாடல் அமைச்சு, 2010

சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பலவீனமான தன்மையிலான முகக்குறிப்பிற்கேற்ப வரட்சிகளுக்கும் வெள்ளப்பெருக்குகளுக்கும் அதிகளவில் முகம் கொடுக்கின்ற ஒரு பிரதேச செயலகப் பிரிவாக ஏறாவூர் பட்டு இனங்காணப்பட்டுள்ளதுடன் இது நெற்பயிர்ச் செய்கை மற்றும் விலங்கு வேளாண்மைத் துறையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. போரதீவுப்பட்டு மற்றம் கிண்ணியா என்பன ஓரளவு பலவீனமான தன்மையுடையனவாக இனங்காணப்பட்டுள்ளன. கடல்நீர் மட்டம் உயர்தலின் தாக்கங்கள் அதிகம் கூடியதாக குச்சவெளி இனங்காணப்பட்டுள்ளதுடன் மூதூர் ஓரளவு தாக்கங்களுக்கு முகம் கொடுக்கின்றது. மேலதிக செயற்பாட்டுத் திட்டங்களின் போது இப்பிரதேசங்கள் முகம் கொடுக்கும் இவ்வாறான பாதகமான தாக்கங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு மேலே குறிப்பிட்டவாறு குறைப்பதற்கான செயன்முறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். உதாரணமாக கடல் மட்டம் உயர்வதாலான ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்கின்ற பிரதேசங்களில் மீன் இறங்கு தளங்களோ அல்லது நங்கூரமிடும் தளங்களோ நிர்மாணிப்பது போன்றன அறிவுறுத்தப்படுவதில்லை. ஏறாவூர் பட்டிலான

தலையீடுகள் வரட்சி நிலைமைகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய பயிர்கள் மற்றும் விலங்கிணங்களின் அறிமுகத்தினை உள்ளடக்க வேண்டும். மேலும் இவ்வரைபடுத்தல் செயற்பாடானது மாவட்ட செயலக மட்டத்தில் மாத்திரமே நடாத்தப்பட்டதுடன் கிராம சேவகர் மற்றும் சமுதாய மட்டங்களில் பலவீனமான தன்மைகள் தவறவிடப்பட்டிருக்கலாம் என்பதுடன் தலையீடுகள் திட்டமிடப்படும் போது இக்குறித்த சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## 5.3 பரிந்துரைகள்

பரிந்துரைகள் பிரதான நான்கு பகுதிகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. முற்பகுதி இச்சமுதாயங்களின் நன்மையை நாடி இலக்குக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான பொதுவான பரிந்துரைகளை வழங்குகின்றது. இரண்டாம் பகுதி பல்வேறு வருமானமீட்டும் செயற்பாடுகளில் உள்ள தெளிவான பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குகின்றது. அதன் பின் ஒவ்வொரு உப துறைக்குமான பரிந்துரைகளும் கலந்துரையாடப்படுகின்றன. இறுதியாக, அதே ஜீவனோபாய அடிப்படையிலான வேறு இலக்குக்குரிய சமுதாயங்களுக்கும் வழங்கக் கூடியதாக ஆய்வுக்குக் கொள்ளப்பட்ட சமுதாய மக்களுக்கான குறிப்பான பரிந்துரைகள் குறிப்பிடப்படுகின்றன (அட்டவணை 5.3 ஐப் பார்க்க).

### 5.3.1 பொதுவான பரிந்துரைகள்

முன்னைய பிரிவுகளில் கலந்துரையாடப்பட்டவாறு ஆய்வுக் குழுவிலுள்ள உற்பத்தியாளர்கள் பிரதானமாக உரிய பெறுமதி சங்கிலியின் தாழ் மட்டங்களிலேயே (பெரும்பாலானவர்கள் உற்பத்தி மட்டங்களில்) குறிப்பிடப்பிடப்பட்டுள்ளதுடன் இது அவர்களது இலாபம், பெறுமதி சங்கிலியில் அவர்களது வகிபாகம் மற்றும் கட்டுப்பாட்டினையும் மட்டுப்படுத்துகின்றது. கடந்த 3 தசாப்தங்களினூடாக அவர்களது பல்வேறான மோதல் தொடர்பான அனுபவங்கள் ஒரு புறம் இருக்க அவர்கள் மூலதன தொழிநுட்பம் மற்றும் ஆதரவு கட்டமைப்புக்கள் (இணைப்புப் பாதைகள், விரிவாக்கற் சேவைகள்) போதாமை மற்றும் வெள்ளப் பெருக்குகள், வரட்சி, காட்டுயானைகளின் தாக்கம் போன்ற சூழல் அச்சுறுத்தல்களாலும் தடைப்படுத்தப்பட்ட ஒரு மோதலின் பின்னான சூழ்நிலையில் இவர்களை இது இன்னும் பலவீனமான நிலைக்கு உள்ளாக்குகின்றது.

யுத்த முடிவினை தொடர்ந்து ஆய்வின் இலக்குக்குரிய மக்கள் ஒரு மாறுகின்ற நிலையில் காணப்படுகின்றனர் என்பதுடன் ஆய்வுக்கற்கையில் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வந்தவாறு அவர்கள் வெளி அதிர்ச்சிகளால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவாறு பலவீனமான நிலையிலுள்ளனர். மோதல் இடம்பெற்ற காலங்கள் தோறும் கூட இவர்கள் தமது பாரம்பரிய ஜீவனோபாயங்களில் ஈடுபட்டு வந்தனரெனினும் இவர்கள் தமது ஆற்றலின் உச்ச அடைவினை இத்துறையில் எய்தவில்லை எனவும் யுத்த முடிவின் பின்னரான மீள் குடியேற்றத்தினை தொடர்ந்து இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய தேவையுள்ளது எனவும் ஆய்வுகள் காட்டுகின்றன. உற்பத்தியாளர்களிடம் அடிப்படையிலேயே உள்ள திறன்களே அவர்களது மிகப் பெரிய நன்மையாகும் என்பதுடன் இத்திறன்களின் அடிப்படையில் ஆதரவுடன் முதலீடு செய்யப்பட வேண்டும். குறுகிய மற்றும் நடுத்தரமான கால ஓட்டத்தில் ஏற்கனவே மக்கள் ஈடுபட்டிருந்த உப துறைகளில் அவர்களைப் பலப்படுத்துவதானது உறுதியான வருமானங்களை இம்மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் என பகுப்பாய்வுகளின் அடிப்படையில் ஆய்வுக்குழுவினர் உணர்கின்றனர். மேலும் இலக்குக்குரிய மக்களுக்கு எதிர்காலத்தில் சாத்தியமான வாழ்வாதார போக்குகளாக பணப்பயிர்ச் செய்கை, மீன்வளர்ப்பு, பேணுதல் மற்றும் திருத்துதல், சில்லறை வியாபாரம் மற்றும் விவசாய அடிப்படையிலான உற்பத்திகளுடன் தொடர்பான விவசாயம் சாராத செயற்பாடுகளையும் ஆய்வு பரிந்துரைக்கின்றது. தற்போதுள்ள திறன்களின் மீது பயிற்சியும் முகாமைத்துவ பயிற்சிகளும் மிக முக்கியமாகும். இவ்வாய்வும் இவ்வாய்வினை மேற் கொண்டு நடத்தியதன் மூலம் கிடைக்கப் பெற்ற அனுபவமும் மீளப் புத்துயிர் பெற்று வருகின்ற கட்டத்திலுள்ள ஒரு சூழலில் முற்றும் புதிதாக வாழ்வாதார செயற்பாடுகளை ஆரம்பிப்பதென்பது ஆபத்தானது என காட்டுகின்றது. எனவே இவ்வாறான முயற்சிகள், புதிய வாழ்வாதார வழிகள் வெற்றியளிக்காத பட்சத்தில் மக்கள் திரும்பிச் செல்லக் கூடிய மாற்று வழிகளை வைத்துக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்தாலும் சந்தை ஆய்வானது தற்போதுள்ள உப துறைகளுள் உற்பத்தி, உற்பத்தித்திறன், பெறுமதி கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் மட்டங்களில் இடைவெளிகள் உள்ளதாக தெளிவாக குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இச்சமுதாய மக்களது வருமானத்தை உயர்த்துவதற்காக இவ்விடைவெளிகள் நிரப்பப்பட வேண்டும்.

ஆய்வானது தற்போதுள்ள உபதுறைகளுள் ஆதரவும் வளர்ச்சியும் வேண்டப்படுகின்ற குறித்த பகுதிகளையும் இனங்காண்கின்றது. பணப்பயிர்ச் செய்கை அல்லது மீன் வளர்ப்பு போன்ற மக்கள் ஈடுபட்டுள்ள, ஈடுபட விருப்புடனுள்ள மற்றும் வழிகளானவை பெறுமதி சங்கிலிகளுள் குறித்த துறைகள் வளர்ச்சியடைவதற்கான இடமொன்று உருவாகுவதனை சுட்டிக் காட்டுகின்றதாகும். அதே திறன் அடிப்படையில் பயன்படுத்தி பாரம்பரிய துறைகள் நன்மை பெறக் கூடிய சில அதிச்சிறப்பான பகுதிகளையும் ஆய்வு குறித்துக் காட்டியது. அதாவது உதாரணமாக உயர் சந்தை வாய்ப்புக்களையம் உற்பத்தியாளர்களுக்கு வருவாயையும் கொண்டு வரக்கூடியதாக உயர் பெறுமதி பாரம்பரிய நெல் இனங்களை அறிமுகப்படுத்துவதன் சாத்தியப்பாடும் ஆராயப்பட்டது. பிரதேசத்தில் விரிவடைந்து வருகின்ற சுற்றுலாத்துறை கைத்தொழில் போன்றவற்றுடன் இம்மக்கள் எவ்வாறு இணைக்கப்படலாம் எனவும் ஆய்வு எடுத்து நோக்கியது.

இலக்குக்குரிய சமுதாயங்களில் எப்போதும் தலையீடுகள் இடம்பெற வேண்டுமென்பதில்லை. பெறுமதி சங்கிலியின் ஏதேனுமொரு கட்டத்தில் செய்யப்படும் தலையீடுகள் இலக்குக்குரிய மக்களது வாழ்வாதாரங்களை முன்னேற்றக்கூடிய உடன்பாடான தாக்கங்களை ஏற்படுத்த முடியும். உதாரணமாக ஒரு பனிக்கட்டி நிலையத்திற்காக முதலீடு செய்வதற்கு வளமோ அல்லது உட்கட்டமைப்பு வசதிகளோ இல்லை எனும் போது இச்சமுதாயத்திற்கு அண்மையில் வாழும் ஒரு தொழில்முயற்சியாண்மையுள்ள தனிநபர் இம்மக்கள் பிடிக்கும் மீன்களை அழுகாது பராமரிக்கக் கூடிய ஆயுட் காலத்தை கூட்டுவதற்கு உதவி உயர்ந்த விலையினைக் கோர உதவ முடியும்.

இலக்குக்குரிய சமுதாய மக்களின் அண்மையில் மீளக்குடியேறிய சூழ்நிலையில் ஒரு மோதலுக்கு உணர்வான அணுகுமுறை செற்திட்ட வட்டம் தோறும் இருப்பது மிகத் தேவையாகும். அண்மையில் ஒக்ஸ்வோர்ட் பல்கலைக்கழத்துடன் இணைந்து மூன்று சம்பவக்கற்கை நிகழ்ச்சித்திட்டங்களூடாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் மேற் கொள்ளப்பட்டு முடிவுற்ற ஆய்வானது (டிப்ரோஸ் குழுவினர், 2010) தாம் வாழும் சமூகச் சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் வண்ணம் நிகழ்ச்சித் திட்டங்கள் இருக்க வேண்டியதன் முக்கித்துவத்தையும், தற்போது சமூகத்துள் உள்ள மன அழுத்தங்கள் ஒரு மோதலாக உருவாக இடமளிக்காதவாறு சமூக இயக்கப்பாட்டுடன் இணைந்ததாக நிகழ்ச்சித் திட்டங்கள் முகாமைத்துவம் என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டன. இலக்குக்குரிய தொகையினரிடையான பல்வகைத் தன்மைகளை விளங்கிக் கொள்வதன் முக்கியத்துவத்தை மற்றும் எல்லா இன மக்களையும் அவர்களுக்கு உரிய முக்கியத்துவத்துடன் (அதிக கவனம் செலுத்த வேண்டிய வறியமக்களை குறிப்பாக சில பிரதேசங்களில் கவனத்தில் கொண்டு) தம் இலக்கில் கொள்வதனையம் உள்நாட்டில் இடம் பெயர்ந்த - சொந்த வதிவிடங்களிலான மக்கள் மன அழுத்தங்கள், பிராந்தியங்களிடையிலான மன அழுத்தங்கள் (பல சிக்கலான உடனடித் தேவைகள் காரணமாக சில பிரதேசங்கள் தொடர்ந்தும் உதவி வழங்கப் பெறுவதில் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன). மற்றும் அண்மையில் மீள்குடியேறிய – உள்ளூர் மக்களிடையேயான அழுத்தங்கள் போன்ற உள்ளூர் மக்கள் பிரிவினைகளையும் பொருத்தமான சமுதாய மக்களிடையே ஒரு சமமான பரம்பல் நிலையினை வழங்கும் முயற்சி கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்விரு மாவட்டங்களிலும் அரச, சர்வதேச நன்கொடையாளர்களின், மற்றும் தனியார்துறை நிதியுதவியுடனான பல செயற்திட்டங்களும் முதலீடுகளும் மக்களின் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் மீள நிலைப்படுத்தலினை முக்கிய கவனத்தில் கொண்டு செயற்பட்டுக்கொண்டுள்ளன[13]. இரட்டிக்கப்படுவதை தவிர்த்துக் கொள்வதற்காகவும், செயற்பாடுகளின் இணைந்த விளைவினைப் பலப்படுத்திக் கொள்ளவும் மிக முக்கியமாக இதே தவறுகளை மீளவும் செய்யாதிருக்கவும் அபிவருத்திச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்காக இச்செயற்றிட்டங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை ஒன்றிணைத்துக் கொள்ளவும் இவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்களும், பாடங்களும் எதிர்கால அபிவிருத்தி முயற்சிகளில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். கொள்கை கற்கைகள் நிறுவனத்தினது (IPS) ஒரு செயற்பாட்டு ஆவணம் பெரியளவு தனியார் துறை முதலீடானது அவ்வளவு உடன்பாடானதல்ல எனும் சில அனுபவங்களை சுட்டிக் காட்டுகின்றது(விஜேசிங்க 2009). உதாரணமாக CIC அதிக அதிகார தடைகள் காரணமாக

[13] திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான USAID (CORE) வாழ்வாதார மதிப்பீடுகள் (Nk 2009) சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அவற்றின் உள்ளூர் பங்காளிகளினூடாக நிதியுதவி வழங்கப்படுகின்ற நன்கொடை செயற்திட்டங்களது பட்டியலொன்றை வழங்குகின்றது (www.core.zunepile.com இல் பெறக்கூடியதாகவுள்ளது).

சில அடிப்படை அனுமதிப்புக்களை பெற்றுக் கொள்ள கிட்டத்தட்ட 3 வருடங்கள், அதாவது 20 வெற்றிகரமான படிகளின் பின்னரே முடிந்ததெனக் குறிப்பிடுகின்றது. கிழக்கு மாகாண விவசாயிகளுடன் ஒரு வெளி - வளர்ப்பாளர் மாதிரியின் கீழ் இயங்குகின்ற ஹேய்லீய்ஸ் - எக்ரோ சில ஒப்பந்தங்கள் உள்ளூர் விவசாயிகளால் மீறப்பட்டமையால் சில நேரங்களில் உள்ளூர் மக்களது அர்ப்பணிப்பு ஒரு சவாலாக உள்ளதாக குறிப்பிடுகின்றது. இச்சவால்களை எதிர் கொள்வதற்கு உள்ளூர் மக்களின் கல்வி மிக முக்கியமாகும். அவர்களுக்கு தமது பிரதேசத்துள் பெரிய முறைசார் தனியார் துறையினரின் உள்ளுணர்வு பற்றி உணர்த்தப்பட வேண்டும் என்பதுடன் அதனை ஒரு அச்சுறுத்தலாக நோக்காது அதனுடன் வெற்றிகரமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள தெரிந்திருக்க வேண்டும்.

துண்டு துண்டாக விடப்படுகின்ற முயற்சிகளின் விளைவினை உச்சப்படுத்துவதற்காக அதிக வர்த்தகம் மற்றும் உற்பத்தி தொழில் முயற்சிகள் இடம்பெறுகின்ற பிரதேச மத்திய நிலையங்களுடன் இணைப்பதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட வேண்டும். இவ்வாறான பெரும்பாலான தொழில் முயற்சிகள் காத்தான் குடி நகர சபை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபைகள் மற்றம் பாசிக்குடா, கல்குடா மற்றும் நிலாவெளி போன்ற பிரபல்யம் வாய்ந்த சுற்றுலாத்துறை தளங்களிலேயே அமைந்துள்ளன.

வழங்கப்படுகின்ற ஆதரவினது நிலைபேறான தன்மையினை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியான கண்காணிப்பு ஆலோசனை மற்றும் பின் தொடர்தல் முக்கியமாகும். NGO இனால் வழங்கப்பட்ட உதவிகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பின் தொடர்தல் இல்லாவிட்டால் செயற்பாடுகள் தோல்வியடைதலை நிரூபிக்கின்றன. சில சமுதாயங்கள், வெற்றி பெற்ற சமுதாயங்களின் வரலாறுகளை இலக்குக்குரிய சமுதாய மக்களுடன் பகிர்ந்து கொள்வதும் முக்கியமாகும். உதாரணமாக வாகரையில் உள்ள குறின்ஞன்கட்குளத்தில் பயன்படுத்தப்படும் உயர் கேள்வி உள்ள புகையில் உலர்த்தும் மீன் பதனிடல் முறைகளை நன்னீர் மீன் பிடியில் ஈடுபட்டுள்ள ஏனைய சமுதாய மக்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

## 5.3.2 தெளிவாகத் தெரிந்த விடயங்கள்

### விவசாய மீன்பிடி உற்பத்தியாளர் குழுக்களைப் பலப்படுத்தல்.

யுத்தத்திலிருந்து வாழ்வாதார வழிகள் மீண்டு வருகின்ற ஒரு சூழலில் விவசாய அமைப்புக்கள் மற்றும் மீனவ சங்கங்கள் போன்ற உற்பத்தியாளர் குழுக்கள் பலப்படுத்தப்பட வேண்டும்/ உருவாக்கப்பட வேண்டும். இக்குழுக்கள் பெறுமதி கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடுவதற்கு இயலுமானவையாக வலுப்படுத்தப்படல் முக்கியமாகும். பெறுமதி கூட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு தொடர்பான பயிற்சிகள் விவசாய அமைப்புக்களூடாக வழங்கப்பட வேண்டும். வர்த்தக குறியிடல், பொதி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலிலான, புதிய எளிய தொழிநுட்பங்களும் இப்பயிற்சிகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். இவ்வகையான பயிற்சிகள் நெல், பழங்கள், காய்கறிகள் மற்றம் பாற்பண்ணை துறையில் அவசியமாகும். இதற்கு மேலதிகமாக எதிர் வருகின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் வெள்ளம் மற்றும் வரட்சி மற்றும் விலங்கு அச்சுறுத்தல் போன்ற சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும்/சமாளிக்கவும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இவ்வுற்பத்திக் குழுக்களின் அங்கத்தவர்கள் உள்ளூர் உற்பத்தியை வெளிச் சந்தைகளில் சந்தைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள கிராம மட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளிலும் பங்கு பெற வேண்டும்.

### உட்கட்டமைப்பு

இலக்குக்குரிய எல்லா சமுதாய மக்களுக்கும் உட்கட்டமைப்பு விருத்தியானது மிக முக்கியமாகும். பாதைகளின்மை போக்குவரத்து முறை மற்றும் மோசமான மின் விநியோக நிலைமை பௌதீக சந்தை நிலையங்களின்மை மற்றும் கைவிடப்பட்ட சிறிய குளங்கள் என்பன எல்லா உப துறையிலும் முகம் கொடுக்கப்படுகின்ற தெளிவான உட்கட்டமைப்பு சார்ந்த தடைகளாக இருந்தன. கிழக்கில் வகுப்பு A மற்றும் வகுப்பு B பாதைகளை முன்னேற்றுவதற்கு பெரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. எனினும் சமுதாய மக்களின் இணைப்புக்கள் முன்னேற்றப்பட வேண்டுமெனின் கிராம பாதைகள் புணரமைக்கப்பட வேண்டும்.

விவசாய நிலங்களை பிரதான பாதைகளுடன் இணைக்கின்ற பாதைகள் புணரமைக்கப்பட வேண்டும். குளங்களின் புனர்நிர்மாணமானது விவசாய பிரச்சினைகளை நீக்கி இரு பருவங்களிலும் பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் நன்னீர் மீன்பிடியினை உச்சப்படுத்தவும் வாய்ப்புக்களை வழங்கும். மின்சார

வசதி இல்லாத அல்லது விட்டு விட்டு கிடைக்கின்ற மின் விநியோகத்துடனான சமுதாய மக்களின் பெறுமதி கூட்டல் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகும். ஆலை வாய்ப்புக்களை வழங்குதல், பெறுமதி கூட்டல் இயந்திரங்களை வழங்கல் என்பது போன்ற சில தலையீடுகள் தேவையான மின் விநியோகமின்றி செய்யப்பட முடியாது. இக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வழிகள் ஆராயப்படல் வேண்டும்.

## நிதி சேவைகள்

எந்தவொரு உப துறையினதும் நிலைப் பேறான தன்மைக்கு நிதிச் சேவைகளை பெற்றுக் கொள்ளும் வழிகள் முன்னேற்றப்படல் வேண்டும். இது உற்பத்தியாளர்கள் தாம் ஆட்கொள்ளப்பட்டுள்ள கடன் விஷச் சூழலிருந்தும் வெளியே வருவதற்கு உதவும். விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத உற்பத்தியாளர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் நுண் கடன் வழங்கப்படல் வேண்டும். அபிவிருத்திச் செயற்திட்டங்களால் நுண் கடன் வழங்கப்படும் போது இவை தேவையுள்ளோருக்கு, உற்பத்தித் திறன் வாய்ந்த வறிய உற்பத்தியாளர்களுக்கு மற்றும் பலவீனமான குழுக்களுக்கு உரிய விதத்தில் வழங்கப்படுவது முக்கியமாகும். கிடைக்கப் பெறக் கூடியதாகவுள்ள முறைசார் நிதிச்சேவை பற்றி சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் இவற்றை பெற்றுக் கொள்வதற்கான படிகள் மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறித்த அபிவிருத்தித் தலையீடுகள் நிதி உதவிகளை வழங்காத போது நன்மை பெறுவோர் நுண் கடன் வசதிகளை வழங்குகின்ற ஏனைய அரச மற்றும் அரச சாரா அமைப்புக்களை நோக்கி வழிகாட்டப்பட முடியும்.

## 5.3.3 உப துறைகளுக்கேற்ப பரிந்துரைகள்

பின்வரும் பரிந்துரைகள் பாரம்பரிய விவசாயம் மற்றும் விவசாயம் சாராத பெறுமதி சங்கிலிகளில் பலவீனமான நிலைகளிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்களது நிலைகளை முன்னேற்றுவதற்காக முன்னெடுக்கப்படக் கூடிய தலையீடுகளை சுட்டிக் காட்டுகின்றன. அட்டவணை 5.3 தனது பெறுமதி சங்கிலியின் பிரதான உறுப்புக்களின் அடிப்படையில் சாத்தியமான தீர்வுகளைக் காட்டுவதுடன் அவற்றை அமுல்படுத்தக் கூடிய அமைப்புக்களின் வகைகளையும் இனங்காண்கின்றது. பின்னர் இப்பிரிவு ஒவ்வொரு துறைக்கும் முன்மொழியப்பட்ட பல்வேறு தீர்வுகளையும் மிகவும் தெளிவாக வர்ணிக்கின்றது.

**அட்டவணை 5.3: பெறுமதி சங்கிலிக்கு எதிராக குறித்துக் காட்டப்பட்டுள்ள தீர்வுகளும் அமுல்படுத்தக்கூடிய நிறுவனங்களும்**

| சாத்தியமான தீர்வுகள் | உள்ளீடுகள் | உற்பத்தியாளர்கள் | பதனிடலாளர்கள் | சந்தைப்படுத்தலும் விற்பனைகளும் | நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| **நெல் உபதுறை – குறைந்த உற்பத்தித்திறனுக்கான தீர்வுகள்** | | | | | |
| காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கான நுட்பங்களை பலப்படுத்துவதன் மூலம் காணியை பெற்றுக்கொள்ளும் வழிகளை சீராக்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், DOAS, DS |
| சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் ஏனைய நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தலும் முறையான பராமரிப்பும் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| உர மானியங்களை பெற்றுக்கொள்ளும் வழிகளிலான விழிப்புணர்வினை அதிகரித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| விதை நெல்லினை கொள்வனவு செய்தல் தொடர்பான விழிப்புணர்வினை அதிகரித்தலும் உள்ளூர் விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு தேவையான தொழிநுட்பம் மற்றும் பயிற்சிக்குரிய ஆதரவு வழங்கல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், DOA, DOAS |
| **நெல் உபதுறை – பெறுமதி கூட்டலுக்கான தீர்வுகள்** | | | | | |
| உள்ளூர் சமுதாயங்களுக்கு அருகாமையில் ஆலை வாய்ப்புக்களை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறியளவு அரிசி அடிப்படையிலான உற்பத்தி மற்றும் சிறிய, நடுத்தர அளவான தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| களஞ்சியப்படுத்தல் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்கப்படக்கூடிய உள்ளூர் மக்களை இனங்கண்டு உள்ளூர் மட்டத்தில் களஞ்சியசாலை வசதிகளை நிர்மாணித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| நெற் கழிவுகளை (உமி மற்றும் தவிடு போன்ற) நீண்ட கால நோக்கில் சந்தைப்படுத்தும் நோக்குடன் இவற்றை சந்தைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளில் உள்ள தகவல்களை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| **நெல் உபதுறை – குறைந்த சந்தைப்படுத்தலுக்கான தீர்வுகள்** | | | | | |
| பண்ணை பாதைகளை முன்னேற்றுதல் | | | | | உள்ளூர் அதிகாரிகள் |
| ஏனைய நுண் கடன் வழங்குபவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவரவர்க்கு தேவைவானவாறு நுண் கடன்களை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| வாழ்வாதார வழிகளை பல்வகைமைப்படுத்தவதற்கான ஆதரவினை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், DOA, DOAS |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் சந்தைப் பெறுமதியுள்ள பாரம்பரிய நெல் இனங்களை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள |
| விலைகள் மற்றும் கொள்வனவாளர்கள் தொடர்பான சந்தை தகவல்களை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| வெளி மாவட்டங்களுடன் சந்தை இணைப்புக்களை உருவாக்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| நெல் சந்தைப்படுத்தலில் உதவி செய்வதற்கு தனியார் துறை உதவிகளை ஏற்படுத்தி உதவி செய்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| **காய்கறிகள் மற்றும் பழங்கள் உப துறை** | | | | | |
| உள்ளூர் விவசாய அதிகாரிகளின் விதை உற்பத்திக்கான ஆற்றலை அதிகரித்தல் - DOA, DOAS களில் - மற்றும் சமுதாய மட்டத்தில் | | | | | DOA, DOAS, அபிவிருத்தி அமைப்புக்கள் |
| சேதன பசளை பாவனையை ஊக்கப்படுத்துதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| நுண் நீர்ப்பாசன தொகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப மூலதன ஆதரவு | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| விரிவாக்கற் சேவை அதிகாரரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து சிறந்த தொழிற்பாட்டுக்காக போதிய வளங்களை வழங்குதல் | | | | | DOA, DOAS, அபிவிருத்தி அமைப்புக்கள், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விரிவாக்கற் சேவை அதிகாரிகளின் ஆற்றல் விருத்தி | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பாரம்பரிய உணவு பதனிடல் செயன்முறைகளுக்கான மூலதன உதவி வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பெறுமதி கூட்டலுக்கான புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், கைத்தொழில் திணைக்களம், DOA, DOAS |
| சமுதாய மட்டத்தில் காய்கறி பதனிடல் இயந்திரங்கள் வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| குறைந்த நீர்த் தேவையுள்ள உள்நாட்டு காய்கறிகளை ஊக்குவித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| கலப்பு பயிர்ச்செய்கை மற்றும் இடைப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பயிர்ப் பல்வகைமை மற்றும் இடைப் பருவகால காய்கறி பயிர்ச்செய்கை | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| சாத்தியமான பெறுமதி கூட்டல் செயன்முறைகளில் விழிப்புணர்வினை அதிகரித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| **பாற்பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மைத் துறை** | | | | | |
| வலுவினை (மின்சாரம்) பெற்றுக்கொள்ளும் வழிகளை முன்னேற்றுதலும் பாதைகளை முன்னேற்றலும் | | | | | இப்பிரதேசங்களுக்கு மின்சார வசதி பெற்றுக் கொடுப்பதற்காக அபிவிருத்தி அமைப்புக்கள் அரசியலணைவு நாடுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புன்னிலங்களை புனரமைத்து பால் விளைச்சலினை கூட்டுதல் | | | | | அரச திணைக்களங்கள், அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பால் விளைச்சலை அதிகரிப்பதற்காக உயர் இன புல் இனங்களை அறிமுகப்படுத்தல் | | | | | DAPH, அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பால் விளைச்சலை அதிகரிப்பதற்கு பொருத்தமான உயர் தர கலப்பினங்களை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| உபகரணங்களை கொள்வனவு செய்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப மூலதனத்தை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், |
| பயிற்சியினூடாக தொழிநுட்ப மாற்றீடு | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், உள்ளூர் அதிகாரிகள் |
| ஆதரவு வழங்கும் நிறுவனங்களில் மனித வளங்களை அதிகரித்தல் | | | | | மாகாண விவசாயம், அபிவிருத்தி அமைப்புக்களிலிருந்து ஆதரவு |
| கூட்டுறவு முகாமைத்துவ தொகுதிகளை சீரமைத்தல் | | | | | DAPH, கூட்டுறவு சங்க அலுவலக அங்கத்தவர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பால் சேகரிப்பு உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல், சமுதாயத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற விற்பனை வெளித்தளங்கள் மற்றும் உள்ளூர் உணவகங்கள், உணவுச்சாலைகள், பால் பார்கள் மற்றும் விடுதிகளுடன் நேரடியான சந்தைப்படுத்தலுக்காக இணைப்புக்களை நிறுவுதல், | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், உள்ளூர் அதிகாரிகள் |
| **நன்னீர் மீன்பிடித்துறை** | | | | | |
| கிராமிய பாதைகளை முன்னேற்றுதல் | | | | | உள்ளூர் அதிகாரிகள் |
| தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்கு ஆரம்ப மூலதனமாக நுண் கடன் வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| சிறிய குளங்களை புனரமைத்து அவற்றை பராமரிப்பதில் சமுதாய மக்களுக்கு உதவுதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், உள்ளூர் அதிகாரிகள் |
| உள்ளூர் மட்டத்தில் மீன்குஞ்சு இனப்பெருக்கத்திற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து சிறிய குஞ்சு பொரிக்குமிடங்களையும் பராமரிப்பிடங்களையும் நிர்மாணித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்ட மட்டத்தில் தற்போதுள்ள மீன் இனப்பெருக்க நிலையங்களில் உற்பத்திசெய்யப்படும் மீன்களின் அளவையும் தரத்தையும் முன்னேற்றுவதற்கு தேவையான நிதி மற்றும் தொழிநுட்ப ஆதரவினை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| பலவீனமான குழுக்களுக்கு அவர்களுக்கென்று மீன்பிடி உபகரணங்களை விநியோகித்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| மீன் வளர்ப்பு புதிய முறைகளில் பயிற்சி வழங்குதல் | | | | | மீன்பிடி திணைக்களம், அபிவிருத்தி அமைப்புக்கள் |
| வள முகாமைத்துவம் மற்றும் அளவுக்கு மீறிய மீன் பிடித்தலை நிறுத்துவது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| மீன் வளர்ப்பு தொடர்பாக (விசேடமாக தனியார் துறையிடம்) இதில் முதலீடு செய்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு நுட்பங்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் விழிப்புணர்வினை அதிகரித்தல் | | | | | மீன்பிடி திணைக்களம், அபிவிருத்தி அமைப்புக்கள் |
| விவசாய குழுக்களுடன் இணைந்த மீன்பிடி சங்கங்களை உருவாக்குதலும் பலப்படுத்தலும் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்கு வர்த்தக பெயரிடலை முன்னேற்றுதல் - வர்த்தக பெயர் அறிமுகப்படுத்தலும் பொதியிடலும் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொல போன்ற உள்ளூர் சந்தைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தலும் மாவட்டத்தினுள் நகர்ப்புற நிலைங்களில் விற்பனை தளங்களை நிறுவுதல் மற்றும் உற்பத்தியாளர்களை இணைத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| **கடல் மீன்பிடிகள் துறை** | | | | | |
| ஆழ்கடல் மீன்பிடித்தலில், படகுகளுக்கு, உபகரணங்களுக்கு முதலீடு செய்வதற்கு மற்றும் சேவைகள் வழங்குவதற்கு ஆர்வமான மற்றும் ஆற்றலுள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை இனங்கண்டு அவர்களை சமுதாயங்களுடன் இணைத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| வறிய மீனவர்களுக்கு நுண்கடன் வசதிகளை வழங்குதல் | | | | | மீன்பிடி சங்கங்களுடன் செயற்படுகின்ற அபிவிருத்தி அமைப்புக்கள் |
| ஆதரவு சேவைகள் ( பனிக்கட்டி உற்பத்தி, படகு உற்பத்தி போன்றன), பயிற்சி வழங்கவும் ஆரம்ப மூலதனத்திற்கு உதவவும் தொழில்முயற்சியுள்ள தனிநபர்களை இனங்காணல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| மீன்பிடி உபகரணம், மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கு மூலதனமும் தொழிநுட்ப ஆதரவும் வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு நாள் படகுகளை பல நாள் படகுகளாக மாற்றுவதற்கு ஆதரவு வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| பருவகாலத்திற்கு ஏற்ற விசேட மீன்பிடி உபகரணங்களை வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், மீன்பிடி திணைக்களம் |
| பருவமற்ற காலங்களில் மாற்று/ துணையான ஜீவனோபாய வழிகளை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| சுத்தமாக மீன் கையாளுதலில் பயிற்சி வழங்குதல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள், மீன்பிடி திணைக்களம் |
| மீன் வளர்ப்பினை அறிமுகப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| சமுதாய மட்டத்தில் மீன் தகரத்திலடைத்தல் போன்ற பெறுமதி கூட்டல் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் விஸ்தீரணப்படுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| நிதி முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தலில் பயிற்சி | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| கையடக்க தொலைபேசிகளினூடாக சந்தை தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வழிகளுக்கு வசதி செய்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் பெறுமதியான மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பினை விற்பனை செய்வதற்கு உயர் கொள்வனவு வலுவுள்ள சந்தைகளை இனங்காணலும் அவற்றுடன் தொடர்புகளை உருவாக்குதலும் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |
| தனியார் துறையுடன் நேரடியான சந்தை இணைப்புக்களை ஏற்படுத்தி கொடுத்தல் | | | | | அபிவிருத்தி அமைப்புக்கள் |

## தெளிவாகத் தெரிகின்ற தீர்வுகள் - சிறிய குளங்களுக்கான ஒன்றிணைந்த விவசாயத் தொகுதி

பொதுவாக சிறிய குளங்கள் 50-150 குடும்பங்களை கொண்ட ஒரு சமுதாயத்திற்கு சொந்தமானதாக, அவர்களால் பயன்படுத்துவதாக உள்ளது. சிறிய நீர்ப்பாசன குளங்களை சூழவும் ஒன்றிணைத்து நெற்பயிர்ச் செய்கையுடனான ஒன்றிணைந்த விவசாய அணுகுமுறையொன்று இலகுவாக எடுத்துக் கொள்ளப்படலாம். கௌபி, பாசிப்பயறு மற்றும் சோயா, அவரை போன்ற இடைப்பருவக் காலத்துக்குரிய குறுகிய கால காய்கறிகளும் தானியங்களும் மீதமுள்ள ஈரப்பதத்துடன் பயிர் செய்யப்படலாம். இவ்வகையான விவசாயத்திற்கு மந்தைகள் மற்றும் ஆடுகள் போன்ற வேளாண்மை விலங்குகள் மிகச் சிறந்தனவாகும். குளங்களது உச்ச பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளும் வண்ணம் சிறிய குளங்களுள் மீன்களும் அறிமுகப்படுத்தப்படலாம். மேய்ச்சல் விலங்குகளிலிருந்து பயிர்ச் செய்கை நிலத்தினை பாதுகாப்பதற்காக நிலத்தினைச் சூழ ஒரு முட்செடி வேலி அவசியமாகும்.

இவ்வகையான விவசாயத் தொகுதிகளில் பல நன்மைகளுள்ளன. இது வருடம் முழுவதும் வருமானத்தை ஈட்டித்தருவதனால் பருவகால பிரச்சினைகளினை எதிர் கொள்வதில் விவசாயிகளுக்கு உதவும். இடைப்பருவ கால அவரை இன காய்கறிச் செய்கையானது மண்ணின் போசணை வள முகாமைத்துவத்தினை அதிகரிப்பதில் உதவுவதுடன் பயிரிடப்படும் செறிவினை கூட்டுவதன் மூலம் விவசாயி தம் நிலத்திலிருந்து கூடுதல் வருவாயினைப் பெற்றுக் கொள்ள உதவி செய்கின்றது. இது நீர்ப்பாசன வினைத்திறனைக் கூட்டும் மற்றுமொரு வழியாகும். பயிர்ச் செய்கைக்கான உரமாக விலங்குக் கழிவுகள் பயன்படுத்த முடியுமாக இருப்பதுடன் பயிர்ச் செய்கை மீதிகள் மற்றும் முட்செடி வேலிகளை விலங்கு உணவுகளாக பயன்படுத்த முடியும். இது குறித்த தொகுதியினது உற்பத்தி செலவினை குறைக்கும். குளங்களில் வளர்க்கப்படும் மீன்கள் விவசாய குடும்பங்களுக்கு போதுமானளவு விலங்குப் புரதத்தினைப் பெற்றுக் கொடுக்கும். இருந்தாலும் ஒன்றிணைந்த விவசாய தொகுதிகளை அறிமுகப்படுத்தும் போது விவசாய சமுதாயங்களின் பாரம்பரிய பெறுமதிகளையும் நம்பிக்கைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக இறைச்சிக்கான விலங்கு வேளாண்மையில் ஈடுபட்டிராத ஒரு சமுதாயத்தில் ஆடு வளர்ப்பினை அறிமுகப்படுத்துவது வெற்றியளிப்பதில்லை. பயிர்ச் செய்கைக்கு நீர் வழங்குகின்ற குளங்களை நன்னீர் மீன் வளர்ப்பதற்கு பயன்படுத்துவதும் மீன் பிடியில் ஈடுபடுத்துவதும் சில சமுதாய மக்களால் மறுக்கப்படலாம்.

### I. நெல் உபதுறை

நெல் உப துறையிலிருந்து உயர் உறுதியான வருமானமொன்றினை உருவாக்கும் வழிகளாக a) உற்பத்தித்திறனை அதிகரித்தல் b)பெறுமதிகூட்டலை முன்னேற்றல் மற்றும் c) சந்தைப்படுத்தும் ஆற்றலைக் கூட்டல் என்பன பகுப்பாய்விலிருந்து இனங்காணப்பட்டன. இரண்டு மாவட்டங்களிலும் காணப்பட்ட மிகை உற்பத்தி மட்டங்கள் மற்றும் உற்பத்தியின் அளவு அதிகரித்துவரும் போக்கு காரணமாக உற்பத்தியைக் கூட்டுவதற்கான மேலதிக முயற்சிகள் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. அரிசி/அரிசி அடிப்படையிலான பெறுமதி கூட்டல் உற்பத்திகளூடாக வருமானம் ஈட்டும் வாய்ப்புக்களை வழங்கல், ஏனைய வாழ்வாதார வழிகளில் ஈடுபடல் மற்றும் இன்னும் சமனான விதத்தில் சந்தை இணைப்புக்களை நிறுவுதல் போன்றன ஊக்குவிக்கப்படுகின்றன.

#### a) உற்பத்தித் திறனைக் கூட்டல்

<u>காணிகளை பெற்றுக்கொள்ளும் வழிகளை சீராக்கல்</u>

காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பதற்கான முறைகளையும் நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவதானது இரண்டு வழிகளில் விவசாயிகளின் ஆர்வத்தினை அதிகரிக்கும். முதலில் அவர்கள் நிலத்தின் வள முகாமைத்துவத்தில் முதலீடு செய்து பயிரிடும் நிலத்தின் நிலைப்போறான தன்மையை பேணுவதற்கு தூண்டப்படுபவர். இரண்டாவதாக நிலத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான வழி சீராக்கப்படுவதன் மூலம் சிறந்த தர உரம் மற்றும் விதை நெல்லில் அரச மானியங்கள் பெற்றுக் கொள்வதனை இலகுவாக்குவதுடன் இது நெல் பயிர்ச் செய்கை நிலத்திலிருந்தான விளைச்சலையும் அதிகரிக்கும்.

<u>சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பும் முறையான பராமரிப்பும்</u>

இரு மாவட்டங்களிலும் வாழும் இலக்குக்குரிய சமுதாயங்களது மக்களுக்கு பெரியளவு மற்றும் நடுத்தர

அளவான குளங்களிலும் சிறிய குளங்கள் மற்றும் அதனுடன் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுமே நீர் வழங்கல் செய்கின்றன. எனினும் தற்போது வெளிவாரியான நிறுவனங்கள் பெரிய மற்றும் நடுத்தர குளங்களை புனர்நிர்மாணம் செய்வதையே நோக்கில் கொண்டுள்ளன. சிறிய குளங்களை புனர்நிர்மாணம் செய்வதும் முறையாக பேணுதலும் மிக முக்கியமாகும் என்பதுடன் சமுதாய மக்கள் இக்குளங்களை பராமரிப்பதுடன் உரிய அதிகாரிகளிடையே இவற்றின் முக்கியத்துவம் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டும். இதன் விளைவாக உரிய நேரத்தில் போதியளவு நீர் கிடைக்கப்பெறுவதானது நெல் நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும். விவசாய அமைப்புக்களினூடாக சமுதாய மக்களை ஈடுபடுத்துவதானது வெளி அமைப்புக்கள் இல்லாத போதும் நீர்ப்பாசனம் தொடர்பான உட்கட்டமைப்புக்களின் தொடர்ச்சியான பேணலை உறுதி செய்யும்.

<u>தரமான உள்ளீடுகளை (விதை நெல் மற்றும் உரம்) பெற்றுக்கொள்ளும் வழிகளை அதிகரித்தல்</u>

சொந்தமாக பணிபுரிவோர் அதேபோல் கூலி/குத்தகை பயிர்ச்செய்கையாளர்கள் குறைந்த விலையில் உரிய நேரத்தில் சிறந்த தர நெல் விதைகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய செயன்முறைகளில் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டும். விதை நெல் உற்பத்தியில் தற்போது ஈடுபட்டுள்ள உள்ளூர் விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு புதிய தொழிநுட்பத்திலான பயிற்சி மற்றும் ஆரம்ப மூலதனம் வழங்குவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குவதானது விதை நெல்லின் கிடைக்கற்றகவினை காட்டும்.

## b) பெறுமதி கூட்டல்

<u>களஞ்சியசாலை வசதிகளை அதிகரித்தல்</u>

நெல், விதை நெல் மற்றும் உரங்களை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியசாலை வசதிகள் சமுதாய மக்களுக்கு அண்மியதாக வழங்கப்பட வேண்டும். சமுதாய மக்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக களஞ்சியப்படுத்தல் வசதிகளை அமைத்துக் கொள்வதற்கு அல்லது இலக்குக்குரிய சமுதாய மக்களுக்கு அண்மியதாக நெல்/விதைநெல்/உர களஞ்சியப்படுத்தல் விதைகளை நிர்மாணித்துக் கொள்வதற்கு உள்ளூர் மக்களை இனங்கண்டு உதவுவதானது பருவகால மாற்றங்கள் காரணமாக எழும் நெல் விலை அதிர்ச்சியிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும். இது மிகை விளைச்சல் நிலைமைகளை தவிர்த்து, உரிய சந்தை விலை கிடைக்கும் வரை இவர்களுக்கு இடமளிக்கும். விவசாயிகள் உள்ளீட்டு விநியோகத்தர்களில் தங்கியிருத்தலை குறைத்து அடுத்த பருவத்திற்கான தமக்குத் தேவையான விதை நெல்லினை களஞ்சியப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

<u>சமுதாயங்களுக்கு அண்மையில் (நெல் மற்றும் அரிசி) ஆலை வாய்ப்புக்களை வழங்குதல்</u>

நெல்லுக்கான பெறுமதி கூட்டல் அரிசி/அரிசி அடிப்படையிலான உற்பத்திகள் (உதாரணம்: அப்பம், இடியப்பம் மற்றும் பிட்டு) மற்றும் நெற்கழிவு (தவிடு மற்றும் உமி) அடிப்படையிலான உற்பத்திகள் என மூன்று மட்டங்களில் நோக்கப்படுகின்றது. பெறுமதி கூட்டல் செயன்முறைகளுக்கான தொழிநுட்பம் மற்றும் மூலதனத் தடைகள் இரு வழிகளில் எதிர் கொள்ளப்படலாம். நடுத்தர அளவு ஆலை உரிமையாளர்கள் போன்ற மூலதனம் மற்றும் பெறுமதி கூட்டலில் அனுபவமுள்ள நபர்களை தமது செயற்பாடுகளை முன்னேற்றி விஸ்தரித்து, பணியாளர்கள் மற்றும் நெல்லினை, பெறுமதி கூட்டிய முதல்களைத் தேடி பெறுமதி சங்கிலியின் உற்பத்தி மட்டத்துடன் ஒன்றிணைப்பதற்கு தூண்டுதல் ஒரு வழியாகும். இரண்டாவதாக சமுதாய மட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற சிறியளவு அரிசி மற்றும் அரிசி மா உற்பத்தியாளர்களது இலாபம் பகிர்ந்துகொள்வதன் அடிப்படையிலான ஈடுபாட்டுடன் ஆரம்பிக்கப்படலாம். இச்சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் உள்ளூர் சந்தைகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் நீண்டகால நிலைப்பேறான தன்மையை உறுதி செய்வதற்காக நகர்ப்புற மத்திய நிலையங்களுடனும் இணைக்கப்பட வேண்டும்.

<u>உயர் பெறுமதி பாரம்பரிய நெல் இனங்களை அறிமுகப்படுத்தல்</u>

ஏற்கனவே திறன்களைக் கொண்ட சமுதாயங்களுக்கு ஒரு முன்னோடி செயற்திட்டவடிப்படையில் உயர் பெறுமதி நெல் இனங்களை அறிமுகப்படுத்துவது உயர் வருவாயைப் பெற்றுத் தரும். பாரம்பரிய நெல் இனங்களது விளைச்சல் குறைவெனினும் இவற்றுக்கு உயர் சந்தை விலை தரப்படுகின்றது. உயர் கொள்வனவு சக்தியைக் கொண்ட சந்தைகளுடன் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதும் தொழில் ஆரம்பிப்பதற்குரிய தொழிநுட்பம் மற்றும் உள்ளீடுகளை வழங்குவதும் பொதுவான நெல்லினங்களில் ஏற்படும் விலைத் தளம்பல்களிலிருந்தும் நெல் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும்.

## C) சந்தைப்படுத்தும் ஆற்றலை அதிகரித்தல்

<u>தனிச்சிறப்பான சந்தைகளை இனங்காணல்</u>

உள்ளூரிலும் மாவட்டத்திற்கு வெளியேயும் நெல் மற்றும் அதன் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்காக விசேடமான சந்தை வாய்ப்புக்கள் இனங்காணப்பட வேண்டும். உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு பிரபல்யமான பிரதேசங்கள், அப்பம் போன்ற அரிசி, மா அடிப்படையான உற்பத்திகளுக்குரிய சந்தைகளாக இலக்குக் கொள்ளப்படலாம். உயர் பெறுமதியான பாரம்பரிய நெல் இனங்களுக்கு உயர் கொள்வனவு சக்தியுள்ள சுற்றுலாத்துறை கைத்தொழில் மற்றும் உள்ளூர் நகர்ப்புற சந்தைகள் இலக்காக அமையவேண்டும். நெல் பக்கவிளைவுகளைக் காணக் கூடிய சந்தைகள் பற்பசை, பிஸ்கட் மற்றும் விலங்குணவு உற்பத்தியாளர்களாவர். தனியார் துறையுடனும் (உதாரணமாக கார்கில்ஸ் மற்றும் CIC போன்ற கம்பனிகளுடன்) உறவுகள் இனங்காணப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். தனியார் துறை கம்பனிகள் ஏற்கெனவே பிற்-கொள்வனவு திட்டங்களில் ஆர்வமாக உள்ளதுடன், மோதலில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள உற்பத்தியாளர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் ஆர்வமாக உள்ளதுடன் இவ்வாய்ப்பானது ஆராயப்படல் வேண்டும்.

<u>சந்தை தகவல்களை வழங்கலும் சந்தைகளுடன் இணைத்தலும்</u>

விலை மற்றும் கொள்வனவு செய்யக் கூடியவர்கள் பற்றிய அன்றன்றைய புதுப்பிக்கப்பட்ட சரியான தகவல்களை பெறக்கூடியதாக இருப்பதானது சுரண்டும் விதத்தில் காணப்படுகின்ற இடைத்தரகர்கள் மீது தங்கியிருத்தலை உற்பத்தியாளர்கள் குறைத்துக் கொள்ள வைக்கும். மாவட்டங்களுக்கு வெளியேயான சந்தைகளுடன் உற்பத்தியாளர்கள் விவசாய அமைப்புக்கள் போன்ற உற்பத்தியாளர் குழுக்களுடன் இணைக்கப்பட வேண்டும். தனியார் துறைக் கம்பனிகள் போன்ற பெரியளவு வர்த்தகர்களுக்கான தொடர்ச்சியான விநியோகத்தினை உறுதி செய்வதற்காக ஒன்றாக சேர்த்து சந்தைப்படுத்தல் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

<u>வாழ்வாதார வழிகளை பல்வகைமைப்படுத்துவதற்கான ஆதரவினை வழங்குதல்</u>

இலக்குக்குரிய சமுதாய மக்களுக்கான துணைநிலை மற்றும் ஜீவனோபாய தெரிவுகளாக சின்ன வெங்காயம் பெரிய வெங்காயம் போன்ற பணப்பயிர்கள் மற்றும் வாழைப்பழம், பப்பாசி, மாம்பழம் மற்றும் அன்னாசி போன்ற பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தல் பரிந்துரைக்கப்படலாம். (மேலதிக தகவல்களுக்காக பிரிவு 4.1 இல் பணப்பயிர்களை பார்க்க) பணப்பயிர்கள் மற்றும் ஏனைய களப்பயிர்களுடன் விலங்கு வேளாண்மை, கிராமிய குளங்களில் நன்னீர் மீன்பிடியுடன் ஒன்றிணைந்த விவசாய தொகுதிகளுக்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வதாவது மேலே கலந்துரையாடப்பட்டபடி மக்கள் பலவகைப்படுவதற்கு உதவும் குறைந்த நீர்ப்பாசன தேவைகளுடனான ஏனைய பயிர்கள் சிறுபோகப் பருவத்தில் அல்லது பெரும் போகத்தில் பயன்படுத்தியது போக மண்ணில் எஞ்சியுள்ள ஈரப்பதனை பயன்படுத்தி அதே நெல் வயலில் இடைப்பருவ காலங்களின் போது பயிர் செய்யப்படலாம். பல்வேறு ஜீவனோபாய தெரிவுகளைக் கொண்டிருப்பதானது உற்பத்தியாளர்களுக்கு பருவமற்ற காலங்களில் அதிர்ச்சிகளைத் தாங்க உதவுவதுடன் வர்த்தகர்கள் சேகரிப்பாளர்களுடன் கட்டப்பட்டுள்ள நிலையிலிருந்து வெளியே வந்து அதிக சந்தை வாய்ப்புக்களையும், சிறந்த பேரம் பேசும் திறனையும் நெல்லுக்கான உயர் விலைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

<u>நுண் கடன் வசதிகளை வழங்கல்/ உதவிசெய்தல்</u>

கிராமிய நுண் கடன் வசதிகளுடன் உற்பத்தியாளர்களை இணைப்பதானது அவர்களின் முறைசாராத கடன் தொகுதிகளில் தங்கியிருத்தலை குறைக்கும். அண்மையில் மீளக்குடியேறிய இம்மக்களுக்கு கடன் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் முறையான (சனச அபிவிருத்தி வங்கி, ஹட்டன் நெசனல் வங்கி, மக்கள் வங்கி) மற்றும் முறைப்படுத்தப்படாத நிதி நிவனங்களுடன் (சமுர்த்தி அதிகாரி, சேவா நிதியம், SEEDS, BRAC SL, அர்த்தசரியா[13]) ஆராயப்பட வேண்டும் என்பதுடன் இவற்றுக்குத் தேவையான ஆவணப்படுத்தல் செயன்முறைகளிலும் சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். நுண் நிதி சுற்றும் கடன் திட்டங்கள் அங்கவீனர்களுடனான குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற மிகவும் பலவீனமான மக்களுக்கு வழங்கப்படலாம். இதனால் இவர்கள் இதனை ஆரம்ப மூலதனமாகவோ அல்லது உற்பத்தி உபகரணம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகவோ மற்றும் அரிசி ஆலையிடல் மற்றும் அரிசி மா அடிப்படையிலான உற்பத்தி போன்ற பெறுமதி கூட்டல் செயற்பாடுகளுக்காகவோ பயன்படுத்த முடியும்.

[13] மூலம்: Gomez, June 2009

## II. காய்கறி மற்றும் பழங்கள் உபதுறை

இரண்டு மாவட்டங்களிலும் காய்கறி மற்றும் பழப்பயிர்ச் செய்கையானது ஏனைய மாவட்டங்களுடன் போட்டியிடக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு பெறுமதி கூட்டல் தொழிநுட்பங்கள் மற்றும் இயக்கப்பாடான சந்தைகளின் அறிமுகத்துடன் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் என்பன முன்னேற்றப்பட வேண்டும். இரு மாவட்டங்களிலும் காணப்படுகின்ற மிகை நெல் உற்பத்தி மற்றும் முறையாகத் தொழிற்படுகின்ற நீர்பாசன வசதிகள் பற்றாக்குறை காணப்படுமிடத்து குறைந்த ஈரப்பதன் தேவையுள்ள காய்கறி மற்றும் பழவகைகள் உயர் பெறுமதி கூட்டல்கள் அல்லது சந்தைப்படுத்தும் ஆற்றல் என்பன ஊக்குவிக்கப்பட வேண்டும்.

## a) உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை முன்னேற்றல்

<u>விதை கிடைக்கற்றகவினைக் கூட்டல்</u>

தேவையான தொழிநுட்ப மற்றும் மூலதன மாற்றீடுகளினூடாக விவசாயத் திணைக்களத்தினது உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு உயர் விளைச்சலைத் தரக்கூடிய குறுகிய முதிர்ச்சிப் பருவம் கொண்ட தரங்கூடிய கலப்பின விதை இனங்கள் கிடைக்கப் பெறக்கூடியதாக செய்யப்பட வேண்டும். விவசாயத் திணைக்கள மற்றும் விவசாய சேவைகள் திணைக்கள ஆதரவுடன் சமுதாய மட்டத்தில் விதை உற்பத்தி அறிமுகப்படுத்தப்பட முடியும். விவசாயிகளை தனியார்துறை விதை உற்பத்தியாளர்களுடன் இணைத்து வைப்பதற்கான வாய்ப்புக்களும் ஆராயப்படல் உதவப்பட வேண்டும்.

<u>சேதன பசளைகள் பாவனையைக் கூட்டுதல்</u>

காய்கறிகள் மற்றும் பழப்பயிர்ச் செய்கைக்கான நிலம் ஒப்பீட்டளவில் சிறியதாக இருப்பதாலும் மோதல் காரணமாக இப்பிரதேசம் குறித்த ஒரு காலப்பகுதிக்கு கைவிடப்பட்டிருந்தமையாலும் சேதன பசளைகள் பயன்படுத்தப்பட்ட உற்பத்திகளுக்கான தனிச்சிறப்பான சந்தைகளைக் கருத்திற் கொண்டு இந்நிலங்களில் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கை செய்வது இலாபகரமானதாகும். சேதனப் பசளைகளை பயன்னடுத்துவதனால் கிடைக்கக் கூடிய உயர் பண ஈட்டல்களை பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் உரிய தரத்தில் சேதனப்பசளைகளை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.

<u>கலப்பு/இடை–பயிரிடல், பயிர் பல்வகைமைப்படுத்தல் மற்றும் இடைப்பருவகால பயிரிடலை அறிமுகப்படுத்தல்</u>

பழங்கள் மற்றும் காய்கறிகள் கலப்பு அல்லது இடைப்பயிர்களாக குறுகிய காலப் பயிர்கள், பல்லாண்டுப் பயிர்களுடன் கலப்பாக பயிர் செய்யப்படலாம். இதனால் விவசாயிகள் குறுகிய காலத்திலும் நீண்டகால நோக்கிலும் வருமானமீட்டலாம். பயிர் பல்வகைமைப்படுத்தலானது விளைச்சல் மிகையான காலங்களில் ஏற்படும் விலைத் தளம்பல்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதுடன் மண்ணின் போசணை வள முகாமைத்துவத்தினையும் அதிகரிக்கும். இடைப்பருவ கால காய்கறிச் செய்கையினை அறிமுகப்படுத்தலானது நெல் அறுவடையினைத் தொடர்ந்து மண்ணின் எஞ்சியுள்ள ஈரப்பதனிலிருந்து உச்ச பயனினைப் பெற உதவுவதுடன் ஒரு வருடத்தில் தமது அலகு நிலத்திலிருந்து விவசாயிக்கு கிடைக்கும் வருவாய் ஈட்டலையும் அதிகரிக்கும். ஒப்பீட்டளவில் நீர் தேவைப்பாடு குறைவாகவுள்ள அன்னாசி போன்ற பழங்கள் மற்றும் காய்கறிகள் பயிர்ச்செய்கையை கூட்டுவதற்கும் அறிவுறுத்தப்படுகின்றது.

<u>நுண் நீர்பாசன தொகுதிகளை முன்னேற்றுதல்</u>

துளி மற்றும் தூவல் நீர்பாசனம் போன்ற நுண்-நீர்பாசன தொகுதிகளின் பயன்பாட்டினது நன்மைகளின் விழிப்புணர்வினை அதிகரிப்பதும் இவற்றுக்கு ஆரம்ப மூலதனம் வழங்குவதும் நிலத்தினது பயிர்செய்கை சாதக தன்மையை முன்னேற்றும் என்பதுடன் விவசாயிகளுக்கு நீண்டகால நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கும். இது இப்பிரதேசங்களது உலர்வலய நிலைமைகளில் நீர்பயன்பாட்டினது வினைத்திறனையும் அதிகரிக்கும்.

விரிவாக்கற் சேவைகளை முன்னேற்றல்

விரிவாக்கற் சேவை அதிகாரிகளது எண்ணிக்கையையும், அவர்களது சேவை பெறப்படுகின்ற பிரதேசங்களது பரப்பினையும் அதிகரிக்கும், இவர்களது சிறந்த தொழிற்பாட்டுக்கும் ஆற்றல் விருத்திக்கும் தேவையான போதிய வளங்களை வழங்குவதும் விவசாயிகளுக்கு நவீன தொழிநுட்ப மாற்றீட்டினையும் பெற்றுக் கொள்வதற்கு உதவும். இப்பயிர்களுள் சில விவசாயிகளுக்கு புதியனவாக உள்ளதுடன் பயிர் செய்கையில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு பலமான விரிவாக்கற் சேவைகள் அவசியமாகும்.

## b) பெறுமதி கூட்டலை முன்னேற்றுதல்

சமுதாய மட்டத்தில் காய்கறி மற்றும் பழ பதனிடல் இயந்திரங்களை வழங்குதல்

சாத்தியமான பெறுமதி கூட்டல் செயற்பாடுகளில் விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல் மற்றும் காய்றிகள் மற்றும் பழங்களுக்கான புதிய பெறுமதி கூட்டல் செயன்முறைகளை அறிமுகப்படுத்தல் என்பன உற்பத்தியாளர்களுக்கான வருவாய் ஈட்டலை அதிகரிக்கும். சோளம், சோயா அவரை மற்றும் கௌபி என்பவற்றுக்கான விதை வகைபிரிக்கும் காய்கறி பதனிடல் இயந்திரம் மற்றும் புதுப் பழச்சாறு தயாரிக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தலாம்.

பாரம்பரிய பதனிடல் செயன்முறைகளை முன்னேற்றுதல்

தேசிக்காய் அச்சாறு, அச்சாறு தயாரித்தல் மற்றும் வாசனைத் திரவியங்கள் (மிளகாய், மஞ்சள்) அரைத்தல் போன்ற பாரம்பரிய பெறுமதி கூட்டல் செயன்முறைகளுக்கான மூலதன ஆதரவினை வழங்கல் மற்றும் சந்தை இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள உதவுதல் என்பன உற்பத்தியாளர்களை பெறுமதி சங்கிலி வழியே முன்னேற்றும். சிறந்த தர பொதியிடப்பட்ட உற்பத்திகள் உள்ளூர் சந்தைகளையும் அதே போல் சுற்றுலாத்துறை தொடர்பான தளங்களையும் இலக்காகக் கொண்டு சந்தைப்படுத்தலாம்.

## III. பாற்பண்ணை மற்றும் விலங்கு வேளாண்மை உபதுறை

இவ்விரண்டு மாவட்டங்களிலும் மந்தை, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு என்பனவே பெரும்பாலும் காணப்பட்ட விலங்கு வேளாண்மைத் துறைகளாகும். ஆடு மற்றும் கோழி வளர்ப்பானது இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன.

பாற்பண்னைக் கைத்தொழிலானது a) பொருத்தமான சிறந்த தர கலப்பு இனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் விலங்குத் தொகுதிகளின் உற்பத்தித் திறனை முன்னேற்றுதல், புல்லினங்களை புனருத்தாபனம் செய்து உயர் இன புல்லினங்களை அறிமுகப்படுத்தல் b) திணைக்களங்களிலுள்ள மனித வள தர மற்றும் ஆற்றல்களை அதிகரிப்பதன் மூலம் கைத்தொழிலுக்குரிய நிறுவன ஆதரவினை அதிகரித்தல், நிதிச் சேவைகளை வழங்குதல், மற்றும் பொருத்தமான நிறுவனங்கள், கிராமிய வங்கிகள் மற்றும் NGOs ஊடாக முறைசார் நிதிச் சேவைகளுக்கு உதவுதல், c) வலுவைப் பெற்றுக் கொள்ளும் வழிகளை, கிராமிய பாதைகளை முன்னேற்றல், பயிற்சியினூடாக தொழிநுட்ப மாற்றலுக்கு உதவுதல் மற்றும் உபகரணங்களை வழங்குவதன் மூலம் பெறுமதி கூட்டலுக்கான வாய்ப்புக்களை வழங்குதல், d) முன்னேற்றமான பால் சேகரித்தல் அபிவிருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மூலம், சிறந்த கிராமியப் பாதைகள் உள்ளூர் சந்தைகளுடன் இணைப்புக்களை உருவாக்குதல் மற்றும் கூட்டுறவு முகாமைத்துவ தொகுதிகளை சீரமைத்தலினூடாக சந்தைப்படுத்தலை முன்னேற்றுதல் என்பன மூலம் பலப்படுத்த முடியும்.

## a) மந்தைகளின் உற்பத்தித் திறனை முன்னேற்றுதல்

பொருத்தமான சிறந்த தர கலப்பினங்களை அறிமுகப்படுத்தல்

மந்தைத் தொகுதிகளிலிருந்து பெறப்படும் பாலின் அளவினைக் கூட்டுவதற்கு உள்ளூர் காலநிலைகளுக்கு பொருத்தமான புதிய இனங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். கலப்பின விலங்குகளுக்கு பகுதி/ செறிவான முகாமைத்துவ தொகுதிகள் தேவைப்படுவதால் தேவையான தொழிநுட்ப ஒத்துழைப்புடன் இது ஒரு படிப்படியான செயன்முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய ஒரு சூழலுக்கு கலப்பினங்களை அறிமுகப்படுத்துவதன் விளைவுகள் தொடர்பாக கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். (புதிய இனங்கள் இனங்காணப்படாத, எளிதாக நோய் தொற்றுக்கு உட்படக்கூடியவையாயின் அவை உள்ளூர் இனங்களையும் அழிக்க முடியும்)

உணவின் தரம் மற்றும் அளவினைக் கூட்டல்

உணவின் தரம் மற்றும் அளவு என்பன புன்னிலங்களை புனர்நிர்மானம் செய்வதன் மூலமும் புதிய உயர் உற்பத்தித் திறனுள்ள இனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் அதிகரிக்கப்படலாம். இது தேவையான தொழிநுட்ப ஒத்துழைப்பினை பெறுவதற்காக விவசாய திணைக்களம் மற்றும் விவசாய சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சமுதாயங்களுக்கு அண்மையில் யுத்தத்திற்கு முன்னர்/யுத்தகாலங்களில் பயன்படுத்தப்பட்ட புன்னிலங்கள் முதற்படியாக இனங்காணப்பட வேண்டும். இதற்கு உள்ளூர் அரச அதிகாரிகளிடமிருந்தும் மாவட்ட / பிரதேச நிர்வாக அதிகாரிகளிடமிருந்தும் தேவையான ஆலோசனைகளும் அனுமதிகளும் தேவையாகும். CO3 போன்ற உயர் விளைச்சல் தருகின்ற முன்னேற்றப்பட்ட புல்லினங்கள் ஏற்கனவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் புன்னிலங்களின் உற்பத்தித் திறனை கூட்டுவதற்கு இது பரிசோதிக்கப்படலாம்.

## b) பாற்பண்ணைக் கைத்தொழிலுக்கான நிறுவன ஆதரவினை அதிகரித்தல்

விரிவாக்கற் சேவைகளுக்கான கேள்விகளை சந்திப்பதற்காக மாவட்டத்திலுள்ள விலங்கு வேளாண்மை அபிவிருத்தி அதிகாரிகளின் மற்றும் மிருக வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அபிவிருத்தி முயற்சியாளர்கள் குறைந்தது தமது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலேனும் மனித வலுவினை அதிகரிப்பதற்காக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும். இது அபிவிருத்தி செயற்திட்டங்களில் பெறப்படும் அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகைகளை வழங்குவதன் மூலம் அல்லது தற்காலிகமாக பட்டதாரிகளை அல்லது டிப்ளோமா தகைமை உள்ளவர்களை பணியிலீடுபடுத்தி தேவையான பயிற்சிகளை வழங்க விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் நீண்ட காலத்தின் செயற்றிட்டம் நிலைப்பேறடையவும் உதவும்.

நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை வழங்கல்

நிதிச்சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் என்பது எல்லாத் துறைகளுக்குமான தெளிவான பிரச்சினையாதலால் இப்பிரிவின் ஆரம்பத்திலேயே இது தொடர்பான பரிந்துரைகள் கலந்துரையாடப்பட்டன.

## c) பெறுமதி கூட்டலுக்கான வாய்ப்புக்களை வழங்கல்.

கிராமிய பாதைகள், வலுவினைப் பெற்றுக் கொள்ளும் வழிகளை முன்னேற்றுல்

உட்கட்டமைப்பு எனும் தெளிவான மையக்கருவின் கீழ் இவ்விடயம் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. பாற்பண்ணைத் துறையில் பெறுமதி கூட்டலை முன்னேற்றுவதற்கு வலுவைப் பெற்றுக் கொள்ளல் முக்கியம் என்பதனை குறிப்பில் கொள்ளல் வேண்டும்.

பெறுமதி கூட்டலுக்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்கல்

பெறுமதி கூட்டல் தொடர்பான தொழிநுட்ப பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமான பாற்பண்ணைத் துறை உற்பத்தியாளர்களுக்கு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்துடனான செயற்திட்டத்தினது போதிய ஈடுபாடு நன்மையாக அமையலாம். விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினது அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள், கற்றுக் கொண்ட பாடங்களை அமுல்படுத்துவதில் ஆர்வங் கொண்டோருக்கு மாத்திரமே பயிற்சியும் உபகரணமும் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். தயிர் மற்றும் யோகட் தயாரிப்புக்காக இலகுவாக பராமரிக்கக் கூடிய எளிய உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். வழங்கப்பட்ட உபகரணங்களைக் கையயாள்வது தொடர்பான பயிற்சியும் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பரந்த சந்தைகளை நோக்கிச் செல்கையில் பொதியிடல் மற்றும் வர்த்தகக் குறியிடல் பயிற்சியும் முக்கியமாகும்.

## d) சந்தைப்படுத்தலை முன்னேற்றுதல்

பால் சேகரித்தல் வலையமைப்புக்களை முன்னேற்றுதல்

இடைத்தரகர்களின் ஈடுபாட்டினை தவிர்ந்து கொள்ளவும் விவசாயிகளின் பேரம் பேசும் சக்தியைக்

கூட்டவும் விவசாய அமைப்புக்களினூடாக சமுதாய மட்டத்தில் பால் சேகரித்தல் வலையமைப்புக்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இவ்வலையமைப்புக்கள் ஒழுங்கான விதத்தில், பொறுப்புடன் தொழிற்படுவதற்காக பதிவுகளை வைத்துக் கொள்ளல் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு சமுதாய/கிராம/கிராம சேவகர் பிரிவுக்குரிய விவசாய அமைப்புக்களுக்கு ஒரு வாகனம் அல்லது துவிச்சக்கர வண்டி, பால் சேகரிக்கும் கொள்கலன்கள் மற்றும் தற்காலிக களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குவதன் மூலம் பால் சேகரிக்கும் இச்செயன்முறை பெரிய இடைஞ்சல்கள் இல்லாது தொடர்ந்தும் செயற்படுத்தப்படலாம். பால் சேகரித்தல் தொடர்பான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக அர்ப்பணிப்புடனான நபர்கள் விவசாய அமைப்புக்களிலிருந்து சம்பள அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும். நியாயமான விலை கொடுத்து சேகரிக்கப்பட்ட பாலானது மில்கோ அல்லது நெஸ்லே போன்ற பெரிய பால் சேகரிக்கும் கம்பனிகளால் நேரடியாக கொள்வனவு செய்யப்படலாம். இது பால் விரயமாவதை குறைப்பதுடன் தற்போது நடைமுறையிலில்லாத மாலை நேரங்களில் பால் சேகரிக்கப்படுவதற்கும் உதவும்.

<u>கூட்டுறவு முகாமைத்துவ தொகுதிகளை சீர்படுத்தல்</u>

இப்பரிந்துரையானது விவசாயிகள் பாலினைக் கூட்டுறவு கடைகளுக்கு விற்றதன் பின்னர் கொடுப்பனவுகளில் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கவும், இடைத்தரகர்களில் தங்கியிருக்காமலிருப்பதற்கும் பாலைக் குறைந்த விலைக்கு விற்பதனை மட்டுப்படுத்துவதற்குமாகும். இவ்வாறான தொகுதிகளை முன்னேற்றவும் இத்தடைகளை விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் போன்ற உரிய நிறுவனங்களுக்கு உடனடிச் செயற்பாடுகளுக்காக குறிப்பிட்டுக்காட்டவும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>சமுதாய முகாமைத்துவ விற்பனை வெளித்தளங்களை நிறுவுதல்</u>

இவ்விற்பனைத் தளங்கள் புதிய பசும்பாலினை விற்பதற்கும் அதே போல் பண்ணையினது பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்குமான இடமாக அமையும். இவை உற்பத்திகளைப் பற்றிய மற்றும் பிரபல்யத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நகரத்திற்கு அல்லது பிரதான பாதைகளை அண்மியதாக நிறுவப்பட வேண்டும். இவை வெளிக் கொள்வனவாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும். இவ்விற்பனை தளங்களை வெளிச்சந்தைகளுடன் இணைப்பதற்கான வழிகளை ஆராயவும் செயற்பாடுகள் நிலை பேறாக உறுதியாகும் வரை தொடர்ச்சியான ஆதரவினை வழங்கவும் செயற்பாடுகளை ஆராய வேண்டும்.

## IV. நன்னீர் மீன்பிடிகள் உபதுறை

<u>நன்னீர் மீன்பிடியும் நீர் வளர்ப்பும்</u>

நன்னீர் மீன் பிடியானது பிரதானமாக பின்வரும் பிரிவுகளில் பலப்படுத்தப்பட வேண்டும். அவையாவன a) மீன் குஞ்சுகளினது தரம் மற்றும் மற்றும் அளவுகளை அதிகரிப்பதனூடாக, பலவீனமான குழுக்களுக்கு மீன் பிடி உபகரணங்களை வழங்குதல் மற்றும் பாதைகள் மற்றும் குளங்கள் புனர்நிர்மாணித்தல் போன்ற ஆதரவு வழங்கும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலினூடாக உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல் b) உள்ளூரிலும் மாவட்டத்திற்கு வெளியேயும் மீன் வளர்ப்பு மற்றும் மீன்களது பெறுமதி கூட்டலுக்காக உள்நாட்டில் பிடிக்கப்படும் மீன்களுக்கான சந்தை இணைப்புக்களை முன்னேற்றல் என்பனவாகும்.

## a) உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்தல

<u>இரண்டு மாவட்டங்களுக்கும் மீன் குஞ்சுகளை விநியோகிக்கின்ற தற்போதுள்ள மீன் குஞ்சு பொரிக்குமிடங்களை பலப்படுத்தல்</u>

புதிய மீன்களாக கார்ப் மற்றம் திலாப்பியா என்பனவும் பெறுமதி கூட்டப்பட்ட (புகையில் உலர்த்தப்பட்ட மீன்) மீன்களாக உள்ளூர் இனங்களான சுங்கன் மற்றும் விரால் என்பனவும் உயர் சந்தை கேள்வியுள்ள மீனினங்களாக இனங்காணப்பட்டுள்ளன. தற்போது கிழக்கிலுள்ள பருவகால மற்றும் பல்லாண்டுக் குளங்கள் இங்கினியாக்கல்லை மற்றும் தம்புள்ளையிலுள்ள மீன் இனப்பெருக்க நிலையிலிருந்து பெறப்பட்ட மீன் குஞ்சுகளை கொண்டுள்ளன. இவ்விரு மீன் குஞ்சு பொரிக்கும் இடங்களிலும் மீன் உற்பத்தியைக் கூட்டுவதற்கான நிதி மற்றும் தொழிநுட்ப வசதிகளை செய்து கொடுப்பதானது மீன் குஞ்சுகளுக்கான பற்றாக்குறையைக் குறைக்கும்.

சிறிய மீன் குஞ்சு பொரிக்குமிடங்களை மற்றும் சிறிய பராமரிப்பிடங்களை நிறுவுவதற்கான சாத்தியப்பாடு

இங்கினியாக்கலை மற்றும் தம்புள்ளையிலுள்ள இனப்பெருக்க நிலையங்களால் முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இரு மாவட்டங்களிலும் மீன்குஞ்சு பொரிக்குமிடங்களை (உரிய தொழிநுட்ப மாற்றீட்டுடன்) நிறுவுவதன் சாத்தியப்பாடு ஆராயப்பட வேண்டும். தற்போது இச்சமுதாயத்தில் மீன் குஞ்சு பொரிப்பதற்கான தொழில்நுட்பம் இல்லை. போக்குவரத்து வழிகளை முன்னேற்றவதும் இம்மாவட்டத்தினுள்ளேயே சிறிய மீன் குஞ்சு பொரிக்குமிடங்களை அமைத்துக் கொள்வதும் உயர் மீன் குஞ்சுகள் பராமரிக்குமிடங்களும் (அம்பாறை ராஜவெவவிலுள்ளது போன்று) முன் மொழியப்பட்டுள்ளதுடன் இப்பராமரிப்பிடங்கள் மற்றும் குஞ்சு பொரிக்குமிடங்களை முகாமைத்துவம் செய்வதற்கு மீனவ சங்கங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். இவர்கள் தமது மீன் குஞ்சுகளை ஏனைய சமுதாயங்களிடம் விற்பதன் மூலமும் குளத்திலிருந்தான தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

மீன் வளர்ப்பினை அறிமுகப்படுத்தல்/முன்னேற்றுதல்

வெளிநாட்டுச் சந்தையிலிருந்து உயர்வருமானத்தைப் பெற்றுத்தருகின்ற தாராளமாகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள சவர் நீர் வளங்களின் அடிப்படையிலான மீனினங்களின் வளர்ப்புக்கு (சீபாஸ், கடலட்டை, நண்டு மற்றும் இறால்) அரசிடமிருந்து பலத்த ஆர்வமொன்றுள்ளது[13]. தொழில்நுட்ப மாற்றீட்டுச் செயன்முறைகளாக அரசின் இவ்வாறான முயற்சிகளுடன் மற்றும் ஏனைய அரச-சாரா அமைப்புக்களுடன் இலக்குக்குரிய சமுதாய மக்கள் (பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் அங்வீனர்களுடனான குடும்பங்கள் போன்ற பலவீனமான குடும்பங்கள் உட்பட) இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாய மக்களிடம் தெளிவாக மூலதனப் பற்றாக்குறை காணப்படுவதால் மீன் வளர்ப்பினை ஆரம்பிப்பதற்காக நிதிச் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் சந்தை இணைப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். தரக்கட்டுப்பாட்டு நுட்பங்களை சர்வதேச நியமங்களுக்கேற்ப அறிமுகப்படுத்தும் நோக்குடன் தனியார்துறையிலிருந்து ஏற்றுமதிச் சந்தையுடன் அனுபவமுள்ள/ தேவையான சந்தை இணைப்புக்களை கொண்டுள்ள ஆவலுள்ள நபர்கள்/நிறுவனங்கள் இனங்காணப்பட்டு மீன் வளர்ப்பில் முதலீடு செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

## b) சந்தைப்படுத்தலை முன்னேற்றுதல்

பிடிக்கப்பட்ட புதிய மீன், பெறுமதி கூட்டப்பட்ட (புகையில் உலர்த்தப்பட்ட) மீன் மற்றும் மீன் வளர்ப்பு என்பனவே இப்பகுப்பாய்வில் இனங்காணப்பட்ட நன்னீர் மற்றும் மீன் வளர்ப்பு உபதுறையினது பிரதான உற்பத்திகளாகும். சந்தைப்படுத்தலானது மீனவ சமூகங்களினூடாக எளிதாக்கப்பட வேண்டும். பனிக்கட்டியிலிடப்படாத புதிய மீன்களை விரும்புகின்ற உள்ளூர் நுகர்வோருக்காக புதிய மீன்கள் சந்தைப்படுத்தப்படலாம். இவ்விற்பனைகளுக்காக சந்தை நிலையங்களுக்கு அண்மையில்/சந்தை நிலையங்களுடன் ஒன்றிணைந்ததாக விற்பனைத் தளங்கள் அமைக்கப்பட வேண்டும்.

பதனிடப்பட்ட மீன்களுக்காக, உள்ளூர் அதேபோல் நகர்ப்புற சந்தைகளில் மற்றும் பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவுச்சாலைகளுடன் சந்தை இணைப்புக்கள் செய்து கொடுக்கப்பட வேண்டும். உள்ளூர் மீன் பிடியில் ஈடுபட்டுள்ள இலக்குக்குரிய சமுதாய மக்களிடையே புகை மூலம் உலர்த்தப்பட்ட மீன்களுக்கு இனங்காணப்பட்ட உயர் கேள்வியானது பிரபல்யப்படுத்தப்பட வேண்டும். சிறந்த பொதியிடல், பெயரிடல் மற்றும் குறிப்பிடலினூடாக பெறுமதி கூட்டுவதன் தரத்தை முன்னேற்றுவதற்காகவும் பயிற்சியூடாக ஊக்கப்படுத்தப்பட வேண்டும். பெறுமதி கூட்டல் செயன்முறையில் பலவீனமான குழுக்களை ஈடுபடுத்துவதில் விசேட கவனம் கொடுக்கப்படலாம்.

மீன் வளர்ப்புக்கு, உள்ளூரில் அதேபோல் ஏற்றுமதியிலுள்ள உயர் கேள்வியில் மூலதனமிடப்பட வேண்டும் என்பதுடன் உள்ளூர் சந்தைகளுடன் அதேபோல் தனியார்துறையின் ஈடுபாட்டினூடாக ஏற்றுமதிச் சந்தையுடன் சந்தை இணைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

உட்கட்டமைப்பினை முன்னேற்றலும் பலவீனமான குழுக்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கலும்

[13] கிழக்கின் எழுச்சி உத்தியோகபூர்வ இணையத் தளம், நெகனகிர நவோதய, www.neweast.lk, 2010 செப்டெம்பரில் பெறப்பட்டது.

சிறிய குளங்களின் புனர்நிர்மாணத்திற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்பதுடன் பாதைகள் மற்றும் பாலங்கள் போன்ற இணைப்புக்களிலான உட்கட்டமைப்பு வசதிகள் உற்பத்தியாளர்களை சந்தைகளுடன் இணைப்பதற்காக நிர்மாணிக்கப்பட வேண்டும். மேலே கலந்துரையாடப்பட்டபடி சந்தை உட்கட்டமைப்பு வசதிகளும் நிர்மாணிக்கப்பட வேண்டும். பலவீனமான குழுக்களுக்கு மீன்பிடி உாகரணங்களிலான பற்றாக்குறை பகுப்பாய்வில் வெளிக்காட்டப்பட்டதுடன் இவற்றை வழங்குவதானது மீன்பிடியில் இவர்களது பங்களிப்பினை அதிகரித்து கூடுதல் வருமானத்தை பெற்றுத்தரும்.

## V. கடல் மீன்பிடித்துறை உப துறை

மீனவர்களுக்கான உயர் வருமான ஈட்டலானது a) விசேட மீன்பிடி உபகரணங்கள், சுத்தமான, சிறந்த மீன் கையாளல் தொழில்நுட்பங்களில் பயிற்சி, ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கான முலதன உதவி வழங்கல், படகு உற்பத்தி மற்றும் பனிக்கட்டி நிலையங்கள் போன்ற ஆதரவு சேவைகளை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களூடாக அறிமுகப்படுத்தல் மற்றும் தூண்டுவதுடன் கடன் வசதிகளை வழங்குதல் என்பவற்றினூடாக உற்பத்தித்திறனை முன்னேற்றுதல் டி) நேரடி சந்தை இணைப்புக்கள் உள்ளடங்கலாக சந்தைப்படுத்தலை முன்னேற்றுவதுடன் மாற்று.ீ. துணைநிலை வருமான முதல்களை அறிமுகப்படுத்தலும் ஆதரவளித்தலும் என்பவற்றின் மூலம் உருவாக்கப்படலாம்.

### a) உற்பத்தித்திறனை கூட்டுதல்

<u>பருவகாலத்துக்கு பொருத்தமான விசேட மீன்பிடி உபகரணங்களை வழங்கலும் பல நாள் படகுகளாக மாற்றுவதற்கு ஆதரவளித்தலும்</u>

பருவகாலத்துக்கு பொருத்தமானவாறு மீன் பிடிக்கக்கூடியதயாக விசேட வகையான மீன்பிடி உபகரணங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதானது உயர் வருமானத்தை பெற்றுக்கொடுக்கும். ஒரு நாள் படகுகளை பல நாள் படகுகளாக மாற்றப்படுவதற்கான ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் இது கரையோர உப துறையுடன் ஒப்பிடும் போது ஒரு சிறந்த வள அடிப்படையினை மீனவர்களுக்கு வழங்குகின்ற அதே நேரம் சர்வதேச சந்தையில் உயர் விலையினை பெற்றுக்கொடுக்கின்ற டூனா போன்ற மீன் வகைகளையும் பிடிக்கக்கூடியதாக இருக்கும். உயர் இலாபத்துடனான ஒரு வியாபார முதலீடாக ஆழ் கடல் மீன்பிடித்துறையில் முதலீடு செய்வதற்கும் மீனவர்களுடன் இணைப்புக்களை கொண்டிருக்கவும் நிதி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆழ்கடல் மீன்பிடித்தலை நோக்கிய இந்நகர்வானது கரையோர துறையில் உள்ள வள அருகிப்போதல் தொடர்பான தடைகளையும் இழிவாக்கும்.

<u>பனிக்கட்டி உற்பத்தி மற்றும் படகு தயாரித்தல் போன்ற ஆதரவு சேவைகளை அறிமுகப்படுத்தலும் ஊக்குவித்தலும்</u>

கடல் மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வமாயுள்ள இளைஞர்களும் உற்பத்தித்திறன் குறைந்த கரையோர உப-துறையில் ஈடுபட்டுள்ள மீனவர்களும் மீன்பிடித்தலுடன் தொடர்பான ஆதரவு சேவைகளின் சங்கிலியில் இணைந்துகொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். படகு நிர்மாணம், படகு சுத்தப்படுத்தலும் பேணுதலும், மீன்வலை உற்பத்தி, பனிக்கட்டி உற்பத்தி மற்றும் போக்குவரத்து, உணவு வழங்குதல் மற்றும் படகின் என்ஜின் இயந்திரத்திற்கான பொறியியற் பகுதிகள் போன்ற இக்கைத்தொழிலுக்கு தேவையான ஏனைய சேவைகளை விநியோகித்தல் என்பன பொருத்தமான அரச அதிகாரிகளிடமிருந்து தொழிநுட்ப பயிற்சிகளுடன் நிதி மூலதனங்கள் வழங்கப்படுவதனூடாக ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அதிக தொழில் சார் முயற்சிகளுடனுள்ள மீனவ சமுதாயங்கள்/ சமூகங்கள் அல்லது தனிநபர்களுடன் ஆரம்ப முதலீடுகளுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் வலுப்படுத்தப்ட வேண்டும். மிகவும் பலவீனமான மீனவர்கள் பின்னர் இச்சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடன் இணைக்கப்படலாம். இது உற்பத்திறனற்ற விதத்திலான ஒருநாள் படகு மீன்பிடித்தலிலும் உறுதியான வருமானத்தினை பெற்றுக்கொடுக்கும். உள்ளூரில் ஆதரவு சேவைகளை ஊக்குவித்தல் கூட கிழக்கில் விரிவடைந்து வரும் மீன்பிடித்துறையினை இன்னும் தூண்டும் என்பதுடன் மீனவர்கள் கரையோர மீன்பிடித்தலிலிருந்து ஏனைய சேவைகளை நோக்கி செல்வதானது வளங்கள் அழிவடைந்து வருவதற்கான ஒரு தீர்வாகும் என்பதுடன் மீன்பிடி கைத்தொழிலின் நிலைபேறான தன்மையையும் உறுதி செய்யும்.

மீனவர்கள் மற்றும் மீனவ சமூகங்களது ஆற்றல்களை கட்டியெழுப்புதல்

அறுவடையின் பின்னான இழப்புக்களை குறைத்து ஏற்றுமதிக்கான தரத்தினை அடைவதில் சுத்தமாக மீன்களை கையாளல் தொடர்பான பயிற்சியானது மீனுக்கான ஏற்றுமதி சந்தையினை விரிவாக்குவதில் மிக முக்கியமாகும். நிதி முகாமைத்துவம் (விசேடமாக பருவமற்ற காலங்களில் நிதி பாதுகாப்பை பெறுவதற்காக உச்ச பருவ காலங்களில் சேமித்தல்), வர்த்தக திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன தொழிற்படையினதும் உப-துறையினதும் திறன் மட்டம் மற்றும் உற்பத்தித்திறனை கூட்டுவதற்கான ஏனைய பகுதிகளாகும்.

## b) **சந்தைப்படுத்தல்**

பருவமற்ற காலங்களுக்காக மாற்று ஜீவனோபாய வழிகளை அறிமுகப்படுத்தல்

பணப்பயிர்ச்செய்கை அல்லது முச்சக்கர வண்டி/ மோட்டார் வண்டி திருத்துதல் மற்றும் 'தொடர்பாடல் நிலையங்கள்' போன்ற தகவல் தொழிநுட்பம் சார்ந்த வியாபாரங்கள் போன்ற விவசாயம் சாராத செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுவதானது குறித்த சமுதாயங்களது அமைவிடத்திற்கேற்ப ஊக்குவிக்கப்பட வேண்டும். உதாரணமாக கல்லாரவ போன்ற பிரதான பாதையை அடைவதற்கு தேவையானவாறு பாதை வசதிகளை கொண்டுள்ள சமுதாயங்களில் விவசாயம் சாராத செற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படலாம். மாற்று அல்லது துணையான ஒரு ஜீவனோபாய தெரிவு இருப்பதானது மீனவ சமுதாயங்களுக்கு பருவமற்ற காலங்களில் ஒரு வருமான ஒதுக்கீட்டினை வழங்குவதுடன் மீன் சேகரிப்பாளர்/ வர்த்தகரிடம் கடன் சுழலினுள் விழுவதிலிருந்தும் பாதுகாக்கும்.

நேரடியான சந்தை இணைப்புக்கள்

மாவட்டத்தினுள்ளும் மற்றும் வெளியேயுமான மொத்த விற்பனை சந்தைகளுடன் நேரடியான சந்தை இணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுப்பதனூடாக சேகரிப்பாளர்/ மொத்த விற்பனையாளரின் ஏகபோகத்தன்மை குறைக்கப்படலாம். மேலே கலந்துரையாடப்பட்ட ஆதரவு சேவைகளது (போக்குவரத்து, பனிக்கட்டி நிலையங்கள் போன்ற) விருத்தியானது நேரடி சந்தைப்படுத்தலில் மிக முக்கியமாகும். உதாரணமாக விடுதிகள் மற்றும் உணவுச்சாலைகள் போன்ற தனியார் துறை ஈடுபாடும் ஏனைய உயர் பெறுமதி மீன் உற்பத்திகளுக்கான சந்தைகளாக நாடப்படலாம்.

## VI. விவசாயம் சாராத உப துறை

அண்மையில் மீள்குடியேறிய சமுதாயங்களில் விவசாயம் சாராத துறையிலான ஈடுபாடு மிகவும் குறைவாக இருப்பினும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களை ஆதரிக்கக்கூடிய, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதில் அரசு துறையிலிருந்து காட்டப்படும் தூ ண்டல் மற்றும் இப்பிரதேசங்களில் விசேடமாக விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களில் முதலீடு செய்வதற்கு சில பெரிய தனியார் கம்பனிகள் காட்டும் ஆர்வம் என்பன இத்துறையினது அறிமுகத்திற்கும் முன்னேற்றத்திற்குமான சாத்தியக்கூறுகளை காட்டுகின்றன. விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் தொடர்பான பரிந்துரைகள் அவற்றுக்கு உரிய துறைகளில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இப்பிரிவு விவசாயம் சாராத செயற்பாடுகள் தொடர்பான தொழில்முயற்சிகளுக்கான பரிந்துரைகளை வழங்குகின்றது.

அரச சேவைகளையும் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு நாடியுள்ள ஊக்கமுள்ள தனிநபர்களையும்/ குழுக்களையும் பலப்படுத்தல்

இரண்டு மாவட்டங்களிலும் வியாபாரங்களில் அதிக முதலீடு செய்யவும், வியாபாரத்தை தொடங்குவதற்கு சாதகமான ஒரு சூழலுக்காக இவ்வியாபார செயற்பாடுகளின் பிரதானமான தொடர்பு கொள்ளுமிடங்களாகவுள்ள உள்ளூர் அதிகாரிகள், வியாபார பதிவு மற்றும் வரிப்பணம் அறவிடல் தொடர்பான அறிவு மற்றும் விசேடமாக காணி தொடர்பான பிணக்குகளை தீர்ப்பது ஊக்கப்படுத்தப்பட்டு இவ்விடயத்திற்கு தேவையான செயன்முறைகளை மேற்கொள்ளவும் பலப்படுத்தப்பட வெண்டும். இதே நேரம் தொழில் முயற்சிகளை தொடங்கி முகாமைத்துவம் செய்வதில் ஆர்வமாயுள்ள தனிநபர்களின் ஆற்றல் விருத்தியும் தொடர்ச்சியான ஆலோசனை செயன்முறையாக செய்யப்பட வேண்டும்.

சமுதாயத்தில் காணப்படுகின்ற கைத்தொழில்களையும் தொழில் முயற்சிகளையும் முன்னேற்றுதல்

இப்பிரதேசங்களில் ஏற்கெனவே காணப்படுகின்ற பிரம்பு அடிப்படையிலான உற்பத்தி, களியும் சீமெந்தும்,

செங்கல் தயாரிப்பு, அரிசி ஆலைகள், தயிர் தயாரிப்பு போன்ற விவசாய அடிப்படையிலான உற்பத்திகள் மற்றும் உணவகங்கள், கடைகள், சிகையலங்கார நிலையங்கள் மற்றும் பேக்கரிகள் போன்ற ஏனைய சிறிய வியாபாரங்கள் போன்றன தேவையான அறிவு, வியாபார திட்டமிடல், வியாபார முகாமைத்துவம், வாடிக்கையாளர் சேவை மற்றும் தமது உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை முன்னேற்றல் என்பவற்றுடன் பலப்படுத்தப்பட வேண்டும்.

<u>புதிய தொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தல்</u>

இலக்குக்குரிய சமுதாயங்களுக்கு வெளியே உள்ள இடங்களில் வெற்றிகரமாக நடைபெறுகின்ற ஓரளவு ஸ்தாபிக்கப்பட்ட வாடிக்கையாளர்களை கொண்டுள்ள தொழில் முயற்சிகள் இச்சமுதாயங்களிலும் பலமான மூலதனம் மற்றும் தொழிநுட்ப ஆதரவுடன் முன்னோடி செயற்திட்ட அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இவற்றுள் சில தொழில்முயற்சிகள் கைத்தறி, சிறிய ஆடைகள் மற்றும் சப்பாத்து தயாரிக்கும் தொழிற்சாலைகளாக உள்ளதுடன் இதே போல் கையடக்க தொலைபேசி திருத்துதல் மற்றும் தொடர்பாடல் நிலையங்களை வைத்திருத்தல் போன்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த வியாபாரமாகவும் முச்சக்கர வண்டி/மோட்டார் வண்டி திருத்துதல் மற்றும் தச்சு மற்றும் கட்டுமானம் தொடர்பான செற்பாடுகளாகவும் உள்ளன.

<u>இரண்டு மாவட்டங்களிலும் தொழில் முயற்சிகளை முன்னேற்றும் நோக்கில் முயற்சி செய்து கொண்டுள்ள ஏனைய செயற்திட்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை இணைத்துக்கொள்ளல்</u>

முன்மொழியப்படும் புதிய தொழில் முயற்சிகளின் ஓரளவு பரிசோதித்துக்கொள்ள வேண்டிய தன்மை காரணமாக இப்பிரதேசத்தினுள் தொழில் முயற்சி விருத்தியில் மேற்கொள்ளப்பட்ட இதையொத்த செயற்திட்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் எடுத்து நோக்கப்பட வேண்டுமென மிகவும் பரிந்துரைக்கப்படுகின்றது. ஆய்வினூடாக இனங்காணப்பட்ட இவ்வாறான சில செயற்திட்டங்கள் USAID-CORE செயற்திட்டங்கள், Nucleus[13] இனால் ஊக்குவிக்கப்பட்ட தொழில் முயற்சியாண்மையாளர் குழுக்கள் மற்றும் பெரென்டினா நுண் நிதி நிறுவனத்தினால்[14] மேற்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியினூடாக வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

<u>சுற்றுலாத்துறை கைத்தொழிலுடன் இணைத்தல்</u>

கிழக்கில் விரிவடைந்து வரும் சுற்றுலாத்துறை கைத்தொழிலானது விவசாய மற்றும் விவசாயம் சாராத பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் கூட்டப்படாத உற்பத்திகளுக்கு ஒரு சந்தையை உருவாக்க முடியும். காய்கறி மற்றும் ஏனைய களப் பயிர்களை உற்பத்தி செய்வோர், நன்னீர் மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விலங்கு வேளாண்மை உற்பத்தியாளர்களை இப்பிரதேசத்தில் அதிகரித்து வரும் சுற்றுலா கைத்தொழிலுடன் இணைப்பதற்கான சாத்தியப்பாடானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறை பயணிகளுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை விநியோகிக்கின்ற சேவை வழங்குநர்களினூடாக ஊக்கப்படுத்தப்பட வேண்டும். தேன் மற்றும் புகையால் உலர்த்தப்பட்ட மீன் என்பனவும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறை பயணிகளிடையில் ஒரு தனிச் சிறப்பான சந்தையினை கொண்டுள்ள உற்பத்தியாக ஆராயப்படலாம்.

## 5.4 இலக்குக்குரிய சமூகங்களது எதிர்காலப் போக்குகளும் முக்கியமான ஜீவனோபாயங்களும்

### சாத்தியமான எதிர்காலப் போக்குகள்

இலக்குக்குரிய கிராமங்களில் சாத்தியமான வருமானம் ஈட்டும் செயற்பாடுகளாக பின்வரும் கூறுகள் இனங் காணப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் மற்றும் தடைகள் பரிந்துரைகள் உப பகுதிகளில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

- o உயர் பெறுமதி வாய்ந்த பாரம்பரிய நெற்பயிர்ச்செய்கை
- o பணப்பயிர்ச்செய்கை (காய்கறிகள், பழங்கள்) மற்றும் பதனிடல் (புதிய பழப்பானங்கள், ஊறுகாய், அச்சாறு)

[13] மேலதிக தகவல்கள், www.nucleus.lk, 2010 ஆகஸ்ட் மாதம் பெறப்பட்டது

[14] மேலதிக தகவல்கள், www.berendina.org, 2010 ஆகஸ்ட் மாதம் பெறப்பட்டது

- o பால் அடிப்படையான பெறுமதி கூட்டல் (தயிர், யோகட்)

- o ஆழ்கடல் மீன்பிடித்தல், மீன் வளர்ப்பு (இறால், சீபாஸ், நண்டு) மீன்பிடித் துறைக்கான உதவி வழங்கும் சேவைகள் (பனிக்கட்டி தயாரிக்கும் இடங்கள், படகு திருத்துதல், படகு தயாரித்தல், போக்குவரத்து) மற்றும் பெறுமதி கூட்டல் (உலர்மீன், தகரத்திலடைக்கப்பட்ட மீன்)

- o விவசாயம் சாராத ஜீவனோபாயங்கள்(பராமரித்தலும், திருத்தலும், தகவல் தொழிநுட்பம் அடிப்படையிலான சேவைகள், சில்லறை வியாபாரம், சிறிய ஆடைத் தொழிற்சாலைகள்)

- o சுற்றுலாத் துறைக்கான உதவி வழங்கும் சேவைகள் (தங்குமிட வசதி, உணவுச் சாலைகள், சாகசமான சுற்றுலாத் துறை)

## 5.5 முடிவுரை

அண்மையில் மீள்குடியேறிய குடும்பங்கள் தமது ஆற்றல் மற்றும் தொழிலினை புதிய உற்பத்தி பரப்புகளில் விருத்திசெய்து கொள்வதற்கு கணிசமானளவு காலம் எடுக்கும். எனவே சிறிய உற்பத்தியாளர்கள் தம்மிடம் ஏற்கெனவே உள்ள திறமைகளில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் எனவும் தமது தற்போதைய வாழ்வாதார பெறுமதி சங்கிலி வழியே மேல் நோக்கி செல்வதற்கு ஆதரிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்படுகின்றது. ஆய்விற்கு கொள்ளப்பட்ட பிரிவுகளில் விவசாயம் மற்றும் மீன்பிடி என்பனவே பிரதான வாழ்வாதார வழிகளாக காணப்பட்டதுடன் மேலதிக வருமானங்களை ஈட்டித்தருகின்ற மாற்று வாழ்வாதாரங்களாக விலங்கு வேளாண்மை, வீட்டுத் தோட்டம், செங்கல் தயாரிப்பு போன்றன உள்ளன. இச்சூழ்நிலையில் தமது செயற்பாடுகளுக்கு பெறுமதி கூட்டல்களை செய்வதற்கு கருதத்தக்களவு சாத்தியம் உள்ளதுடன் இரு மாவட்டங்களிலும் சுற்றுலாத்துறை விருத்தியினூடாக கொண்டுவரப்படக் கூடிய மாற்றங்களையும் பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்புக்கள் உள்ளன.

## References


Arunatilake, N., Gunawardena, A., Marawila, D., Samaratunga, P., Senaratne, A., & Thibbotuwawa, M., 2008. *Analysis of the fisheries sector in Sri Lanka: guided case studies for value chain development in conflict-affected environments*. Washington D.C.: USAID. Online. Accessed August 2010, <http://www.ips.lk/research/fishery_sector_020708/research%20_highligt_fishery_sector. pdf >.

Asia Foundation, 2009. *Qualitative assessment of the local enabling environment for privateenterprise in the Eastern Province of Sri Lanka.* Colombo: The Asia Foundation. Online. Accessed October 2010, <http://asiafoundation.org/publications/pdf/624>.

DCS, 2004. *Annual report of the Sri Lanka labour force survey 2004.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed August 2012, <http://www.statistics.gov.lk/samplesurvey/annual%20report-20041.pdf>.

DCS, 2007a. *Basic population information for Batticaloa 2007: Preliminary report based on a special enumeration.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed June 2010, <http://www.statistics.gov.lk/PopHouSat/Preliminary%20Reports%20Special%20 Enumeration%202007/Basic%20Population%20Information%20of%20Batticaloa%20 District%2020 07.pdf>.

DCS, 2007b. Basic population information for Trincomalee 2007: Preliminary report based on a special enumeration. Colombo: Department of Census and Statistics. Online. Accessed June 2012, <http://www.statistics.gov.lk/PopHouSat/Preliminary%20Reports%20Special%20 Enumeration%202007/Basic%20Population%20Information%20on%20Trincomalee%20 District%202007.pdf>.

DCS, 2008. *Household income and expenditure survey – 2006/07.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed August 2010, <http://www.statistics.gov.lk/HIES/HIES2006_07Website/Publications/HIES200607Final%2 0ReportWeb%20.pdf>.

DCS, 2009. *Statistical abstract.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed May 2013, <www.statistics.gov.lk/abstract2010/Pages/chap5.htm>.

DCS, 2010. *Estimated paddy production and excess/scarcity of paddy by season and by district.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed May 2013, <http://www.statistics.gov.lk/agriculture/Paddy%20Statistics/PaddyStatsPages/Marketable SurplusofPaddy2010.html>.

DCS, 2011. *Household income and expenditure survey – 2009/10*. Poverty Indicators, [Colombo: Department of Census and Statistics, Ministry of Finance and Planning] Vol. 1(2). Online. Accessed May

2011<http://www.statistics.gov.lk/poverty/PovertyIndicators2009_10.pdf>.

DCS, 2012. *Sri Lanka Census of Population and Housing, 2012.* Colombo: Department of Census and Statistics. Online. Accessed August 2010 <http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=pop42&gp=Activit ies&tpl=3>.

De Silva, D., 2009. "Rural institutions" in Ratnayake, I & Fernando, P. (eds.), *Opportunities for the productive poor: perspectives on agriculture and rural livelihoods in Sri Lanka.*Colombo: Centre for Poverty Analysis. Chapter 6, pp. 177-211. Print.

Diprose, R., Abdul Cader, A., & Thalayasingam, P., 2010 (unpublished). *Conflict-sensitivity, development effectiveness, inequalities, and conflict in Sri Lanka: Understanding aid programming, voice and action in local conflict-affected environments.* Oxford: Centre for Research on Inequality, Human security and Ethnicity (CRISE), Oxford University and Colombo: Centre for Poverty Analysis (CEPA).

District Secretariat-Batticaloa, 2008. *Statistical information of Batticaloa District.*

District Secretariat-Trincomalee 2008. *Statistical information of Trincomalee District.*

Siriwardena, P. P. G. S. N., 2004. *"National Aquaculture Sector Overview – Sri Lanka" in National Aquaculture Sector Overview Fact Sheets.* Rome: Fisheries and Aquaculture Department, Food and Agriculture Organisation of the United Nations. Online. Accessed June 2013. http://www.fao.org/fishery/countrysector/naso_sri-lanka/en.

FAO, 2007.Fisheries institutional analysis and capacity assessment to the Ministry of Fisheries and Aquatic Resources of Sri Lanka. Rome: Food and Agriculture Organisation of the United Nations. Online. Accessed August 2009,
<http://www.fao.org/docrep/010/ai532e/ai532e00.htm>.

Gomez, A., 2009. *Microfinance Sector Assessment.* USAID-CORE. Online. Accessed May 2013,
<http://www.core.zunepile.com>.

GOSL, 2010. *Mahinda Chinthana: Visions for a new Sri Lanka* – A ten-year horizon development policy framework 2006-2016, Colombo: Department of National Planning, Ministry of Finance and Planning. Online. Accessed June 2013,
<http://www.treasury.gov.lk/publications/mahindaChintanaVision-2010full-eng.pdf>.

Ibrahim, M. N. M., 2000. *Dairy cattle production.* Peradeniya: University of Peradeniya.. Print.

IDMC, 2012. Sri Lanka: *A hidden displacement crisis.* Colombo: Internal Displacement Monitoring Centre. Online. Accessed May 2011,
<http://www.internal-displacement.org/8025708F004BE3B1/(httpInfoFiles)/0F7746546306FCB3C1257AA8005845A6/$file/srilanka-overview-oct2012.pdf>.

MFAR, 2007. *Ten-year development policy: Framework of fisheries and aquatic resources sector 2007-2016.* Colombo: Ministry of Fisheries and Aquatic Resources. Online. Accessed May 2010,
<http://www.fisheries.gov.lk>.

MOE, 2010. *Sector vulnerability profile; Agriculture and fisheries - Second Draft.* Colombo: Ministry of Environment, p 60. Print.

Ranaweera, N F S., 2009. Sri Lanka: *Opportunities for dairy sector growth*. Rome: FAO. Online. Accessed July 2013. <http://www.fao.org/docrep/011/i0588e/i0588e08.htm>.

Rengasamy, S., n.d. *A students' guide to sub-sector/value chain analysis for livelihood intervention.* Online. Accessed June 2013

<http://www.scribd.com/doc/21453168/Sub-sector-Value-Chain-Analysis-for-Livelihood-Intervention>.

RIU, n.d. *The value chain approach to poverty reduction and development of livelihoods.* Research Into Use. Online. Accessed May 2013, <http://www.researchintouse.com/nrk/RIUinfo/valuechain/valuechain.htm>.

Permanent Mission of Sri Lanka to the United Nations in New York, 2008. *Information gateway to Eastern revival development programme.* Media release, accessed July 2013, <http://www.slmission.com/media-releases/38-other-media-releases/52-information-gateway-to-eastern-revival-development-programme.html>.

Samaratunge, H., Sommers, P., & Varley, J.W., 2009. *Assessment of horticulture in Eastern, Uva and North Central provinces of Sri Lanka.* USAID-CORE. Online. Accessed August 2010, <pdf.usaid.gov/pdf_docs/PNADT118.pdf>.

Saperstein, A., & Campbell, R., 2007. *Accelerating the transition from conflict to sustainable growth Value chain development in conflict affected environments. Micro Report No 111.* Washington D.C.: USAID. Print.

Sarvananthan, M., 2003. *An Introduction to the conflict time economy of the North and East province of Sri Lanka,* Working Paper 1. Point Pedro: Point Pedro Institute of Development (PPID), working paper 1.

Twigg, J., 1998. *"Understanding vulnerability: An introduction" in Twigg, J.,& Bhatt, M. R., (eds.), Understanding vulnerability: South Asian perspectives.* London: Intermediate Technology Publications/DuryogNivaran , pp. 1-12. Print.

USAID-CORE sector assessments. Online. Accessed July 2013, <http://www.core.zunepile.com>.

Wijesinghe, A., 2009. *Private enterprise growth in the regions: What is slowing it down?,* Colombo: Institute of Policy Studies. Online. Accessed July 2013, http://www.ips.lk/talkingeconomics/2009/11/private-enterprise-growth-in-the-regions-what-is-slowing-it-down/.

## உசாத்துணை

## பின்னிணைப்புக்கள்

**அட்டவணை 1: ஆய்வுக்குரிய சமுதாயங்களில் கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் - திருகோணமலை மாவட்டம்**

| மாவட்ட செயலக மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் | இணைப்புக்களை ஏற்படுத்தும் தன்மை | | மின்சாரம் | நீர் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | குடிநீர் | | பயிர்ச்செய்கை | |
| | பிரதான பாதைக்கான தூரம் | Frequency of public transport | ஆம்/ இல்லை | ஆம்/ இல்லை | முதல் | ஆம்/ இல்லை | முதல் |
| குச்சவெளி, திரியாய | 1 km | நாளாந்தம் 4 – 5 தனியார் மற்றும் CTB பேருந்துகள் செயற்படுகின்றன | ஆம் | ஆம் | குழாய் கிணறுகள் | ஆம் | மழை நீர் |
| கிண்ணியா, ஆயிலடி | கிண்ணியா – கந்தளாய் பிரதான பாதைக்கு 5km.<br><br>வான்-எல்ல – கிண்ணியா பாதை கிராமத்தினூடாக செல்கின்றது | CTB பேருந்து இல்லை ஆனால் வான்-எல்ல – கிண்ணியா பாதையில் ஒரு தனியார் பேருந்து.<br>பேருந்து சேவை ஒரு நாளைக்கு இரண்டு தரம் (காலை மற்றும் மாலை) ஆனால் அவை முறையாக செயற்படுவதில்லை | இல்லை | ஆம் | கிணறுகள் | ஆம் | சிறிய குளம் |
| கோமரன்கடவல, மய்லாவெவ | ஹொரவப்பொத்தானைக்கு 45 k.m | ஹொரவப்பொத்தானையிலிருந்து பெலிக்கடவிற்கு ஒரு நாளைக்கு இரண்டு தரம் | இல்லை | ஆம் | கிணறுகள் | ஆம் | மழை நீர் |

மூலம்: முக்கிய குழு கலந்துரையாடல் தரவு

**அட்டவணை 2: ஆய்வுக்குரிய சமுதாயங்களில் கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள உட்கட்டமைப்பு**

**வசதிகள் - மட்டக்களப்பு மாவட்டம்**

| மாவட்ட செயலக மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் | இணைப்புக்களை ஏற்படுத்தும் தன்மை | | மின்சாரம் | நீர் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | குடிநீர் | | பயிர்ச்சசெய்கை | |
| | பிரதான பாதைக்கான தூரம் | Frequency of public transport | ஆம்/ இல்லை | ஆம் / / இல்லை | முதல் | ஆம்/ இல்லை | முதல் |
| வாகரை, மதுரண்கேணிகுளம் | 12 km (வாகரை – மட்டக்களப்பு) | பேருந்து சேவைகள் இல்லை, குடியிருப்பாளர்கள் நடந்தும் மோட்டார் சைக்கிள், சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள் மூலம் பயணம் செய்கின்றனர். | இல்லை | ஆம் | குழாய் கிணறுகளும் கிணறுகளும் | ஆம் | சிறிய குளங்கள் மற்றும் மழை நீர் |
| கிரண், பூலக்காடு | 12 km கிரண் சந்தி | பேருந்து சேவைகள் இல்லை, குடியிருப்பாளர்கள் நடந்தும் மோட்டார் சைக்கிள், சைக்கிள் மற்றும் படகுகள் மூலம் பயணம் செய்கின்றனர். | இல்லை | ஆம் | கிணறுகள் | ஆம் | சிறிய குளம் மற்றும் மழை நீர் |
| ஏறாவுர் பட்டு, புல்லுமாலை | கிராமம் செங்கலடி – மகா ஓயா பிரதான பாதையில் (பதுள்ளை வீதி) அமைந்துள்ளது் | போக்குவரத்தில் பிரச்சினைகளில்லை | இல்லை | இல்லை | குடிநீரானது படை வீரர்கள், பால் கொள்கலன்கள் மற்றும் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்றது. | இல்லை | --- |
| வெள்ளாவெளி, விலம் தோட்டம் | 500 m | போக்குவரத்து உள்ளது (CTB மற்றும் தனியார்) ஆனால் முறையாக செயற்படுவதில்லை | இல்லை | ஆம் | கிணறுகள் | ஆம் | சிறிய குளம் மற்றும் மழை நீர் |

மூலம்: முக்கிய குழு கலந்துரையாடல் தரவு

## அட்டவணை 3: ஆய்வு மாதிரியில் பலவீனமான குழுக்களது முகக்குறிப்பு

| இடம் | பால் | பலவீனத்தின் தன்மை | விதவைத்துவத்துக்கான மற்றும் அங்கவீனத்துக்கான காரணம் | வயது | கல்வி நிலைமை | நலன்புரி நன்மைகள் |
|---|---|---|---|---|---|---|
| குஞ்சன்காட்குளம் | பெண் | அங்கவீனம் | காட்டு யானை தாக்குதல் | 56 | பாடசாலை செல்லவில்லை | சமுர்த்தி, மண்ணெண்ணெய் முத்திரை |
| குஞ்சன்காட்குளம் | ஆண் | ஆங்கவீனம் மற்றும் முதுமை | நோயினால் | 65 | பாடசாலை செல்லவில்லை | நட்டாடு மற்றும் முதியோர் நலன்புரி கொடுப்பனவு |
| பிரம்படித் தீவு | ஆண் | அங்கவீனம் | இராணுவத்தினரால் | 52 | தரவில்லை | நன்மைகளில்லை |
| பிரம்படித் தீவு | ஆண் | அங்கவீனம் | செல் தாக்குதல் | 40 | தரம் 4 | சமுர்த்தி |
| விலம்தோட்டம் | ஆண் | முதுமை | பொருத்தமில்லை | 78 | தரம் 2 | சமுர்த்தி மற்றும் ந்'டஈடு |
| ஆயிலடி | ஆண் | அங்கவீனம் | முதலை தாக்குதல் | 68 | தரம் 4 | சமுர்த்தி, சுனாமி நிவாரணத்தினால் படகு வலை மற்றும் ரோட்டரி கிளப் இனால் முச்சக்கர வண்டி |
| விலம்தோட்டம் | பெண் | முதுமை | பொருத்தமில்லை | 60 | பாடசாலை செல்லவில்லை | சமுர்த்தி |
| கிரன் | பெண் | விதவை | கணவனின் இயற்கை மரணம் | 34 | தரம் 2 | சமுர்த்தி, ஒரு அரச சாரா அமைப்பினால் ரூபா 10000 கடன் தொகை |
| கல்லாரவ | பெண் | விதவை | கணவனின் இயற்கை மரணம் | 59 | தரம் 6 | செஞ்சிலுவை சங்கத்தினால் ஒரு வீடு, ZOA இனால் சூரிய கலம் |
| விலம்தோட்டம் | ஆண் | முதுமை | பொருத்தமில்லை | 80 | தரம் 3 | சமுர்த்தி, முதியோர் நலன்புரி கொடுப்பனவு மற்றும் கிராம சேவகர் பிரிவு தனிநபர் பணம் ரூபா 10000 |
| ஆயிலடி | பெண் | விதவை | கணவர் கடத்தப்பட்டமை | 42 | பாடசாலை செல்லவில்லை | சமுர்த்தி |

மூலம்: வறுமை ஆராய்ச்சி நிலையம் 2010

2009 ஆம் ஆண்டில் மோதல்கள் முடிவுற்றதன் பின்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை மீளவும் கட்டியெழுப்ப ஆரம்பித்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமது வீடுகளுக்குத் திரும்பிய பலரும் இடம்பெயர்ந்த சமூகத்தவராவர். இச்சமுதாய மக்களது, விசேடமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீள்குடியேறும் மக்களது வாழ்வாதார தேவைகள் ஏனையோரிலும் வேறுபட்டதாகும். மோதலால் பாதிக்கப்பட்ட இரு மாவட்டங்களான மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் மீள்குடியேறும் இச்சமுதாய மக்களுக்கு உதவுவதற்கான தொழிநுட்ப கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிலையத்தினது(ACTED) ஒரு ஆரம்ப முயற்சியின் பகுதியாக சாத்தியமான, இலாபகரமான பொருளாதார செயற்பாடுகளை இனங்காண்பதற்கான ஒரு ஆய்வினை மேற்கொள்ள 2010 ஆம் ஆண்டில் வறுமை ஆராய்ச்சி நிலையத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இப்பகுப்பாய்வு இப்பிராந்தியங்களில் காணப்படுகின்ற வாழ்வாதார ஒழுங்குகள், சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தடைகளில் ஒரு புரிந்துணர்வினை வழங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது. இச்சமுதாயங்களிலுள்ள பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், வயதானோர் மற்றும் அங்கவீனமுற்றோரைக் கொண்டுள்ள குடும்பங்கள் போன்ற மிகவும் பலவீனமான நிலையிலுள்ள மக்களை இலக்குப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பகுப்பாய்வு செய்வதுவும் இச்செயன்முறையின் ஒரு பகுதியாக உள்ளடங்கியிருந்தது. இக்கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ள கண்டாய்வுகள் ஆதரவு வேண்டப்படுகின்ற பல்வேறு வாழ்வாதாரத் துறைகளை குறித்துக் காட்டுகின்றன. இவ்வாய்விலிருந்து பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் இப்பிரதேசங்களிலும் ஏனைய மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் வாழும் சமுதாய மக்களிற்கான வாழ்வாதார அபிவிருத்தி ஆரம்ப முயற்சிகளை இன்னும் சீராக்கவும் வினைத்திறனான முறையில் இலக்குப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம்.



ISBN978-955-1040-90-1


The Asia Foundation

ThinkTank Initiative  Initiative Thinktank


cepa
centre for poverty analysis

Centre for Poverty Analysis
29 R G Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka
Tel: +94(011) 4690200, 2676955
Fax: +94(011) 2676959
Email: info@cepa.lk
Web: www.cepa.lk